ஸ்ரீ:

# வஞ்சிமாநகர்.

ஸேதுஸம்ஸ்தானவித்வான்

ரா. இராகவையங்கார்

எழுதியது.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
VANMIYUR, MADRAS-41

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

ஸ்ரீ:

# முன்னுரை.

அமிழ்தினுமினிய தமிழ்மொழிபுணர்ந்த புத்திமான்களுக்குள், சில காலமாகச் சங்ககாலத்துச்சேரர்தலைநகராகியவஞ்சிமாநகர்கொங்குநாட்டுக்கரூர்தானே; அன்றி, மேல்கடற்கரைக்கணுள்ள கொடுங்கோளூர் தானே; என்று ஐயமுண்டாகி அதனடியாகச் சிலபல ஆக்ஷேபசமாதான ரூபமான வாதங்கள் புஸ்தகவாயிலாகவும், பத்திரிகைவாயிலாகவும் நிகழ்தலைக்கண்டு செந்தமிழ்ச்செல்வமேவந்தரும், மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவரும், எம் அன்னதாதாவுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் இராஜராஜேஸ்வர சேதுபதிமஹாராஜாவர்கள் யாம் இவ்விஷயமாகநிச்சயித்ததை எழுதியுதவும்படி பல்காலுந்தூண்ட அதனை இந்நூலெம்மாலெழுதப்பெற்று அவர்கள்பெருநல்லுதவியாலே அச்சிட்டுநிறைவேறியதாதலின் அம்மஹாராஜாவர்கட்கியாம் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம். செந்தமிழ்ச்செல்வச் சேதுவேந்தரும், அவர்களாதரிக்குநற்றமிழும் எஞ்ஞான்றுமினிதோங்குதலை இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

---

# உரிமையுரை.

என்னேற் புலவ ரிறுமாந் தி[illegible]ண்வாழத்
தன்னேர்ப் புரக்குந் தமிழ்வள்ள லன்போவாத்
தேனுரிமை செய்முல்லைச் சீராசராசமுகிற்
கியானுரிமை செய்வஞ்சி யீது.

ரா. இராகவையங்கார்,

ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

---

ஸ்ரீ:

# தற்சிறப்புப்பாயிரம்.

## நாமகள் வாழ்த்து.

வெண்டா மரைமேல் விளக்கை யெனதுள்ளத்
தண்டா மரைமேற் றனியேற்றிக்—கொண்டேன்யான்
காணாத பல்பொருளுங் கையகத்து நெல்லியெனக்
கோணாது காண்பான் குறித்து.

## நூனுதல்பொருள்.

குடகொங்கிற் கொல்லிக் குடவரைப்பாற் சேரர்
தடமதில்சூழ் வஞ்சித் தலந்தான்—கடலிவரும்
பொன்னிசேர் தண்பொருநைப் பூந்துறைக்கணுண்மையீது
தன்னிலே தேறத் தரும்.

ஸ்ரீ:

# வஞ்சிமா நகர்.

வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறுநல்லுலகம் சேரர் பாண்டியர் சோழர் என்னும் மூவர்க்கேயுரியதென்பது தொல்காப்பியனார் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின், நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (பொ-செய்-௭௯) எனச் சூத்திரத்துரைத்தவாற்றானும் ஆண்டு உரையாசிரியர், பேராசிரியர் உரைத்தவாற்றானும் அறியப்படும். ஈண்டு "நாற்பெயரெல்லையகம்" என்பது வடவேங்கடந், தென்குமரி, குணகடல், குடகடல் எனப்பட்ட நான்கெல்லையகம் எனக்கொள்வர் பேராசிரியர்: நச்சினார்க்கினியர் வேறுகூறுவர். அதைப்பற்றிப் பிற்கூறுவேன். இம் மூவேந்தரும் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையாரென்பது *தமிழ்நூல்களிற்கண்டது. "கடலகவரைப்பினிப் பொழின்முழுதாண்டநின் முன்றிணைமுதல்வர்" (பதிற்றுப்பத்து) எனச்சேரரையும் "உலகமாண்ட வுயர்ந்தோர்" (மதுரைக்காஞ்சி) எனப்பாண்டியரையும் "சென்னிகுளிர் வெண்குடைபோன்றிவ்வங்கணுலகளித்தலான்" (சிலப்பதிகாரம்) எனச் சோழரையும் கூறுதலான் இம் மூவேந்தருடைய ஆட்சித்திறனும், பெருந்தலைமையும், நன்கறியலாகும். இம்மூவரும், வேங்கடம் குமரி இடைப்பட்ட இத்தமிழுலகத்தை மேனாடு, தென்னாடு, கீழ்நாடு என மூன்று பிரிவாகவைத்து ஆண்டாரென்பது

'குடபுலங்காவலர்மருமான்' எனச் சேரனையும்
'தென்புலங்காவலர்மருமான்' எனப் பாண்டியனையும்
'குணபுலங்காவலர்மருமான்' எனச் சோழனையும்

சிறுபாணாற்றுப்படையிற் கூறுதலானுணரப்படும். நச்சினார்க்கினியரும் (குடபுலம்-மேற்றிசைக்கணுள்ள நிலம் எனவும், தென்புலம்-தெற்கின்கண்ணதாகிய நிலம் எனவும், குணபுலம்-கிழக்கின்கண்ணதாகிய

---

* திருக்குறள்-பரிமேலழகருரை.

U. V. SWAMINATHAIYAR
VANMIYUR

நிலம் எனவும் உரைத்தார். தமிழ்முடியுடையரசர் மூவரேயாத
னும், வேங்கடத்துக்கிப்பாற்பட்ட தமிழ்நாடுமுழுதும் மேற்குறி
திசைமுறையாற் பிரிப்புண்டபடியாலும், வேங்கடத்துக்கப்பாற்
டது தமிழ்வழங்காநிலமாதலானும் வடபுலம் என ஒன்று ஈண்டுவே
டப்பட்டதின்றென நன்றுணர்க. இவ்வருமையான பகுப்புமுறை
யுற்றுநோக்கின் இப்பரதகண்டத்தின் தென்பாகம் விரியாது சுருங்
இயற்கை யமைப்பை ஆராய்ந்து மூவேந்தர்க்குந்தகுதியான கட
கரையும் விரிந்த அகநாடும் உளவாதல்கருதி இவ்வாறு பிரிக்கப்பட்
டதென்று புலனாகும். பாண்டியர் தெற்கண்வளைந்த பெருங்கடற்கரை
யும், அதனைத் தொட்டு வடக்கண்விரிந்த அகநாட்டையும் உடைய
வர். சேரர் சோழரிருவரும் பாண்டியர்தென்னாட்டிற்கு வடபா
வேங்கடம் எல்லையாகவுள்ள நிலத்தைக் குடபுலம், குணபுலம் எ
இருபாற்படுத்துக் குடகடற்கரையும், அதனைத்தொட்டுவிரிந்த அக
டும், குணகடற்கரையும், அதனைத்தொட்டுவிரிந்த அகநாடும் முறை
உடையராவர். இச்சேரர் பாண்டியர் சோழர் மூவரும் நிலைநி
கொண்டாரெனுந் திசைபற்றி முறையே குடக்கோ, தென்னவர், குண
புலங்காவலர் எனப்பெயர்சிறப்பர்.

இனி இம்மூவர்க்குமுரிய இத்தமிழ்கூறுநல்லுலகஞ் செந்தமி
நாடு எனவுங், கொடுந்தமிழ்நாடு எனவும் இரண்டுபிரிவாகப்பிரித்
வழங்கப்படுமெனவுணர்க. செந்தமிழ்நிலம் ஒன்றும், கொடுந்தமி
நிலம் பன்னிரண்டுஞ் சேர இத்தமிழுலகம் பதின்மூன்று பகுதியுடை
தாகும். செந்தமிழ்நிலம் என்பது வையையாற்றின் வடக்கும், மரு
யாற்றின் றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்
இளம்பூரணவடிகள், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் தொ
காப்பியவுரைக்கண் உரைத்தார். வையைக்கு வடக்கணுள்ள பாண்
நாட்டுப்பகுதியும் இதன்கண்ணடங்குதல்காண்க. வையைக்கு வடபா
நாடுகளிலுள்ள திருப்புத்தூர், திருவாடானை, திருக்கோட்டியூர், திரு
மெய்யமுதலிய தலங்கள் பாண்டிநாட்டுள்ளவெனப்படுதலானும்
வையைக்குவடக்கண் நெடுந்தூரம் பாண்டிநாடுண்மை இனிதுணரப்
படும். (பிற்காலத்தார் பாண்டிநாடே செந்தமிழ்நிலமென்பர்). இச்
செந்தமிழ்நிலத்தைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டாவன
பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு

பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை என இவையென்று இளம்பூரணவடிகள், சேனாவரையர் உரைத்தார். நச்சினார்க்கினியர் இங்ஙனமேகூறி மலைநாடு என்றவிடத்து மலையமானாடு என்றுரைத்தார். "சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே" என்பது திவாகரமாதலான் மலையமான்என்பது சேரன்பெயராதல் தெள்ளிது. மேற்கூறிய பன்னிருநிலமும் செந்தமிழ் நிலத்தின் தென்கீழ்பால்முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க என்று சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் உரைத்தார். இதனாற் குடநாடும், மலைநாடும் வேறுவேறென்று தெளிந்துகொள்ளலாம். நச்சினார்க்கினியர் இக்கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன சிங்களமும், பழந்தீவும், கொல்லமும், கூபமுங், கொங்கணமுங், துளுவும், குடகமும், கருநடமும், கூடமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமுமாமெனவுரைத்தார். இதனாலிவை கொடுந்தமிழ்நாட்டிக்கும் அப்பாலுள்ள பிறநாடுகளென்று தெளியலாம். இந்நாடு பன்னிரண்டும் தமிழ்மொழிவழங்காது வேறுவேறு மொழிவழங்கு நிலங்களென்பது கொடுந்தமிழ்நாட்டிக்குமப்பா லிவற்றை றவைத்துரைத்தமையானும், தமிழ்மொழியல்லாத சிங்களம் வடுகுமுதலிய மொழிப்பெயரே நிலப்பெயராகப் பெரும்பான்மை கூறியதனானும் உணரலாம். இந்நிலத்துமொழிகள் தமிழிற்புக்குவழங்கியவிடத்து உரையாசிரியரெல்லாம் திசைச்சொல் என்று கூறுதலுங்காண்க. சங்க நூல்களிற் பல்லிடத்தும் வடுகர்நிலத்தைத் "தமிழ்பெயர்தேயம்" எனவும் "மொழிபெயர்தேயம்" எனவும் உரைத்தலானும் இதனுண்மை புணரப்படும். இவற்றுற் கொல்லங், கூபங், கொங்கணங், துளு, குடக முதலியன தமிழொழிநிலங்களாக ஆசிரியரெண்ணப்பட்டமை நினைக்கத்தகும்.

இனிச் சிறுபாணாற்றுப்படையில் மேற்றிசைக்கணுள்ளநிலம் என்பதுபற்றிக் "குடபுலம்" எனப்பட்ட சேரநாடு மேற்கூறிய கொடுந்தமிழ்நாடுகளுட் குட்டநாட்டையுடையதென்பது சேரனைக்குட்டுவன் என்பதனானும், குடநாட்டையுடையதென்பது குடவர்கோமான் என்பதனானும், பூழிநாட்டையுடையதென்பது பூழியர்கோமான் என்பதனானும், மலைநாட்டையுடையதென்பது மலையன், மலையமான் என்பதனானும் நன்கறியப்படும். மற்றைநாடுகளைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சியின்று;

வேண்டுழிவேண்டுழிக் கூறிக்கொள்வல். இதனாற் குட்டமுதலாக மலையிறுதியாக ஈண்டுச்சொல்லப்பட்ட நாடெல்லாம் சேரநாட்டகத்தனவென்றுதெளியப்பட்டவாற்றான் இவையனைத்துங் 'குடபுலம்' என்று நல்லிசைப்புலவர் குறியிட்ட மேற்றிசைக்கணுள்ள நிலமாகுமென்று எளிதிலுணரப்படும். இதனாற் குடபுலம் என்பதன்கண் குடநாடும், மலைநாடுமென இரண்டுண்டென்றும், ஒன்றென்றுகூறலாகாதென்றும், சேரரைக் குடதிசைபற்றிக்கூறுமிடத்தெல்லாம் குடநாடொன்றையே குறியாது அவர்க்குக் குடதிசைக்கணுள்ள குட்டமுதலாக மலைநாடிறுதியாகச் சொல்லப்பட்டநாடுகள் எல்லாவற்றையுங் குறிக்குமென்றும் ஐயமறத்துணிந்துகொள்க. இப்பகுப்புமுறையெல்லாம் ஆராயாது குடபுலம் என்பது குடநாடொன்றே யென்றும், அதுவே மலைநாடென்றும், அம்மலைநாடு கடற்கரையோரமாகவுள்ளதேயென்றும், தாமே நினைத்துக்கொண்டு இடர்ப்படுவாருமுளர். அவர் மலைநாட்டுக்கும், குடநாட்டுக்கும் இடையிற் பலநாடுண்மையினையும், இவையெல்லாஞ் செந்தமிழ்நாட்டைச் சுற்றியுள்ளனவென்று தொல்லாசிரியர்காட்டியதனையும் மறந்தனராவர். இப்பலநாடுந்தொக்குள்ள சேரர்குடபுலத்தை மலைமண்டலமென்றுகூறுவதெல்லாம் சோழநாட்டைப் புனன்மிகுதிபற்றிப் புனனாடென்பதுபோல மலைமிகுதிபற்றி யென் றெளிதிலுணரப்படும். இதனாற் குடபுலமென்றும், மலைமண்டலமென்றும் பெயருடைய சேரநாட்டுக் கொடுந்தமிழ்நாடாகவெண்ணப்பட்ட குடநாடும், மலைநாடும் வேறுவேறு உள்ளனவென்பது நன்குணரற்பாற்று. ஒருசேரனைக் "குடதிசைவாழுங்கோ" என நூல்கூறினது குடபுலங்காவலர்மருமான் என்புழிப்போல மேற்றிசைக்கணுள்ள நிலத்தில்வாழும் வேந்தன் எனப் பொருள்படுத்தலன்றி அது கடலோரமாகவுள்ளதென்றுகொள்ளப்பட்ட கொடுந்தமிழ்நாடாகிய குடநாட்டிலேமட்டும் வாழுங்கோ என்று பொருள்படுத்தல் நெறியன்றென்க. கொடுந்தமிழ்நாடாகிய குடநாடு மேல்கடலோரமாகவுள்ளதென்பது "தண்கடல்வேலிநின்குடநாடற்றே" என வருதலான் அறியலாம். சேரனும் குடபுலமுழுதையுங்குறித்து அவனைக் குடக்கோ என்பதன்றி அவனாட்டினோர்பகுதியாகிய 'குடநாடுமட்டுங்குறித்து அப்பெயராளுதலில்லையென்க. அடியார்க்குநல்லாரும் "குடக்கோச்சேரலிளங்கோவடிகள்" என்புழிக் குடக்கோ என்பதற்குக் குடதிசைக்கோ எனவேயுரைத்தார்.

இத்துணையும் விரித்துரைத்தநாடுகளுள், தொண்டைநாடு, கொங்குநாடு எனப்பட்ட நாட்டின்பெயர்கள் காணப்படாமை நினைக்கத்தகும். இவற்றுள் தொண்டைநாடு நாகபட்டினத்துச் சோழனொருவன் நாககன்னியையமணந்துபெற்றபுதல்வனும், தொண்டைக்கொடியை அடையாளமாகச்சுற்றப்பட்டகாரணத்தாற் றொண்டைமான் எனப் பெயர்சிறந்தவனுமாகிய ஒருவற்குத் தன்னாட்டைப் பிரித்துக்கொடுக்கப் பின் அத்தொண்டைமான்பெயரான்விளங்கியதொன்றாதலின் இப்பழையநாடுகளின் வேறாயெண்ணப்படாதாயிற்று. கொங்கு இப்பழையநாடுகளின் வேறாயெண்ணப்படாமையின் உட்பகுதியாகியதோர் நாடென்று துணியப்படும். இது தொண்டைநாடுபோலப் பெரியநாடாகக் கருதப்படுமாலெனின் பழையகாலத்து ஒன்றனுட்பகுதியாய்ச் சிறுகியது பிற்காலத்துத் தன்பெயரேகொண்டு பெருகியதென்றுகொள்ளப்படுமென்க. இது முற்காலத்துக்கொங்கன் என்னும் பெயரையுடைய சேரனாலாளப்பட்டதன்மையான் கொங்கநாடென்றும், அதுவே கொங்கென்றும் வழங்கப்பட்டதென்று தெரிகின்றது. இதனைச் செந்தமிழ்க்கடனிலைகண்ட கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

> "கோதைபயில்விற்கொடிகுலாவியபுயத்தன்
> கோதையர்விழிக்கணைகுளிக்குமருமத்தன்
> கோதைகமழுங்கவிகைக்கொங்கனெனவிளங்கு
> கோதைநனியாண்டதொருகொங்குவளநாடு"

எனப் பாடுதலானறிக. கொங்கனெனவிளங்குகோதை—கொங்கன் என்று வழங்கப்படும் சேரன் என்றது காண்க. இங்ஙனமன்றி வேங்கடங்குமரி என்னுமிவற்றுக்கிடையே உள்ள நிலமெல்லாம் செந்தமிழ் ஒன்றும், கொடுந்தமிழ் பன்னிரண்டுமாகப் பிரிக்கப்பட்டிருக்கவும் அவற்றின்வேறா யொருதமிழ்நாடு தனியே ஆங்குண்டென்று நினைப்பதற்கே இடனின்றாதல்காண்க. இக்கொங்குநாடு ஆதிதொட்டே பெருகியநிலையுடையதாயின் ஈண்டு எண்ணப்பட்ட பழையநாடுகளுடன் எண்பெறாதொழியாதென்பது தெள்ளிது: இதனாலிது நாளடைவிற் றன்பெயர் கொண்டு பெருகியதென்று துணியப்பட்டதென்க.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியச்செய்யுளியலில் ‘ நாற்பெயரெல்லையகத்து ’ என்புழி மலைமண்டலம், பாண்டியமண்டலம், சோழ

மண்டலம், தொண்டைமண்டலம் எனவுரைத்தார். இந்நான்குடன் கொங்குமண்டலத்தையுஞ்சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்றுகொண்டாரும் உண்டு:

"நறவேந்துநங்கைநலங்கவர்ந்துநல்கா
மறவேந்தன்வஞ்சியானல்லன்—றுறையின்
விலங்காமைநின்றவியன்றமிழ்நாடைந்தின்
குலங்காவல்கொண்டொழுகுங்கோ."

என்னும் வெண்பாவில் "வியன்றமிழ்நாடைந்து" என்றதூஉம் இக்கருத்தேபற்றிவந்தது. இவை தனியே சிறந்துபெருகியகாலத்து எண்ணப்படுதலான் முன் எண்பெறாமைக்குக்காரணம் இவை தமிழ்நாட்டினின்று பிரிந்து தனியாகாமையேயென்று துணியலாம்.

இனி ஈண்டுக்குறித்த கொங்குநாடு மூவேந்தர்க்குரிய குடபுலம், தென்புலம், குணபுலம் என்பவற்றுள் எதன்பாற்பட்டதென்று ஆராயுமிடத்து இக் கொங்குநாட்டைப் பலவிடத்தும் 'குடகொங்கு' எனவே வழங்குதலான் இது குடபுலத்ததாமென்று புலனாகும். இதனாலிது குடதிசையாட்சியையுடைய சேரருடையதென்று துணியலாம். கலிகன்றியாழ்வாரும் சோழன்செங்கணானை அவன் வென்றுகொண்ட நாடுகளானே "தென்னாடன்குடகொங்கன்சோழன்" எனவழங்கியவிடத்துக் குடகொங்கு எனப்பணித்தல்காண்க. சேக்கிழாரும் வெள்ளானைச் சருக்கத்திற் *"குடக்கோங்கிலணைந்து" என்றார். ஆழ்வார் 'தென்னாடன் குடகொங்கன்சோழன்' என்றது குணபுலங்காவலுடையசோழன் தென்புலத்தையும், குடபுலத்தையும்வென்றுகொண்டதனைக் குறிப்பதாகக்கொள்ளப்படும். சங்கநூல்களும் பல்லிடத்தும் சேரனையே "கொங்கர்கோ" (பதிற்-அஅ-கo) என வழங்கும். இதனாற் கொங்குநாடு குடதிசைக்கட்பட்ட தமிழ்நிலத்துள்ளதென்றும், அதுபற்றிச் சேரராட்சியிற்பட்டதென்றும் தெளிந்துகொள்க.

மற்று

"மாகெழுகொங்கர்நாடகப்படுத்த
வேல்கெழுதானைவெருவருதோன்றல்" (உஉ)

---

*மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் சிலப்பதிகார அபிதானவிளக்கத்தில் கொங்கு-கொங்குமண்டலம்-குடநாடு என்றெழுதினார்கள்.

எனப் பதிற்றுப்பத்துட் காணப்படுதலால் இக் கொங்குநாடு சேரர்க்கு வென்றியாற்கிடைத்ததன்றி முன்றொட்டுச் சேரரதன்றாமெனிற் கூறுவல். வேங்கடங்குமரி யிடைப்பட்ட தமிழுலகத்து ஒரு தமிழ்ப்பகுதி மூவேந்தருளொருவர்க்குரிமையாகாதிருந்ததென்பது “ வண்டமிழ்மூவர்காக்குந்தண்பொழில்வரைப்பின் ” என்ற தொல்காப்பியனார்கூற்றுக்கு மாறுபாடாதலின் இது மூவருளொருவர் பகுதியதேயாமென்று துணியப்படும்: இது சேரர்குடபுலத்ததன்றாயின் இடைநாடாகவுள்ள இக்கொங்குநாட்டைக் குடகொங்கு என வழங்குதல் பொருந்தாததேயாகும். இது “குடகொங்கு”என்பதனால் என்றுங் குடதிசையாளுங்கோவாகிய சேரனதேயென்றுகொள்க. இங்ஙனமாகவும் சேரனைக் ‘கொங்கர்நாடகப்படுத்ததோன்றல்’ எனக் கூறியது தன்னாட்டகத்தவராயிருந்துவைத்தே தன் கோலின்வாராது வேறுபட்டுக்குறும்புசெய்தாரையடக்கி அக்குறும்பர்நாட்டைச்சேரன் தன்னடிப்படுத்தியசெய்தியைக் குறித்ததன்றி வேறன்றென்க. இங்ஙனம் முடிவேந்தர்நாடு அடிப்படுத்தல் உண்டென்பது

“நின்னொடுவாரார்தந்நிலத்தொழிந்து
கொல்களிற்றியானையெருத்தம்புல்லென
வில்குலையறுத்துக்கோலின்வாரா
வெல்போர்வேந்தர்முரசுகண்போழ்ந்து” (பதிற்-எக.)

என வருவதனானும் இதன்கண் “நின்னொடுவாரார் தந்நிலத்தொழிந்து என்றது நின்னைவழிபட்டு நின்னொடு ஒழுகாதிருத்தலேயன்றித் தந் நிலத்திலே வேறுபட்டுநின்று எ-று”எனவும்,வில்குலையறுத்துக்கோலின் வாராவேந்தர் என்றது முன்பு நின்வழியொழுகாது ஒழிந்திருந்தவழிப் பின்பு தாம் களத்துநின்போர்வலிகண்டு இனி நின்வழியொழுகுது மெனச்சொல்லித் தாமேறிய யானையெருத்தம்புல்லென வில்லின் நாணினையறுத்து நின்செங்கோல்வழியொழுகாதவேந்தர் எ-று எனவுங் கூறியவுரையானும் நன்குணர்ந்துகொள்க. ஈண்டு வேந்தர்என்றது முடியுடைப்பேரரசற்குத்திறையிடற்குரியராய்ப் பெருநாட்டிலோவ்வோர்பகுதியை ஆள்கின்ற சிற்றரசரை எனவறிக. சிலப்பதிகாரப் பதிகத்து உரைபெறுகட்டுரைக்கண் “கொங்கிளங்கோசர்தங்கணாட்டகத்து” எனவருதலான் இக்கொங்குநாட்டுப் பல சிற்றரசருண்மை புலனாகும். இவர் குறும்புசெய்தவழி இவர்நாட்டைத் தன்னடிப் படுத்தினானென்றுகொள்க.

இனிக் 'குடகக்கொங்கர்' என் றொருவகையார் கண்ணகியின் கடவுண்மங்கலத்துப்போந்து வரம்வேண்டினாரென்று கேட்கப்படுமாலெனின் அவர் இக்கொங்குநாட்டினரன்றி வேறல்லாமை அவரையே பதிகத்துக் "கொங்கிளங்கோசர்" என்றதனானும், அதற்கு அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்து இளங்கோவாகிய கோசர் என் றுரைத்தமையானுமுணரப்படும்: மற்றுக் குடகக்கொங்கர் என்றது மேற்றிசைக் கணுள்ள கொங்கர் எ-று. குடம், குடகம், குடக்கு, குடகு இவை மேற்றிசைக்குவழங்கும் பெயர்களென் றுணர்க. கொங்கை யாண்டும் குடகொங்கு என்பதுபற்றி குடகமும் மேற்றிசைக்குப்பெயராதல் கருதிக் குடகக்கொங்கு என்று வழங்கியதன்றி வேறன்றென்க. இது சோணாட்டுச் சிதம்பரத்தைக் குணசிதம்பரமெனவும், கொங்குநாட்டுச் சிதம்பரத்தை(பேரூர்த்தலம்)க் குடசிதம்பரமெனவும் கூறுதலானும் உணரப்படும். இதனை

> "விழவுறுவீதிக்குணசிதம்பரத்துமேவினோர்க்கரும்பயனளிப்பா
> 'ரழகியதிருச்சிற்றம்பலமுடையாரொருவரேகுடசிதம்பரத்துப்'
> பழகுநர்க்களிப்பார்" (பேரூர்ப்புராணம்)

என வருதலானறிக. வேறுயின் அதுதோன்றப் பதிகத்துங் கூறுவரென்க. குடகம்தமிழ்நிலமன்மையும் உணர்ந்துகொள்க. இங்ஙனங் கொள்ளாது கொங்குநாட்டுத்தமிழரே ஒருகாரணத்தாற் குடகநாட்டுச் சென்று வதிந்தார். இவர் அவராவரென் றுகூறின் அஃதொருவாறு பொருந்தும்; என்னை காரணமெனின்? பொதியின்மலைக்கணிருந்த ஆய் என்னும் அரசனொருவன் இக்கொங்கரோடு போர்புரிந்து இவரை மேல் கடலிலே ஓட்டினானென்று

> "நீயளித்த, வண்ணல்யானையெண்ணிற்கொங்கர்க்
> குடகடலோட்டியஞான்றைத்
> தலைப்பெயர்த்திட்டவேலினும்பலவே" (கஙo)

என்னும் புறப்பாட்டானறியப்படுதலான் இவர் அக்காலத்து மேல்கடற் பக்கத்தோடி ஆண்டுள்ள மலைப்பக்கங்களில் வதிந்தாராவரென்று ஊகிக்கப்படுமாதலானென்க. எங்ஙனமாயினுங் கொங்கர் சேரனுடைய குடபுலத்தவர் என்னுமிடத்தும், கொங்கு அவனுடைய குடபுலத்ததே என்னுமிடத்தும் யாதோரையமும் உண்டாகாமை யிவற்றாற்காண்க.

இஃதன்றி இக்கொங்குநாட்டு என்றுமுள்ளகொல்லிமலை சேரர்க்கே சிறந்த தலைமையான மலையென்பது "கொல்லிச்சிலம்பன்" எனச் சேரனை வழங்குமாற்றானறியப்படும்.

"வாழியர்வில்லெழுதியவிமயநெற்றியொடு
கொல்லியாண்டகுடவர்கோவே" (சிலப்-குன்றக்)

எனவருதலான் இக்கொல்லிமலை சேரர்க்கு எத்துணைச்சிறந்ததென்பது இனிதுணரலாம். இஃது அத்துணைச்சிறப்புடையதாகக் கருதப்படாதாயின் இதனை இமயத்தொடுசார்த்தி இளங்கோவடிகள் கூறாரென்றுணர்க. அகப்பாட்டிலும் "பொறையன்கொல்லி" (கூஉ) என்றார். புறப்பாட்டிலும் சேரனை

"வேந்துதந்தபணிதிறையாற்
சேர்ந்தவர்கடும்பார்த்து
மோங்குகொல்லியோரடுபொருந" (உஉ)

எனக்கூறினார். இதன்கண் "கொல்லியோரடுபொருந" என்பதற்குக் *கொல்லிமலையிலுள்ளாருடைய அடுபொருந என்று உரைகாரர் பொருள்கூறினார். இதனாற் கொல்லி சேரன்மலையும், கொல்லியோர் சேரன்குடிகளுமாதலுணரப்படும். கொங்குநாட்டைக் குடகொங்கு என்றதுபோல அதன்கணுள்ள இக்கொல்லிமலையை "வெல்போர்வானவன்கொல்லிக்குடவரை" (அகம்-சகூ0) எனவும் "குடகொல்லி" (இறையனார்களவியலுரைமேற்கோள்)எனவும் "இமயங்குடகொல்லி" (பட்டினத்தடிகள்) எனவும் வழங்குதலான் இஃதுள்ள திசையைக் குடதிசையென்று கருதினாராதல் செவ்வனம்புலனாகும். இதனானும் இது குடபுலத்ததாய்க் குடபுலங்காவலருடையதாதல் தெளியலாம். பாண்டியர்பொதியத்தைத் "தென்னம்பொருப்பு", (புறம்-உகரு) என்பதுபோல இதனையுங்கொள்க. சோழர்க்குநேரிமலையும், பாண்டியர்க்குப்பொதியமலையும், எங்ஙனஞ்சிறந்தனவோ அங்ஙனமே சேரர்க்கு இது சிறந்ததாகும். எத்துணையோ மலைகளையுடைமையாற் குடபுலம் மலைமண்டலமெனப்படும். அம்மலைமண்டலங் காவல்புரிகின்ற சேரர்

* கொல்லிமலையில் இன்றைக்கும் மலையாளரேயுள்ளனர். மலையாளர்-மலையர் எனவழங்கப்படுவரென்பது "மண்ணினிற்பொலிகுலமலையர்"(திருஞான-உகஎ) எனச் சேக்கிழார்பாடுதலான் அறியப்படும்.

பெயர்சிறந்தது இக் கொல்லிமலையானே என்பது ஈண்டைக்கு நினைக்கத்தகும். இது கருவூர்க்கு அணித்தாகவுள்ளது என்பதும் மறக்கற்பாலதன்று. இக் கொல்லியைக் குடவரையெனப் பலவிடத்தும் வழங்கியவாற்றாற் குடமலைநாடன் என்று சேரனைக்கூறியவிடத்துக் குடக்கணுள்ள கொல்லிமுதலாகிய மலைகளையுடைய நாட்டையுடையவன் என்று கருதப்படுமெனவுணர்க. இக் கொல்லிமலையைத் தலைமையாகவுடையன் என்பதனாற் சேரன் மேல்கடலோரத்துநாட்டைமட்டும் உடையனாகாது அம்மேல்கடற்குக்கிழக்கே நெடுந்தூரம்விரிந்த அகநாடுடையனென்பது அதிகமாக வலியுறுதல்காண்க. சேரன் தனக்குரிய குடகடலோரத்துப் பல வுயர்ந்தமலைகளை உடையனாயினும் அவற்றாலிவன் சிறவாமல் இக் கொல்லிமலையானே பெயர்சிறத்தலின்காரணம் ஆராயப்படும். இதுபோலவே மேல்கடற்பக்கத்துப் பேர்யாறு முதலிய பெரியயாறுகளை இவனுடையனாயினும் இவன் அவற்றாற் பெயர்சிறவாமற் பொருநைத்துறைவன் என ஆன்பொருநையானே பெயர்சிறத்தலின்காரணமும் ஆராயப்படும். இவற்றின்காரணத்தை உள்ளவாறாராயின்சேரர்அரசிருக்கையினையுடைய தலைநகரைத் தன்பாற்கொண்ட நாட்டகத்து இவை யுளவாதற்சிறப்புப்பற்றியன்றி வேறன்றெனவுணரலாகும். இது மேல் யான்கூறும்பிரமாணங்கள்பலவானும் வலியுறும்.

மற்று, கொல்லிமலை ஓரியினுடையதென்றும், அவ்வோரியைக் காரியென்னும் முள்ளூர்மன்னன் சேரனுக்குத்துணையாய்நின்று கொன்று அவன் கொல்லிமலையைச் சேரனுக்குக் கொடுத்தானென்றும் அகநானூற்றின்கண்

"முள்ளூர்மன்னன்கழறொடிக்காரி
செல்லாநல்லிசைநிறுத்தவல்வில்
லோரிக்கொன்றசேரலர்க்கீத்த
செவ்வேர்ப்பலவின்பயங்கெழுகொல்லி" (௨0௯)

என வருதலாற் பெறப்படுமாலெனிற் கூறுவல் - பாண்டியருடைய பொதியமலையில் ஆய் என்னும் ஒருவன் இருந்தாசாண்டது

"கழறொடியாஅய்மழைதவழ்பொதியி
லாடுமகள்குறுகினல்லது
பீடுகெழுமன்னர்குறுகலோவரிதே" (புறம்-௧௨௮)

என்பதனாலறியப்படும். இவ்வாயென்னும்வள்ளல் பீடுகெழுமன்னரும் குறுகரியநிலையில் இப்பொதியமலையில் இடைக்கணுண்டாகிவிளங்கினு னும் அப்பொதியமலையை என்ஞான்றுமுடைய பாண்டியர்க்கு அத னுரிமைதப்பாதவாறுபோல ஓரியென்னும்வள்ளல் கொல்லிமலையில்வலி யுடையனு யிடையிலுண்டாகிச் சேரற்கடங்காமை காட்டினுனாயினும் அக்கொல்லிமலையை என்ஞான்றுமுடைய சேரர்க்கும் அதனுரிமை தப்பாதென்றுணர்க. இவ்வுரிமையானேயன்றே தனக்குத்துணையாகிய காரியை ஓரிமேலேவி அவனைக்கொல்வித்துச் சேரன் அக்கொல்லிமலை யைக்கொண்டானென்றுதெரிக. காரிக்கும் ஓரிக்குமுள்ள பகைமைகார ணமாகவே இப்போர்நிகழ்ந்ததாயின் அப்போர்வென்றியின்பயனை அக் காரியேயெய்துவானுவன். அங்ஙனமன்மையானும்,கொல்லிமலையுரிமை சேரற்கே என்ஞான்றுமுண்மையானும் அதனைக் காரி சேரற்கீத்தா னெனத்துணிக. சேரனுரிமைக்கு இடையூறுநீக்கித்தந்த அத்துணையே யல்லது வேறன்றென்றுகொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் பாண்டியன் பொதியப்பொருப்பனுகான் "நீர்திகழ்சிலம்பினேரியோனே" (பதிற்- ) எனச் சேரனைக்கூறுதலாற் சோழன் நேரியனுகான் என்றுகொள்ளவு நேருமென்க. இதனுல் இம்மலைகள் இடையிடையே போர்க்கிடனுக வும், பிறராட்சிக்கிடனுகவும், கேட்கப்படினும் இம் மூன்றுமலைகளையும் என்றுமுரிமையாகவுடையார் அவ்வம்மலையுடைய நாடுடைய முடி வேந்தரன்றிப்பிறரில்லையெனத் தெற்றெனவுணர்க.

இனிக் குடநாடு, குட்டநாடு, பூழிநாடு, மலைநாடு என இவை குடபுலஆட்சியையுடைய சேரரைச்சேர்ந்தனவென முன்னரே உரைத்தேன். அவற்றுள் மலைநாடு யாதாகுமென்று ஆராய்வோமாக. கொடுந்தமிழ்நாடாகிய இம்மலைநாடு செந்தமிழ்நிலத்தைச்சூழ நிறுவப் பட்டநாடுகளின்முறையிற் குடநாட்டுக்கு அப்பால் பலநாடுகளுக்குப் பின் வைக்கப்பட்டவாற்ருன் இம்மலைநாடு கடலோரமாக இல்லாமல் நெடுந்தூரந்தள்ளி அகநாட்டே உளதாதல் தெளியப்பட்டது. இத னையே நச்சினுர்க்கினியர் மலையமானுடு எனவுரைத்தார். தென்பாண்டி நாடு என்பது தென்றிசைக்கணுள்ள பாண்டியனுடு என மூவேந்தரு ளொருவன்பெயரேகொண்டு விளங்கியதுபோல இம்மலைநாடும் மலைய மானுகிய சேரனுடு என்பதற்கு மலையமானுடு என வழங்கப்பட்டதா கும். மலையமான் சேரனென்பது நிகண்டுகள் பலவற்றினுங்கண்டது.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியவெழுத்ததிகாரத்துக் 'கிளந்தவல்ல செய்யுளுட்டிரிநவும்' என்னும் அதிகாரப்புறனடைச்சூத்திரவுரைக் கண் தாம் செய்யுளியலுட்கூறிய நான்குமண்டலங்களையுமேகருதிச் சோழநாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு என முடிந்தவற்றிற்கு இலக்கணமமைக்குமிடத்துச் சோழன், பாண்டியன், தொண்டைமான், மலையமான் என நான்குமண்டலத்தலைவர்பெயரையுங் கூறுதலானே இதனுண்மைபுணரப்படும். மற்றுச் செய்யுளியலுள் மலைமண்டலத்தை முற்கூறினுமோரனின் ஈண்டு அன்கெட்டுமுடிதலும், ஈற்றெழுத்துச் சிலகெட்டுமுடிதலும், முதலெழுத்தொழிந்த பலவுங்கெட்டு முடிதலும் பற்றிஇவை முறையேநிறுவப்பட்டனவென்க. இப்பழமையானநாடுகள் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவருதலையுடைய வண்புகழ்மூவர் பெயராற் சிறப்பதன்றி இவராட்சிக்குரியநாடுகளில் இடையிடையே தோன்றிமறையுஞ் சிற்றரசர்பெயராற் பண்டே சிறப்பதென்பது சிறிதும் பொருந்தாதென்க. சேரனே மலையமான், மலையன், மலைநாடன் எனப் பெயர்சிறந்தவனென்பது நன்றுணர்க. "சேரன்பொறையன் மலையன்றிறம்பாடி" எனச் சிலப்பதிகாரத்துவருதலான் மலையன் என்பதும் சேரன்பெயரேயாதறெளிந்துகொள்க. குடநாடும், குட்டநாடும், பூழிநாடும், சேரனுடைய மலையமானுடையனவேனும், இம் மலைநாடுமட்டும் மலையமானுடனே அவனாற் பெயர் சிறந்தது அவன் அந்நாட்டே வதிகின்றதன்மையானென்று எளிதிலுய்த்துணரலாம். இளம்பூரணவடிகளும், சேனாவரையரும் எண்ணிய கொடுந்தமிழ்நாடுகளுள் மலைநாடு எனக்குறித்த நிலத்தையன்றே நச்சினார்க்கினியர் மலையமானாடு என்றெழுதினர்; மலைநாடன் என்பது சேரனையே குறிப்பதென்று பலருமறிவர். அங்ஙனமாயின் மலைநாடு சேரனுடையதன்றி வேறொருவருடையதாகாது. இதனானும் இந்நாடுடைய மலையமான் சேரனே எனத்தெளிக. மற்று மேல்கடற்பக்கத்துள்ள மலைகளையுடைய நிலம் என்னைகாரணத்தால் இப்பெயரை அக்காலத்துப்பெற்றதில்லையெனிற் கூறுவல்: மேல்கடலோரத்துள்ளநிலங்கள் மக்கள்குடியேறி நாடாய தன்மையான் அவை குடநாடும், குட்டநாடும் எனப்பெயர் சிறந்தன. அவற்றையடுத்துள்ளநிலங்கள் மலையடர்ந்தனவேயன்றி அவை மக்கள் குடியேறியநாடாதற்றன்மையில்லாதபடியால் மலைநாடென்று அக்காலத்துவழக்குப்பெறாதாயிற்று. மலைநாடு என்பது மலைகளையுடையதும், மக்கள் குடியேறியநாடாகியதுமாய நிலனேயென்பது தெள்ளிது.

அக்காலத்து அவை வாசயோக்கியதையைப் பெருமையால் அங்ஙனம்பெற்ற மலைநிலமே மலைநாடெனவழக்குப்பெற்றதென்று தெளிந்துகொள்க. இவற்றைக் கொடுந்தமிழ்நாடுகளெனக் கூறுதலானும் அத்தமிழைவழங்குமக்கள்நிறைந்தநாடாதல் துணியப்படும். பிற்காலத்து இப் பழையபெயர்களெல்லாமாறி மலைகளதிகமாக விருத்தல்காரணமாக மேல்கடலோரத்துநாட்டை மலைநாடு என்று வழங்கத்தலைப்பட்டனர் என்று தெரிந்துகொள்க. இங்ஙனங்கொள்ளாக்காற் பழையோர் எத்துணையோ அறிவொடு பகுத்துக்காட்டியதற்குக் குற்றங்கூறுதலாகவே முடியுமென்க.

இனி ஈண்டுக்கூறியமலைநாட்டை மலையமான் என்னும்பெயர் காரி என்பவனுக்கும் வழங்குதல்பற்றி அக்காரிநாடெனக் கூறலாகாதோவெனின் அங்ஙனங்கூறலாகாதென்க. என்னையெனிற் கூறுவேன். காரி என்னும் வள்ளல் முள்ளூர்மலையில் இடையிலுண்டாகிய ஓர்சிற்றரசன். அவன் சேரற்கு உறுதுணையாய்நின்று சேரனுக்குஅடங்காத கொல்லிமலைஓரியைக்கொன்றவன். இவன்காலத்துக்கு எத்துணையோ முந்தியே பகுப்புடைய தமிழ்நாடுகளிலொன்று இவன்பெயர்கொண்டதென்பது பொருந்துவதாகாது. அன்றியும் அம் மலையமானென்னும்பெயர் அவன் சேரனுக்குத் துணையாயகாரணத்தான் அவனுக்குப்பட்டமாகச் சேரனாற்றரப்பட்டதாமென்றுகொள்வதல்லது அவனியற்பெயரென்றலுமாகாது. அன்றியும் இவனினுஞ்சிறந்துவிளங்கிய பாரிமுதலிய வள்ளல்கள்பெயர்களான் நாடுகளின்பெயர்கள் வழங்கப்படாமையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க. இச்சிற்றரசர் இந்நாடுகளின் ஓரோர் சிறுபகுதிகளையுடையரல்லது வேறிலரெனவுங்கொள்க. இவற்றால் இம் மலைநாடு காரியாகியமலையமானுடையதாகாமை தெளியப்படும். இதனை, சங்கரசோழனுலாவில்,

“பாண்டியராரத்தின்பல்கலமோ—மீண்டிப்
பொரவிட்டசேரர்மலாடுபுறந்தந்து
வரவிட்டவச்ரவடமோ”

என வருதலான் நன்கறிந்துகொள்க.

இனிக் காரியாகிய மலையமான் முள்ளூர்மலையையும், திருக்கோவலூரையும் உடையவனாவன் என்று பழையநூல்களா னறியப்படும்.

இவனுடைய திருக்கோவலூர் சேதிநாட்டதென்பது "சேதிநன்னாட்டு நீடுதிருக்கோவலூர்" எனச் சேக்கிழார் கூறுதலா லுணரலாம். இத் திருக்கோவலூர்விஷயமாக மலையமான்சம்பந்தமான பலபலகதைகள் கேட்கப்படுகின்றன. இவன் அன்னைவயிற்றிலுதியாமல் வேள்வியிலு தித்தகாரணத்தாற் றெய்விகன் எனப்படுவான் எனவும், சேரன்மகளா கிய பதுமாவதியை மணம்புணர்ந்தான் எனவும், கொல்லிமலையை மேற் கலுடைய திருமுனைப்பாடிநாட்டை மூவேந்தர்பாற் பெற்றானெனவும், பெரியபுராணத்திற்கண்ட நரசிங்கமுனையரையர்க்கும் மெய்ப்பொரு ளுயனார்க்கும் தந்தையாவான் எனவும், மூவர்முடியுடன் தன்முடியுஞ் சேர்த்துச்சூடிய நான்முடியுடையானெனவும், மலையரையன் அவதாரம் இவனெனவும், பாரிமகள் அங்கவை சங்கவையை மணந்தவன் எனவும், இவரன்றிச் சோழன்மகளையும், பாண்டியன் மகளையும் மணந்தவன் எனவும், இவரல்லாமற் சத்யபுரி ராஜகுமாரிசளையும் மணஞ்செய்து கொண்டானெனவும் அண்ணாமலைச்சதகம் என்னும் நூல் கூறும். இந்த நூற்கண் கொல்லியை எல்லையாகவுடைய திருமுனைப்பாடிநாட்டை இவன் வேந்தர்பாற் பெற்றான் என்று கூறுதலால் அதன்கண் சேரன் மலைநாட்டுப்பகுதியும் அடங்குதல்நோக்கி இவனும் மலையன் மலைய மான் எனப்பட்டானென்றும், பிற்காலத்துச் சேரன்பாற்பெற்று இவ னுள்ளின்ற மலைநாட்டுப்பகுதியை மலையமானுடென்றே கொண்டா ரென்றும் கூறினுமிழுக்காது. எங்ஙனமாயினும் இந்நாடு இவனுக்கு என்றுமுள்ளதாகாது இடையிற்கிடைத்ததென்பதை இந்நூலும் நன் குணர்த்துதல்காண்க. இதுகொண்டுபோலும் சேக்கிழார் மெய்ப்பொரு ளுயனாரைச்

"சேதிநன்னாட்டுநீடுதிருக்கோவலூரின்மன்னி
மாதொருபாகரன்பின்வழிவருமலாடர்கோமான்" என்றார்

எனத் தெரிந்துகொள்ளலாம். தெய்விகனுக்கு மலைநாட்டுப்பகுதி கிடைத்தபடியால் அவன்புதல்வரென்று அண்ணாமலைச்சதகங்கூறிய மெய்ப்பொருளுயனாரை அத்தந்தைசிறப்பெல்லாம் உடையாராகக் கருதி மலாடர்கோமான் என்பது பொருத்தமுடைத்தேயாகும். தெய் விகனுக்குரியநாட்டின்கீழ்த்திசைப்பகுதியை மெய்ப்பொருளுயனாரும், மேற்றிசைப்பகுதியை நரசிங்கமுனையரையரும் பெற்று ஆண்டனர் என்று அண்ணாமலைச்சதகங்கூறும். இவற்றையெல்லாம் அந்நூலுட்

கண்டுகொள்க. இவன் தொண்டைநாட்டவனாகவிருந்து சேரனோடு சம்பந்தஞ்செய்தகாரணத்தாற் றொண்டைநாட்டார் சேரற்கு மைத்துனக்கேண்மைபாராட்டுமுறைநலமுடையராயினரென்றூகித்தற்கு மிடனுண்டு.

"சேணுலாவுசீர்ச்சேரனார்திருமலைநாட்டு
வாணிலாவுபூண்வயவர்சண்மைத்துனக்கேண்மை
பேணீடியமுறையதுபெருந்தொண்டைநாடு"

என்பதுகாண்க. அண்ணாமலைச்சதகத்தில்

வந்துலகு புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழின்
மலையமான் றந்த பதுமா
வதிமா திணைப்புணர்ந் தரிதாய்ப் பயந்தவொரு
மைந்தனர சிங்க முனையற்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன் னனா
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்க முனையர்
சந்ததியில் வந்தவர்கண் மலையமா னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசை யெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர் கண்டா
யந்தநர சிங்கமுனை யரையர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்த ராய
ரண்ணாவி னிற்றுதிசெய் யுண்ணாமு லைக்குரிய
வண்ணாம லைத்தே வனே.

என வருதலா னிவற்றதுண்மை எளிதிலறியப்படும். பதுமாவதி சேரன் மகள் என்று இந்நூலுட் கூறுதலானும் அச்சேரவம்மிசியரேயாதல் பற்றி அவர்பெயரையெல்லாம்புனைந்தாராவர். சேக்கிழார் மலாடர் கோமான் என இவர் தம்பியாரைக்கூறுதலான் மலாடர் என்னும் பெயர் பிற்காலத்துக் குடிப்பெயராயிற்றென்று எளிதிலூகிக்கத்தகும். இக்கதையெல்லாம் சேரனே மலையமானென நிகண்டுகளெல்லாங் கூறிய தனையே வற்புறுத்துதல் நன்று கண்டுகொள்க.

கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்திற், றொண்டைநாட்டவனை காரி சேரன்பால் மலைநாட்டுப்பகுதியைப்பெற அது காரியென்னும் மலையமானுடையதாகிய காரணத்தான் மலாடாகிய நாட்டைத் தொண்டை நாடெனவே கருதினர்.

"மலாடும்வளர்பாண்டியும்வழங்குபுனனாடு
நிலாவுதிறையாகநிதிநிச்சமும்வழங்க
விலாழிமதகுஞ்சரமும்வெய்யபொருண்மற்றுங்
குலாவுசிறப்பெய்தியதுகொங்குவளநாடு"

என அவர் பேரூர்ப்புராணத்துப் பாடுதலா னறியப்படும். முதலிற் சேரன்பகுதியிலிருந்த மலைநாடு நாளடைவிற் றொண்டைநாடாகிய தன்மையையே யிது காட்டும்.

இஃது இன்னும் ஒருவகையானும் ஆராயப்படும். அகப்பாட்டில்

"அருவிபாய்ந்தகருவிரன்மந்தி
செவ்வேர்ப்பலவின்பழம்புணையாகச்
சாரற்பேரூர்முன்றுறையிழிதரும்
வறனுறலறியாச்சோலை
விறன்மலைநாடன்" (கூஅஉ)

எனக் கூறுவதன்கண் பேரூர் முன்றுறையையுடையது மலைநாடென்று கொள்ளவைத்தார். இப்பேரூர் காஞ்சிவாய்ப்பேரூர் எனப்படுவதாகும். அது காஞ்சியாற்றின் முன்றுறையுடையதாதலுங்காண்க. இது கொங்குநாட்டுள்ளதலம். குடசிதம்பரம் எனப்படுவதுமிதுவே. இவ் வூருடையநாடு மலைநாடெனலால் கொடுந்தமிழ்நாடாகிய மலைநாடு இப் பக்கத்ததென்று தெளிதற்கு இதுவுமோர் துணையாதல்காண்க.

இனி முருகக்கடவுள் வள்ளியெனப்பெயரிய குறவர்திருமகளைவேட்டது தொண்டைநாட்டு மேற்பாடியூர்ப்புறத்துள்ள வள்ளிமலையின்க ணென்பது கந்தபுராணத்தும், தணிகைப்புராணத்துங்கண்டது. இங் ஙனம் அப்புராணங்கள் கூறிநிற்க அருணகிரிநாதர் "சேரமலைநாட்டில் வாரமுடன்வேட்ட சீவிகுறவாட்டி மணவாளா" எனப்பாடுதலான் இவ் வள்ளியைவேட்டது சேர மலைநாட்டின்கண் எனக்கொண்டனரென்று தெரியலாம். அருணகிரிநாதர் வள்ளிமலையைச் சேரநாட்டதென்று

கருதியே இங்ஙனங்கூறினராவர். என்னையெனின் அவர் "வள்ளி படர்கின்ற வள்ளிமலைசென்று வள்ளியையணைந்த பெருமானே" எனப் பாடுதலான் வள்ளிமலையிற்றான் வள்ளியிருந்தாளென்றும், அங்குச் சென்று முருகக்கடவுள் மணந்தாரென்றும் கொண்டாரென்பது அறியக்கிடத்தலானென்க. இருதிறத்தார்க்கும் வள்ளிமலை என்பது ஒத்ததென்றும், அது சேரநாட்டது தொண்டைநாட்டது என்பதே வேற்றுமையென்றும் அறியப்படும். முற்காலத்தே சேரநாட்டதாகவிருந்த வள்ளிமலை பிற்காலத்தே தொண்டைநாட்டதாக யாதாமொருநிமித்தத்தாற் சேர்த்துக்கொள்ளலாயிற்றென்று நினைக்கத்தகும். இதனாற் றொண்டைநாட்டிலுள்ள வள்ளிமலையைத் தன்னகத்துடையதாக இச் சேரன் மலைநாடிருந்தது என்பதுமட்டில் இவ்வருணகிரியார்பாடல் உணர்த்துமென்க.

இனி இளம்பூரணவடிகளும், சேனாவரையரும் மலைநாடெனவழங்கியதை நச்சினார்க்கினியர் மலையமானாடெனவழங்கிக்காட்டியது குடபுலத்துக்குடநாடு, குட்டநாடு இவற்றின்பக்கத்துள்ள பெரியமலைகளையுடையநாடு என்று மயங்காமைப்பொருட்டென்றும், சேரனாகிய மலையமானுடையநாடு என்று தெளிதற்பொருட்டென்றும் கூறினும் அமையும்.

இனிக் குடநாடென்பது சேரர் குடபுலமுழுதையுமுணர்த்தி அதன்கண் ஒருபகுதியாகிய கொடுந்தமிழ்நாட்டையும், உணர்த்துதல் போல இம்மலைநாடு என்பதும், சேரர்குடபுலமாகிய மலைமண்டலமுழுதையுமுணர்த்தி அதன்கண் ஒருபகுதியாகிய கொடுந்தமிழ்நாட்டையுமுணர்த்துதல் நூல்களிலெல்லாம் காணலாம்.

இனி இச்சேரன் குடபுலத்தோர்பகுதியாகிய இம்மலைநாடு, மேற்கூறியவாற்றால் அகநாட்டிடத்தது என்று தெளியப்படுமாயினும் அதனெல்லை யுணரப்பட்டிலதாலெனிற் கூறுவேன். சேரன்பெயர்சிறந்தது "வானவன்கொல்லிக்குடவரை" எனப்பட்ட கொல்லிமலையானேயென்பது முன்னேகூறினேன். அவன்பெயர்சிறந்த கொல்லிமலை ஒருபுறனும், மலையமானாடென்று அவன்பெயர்சிறந்த மலைநாடு ஒருபுறனுமாமென்று சொல்லுதல் பொருத்தமுடைத்தாகாது. எங்கு அவனுக்குச் சிறந்தமலையுளது அங்குத்தான் அவன்பெயர்சிறந்த மலைநாடும்

உளதாகும். பதிற்றுப்பத்துரைகாரரும் "கொல்லிக்கூற்றத்து நீர்கூர் மீமிசை" (௮0-பதி.) என்புழிக் கொல்லிமலையைச்சூழ்ந்தமலைகளையுடைய நாடு என விளங்கவுரைத்தார். அவர் கொல்லிமலையைச்சூழ்ந்தநாடு என்னாது கொல்லிமலையைச்சூழ்ந்த மலைகளையுடையநாடு எனத் தெளிவித்தலையுங்காண்க. இதனாற் கொல்லிமலையைத் தலைமையாகக் கொண்டு அதனைச்சூழப் பலமலைகளையுடையதோர் நாடாதலின் மலைநாடெனப்பட்டதென் றாய்ந்துணரலாம். இக்கொல்லிமலை கொங்கு மண்டலத்ததாதலின் இம்மலைநாடும் அம்மண்டலத்தினோர்பகுதியாயடங்குதலறியலாம். கொங்குநாடு இடையிற் றன்பெயர்கொண்டு பொருந்தியதென்று முன்னமே சொன்னேன். இது சேரனுக்குரிய நாடுகள் சிலவற்றைத் தன்னகத்துக்கொண்டதாகும். மதுரைநாட்டினுள்ள திருவாவினன்குடியைச் சேரர் கொங்குநாட்டகத்துவைத்து அருணகிரிநாதர் வழங்கியவாற்றான் இக் கொங்குமண்டலத்தின் பெருக்கம் உணரப்படும். அவர்

"ஆதியந்தவுலாவாசுபாடிய
சேர|கொங்குவைகாவூர்நன்னாடதி
லாவினன்குடிவாழ்வானதேவர்கள்பெருமாளே"

எனவுரைத்தது காண்க. அவர் இங்குக் கொடுங்கோளூரிலிருந்தரசாண்ட சேரமான்பெருமானாயனாருக்குக் கொங்குநாடுரியதென்று பாடுதல் காண்க. இதனாற் பண்டைச்சேரர்கொங்குநாட்டின்பரப்பு எளிதிலறியப்படும். இவ்வாவினன்குடிக்கும் கொல்லிமலைக்குமிடையே தான் காவிரி, ஆன்பொருநை, குடவனாறு எனப் பெரியஆறுகள் பலவுள்ளன என்றுணர்க. குடவனாறு என்பது மேற்றிசையுடையவனதாறு என்று பொருள்படுதல் காண்க.' ஆன்பொருநை காவிரியுடன் கூடும் யாறென்று பதிற்றுப்பத்து "மாமலைமுழக்கின்" என்னும் பாட்டுரையாலுணர்க.* இங்ஙனம் சேரர் குடபுலத்துள்ளதும், சேரர்க்குச் சிறந்தகுடவரையாகியகொல்லியைத் தன்கணுடையதும், சேரர் கொடுந்தமிழ்மலைநாட்டைத் தன்னுட்கொண்டதும், சேரர்க்குரிய ஆன்பொருநை, குடவனாறுமுதலிய யாறுகளையுடையதும், மலைநாட்டுள்ள

* ஆன்பொருநையைப்பற்றிப் பின்னரும் விரித்துரைப்பேன். ஆண்டுக் காண்க.

தெனப்பட்ட பேரூரையுடையதும், பாண்டிநாடுவரை பரந்த நிலனுடையதுமாகிய சேரர் கொங்குநாடு சோணாட்டெல்லையிலுள்ளதென்பது எல்லார்க்கு மொப்பதாகும். சேக்கிழார் "கொங்கர்நாடுகடந்தருளிப் பொன்னாட்டவருமணைந்தாடும் பொன்னிநீர்நாட்டிடைப் போவார்" எனக் கூறுதலானும் இஃதறியப்படும். இதனாற் கொங்குநாடுஞ் சோழர்நாடும் அடுத்துள்ளவாறு புலப்படும்.

மற்றுச் சேக்கிழார் "கொங்கர்நாடுகடந்துபோய்க் குலவுமலைநாட்டெல்லையுற" எனக்கூறியதனாற் சேரர்மலைநாட்டைக் கொங்குநாட்டுக்கு அப்பால்வைத்தாரெனிற் கூறுவேன்—சேக்கிழார் ஈண்டுக் கூறுவது சேரமான்பெருமாணாயனார்காலத்துச் சேரரிருந்தநாட்டைக் குறிப்பதன்றி வேறு கொடுந்தமிழ்நாடு என்ற மலைநாட்டைக்குறிப்பதென்று கொள்ளுதல் பொருந்தாது. அவர் மலைநாடென்றுகொண்டது சேரமான்பெருமாணாயனார் அரசுபுரிந்த கொடுங்கோளூர்ப்பக்கத்துநாட்டையேயென்பது அவர்பாடிய பெரியபுராணத்தா னறியப்படும். அது உரையாசிரியர்முதலிய பல்லோர்கொள்கைப்படி குடநாடு, குட்டநாடு என இரண்டிலொன்றாவதன்றி இவ்விரண்டிற்கு மப்பாற் பல கொடுந்தமிழ்நாடுகள்கடந்து நிறுவப்படும் மலைநாடாதல் கூடாதென்க. மற்று அவர் மலைநாடென்று கூறியதெல்லாம் சேரர் நாடுமுழுது மலைமண்டலமென்றுவழங்குதல்பற்றி யெனக்கொள்க. சேரமான்பெருமாணாயனார்காலத்துக் கொங்குநாடு சேரர் ஆட்சிக்குரியதாயினும் அவராங்கில்லாமைபற்றிக் கொங்குநாட்டைச் சேரர் மலைமண்டலத்தினின்று வேறுபிரித்தாரெனக் கொள்ளத்தகும். இப் பிற்காலநிலைமையைத் துணையாக்கொண்டு சங்ககாலத்துள்ளதொன்றைத் துணிதலாகாதென்க.

இனிச் சேரமான்பெருமாணாயனார்காலத்துக்குமுன்னே சேரர் தம் வலிகுன்றிச் சோழர்க்குத் திறையளக்கின்ற சிறுநிலையையெய்தினாரென்பது அச் சேக்கிழார் பெரியபுராணத்துப் புகழ்ச்சோழநாயனார் வரலாற்றான் அறியப்படுவது. வலிகுன்றிய சேரர் பின்னே* கொங்குநாட்டுத் தலைநகரைவிட்டுத் தங்கட்குரிய குடநாடு, குட்டநாடுகளிலே

---

சேரர் தங்கணாட்டகத்தேயிருந்து பிறர்க்குத் திறையளக்கின்ற சிறுமையை நினைந்து தங்கள் நாட்டைவிட்டார் என்றுகொள்க.

சென்று ஒதுங்கினரென்று பிற்காலநிலைமைக்குத்தகத் துணியப்படும். இதனாற் சங்ககாலத்துக்குப்பின்னே சோழர் வலியிலராயினரென்றும், சங்ககாலத்துக்குப்பின்னே சோழராற் சேரர் கொங்குநாட்டைவிட்டுத் தங் குடநாட்டொதுங்கினராகக்கூறுதல் பொருந்தாதென்றுங்கருதிப் பிறர்கூறுவன பொருந்தாமை காண்க. சுந்தரமூர்த்திநாயனார்காலத்தவரான சேரமான்பெருமாணாயனார்க்குச் சுந்தரமூர்த்திநாயனாராற் பாடப்பட்ட புகழ்ச்சோழநாயனார் முந்தியவரென்பது தெற்றெனவிளங்கும். அப் புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று கொங்கரொடு குடபுலமன்னர் திறைகண்டவாற்றாற் கொங்கரொடு குடபுலமன்னர் வலிகுன்றித் தளர்ந்தவாறறியப்படும் என்க. இதனாலும் சங்ககாலத்துச் சேரர் தலைமையும், சேரமான்பெருமாணாயனார்காலத்துக்குமுன்னே சேரர் சோழர்க்குத் திறையிடுவோராகிய நிலைமையும் எளிதிலுய்த்துணரப்படுமென்க. புகழ்ச்சோழர்க்குத் திறையுரிமை கூறியவாற்றாற் கொங்குநாடு சேரர்க்கே அக்காலத்துமுரியதாதலுணரலாம். பிற்காலத்துங் கொங்குநாடு குடபுலம் என்பது மறக்கப்பட்டிலதென்பது

“சென்றசென்றகுடபுலத்துச்சிவனடியார்பதிகடொறு
நன்றுமகிழ்வுற்றின்புற்றுநலஞ்சேர்தலமுங்கானகமுந்
துன்றுமணிநீர்க்கான்யாறுந்துறுகற்சுரமுங்கடந்தருளிக்
குன்றவளநாட்டகம்புகுந்தார்குலவுமடியேனகம்புகுந்தார்”

என வெள்ளானைச்சருக்கத்துச் சேக்கிழார் பாடுதலானும் அறியப்படும். இதன்கட் குடபுலத்துப்பதிகடொறு மின்புற்றுத் தலமுங் கானகமுங் கான்யாறுஞ் சுரமுங்கடந்து அப்பாற் குன்றவளநாட்டகம்புகுந்தாரென்று கூறுதல்காண்க. கொங்குநாடு சேரருடையதென்பது இதன்பின்னும் மறக்கப்பட்டிலாமை முன்னே காட்டப்பட்ட “சேரர்கொங்குவைகாவூர்நன்னாட்டில்” என்ற அருணகிரிநாதர் திருப்புகழானறியப்பட்டதாகும். இதனான் முற்காலத்தும் பிற்காலத்துங் கொங்குநாட்டைச் சேரர்க்கேயுரிமையாகவைத்துப் பாடினருளரென்பதறியப்படும்.

இக் கொங்குநாட்டைப் பாண்டியனொருவன் வென்றுகொண்டானென்று இறையனார்களவியலுரை மேற்கோட்பாடல்கள் பலவற்றான் அறியப்படும். சோழனொருவன் கொங்கரைப் போரிற்புறங்கண்டான் என்று “கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே” (௩)

என அவனைப்பாடுதலானறியப்படும். ஈண்டுப் புறம்பெற்றகொற்றமென்பது எதிர்ந்தார் புறக்கொடையைப்பெற்றதனாலாகிய வென்றி என்றவாறு. இதனை யிங்ஙன முணராமையான் வேறுவேறு கூறுவாருமுளர். இப்பாண்டியரும் சோழரும் சேரரை வென்றுகொண்ட காலத்து அவர்நாடு வென்றவர்க்குத் திறையளக்குஞ்சிறுமையை எய்தியதென்று கருதுவதல்லது பழைய பகுப்புமுறையினின்றும் மாறிப் பாண்டிநாடும், சோணாடுமாகமாறிற்றென்று துணிதல் பொருந்தாது. அங்ஙனந்துணியின் "காவிரிவைப்பிற் புகார்ச்செல்வ" எனச் சேரனைக் கூறுதலாற் சோணாடு சேரநாடாயிற்றென்றும், செங்குட்டுவன்காலத்துத் தமிழ்நாடுமுழுதுஞ் சேரநாடாயிற்றென்றும் அதற்குமுன்னெல்லாம் வழங்கியநாடுகளின் பாகுபாடு அடியோடொழிந்துபோயிற்றென்றும் கொள்ளநேரும். இது தமிழ்நாட்டுவழக்கன்றென்பது பண்டைச்செய்திகளை நுணுகிநோக்குவார்க்குப் புலனாகும். முற்காலத்துத் தமிழ்வேந்தர்மூவருள் ஒருவர் மற்றை இருவரை வென்றவிடத்து வென்றவர் தோற்றவர்பாற் றிறைகொண்டிருப்பர். அங்ஙனமன்றாயின், வென்றவர் வென்றுகொண்டநாட்டின் தொன்மை முடியைத்தாம்புனைந்து அந்நாட்டு முன்னிகழ்ந்தமுறையேமுறையாக அரசாள்வர். இங்ஙனமல்லது பழையபாகுபாடனைத்தையுமாற்றிப் பாண்டிநாட்டைச் சோணாடாக்கினரென்றும், சோணாட்டைப்பாண்டிநாடாக்கினரென்றும், இவ்விரண்டையுஞ் சேரநாடாக்கினரென்றுந் துணிதல் பொருந்தாது. செங்குட்டுவன் மற்றை இருவேந்தரினும் மிக்கு விளங்கியகாலத்து மூவர்பொறியையும் அவனிட்டானென்பது சிலப்பதிகாரத்துக்காண்டலானும்; உறையூராண்ட சோழன் இருவரையும்வென்றபோது மூன்றுமுடியையும்புனைந்து மும்முடிச் சோழன் என விளங்கினனென்பது தேவாரத்தானும் அறியக்கிடத்தலானும்; வென்றவேந்தர் வென்றுகொண்டநாட்டின் பாகுபாடும், அரசியலும், அழியாமல் அவ்வந்நாட்டவர்க்கு அவ்வவ்வேந்தாய்விளங்கி நாடாண்டார் என்றே துணியலாம். இக்காலத்தும், ஒவ்வோர் நாட்டை வென்றவேந்தர் அவ்வந்நாட்டின்பாகுபாட்டை அழித்தற்கியலாமல் அவ்வவ்வெல்லையிலே அவ்வந்நாட்டை வைத்து அந்நாட்டு வழக்கங்கட்கியைய அரசாளுதலையுங் கண்டுகொள்க. இவ்வுண்மை யுணர்ந்தன்றே பிற்காலக்கவிகளும் பாண்டியரும், சோழரும் கொங்கு

வென்றதையறிந்துவைத்தும் 'சேரர்கொங்கு' என்றேபாடுவாராயினா ரெனத்தெளிக. அவ்வக்காலத்துவென்ற அரசனைச் சிறப்பித்து மூன்றுநாட்டையுமுடையானாக ஒருவனைப் புகழ்ந்ததன்றிப் பாண்டியர்புகார்நாடு, சோழர்மதுரைநாடு, சேரர்கொற்கை எனமாறி யாண்டும் பலர்மேல்வைத்து வழங்காமையானும் இதனுண்மை நன்று தெளியப்படும். மிகவும் அழகிய இம் முறைகெட்டு நிலைதடுமாறியது இறப்பப்பிற்காலத்தின்கண்ணேயாமென்று ஆராய்ந்துகொள்க. யான் இத்துணையுங்கூறியது 'கொங்குநாடு' எஞ்ஞான்றும் சேரர் கொங்கு என வழங்கப்படுமேயன்றிப் பாண்டியர்கொங்கு சோழர் கொங்கு என எந்நூலுளும் வழக்குப்படாதென்பதை யுணர்த்தவே யெனவறிக. சேரர்கொங்கென்னும் வழக்கன்றிப் பாண்டியர்கொங்கு, சோழர்கொங்கென வழக்கின்மை பன்னூலுர்வல்லார்வாய்க்கேட் டுணர்க. பாண்டியருள்ளும், சோழருள்ளும் ஓரொருவேந்தன் வென்றதைக்குறித்தற்கண் "குனிவார்சிலையொன்றி னால்வென்ற கோன்கொங்க நாட்டகொல்லை" எனப் பாண்டியனையுங் 'கொங்கர்' என ஒரு சோழனையுங் கூறுதலெல்லாம் சேரனைக் "காவிரி மண்டிய சேய்விரிவனப்பிற்புகார்ச்செல்வ" (பதிற்-௭௩) என்றதனோடொக்கு மன்றிப் பிறிதாகாதென்றாய்த்துணர்ந்துகொள்க.

இத்துணையுங்கூறியவற்றாற் சங்ககாலத்துக் கொங்கு சேர ருடையதன்றிப் பிறருடையதன்மை நன்று தெரியலாம். அங்ஙன மாயின் அக்கொங்குநாட்டூரெல்லாம் அந்நாடுடைய சேரரையேசேர்ந் தன என்பது யான் கூறவேண்டுவதன்று: அக்கொங்குநாட்டுப்பல் லூருட் கருவூர் எனப்பெயரியதோரூருண்மை பலநூல்களானறியப் படும். இக்காலத்தும் அக்கருவூர் அப்பனூரால் வழக்கிற்குமியையக் கொங்குநாட்டதென்றே தமிழுலகாற் கருதப்படும். இவ்வூர் நூலிற் கூறியாங்கு காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநையின்றுறையை யுடையதாகும். சங்கப்புலவரானும், ஆளுடையபிள்ளையாரானும் பாடப்பட்ட திருக்கோயிலையுடையதாகும். கருவூர்த்தேவராற் பாடப்பட்ட திருவிசைப்பாப்பெற்றதாகும். அருணகிரிநாதராற் பாடப்பட்ட திருப்புகழுடையதாகும்: இவ்வூரை உமாபதிசிவாசாரியர் கொங்குநாட்டுத்திருப்பதிகளுளொன்றாகவுரைத்தார். இது சேரர் கொங்குநாட்டுள்ள காரணத்தாற் சேரர்கருவூரென்பது தெள்ளிது.

மற்றிக்கருவூரைச் சேக்கிழார்

“தங்கள்குலமரபின் முதற்றனிநகராங்கருவூர்”

எனவும்

“மன்னியவநபாயன்சீர் மரபின்மாநகரமாகுந்
தொன்னெடுங்கருவூரென்பசுடர்மணிவீதிமூதூர்”

எனவும் கூறுமாற்றாற் சோழரூரெனக்கருதினரென்று நினைக்கப் படுமாலெனிற் கூறுவேன். சங்கநூல்களிலேனும், சேக்கிழார்பெரிய புராணத்தேனும், அதற்குப்பிந்திய நூல்களிலேனும், இரண்டு கருவூர் கூறப்படவேயில்லை. சங்கநூல் கருவூரை

“கடும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை,
திருமாவியனகர்க் கருவூர்” (அகம்-௯௩)

எனத் தெளிவாகச் சேரனுடையதென்றுகூறிற்று. யாப்பருங்கலக் காரிகை யுரைகாரரும்* கருவூரைச் சோணாட்டுக்கு மேற்கே யுளதாகக் காட்டினர். தேவாரத்தலமுறைவகுத்தபெரியாரும் கருவூரைக் கொங்குநாட்டேவைத்திட்டார். சேக்கிழாரும் இக்கொங்கு நாட்டுக்கருவூரையேகருதிக் கூறுகின்றாரென்பது அவர் “கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகாணத்........கருவூரின்வந் தணைந்தார்” எனவும் “வந்துமணிமதிற்கருவூர்மருங்கணைவார்...... திருவாயிலக்கோயின்முந்துறவந்தணைந்திறைஞ்சி” எனவுங்கூறுத லான் நன்குணரப்படும். அவர் புகழ்ச்சோழநாயனார் கருவூர்க்குப் போந்தது கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர் திறைகாணவேண் டியே என்று மிகவுநன்றாகத்தெளிவித்தல் காண்க. அவர் சோணாட் டூர்கள் பலவற்றைக் கூறுமிடத்தெல்லாம் அவ்வூர்கள் சோணாட்டுள் ளனவெனத்தெரியுமாறு அந்நாட்டுவருணனைகூறிச்செல்லுதலும், இக் கருவூரைச்சோணாட்டதென அங்ஙனங்கூறாமையும், நன்குநோக்கிக் கொள்க. இப்புகழ்ச்சோழநாயனார்புராணத்தே இப்புகழ்ச்சோழர் உறையூரிலரசுபுரிந்திருந்தார் என்றும், அவ்வுறையூர் சோணாட்டுள்ள தென்றும் விளங்கப்பாடுதலுங் காண்க. அவர் உறையூரிலரசுபுரியு நாளிற் கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகாணவேண்டிக் கருவூர்வந்தணைந்தாரெனவே கூறினர். பிறர்நினைக்குமாறுநோக் கின் குடபுலம் மேலைக்கடலோரத்து நாடாகும்: இக்கருவூர்க்கும், அக்

*ஒழிபியல் - ௭.

குடபுலத்துக்கும் நெடுந்தூரமல்லாமல் நெறியருமையுமுளது. அக்கடலோரத்துக்குடபுலமன்னர் திறைகாண இக்கருவூர்க்குச்சேறலேனோ? பிறர்கருத்துப்படி கொங்குநாடுதான் சேரர்க்கில்லாத் தனிநாடாயிற்றே? ஆண்டுள்ள கருவூரிற் குடபுலக்கோமன்னர் திறைகாண்பதென்னோ? கருவூர்க்கும் புகழ்ச்சோழர் அரசுபுரியும் உறையூர்க்கும் நாற்காததூரந்தானே. அவ்வுறையூரிலிருந்தே சோழர் இருவர் திறையுங்காண்டலிலுற்றதடை யாது? இவையெல்லாம் ஆராயப்புகின் அப்பிறர்கூறுவது பொருந்தாதென்றுதானே புலனாகும். சேக்கிழார் கொங்குநாட்டைக் குடபுலமென்று தொன்னூல் வழக்கிற்கியையவே கருதினாரென்பது வெள்ளானைச்சருக்கத்துச் சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூரவிநாசியினின்றுபுறப்பட்டுக் குடபுலத்துச் சிவனடியார்பதிகடொறும்போய் அப்பால் மலைநாட்டகம்புகுந்தாரெனக்கூறியவாற்றான் அறியப்படும். இதற்குரியபாடலை முன்னரே காட்டினேன். கொங்குநாட்டை ஆண்டுக் குடபுலமென்றுகூறியவர் ஈண்டுக் குணபுலமென்றுநினைத்து அதற்கேற்பக் கருவூரைச் சோழரதூர் என்றார் என்று பொருள்கொள்ளுதல் அசம்பாவிதமாகும். இவ்விடர்ப்பாடெல்லாம் சேரர் குடபுலம் இஃதென்று தெரியாமையானே நேர்ந்ததாகும். இதன்கண் இவ்விரோதமொன்றுமுண்டாகாதபடி நோக்கிப் பொருள்கொள்ளின் உறையூர்ப்புகழ்ச்சோழர் கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகாண அக்கொங்கரும் குடபுலமன்னருமுள்ள குடபுலத்தூர்க்குச் சென்றணைந்தார் எனவுரைத்தலே பொருந்திற்றாதல் காண்க. குடபுலத்தவரைக் கோமன்னர் என்றதனாற் கொங்கர் அவர் கீழடங்கிய சிற்றரசரும் குடியுமாவர். புகழ்ச்சோழர் குடபுலத்தைவென்று கொண்டதனால் அங்ஙனம்வென்றநாட்டுத் தலைநகர்க்கண்ணே அவர் திறைகாணச்சென்றார் எனவறிக. பிறர்கூறுமாறு குடபுலம் மேலைக் கடலோரத்ததேயாயின் சோழர்தந்திறையைக் கருவூரிற்கொணர்ந்து இன்னநாளின் நம்முன் அளக்கவென ஓலைபோக்கி நியமிப்பரென்க. அங்ஙனமொன்றும் நியமியாமையான் குடபுலமன்னர் கருவூரகத்தேனும், தோற்றகாரணத்தான் அவ்வூரைவிட்டு அதன் பக்கத்தேனுமுளராதல்பற்றியே குடபுலக்கருவூர்க்குச் சென்றாரெனப்படுமென்க.

புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று மொய்யொளிமாளிகையினத்தாணிமண்டபத் தரியாசனத்தமர்ந்து அப்புறத்துக் குடபுலமன்னர்கொணர்ந்த திறைகண்டார் எனக்கூறியவிடத்துக் கொங்கரையே கூறாமையானும், குடபுலமன்னரையே கூறிவிடுதலானும் கொங்கர் தனியரசராகாமைநன்குணரப்படும். குடபுலமன்னவர் வேற்றுநாட்டினின்று கருவூர்க்குத் திறையளத்தற்காக வந்தாரென அங்குக் கூறாமையானும் குடபுலமன்னர் அவ்விடத்தவராதலறியப்படும். திறைகண்டசோழர் குடபுலமன்னரை அவர்நாட்டுக்குச்செல்ல விடைகொடுத்தாரென்று அங்குக்கூறாமையானும் யான்கூறுவதே கருத்தென்றுணர்க. சேக்கிழார் விறன்மிண்டநாயனாருடையவூரும், கொங்குநாட்டுத்திருப்பதியுமாகிய திருச்செங்குன்றூரை மலைநாட்டுளதெனவைத்துச் "சேரர்திருநாட்டூர்களின்முன் சிறந்தமூதூர் செங்குன்றூர்" எனப் பாடுதலானும் இக்கொங்குநாட்டைச் சேரர் நாடென்றுகொண்டாரென்று துணியப்படுமென்றுணர்க. இங்ஙனங்கூறுகின்றசேக்கிழார் இக்கொங்குநாட்டுக்கருவூரைத் "தங்கள்குலமரபின்முதற்றனிநகர்" எனவும் "அநபாயன்சீர்மரபின் மாநகரம்" எனவுங்கூறுவராயின் அதனுணுக்கமிஃதென்று ஆராய்ந்தறிந்து முன்பின்முரணாமை உரைக்கவேண்டுவதாகும். சேக்கிழார் கருவூரைப்பற்றிக்கூறிய இவ்வீரிடத்தும் நேரே சோணாட்டூரென்றும், சோழரூரென்றுங்கூறாமல் அதன்சம்பந்தத்தை மரபின்மேலேற்றியே கூறுகின்றார். புகழ்ச்சோழர்க்கு வென்றசம்பந்தமல்லது வேறுசம்பந்தமுளதாயின் அதைவிளங்கச்சொல்லுவாரென்றேகொள்க. சேரரூரென்று உலகெலாந்தெரிந்தகருவூரைச் சோழரூரென்றுகூறுதல் பொருந்தாதென்பதை நன்குணர்ந்தே கருவூரைப்பற்றிச் சோழர்மரபுக்கேனும் சம்பந்தமுண்டாவென்று ஆராய்ந்துகண்டு அதனையே ஈண்டுக்கூறினாராவர். கருவூர் பாற்கரபுரம், பாற்கரக்ஷேத்திரம் என்னும் பெயருடையதாதலின் சோழர்தங்கள்குலமரபின்முதல்வனான சூரியனுடையநகரமாகும் என்பது கருத்தாகக்கொள்க. மரபின்முதல்வனுடைய நகரமாதற்சிறப்பான் முதன்மையாகிய ஒப்பற்ற நகரமாயிற்று. புகழ்ச்சோழர்க்கு வென்றுகொண்டசம்பந்தமன்றிக் குலமரபானோக்கினும் சம்பந்தமுண்டெனத் தம்மரியபெரிய புலமையானியைத்துச் சேக்கிழார்பாடிய திஃதென்றுணர்க. முன்னரும்

அநபாயன்சீர்மரபின்மாநகரமாகும் என்றதூஉ மிக்கருத்தே பற்றி யென்றுகொள்க. இவர்க்குமுன் வகைநூல்செய்த நம்பியாண்டார் நம்பிகளும் இப்புகழ்ச்சோழரைக் "கோகனநாதன்குலமுதலோனல மன்னியபுகழ்ச்சோழன்" (திருத்தொண்டர் திருவந்தாதி-௫௦) எனக் கூறியதனையும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. ஆண்டுத் தாமரைநாயகனான சூரியனாகிய சோழர்குலமுதல்வனுடையநலத் தைத் தன்பானிலைபெறுவித்தவனென்று கூறுதல்காண்க. தங்குல முதல்வனான சூரியன் சேரர்கருவூரையுடையனானாற்போலப் புகழ்ச் சோழரும் அதனையுடையாராயினரென்பதுபற்றியே இவ்வுவமைசெய் யப்பட்டதாகும். இவ்வகைநூலில் இவ்வுவமையாற்குறித்த பொரு ண்மையையே யுள்ளத்தமைத்துப் பிறிதோருவகையாற் சேக்கிழார் கூறினாரென்றேகொள்க. சோழர்க்கே என்றும்உரிமையாக்குவது அவர்க்குக்கருத்தாயின்

மன்னிநீடியசெங்கதிரவன்வழிமரபிற்
றொன்மையாமுதற்சோழர்தந்திருக்குலத்துரிமைப்
பொன்னிநாடெனுங்கற்பகப்பூங்கொடிமலர்போ
னன்மைசான்றதுநாகபட்டினத்திருநகரம்"

என்பதுபோல் விளங்கவுரைப்பரென்க. கருவூரைப் பாற்கரபுரமென் பது அதன்புராணத்திற்கண்டுகொள்க. அவ்வூரை வைதிகரெல்லாம் பாஸ்கரக்ஷேத்ரமெனவழங்குதலை இன்றுங்கேட்கலாம். "கருவூரை யிலங்குவளர்பாற்கரபுரமென்றிசைப்பர்தொன்னூலியலோரே." (தல மகிமை) என்பது கருவூர்ப்புராணம். இது பாஸ்கரக்ஷேத்ரமாயின் சோழர்தங்கண்மரபின்மாநகரமேயாமன்றோ. இவ்வாறு கவித்துவ வன்மையாற்கூறியதனை நுணுகிநோக்காது அதனையேசரித்திரமாகக் கொண்டு இடர்ப்படுவார்பிறரென்க. சோழமண்டலசதகமுடையார் சோணாட்டுநாயன்மார்பலரையுமெடுத்தோதுகின்றவர் புகழ்ச்சோழ நாயனார் உறையூரிலரசுபுரிந்தவரென்றுகொண்டும் அவர்சரிதம்நிகழ்ந் தது கருவூர்க்கணென்பதுபற்றி அவரை எடுத்துக்கூறாமல்விடுதலா னும் கருவூர் சோழமண்டலத்தூரன்றாதல் தெளியப்படும்.

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என வழங்கும் வெண்பாவால் சோணாட்டெல்லை கருவூரைப்புறக்கிட்டே கோட்டைக்கரையளவாய் நிற்பதுகாண்க. இதனுண்மை அடியிற்*குறித்திருக்குங்குறிப்பாலுமுணர்க.† சங்கநூல்களும் பின்னூல்களும் ஒருபடியாகச் சேரருடையதென்றுதெளிவித்த கொங்குநாட்டுச்சிறந்தவூரினை முன்பின் ஆராயாது சோழரதென்றுகூறிப் பண்டைத்தமிழ்வரம்பழியச் செய்யுள்செய்பவர் சேக்கிழாரல்லரென்று தெளிந்துகொள்க. இத்துணையுங்கூறியனகொண்டு சேரர் கொங்குக்கருவூர் சேரர்கருவூரேயென்றுணர்க. ‖

இனிச் சோழர்நீர்நாடும், சேரர்கொங்குநாடும் ஒன்றையொன்றடுத்துள்ளதன்மை முன்னரே விளக்கிவிட்டேன். சேரரும், சோழரும் ஒருவரோடொருவர் இகலிப் பல்காலும்போர்புரிந்தது தொன்னூல்களில் மிகுதியாகக்கேட்கப்படுதலான் சேரர் சோணாட்டையும், சோழர் கொங்குநாட்டையும் பகைப்புலமாகக்கருதினரென்றுணரத் தகும். சோழர்க்குக் கொங்கு பகைப்புலமாதல் "கொங்குபுறம் பெற்ற கொற்றவேந்தே" (௩௭௩) எனச் சோழனைப்புறப்பாட்டிற் கூறியதனாலறியப்பட்டது. இதனாற் சோழர்பகைப்புலத்தூரைச் சோழரூரென்று நூல்கள்கூறாவென்று தெளிந்துகொள்க.

இக்கருவூர் சேரர் கொங்குநாட்டதாதலாற் சேரரூரென்றுணரப்படுமாயினும் இதன்கண்ணே சோழவரசர் மாளிகையுடையராய் வதிந்தாரென்பது எற்றாற்பெறுதுமெனிற்கூறுவேன்.

புறநானூற்றில்

---

*The last of these names (Kottakarai) means 'Fort bank' and tradition says that it refers to the great embankment of which traces still stand in the Kulitalai Taluq. The Karai Pottanar river is also supposed to have formed part of the boundary and to have obtained its name from that fact. The Karai Pottanar is a small stream rising in the Kollaimalai.

—*Page 28 Gazetter of the Trichinopoly District.*

†The name signifies "the river which marked the boundary", and native tradition which appears to be founded on fact, says that the stream was once the boundary between the Pandya, Chola and Chera Kingdams.

—*Page 8 Gazetter of the Trichinopoly District.*

"இவன்யாரென்குவையாயினிவனே
புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய
வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்
மறலியன்னகளிற்றுமிசையோனே
களிறே,முந்நீர்வழங்குநாவாய்போலவும்
பன்மீனாப்பட்டிங்கள்போலவுஞ்
சுறவினத்தன்னவாளோர்மொய்ப்ப
மரீஇயோரறியாதுமைந்துபட்டன்றே
நோயிலனாகிப்பெயர்கதில்லம்ம
பழனமஞ்ஞையுகுத்தபீலி
கழனியுழவர்சூட்டொடுதொகுக்குங்
கொழுமீன்விளைந்தகள்ளின்
விழுநீர்வேலிநாடுகிழவோனே.

இது சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையோடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் பாடியது" (௰௩)

என இருத்தலைக் கற்றோர்பலருமறிவர். ஈண்டுப் புறப்பாட்டுரைகாரர் "களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்: இவன் களிறுமதம்பட்டது: இவன் நோயின்றிப்பெயர்க எனக்கூட்டி வினைமுடிவுசெய்க" என்றும், பெருநற்கிள்ளி களிறு கையிகந்து பகையகத்துப்புகுந்தமையான் அவற்குத்தீங்குறுமென்றஞ்சி வாழ்த்தியமையால் இது வாழ்த்தியலாயிற்று" என்றும் நன்கு விளக்கினார். இவற்றாற் சோழன்பெருநற்கிள்ளியென்பான் தன் சோணாட்டெல்லையகத்தே ஓர்காற் களிறூர்ந்துசெல்லும்போது அது மதம்பட்டுக் கையிகந்து சோழனுக்குப்பகையகமாகிய கருவூரிடஞ் சென்றதென்றும், அங்ஙனம் பகையகமாகிய கருவூரிடம்புகும் அக்களிற்றைச் சோழற்குத் துணையாய்ப்போந்த வாண்மறவரும், பழகிய பாகரும் தம்வலியாற்றடுத்து வேண்டுவனசெய்யவும் மதத்தால் அவற்றைமதியாது கருவூரிடஞ்செல்லத்தலைப்பட்டதென்றும், இவன் வாண்மறவருடன் களிறூர்ந்து கருவூர்மேல்வருதலைச் சேரன் அந்துவஞ்சேரலிரும்பொறையென்பான் சோழன்பகையகமாகிய கரு

யூரிடத்து வேண்மாடம் என்னும் மாளிகையின் உபரிகைமே லிருந்து தன்கண்ணானேகண்டு தனக்குப்பகையாகிய ஒருவன் வாண் மறவர்புடைசூழக் களிறூர்ந்துவருவானாகநினைந்து முகம்வேறு பட்டுத் தன்பக்கத்து அவ்வேண்மாடத்துபரிகையிலேயிருந்த உறை யூர் ஏணிச்சேரிமுடமோசியாரென்னும் புலவர்பெருமானை இவன் யாரென்றுவினாவ அதற்கு அவர் தம்நுண்ணறிவானும், சேரனிறு முற்பட்டு நிகழ்ந்தவற்றையெல்லாம் ஆராய்ந்துகண்டதுணிவானும், களிறூர்ந்துவருஞ்சோழனை முன்னமே தாந்தெரிந்திருந்ததன்மை யானும் இங்குக்களிறூர்ந்துவருவோன் நீர்நாடுகிழவோனாகிய சோழன் இவன்பகையகத்துப் படையெடுத்துவருவானல்லன்; இவன் யானை மதம்பட்டது: அது வாண்மறவரையும் பாகரையுமதியாது கையிகந்து, ஈங்குவாராநின்றது. இதனால் நீ இவனைப் போர்க்குவருவானாகக்கருதிச் சினவாதருள்க. சோழனும் நோயில னாய்ப்பெயர்க என்று உண்மையைத்தெளிவித்துத் தம்போருளுக் கும் பெரும்புலமைக்கும் ஏற்பது செய்தாரென்றும் நன்றாகத்தெரிந்து கொள்ளலாம். புலவர் இருபெருவேந்தர்க்கும்போர்நிகழ்ந்து பிர மாதம்விளையாதபடி காத்தலைமேற்கொண்டு இது பகைப்புலத்துப் படையெடுத்தலன்று; யானைமருளியோரறியாதுமதம்பட்டது: இக் களிற்றுமிசையோன் நீர்நாடுடையசோழனென்பதியானறிவேன். களிறு மதம்பட்டதாலும், பகைப்புலம் புகுதலாலும் உண்டாம் ஆபத் தினின்று இவன் தப்பிநீங்குவானாகுக என்று சேரன்வெகுளியை மாற்றியருளினரென்று கொள்ளத்தகும். இதனாற் ~~சோணாடு கரு வூரை~~ யடுத்ததென்றும், அது சோழர்க்குப் பகையகமெனவும், சோணாட்டு மதம்பட்டகளிறு அடங்காதுவெகுண்டெழுந்து கையிகந் தாற் பாணித்தலின்றிக் கருவூர்புகுமளவில் அவ்வளவு அணித் தாக இக்கருவூருள்ளதென்றும் நன்குணரலாம். உறையூர் ஏணிச் சேரியிலுள்ளவராதலான் முடமோசியார் தம்மூர்ச்சோழனை முன் னரே நன்கறிந்தவராவர். உறையூரகத்ததோர் சேரியாதலின் உறை யூரேணிச்சேரி எனப்பட்டது. வேண்மாடத்துமேலிருந்து இவை யெல்லாங்கண்டவாற்றான் அம்மாடம், ஊர்சூழெயிலினும் மிகவுயர்ந் திருத்தல் பெறப்படும். இங்ஙனமன்றி எயிற்புறத்திருந்ததோர் மாடமீதெனினு மமையும். ஆடகமாடம், வெள்ளிமாடம் என்பன

போல இஃதுமொன்றாகும். முடமோசியார் தம் உறையூரை நீங்கி இச்செய்தி நிகழ்தற்குமுன்னே சேரனை அவனது ஊர்க்கண்ணே சென்று கண்டிருந்தாரென்பதும் இதனானே கொள்ளத்தகும். இப்புறப்பாட்டில் "இவன்யாரென்குவையாயின்" என்றிருத்தலாற் சேரனும் புலவரும் கண்ணுற்காணக்கூடிய அவ்வளவு அணித்தாக மதக்களிறு சோழனைத்தாங்கிக்கொண்டே கருவூர்ப்பக்கத்து வரலாயிற்றென்றுணரத்தகும். கருவூரைப்பகையகம் என்றதனாற் சோழன் களிறூர்ந்தது முதலிற்றன்னகம் என்று நன்றுதுணியப்படும். இச்செய்தியெல்லாம் சோணாட்டின் மேற்கெல்லையிலுள்ளதென்று யாப்பருங்கலவுரைகாரர்கூறிய கருவூர்க்கன்றி மேல்கடலோரத்துப் பெரியதோர் கொங்குமண்டலத்துக்கப்பாலுள்ள குடநாட்டிற் கருவூர் என்றபெயரே எந்நாளானுங் கூறப்படாத பிறர்கூறுங் கொடுங்கோளூர்க்குக் கனவினும்பொருந்தாதென்பது அறிஞராராய்ந்துகொள்வாராகுக. இதனாற் சோணாட்டையடுத்துள்ள கருவூர் சோழர்க்குப் பகையகம் என்றும், அதுவே சேரர் பெருமாளிகைகளையுடையதென்றும், சேரனைப்பார்த்தற்குப் பண்டைத்தமிழ்ப்புலவர் அக் கருவூர்க்குச் செல்வதுதான் வழக்கமென்றும் நன்குணர்ந்துகொள்க. இவ்வரிய புறப்பாட்டு, கருவூர்த்திசையறியாது அலையும் நெஞ்சமாகியமரக்கலத்தைக்கொண்டுழலும் நல்லுயிராகியமீகானுக்கு அவியாத கலங்கரைவிளக்குப்போல விளங்குவதாகும் என்று தமிழன்புடையாரெல்லாம் அறிந்துகொள்க. இதிற் சேரர்கொங்குநாடு சேரர்மலையாகிய கொல்லியையும், சேரர்யாறாகிய ஆன்பொருநையையும், சேரர்கொடுந்தமிழ்நாடாகிய மலைநாட்டையும் உடையதாயினாற்போலச் சேரர்கருவூரையும் உடையதாதல் தெளியப்பட்டதாகும். இங்ஙனம் அன்றாயின் ஊரொருபுறனும், நாடொருபுறனும், மலையொருபுறனும் யாறொருபுறனுமாகி யிடர்ப்படவேண்டிவருமென்க.

இனிப் புறப்பாட்டுரையாசிரியரும், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியரும் வஞ்சி - கருவூர் என்று உரையெழுதினார் என்பது அறிஞர் பலரும் அறிவர். இங்ஙனமே நிகண்டு நூலுடையாரெல்லாங் கூறினார். இவற்றால் ஊரிருபெயர்களையுடையதென்பது பெறப்பட்டதாகும். இவ்விருபெயரும் இவ்வாசிரியர்களிட்டபெயரன்று; பண்டைச்சங்கநூல்களிற் கண்டனவேயாகும். "கடும்பகட்

டியானைநெடுந்தேர்க்கோதை, திருமாவியனகர்க்கருவூர்" (அகம் - ௯௩) எனவும், "ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்வஞ்சி" (அகம்-௨௬௩) எனவும் வருதலான் அறிக. இவ்வஞ்சி பகைப்புலத்தை யடுத்துள்ளகாரணம்பற்றியே சேரன் ஓம்பிக்காக்கும் வஞ்சியென்றா ரெனவறிக. இங்ஙனந் தொன்னூலுட்பயின்ற இவ்விருபெயருள்ளும், கருவூர் வழக்கின்கண்ணும் பெயராதலானே அதனிலை எளிதிலறியப் படுமென்றுகொண்டு வஞ்சியென்றுவருமிடந்தோறும் கருவூர் என்றெழுதினரென்றுய்த்துணரப்படும். வழக்கின்கட்பிரசித்திபெற் றுக் கருவூரென்னும்பெயருடைய ஊர்கள் பலவுளவாயின், அவற் றுட் டாம்கருதியது இஃதென்று எளிதினுலகறிந்துகொள்ளுமாறு ஏற்ற அடைகொடுத்துரைப்பர். அங்ஙனம் அடைகொடுத்துக்கூறாமை யான் நூலாசிரியரும், உரையாசிரியரும் கருவூர் என்று கூறியதெல் லாம் ஓரூரையே குறிக்குமென்று தெளியலாம். சேக்கிழார்மட்டும் பிற்காலத்துச் சேரமான்பெருமாணாயனாரிருந்த கொடுங்கோளூரை மகோதையென்னும் பெயருடன் வஞ்சியென்றும் வழங்கினார். இத னாற் பிற்காலத்துச் சேரமான்பெருமாணாயனாரிருந்தது கொடுங்கோ ளூராகிய வஞ்சியென்று துணியப்படும். அக்கொடுங்கோளூரை அவர் யாண்டும் கருவூரென்று வழங்காமையான் பண்டை ஆசிரியர்கூறிய பழையசேரரிருந்த கருவூர்வஞ்சி வேறென்று எளிதிற்றுணியப்படும். வஞ்சிக்குக் கருவூரென்றபெயரே வழக்கின்கணுள்ளதாமென்ப தியான் மேற்கூறியவாற்றானுணரலாம். அப்பெயர்வழக்கம் அக் கொடுங்கோளூர்வஞ்சியுடையதாயின் அதனையன்றேமுற்படக்கூறு வர். செய்யுளினல்லாமல் வழக்கினும் வழங்கும் ஆற்றலுடைமையா னன்றே உரைகாரரும் நிகண்டுகாரரும் வஞ்சியைக் கருவூரென்று கூறிக்காட்டினார். அவரெல்லாம் வஞ்சியைக் கருவூரென்றபெய ரானே விளக்கியது அவ்வஞ்சியென்னும்பெயர் பிற்காலத்துச் சேர மான்பெருமாணாயனார் அரசுபுரிந்த கொடுங்கோளூர்க்கும் இடப்பட்டு வழங்குதலை நன்கறிந்து, பண்டைநூலாருந் தாமுங் கருதியது அஃ தன்று; இஃதென்றுணர்த்தவேயென்பது நன்குணரத்தகும். கரு வூர்வஞ்சியை யாண்டும் யாரும் கொடுங்கோளூர், மகோதை, அஞ் சைக்களமென்னும் பெயர்களான் வழங்காமையானும், கொடுங்கோ ளூர்வஞ்சியைக் கருவூரென்று யாண்டும் யாரும் வழங்காமையானும்

இவை தம்முள் வேறு வேறு என்பது எளிதிலுணரப்படுமன்றோ? இவ்வுண்மையினை யிங்ஙனம் ஆராயாது மயங்கினோர்பலர் என்க. பிற்காலநூல்களையும், முற்காலநூல்களையும் ஒருங்குகற்றுச் செந்தமிழ்க் கடனிலைகண்ட கச்சியப்பமுனிவர் தாம் பாடிய பேரூர்ப்புராணத்து

"ஆனடுத்துயர்பூசனையாற்றியகிலமுந்
தானளித்தவினுற்கருவூரெனத்தக்கது
வானடுத்தெழும்வஞ்சிபசுபதியாயினார்
பானகஞ்சினார்பாழியுமானிலையாயிற்றே".

(குழகன்குளப்புச்சுவடுற்றபடலம் கஉ0)

என ஐயந்திரிபறப்பாடுதலான் யான்கூறுவதே மெய்யென்றுதுணிக. இவ்வாசிரியர் சேக்கிழார் பெரியபுராணத்தை எழுதுதெண்ணிப்படித்தவரேயாவரென்றியான் எண்டுக்கூறவும்வேண்டுவதோ? அந்நூல் கற்றதன்மேலு மிவர்க்குண்டாகிய துணிபு இஃதென்று நினைத்துக் கொள்க. இவற்றாற் பண்டைச்சங்கநூல்களிலும், அவற்றதுரைகளிலுங்கண்ட கருவூர்வஞ்சிக்கும், பிற்காலத்துச் சேக்கிழார்நூலிற் கண்ட கொடுங்கோளூர் வஞ்சிக்கும் யாதோரியையுமின்மை நன்குணர்ந்துகொள்க. இப்பாட்டானே கருவூரென்றபெயர்க்காரணமுமறிக. இக்காரணம்பற்றி இதனைச் சபீஜமாநகரமெனக்கூறுவர். கொங்குநாட்டுப்பேரூர் நிர்ப்பீஜமாநகரமெனப்படும். இதனாலது பிறவாநெறி என்று தமிழிற்கூறப்படும்.

இனி "உறையூரெனப்படுவதுறையூர்" என்றவிடத்து யாதோரடையுமின்றேனும் உறையூர் என்னும்பெயர் சோழரது தலைநகராகிச் சிராப்பள்ளிக்குன்றைத் தன்கணுடையதாகிய நகரையேயுணர்த்துதல் வழக்கினாற்றலானேயென்பது அறிஞர்க்கெல்லாம் ஒப்பது. அதுபோலக் கருவூர் என்புழியெல்லாம் சேரர்தலைநகராய்த் தண்ணான் பொருநைக்கரையிலுள்ளதாய்ச் செந்தமிழ்நாட்டின்மேலதாயுள்ள மாநகரையே வழக்காற்றலாற் செவ்வனங்குறிக்குமென்று துணியாராயின் ஆசிரியர்கள் அதனை அப்பெயரான்வழங்காரென அறிந்து கொள்க. கூடன்மதுரையென்றுரைப்பது மிதுவேபோலுமென்க. கூடலென்று பெயருடைய பல்லூர்களின் விலக்கியுணரவே மதுரையென்றெழுதப்படுவதென்க. இக்கருவூர் முற்காலத்து மிகப்பெரிய

தோர் மாநகரமாயிருந்ததன்மையால் அதிகப்பிரசித்திபெற்று வழங்கப் படுவதாகும். தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமைமயங்கியலி லுள்ள "இதனதிதுவிற்றென்னுங்கிளவியும்" என்னுஞ் சூத்திர வுரைக்கண் உரையாசிரியர் இளம்பூரணவடிகள் "உறையூரிற்பெரிது கருவூர் என்புழி உறையூர்க்குப்பெரிது கருவூர்" என்று கூறியவாற் றான் இக்கருவூர் சோழர் உறையூரினும்பெரிதென்று தெரிந்துகொள் ளலாம். இக்கருத்தானன்றோ பன்னூலுள்ளும், இக்கருவூர் மாநகர் என்று வழங்குவதென்று துணியப்படுமென்க. இது சோழர்தலை நகரினுஞ் சேரர்தலைநகர் பெரிதென்பதையுணர்த்தாமலிராது. இஃது உறையூரையடுத்திலையாயின உறையூரை எல்லைகாட்டி உறையூரிற்பெரிது கருவூர் என்று கூறாரெனவுணர்க. சங்கச்செய் யுளினும் இக்கருவூரைக்கூறியவிடத்துத் "திருமாவியனகர்க்கருவூர்" (அகம் - கங) என இதன்பெருமையெல்லாந் தோன்றக்கூறியதுங் காண்க.

இதற்கேற்பவே கிறிஸ்துபிறந்தபின் நூற்றுமுப்பத்தொன்ப தாம் ஆண்டிலிருந்த தாலமி என்னும் மேற்றிசையாளர் தாமெழுதிய பூகோளநூலில் நந்தமிழ்நாட்டைக்கூறுமிடத்துக் கேரளபதிகளு டைய ராஜஸ்தானம் இருக்குமூர் கருவூர் என்றுகூறி அதனைக்கடற் கரை ஊர் வரிசையின் வைக்காது உண்ணாட்டூர்களுடன்வைத்ததனை யும் நோக்கிக்கொள்க. அவரும் கேரளபதிகளூர் கருவூர் என்று கேட்டு வரைந்தவாற்றான் அதுவே எங்கும் வழங்கிய பிரசித்திநாமம் என்பது நன்குணரப்படும். இதனானேயன்றோ நம் உரையாளர் பலரும் வஞ்சியென்ற நூல்வழக்குப்பெயர்க்குக் கருவூரென்ற உலக வழக்குப்பெயரை உரையாகஎழுதினாராவர்.

இனி இக்கருவூர் வஞ்சியென்றுபெயர்பெறுதலைப்பற்றிச் சில கூறுவேன். இவ்வூருள்ளவிடம் வஞ்சிவனமெனவும், வஞ்சுளாரணிய மெனவும் வழங்கப்படும். வடமொழியுள் வஞ்சுளம் என்பதனையே தமிழில் வஞ்சியெனவழங்குவர். தமிழில்வஞ்சியென்பது வடமொழி யிற்போலச் சிலமரங்களின்பெயராகவும், ஓர்வகைக்கொடியின்பெய ராகவும்வழங்கப்படும். இது தமிழில் மரத்துக்கும்பெயரென்பது.

“ஞாண்கொளுண்கோலின் மீன்கொள்பாண்மக
டான்புனலடைகரைப்படுத்தவராஅ
ஞாரிநறவுண்டிருந்ததந்தைக்கு
வஞ்சிவிறகிற்சுட்டுவாயுறுக்குந்
தண்டுறையூரன்பெண்டிரெம்மை” (அகம்-உகசு)

என வருதலானறியப்படும். இதனைப் பிசின்மரமென்பர் பிங்கலந்தை நூலார்; அவர் “வானீரம்பிசின்வஞ்சியாகும்” என மரவகையில் வில்வமரத்துக்குஞ் செங்கருங்காலிக்கும் இடையேவைத்தோதுதலானிஃதறியப்படும். “வடியேர்தடங்கண்ணிவஞ்சிக்கொம்பின்றுளிவ் வருவாள்போலும்” (யாப்பருங்கலவிருத்திமேற்கோள்) என்னுமிதன்கண் வஞ்சிக்கொம்பென்பதனானும் இது மரமாதலுணரப்படும். இம்மரத்தின்கொம்பினை இளமாதர்க்குவமையாகவுரைப்பர். அதனால் “வஞ்சிக்கொம்பு” என்று உருவகப்படுத்தினார். சிந்தாமணியினும் “வஞ்சியங்கொம்பனாள்” (நடுஅ) எனவருதல்காண்க. பெருங்கதையினும்,

“இன்னொலிவீணைப்பண்ணொலிவெரீஇ
வஞ்சிக்கொம்பர்த்துஞ்சு......
ஒளிமயிற்கலாபம்பரப்பியிவ்வோர்
களிமயில்கணங்கொண்டாடுவதுகாண்மின்”

எனவருதலானும் இது மரமாதல் துணியப்படும். இதனை வன்னிமரமென்பர் கச்சியப்பமுனிவர். இது கொடிக்கும்பெயரென்பது “பூங்கொடிவஞ்சி” எனவருதலானறியப்படும். இக்கொடியினை மாதர் நுண்ணிடைக்கு உவமிப்பர்; “வஞ்சியிடையீர்” (சிலப்.) எனவும் “வஞ்சிநுண்ணிடை” (சிந்தா.) எனவும்வரும்.

வஞ்சுளம்என்பது வடமொழியில் வேதஸம், வாநீரம் என்னும் பெயர்களையும்உடையதாகும். அம்மொழியினும் அப்பெயர்கள் மரத்துக்குங்கொடிக்கும் வழங்கப்படும். இங்ஙனம் மரத்துக்குங் கொடிக்கும்வழங்குதலை (பக்கம் 47—48 டாக்டர் ஆப்பர்ட் பதிப்பு.) வைஜயந்திநிகண்டிற்கண்டுதெளிக. மஹாகவியாகிய காளிதாஸரும் ரகுவம்சகாவியத்தில்

“[illegible]
[illegible]”

என்பதனால் வேதஸம் கொடியென்பதனை நன்குகாட்டினார். நதியின் வேகத்தினின்று வேதஸமானது எங்ஙனம்வணங்கித் தன்னைக்காத்துக்கொள்ளுமோ அங்ஙனமே அவ்வைதஸவிருத்தியைமேற்கொண்டு விம்மதேசத்தாரும் வணங்காரைவேரறுக்கும் (ரகு) அவனினின்று தம்மைக்காத்துக்கொண்டார்கள் என்பதுபொருள். இதன்கட்குறிக்கப்பட்ட வைதஸவிருத்தி சாணக்கியநீதியினுங்கண்டதென்று ஈண்டு மல்லிநாதஸூரியென்னும் உரைகாரர் விளக்குகின்றார். நதிவேகத்துக்குவணங்கி, அதன்வேகமொழிந்தவாறெழுந்துநிற்குமியல்பினது வேதஸம் என்பதுபெறப்படுதலான், இதுகொடியாதல்தெளியப்படும். இவ்வேதஸம், வஞ்சியாதலை இவ்விரகுவம்சத்தை மொழிபெயர்த்துதவிய அரசகேசரியார்.

> இன்னவாரிதியைநோக்கிக்களிகொண்டவிகல்வேன்மன்னன்
> றன்னதாஞ்சிந்தைபோயநெறிதொறுஞ்சாராநின்ற
> மன்னர்மாமலையைவவ்விபெடுத்தெறிதரங்கவாரிக்
> கன்னிமாநதியினின்றவஞ்சியேகடுத்தார்மன்னோ.

எனப்பாடுதலானறிந்துகொள்ளலாம். இகல்வேன்மன்னன் சிந்தைபோயநெறிதொறுஞ்சாராநின்றமன்னர் மலைகளைப்பெயர்த்தெடுத்தெறியுமலைநீர்ப்பெருக்கையுடைய அழியாத பெரியயாற்றினின்ற வஞ்சியைபேயொத்தார் என்பதாம். உத்தராமசரித நாடகத்தில் பவபூதியென்னும் பெருங்கவிஞர் “வாநீரவீருத:” (உ-௩௬) எனவும் “ஸூரஞ்ஜுலவஞ்ஜுலலதா” (உ—௩௪) எனவும் வழங்குதலானும் இது வடமொழியிற் கொடிக்குமிகுதியாகவழங்கப்படுமென்றுணர்ந்து கொள்க. வீருத், லதா என்பன வடமொழியிற்கொடிக்குப்பெயர்கள். இவற்றையெல்லாமாராயாது வஞ்சுளம் என்பது வடமொழியிற் கொடிக்குப்பெயராகாதென்று துணிந்துவரைந்தாருமுளர். இவ்வஞ்சுளம் அதிகமாக அடர்ந்தவிடம் வஞ்சுளாரணியம், வஞ்சிவனம் என வழங்கப்படும். கொடியும், புல்லும், கல்லும், பூவும், மரமும், பிறவும் மிகுதியாகவுள்ளதன்மைபற்றி இவைநிறைந்த இடம் வனமென்றுபெயர்பெறும். வனம்என்பது தனியேவழங்குமிடத்து மரங்களடர்ந்தவிடம் என்பதைக்குறிக்குமேயன்றி புல்லங்காடு, தர்ப்பாரணியம், சரவணம், நெருஞ்சிக்காடு, விருந்தாவனம், [illegible]ம், மரற்கானம், குவளைக்காடு, பத்மவனம் [illegible]ங்கு

[illegible] ANMIYUR, MADRAS-[illegible]

தன்னைவிசேடித்தபொருண்மிகுதியாகவுள்ளவிடத்தைக் குறிக்கு மென்பது ஆராய்ந்துகொள்க. இவற்றால் வஞ்சுளாரணியமென்பது வஞ்சிமரமடர்ந்தகாடெனவும், வஞ்சிக்கொடியடர்ந்தகாடெனவும் பொருள்படுமென்றுணர்ந்துகொள்க. “மன்கருவூர்நீர்வஞ்சியும்” (வராககிரிச்சருக்கம்) என்றார் பழனித்தலபுராணமுடையாரும்.

இனி வஞ்சுளாஎன்னும் ஆகாராந்தபதம் வடமொழியில் மிகுதியாகப்பால்கறக்கும்பசுவுக்குப்பெயராதலின் அப்பசுக்கணிறைந்தகாடு எனவும் பொருள்படும். ஒரூர் ஒருகாரணம்பற்றியே பெயர்கொள்ளு மென்னும் நியதியில்லை. காஞ்சியென்னும்நகரப்பெயர்க்குப் பலபல காரணங்கள் கூறப்படுதலைக் காஞ்சிப்புராணமுதலிய நூல்களுட்கண்டு கொள்க. காஞ்சியென்னும் மரம்பற்றியும் காஞ்சியென்ப; திசைமுகனாலஞ்சிக்கப்படுதலினாலுங்காஞ்சியென்ப; காஞ்சனநதியைக் காஞ்சியென்பதுபோல ஏழுநாழிகையளவு வானம் காஞ்சனம்பொழிந்த ஊராதலாற் காஞ்சியெனவுங்கூறுப. “காஞ்சனம்பொழிகாஞ்சியதன் கணை” என்றார் ஐயங்கொண்டாரும். இங்ஙனங்கொள்ளுமிடத்துக் கொடிபற்றியும், மரம்பற்றியும், ஆன்பற்றியும் வஞ்சிவனம் எனப் படுமென்றுகொள்க. சீத்தலைச்சாத்தனார் “பொற்கொடிப்பெயர் படூஉம் பொன்னகர்.” (மணிமே. உகூ) எனவும், பூங்கொடிப்பெயர் படூஉந்திருந்திய நன்னகர் (ஷை உஅ) எனவுங் கூறியவிடங்களிற் பூங் கொடியாகிய வஞ்சியின்பெயர்பெறுநகர் என்று கூறினாரல்லது வஞ் சிக்கொடியைத் தன்கண்ணுடைமையால் அதுபற்றி அப்பெயர்பெற்ற நகர்என்று கூறினாரில்லை. ஒருவர் “எண்கோவைகாஞ்சி” என்பது பற்றி எண்கோவைப்பெயர்படூஉமின்னகர்என்றுகூறினால் அதுகாஞ்சி யென்று குறித்தாரென்பதல்லது அவ்வூர் எண்கோவையுடையதென் றும், அதுபற்றியே காஞ்சியென்று வழங்கப்பட்டதென்றும் கார ணங்கூறத்தலைப்படின் அது எட்டுணையும்பொருந்தாதென்றுதுணிதல் போல ஈண்டுந்துணிக. பூவாவஞ்சி, வாடாவஞ்சி என்பனவும் இக் கருத்தேபற்றிவந்தன. ஈண்டுக்கூறிய பூவாவஞ்சியும், வாடாவஞ்சி யும் அக்கருவூரிலுண்டு; அதுபற்றியேதான் அப்பெயர்களைக்கூறினார் என்று ஒருவர்வாதிப்பது எவ்வளவு பொருந்தாதென்று கொள்ளப் படுமோ அவ்வளவே வஞ்சிக்கொடியுடைமையால்கொடிப்பெயர்படூஉ மென்பதும் ஆமெனக்கொள்க. பூங்கொடிப்பெயர்படூஉம் என்னுங்

தொடர் பூங்கொடியின் பெயரைப்பெறூஉம் என்றுபொருள்படுதலல்லது பூங்கொடியுடைமையால் அப்பெயர்பெறூஉம்என்று பொருள்படாமையும் நோக்கிக்கொள்க. பிற்கூறியதேகருத்தாயின் அதற்கேற்றசொற்களால் விளங்கவைப்பரென்றுகொள்க. மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் இஃது ஒருகொடியின்பெயரைப்பெற்றதென்பர் என்றதல்லது இஃதொரு கொடியாற் பெயர்பெற்றதென்று கூறாமையும் கண்டுகொள்க. (மணி-அபிதானவிளக்கம்) இவ்வெல்லாம் நுணுகி ஆராயாது இஃதொருகொடியான்மட்டும் பெயர்பெற்றதென்று மயங்குவாருமுளர்.

இச்சங்கநூல்வழக்கெல்லாங் கற்றுத்தெளிந்த கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

"வன்னிநீள்வனமிருத்தலானஃதுவஞ்சியென்றுபெயர்மேவிய,
தன்னமாநகரடுத்துநம்முருவினைதுபூசைபுரிகிற்றியாம்"

எனக்கொடியைக்காரணமாக்காது வன்னிமரமே வஞ்சி என்று கொண்டு வன்னிவனமிருத்தலான் வஞ்சியென்று பெயரெய்தியது என்றுதெளிவித்தார். இவரிங்ஙனங்கொண்டதற்கோர்காரணம் உய்த்துணரப்படும். காரணமமைந்தகாசறுகாட்சிப் பரணரென்னும் பாவலர்பெருந்தகையார் இவ்வஞ்சியிலரசுபுரிந்த செங்குட்டுவனைப்பாடிய ஐந்தாம்பத்தில்

"காணிலியரோநிற்புகழ்ந்தயாக்கை
... ... .. ...
துளங்குநீர்வியலகமாண்டினிதுகழிந்த
மன்னர்மறைத்ததாழி.
வன்னிமன்றத்து விளங்கியகாடே (பதிற்-ரு-ச)

எனப்பாடியதன்கண் வன்னிமரத்தையுடையதோரிடம் வன்னிமன்றம் எனச் சிறப்பித்துச்சொல்லப்படுவது. இஃது இறந்தமன்னர் யாக்கையைத் தாழியிற்கவிக்கு மிடுகாட்டுப்பக்கத்ததென்று தெளியப்படுவது. இப்பதிற்றுப்பத்துரைகாரரும் "வன்னிமன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை; அதுதான் பிணத்தொடுசென்றாரெல்லாருமிருந்து மன்றுபோறலின் மன்றெனப்பட்டது" எனவுரைத்தார். இவ்வன்னிமன்றத்தையுடையகாடு வன்னிவனமென்று வழங்கப்பட்டதோவென ஊகித்தற்கும் இடனுண்டு.

இங்ஙனம் மரத்தான் வஞ்சுளாரணியம் எனப்படுதலேயன்றி, மிருதியாகப்பால்கறக்கும் பசுவாகிய காமதேனுபோந்தவனமாதலான் அப்பெயரெய்தியதெனக் கூறினும் இழுக்காது. இப் பிற்கூறியபொருள் ஆனிலையென்பதனோடு பெரிதும்பொருந்துதல் கண்டுகொள்க. வஞ்சுளா என்பது பசுவிற்குப்பெயராம்போது ஆகாராந்தபதமென் றுணர்க. இதற்கிப்பொருளுண்மை வைஜயந்திகண்டிற்காண்க. இங்ஙனம் பல காரணங்களான் வஞ்சியெனப்பட்டது இக்கருவூரென வறிந்துகொள்க. இஃதிவ்விடத்தது என்று பேரூர்ப்புராணத்துக் கச்சியப்பமுனிவர் நன்குதெளிவித்துள்ளார்.

தூம்புறுங்கைமதவேழமேய்ந்துபயில்சோலைசூழ்ந்தவதனுச்சியி
னும்பரத்தினடிநின்றெழுந்தொழுகுமாம்பராவதிவடாதினிற்
றேம்பழுத்துவருகாவிரிக்குடதிசைக்கணார்த்துலவுகாஞ்சியென்
றோம்புகின்றகுடிநைத்தெனுதொருசபீசமாநகரமுண்டரோ.

சபீசமாநகரம்-கருவூர். (பேரூர்ப்-குழகன். கo௭.)

ஆம்பராவதியின்கரையேயடந்தாங்கிடைத்
தோம்படாவகைசோமன்பணிந்தசோமேசனைக்
கூம்புறாதவன்பாற்குழைந்தேத்திக்கும்பிட்டுப்போய்
நாம்படாதருணல்கும்வஞ்சித்தலநண்ணிற்றே.

என அவர்கூறியவாற்றானுணர்க. (௵ ௵ கக௭.)

காமதேனு வழிபட்ட இடமாதலின் இக்கருவூர்ச்சிவபெருமான் கோயில் ஆனிலையெனப்படுமென்று கூறுவரென்பது

.....................கருவூரெனத்தக்கது,
"வானடுத்தெழும்வஞ்சிபசுபதியாயினார்,
பானகஞ்சினர்பாழியுமானிலையாயிற்றே"

என்பதனாற் பெறப்பட்டது. இத்திருக்கோயிலுளெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான் பசுபதியென்றழைக்கப்படுவர். "பசுபதிகர்ப்பபுரத்திலறுமுகப்பெருமாளே" என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். "கருவூர்ப்பசுபதியே" என்றார் உமாபதிசிவாசாரியரும். இப்பசுபதிநாமத்துக்குப் பொருள் பலவுளவேனும் சாதாரணமாக

யாவருங்கொள்வது ருஷபத்தையுடைய பதி என்பதேயாம். இப் பசுபதியினருளாலே உலகு ற்றோன்றி மாநிலம்விளக்கினவன் செங்குட் டுவன் என்னுஞ் சேரனென்பது

"ஆனேறூர்ந்தோனருளிற்றோன்றி
மாநிலம்விளக்கிய மன்னவனாதலின்
செய்தவப்பயன்களுஞ் சிறந்தோர்படிவமுங்
கையகத்தனபோற்கண்டனை"

என்று இறுதிக்காதையில் இளங்கோவடிகள் கூறுதலான் உணரப் படும். வஞ்சியிலுள்ள இப்பசுபதியையே இச்செங்குட்டுவனைப்பாடிப் பரிசில்பெற்ற பரணர்

பண்ணைகப்பாடிப்பலிகொண்டாய்பாரேழும்
பண்ணைச்செய்தபரஞ்சோதி—பண்ணை
வெருந்தேறியூர்வாயெழில்வஞ்சியெங்க
ளொருதேறியூர்வாயிடம்

எனச் சிவபெருமான்றிருவந்தாதியிற் பாடியவாற்றான் இக்கோயிலின் றொன்மை நன்குணரப்படும். ஈண்டும் வஞ்சியிற்சிவபெருமானை எருதேறியூர்வாயென்று முன்னிலைப்படுத்தியதனையும், அதனை அடுத்து இடம் என்றதனையும், வஞ்சி என்றதனையும் நன்கு நோக்கிக்கொள்க. இளங்கோவடிகள் 'ஆனேறூர்ந்தோன்' என்ப தூம், பரணர் 'எருதேறியூர்வாய்' என்பதும் ஒருகடவுள் வடிவையே குறிப்பதென்பது தெள்ளிது. பரணர் செங்குட்டுவனைப்பாடிப் பரிசில்பெற்றவராதலான் அச்செங்குட்டுவன்திருத்தம்பியாராகிய இளங்கோவடிகளோடொருகாலத்தவரென்ப தியான்கூறவேண்டுவ தன்று. 'பண்ணைவெருந்தேறியூர் வாயெழில்வஞ்சி' என்றது பண்ணி னிமையையறியும்ஆக்கள் எருதுகளில்ஏறித்தவழ்கின்ற இடத்துள்ள அழகிய வஞ்சியென்னுநகரம் என்று பொருள்படும். இதனாற் சொல்லியது நிலப்பண்பு. அஃதாவது அந்நிலத்து ஆக்கள் செருக் கால் எருதேறியூருமென்று அதன் நீர்வளமும், புல்வளமுங்குறித்த வாறும். இதனால் வஞ்சுளாரணியம், ஆனிலை என்பவற்றிற்கேற்ப வும் பசுபதியென்பதிற்கேற்பவும் இவ்வஞ்சியைப் பசுச்செல்வத்தால் வருணித்தாரென்று கொள்ளப்படும். இவ்வூரிடத்துள்ள நதியும்

ஆன்பொருந்துவது என்னும் பொருளில் ஆன்பொருந்தம் எனவழங்குதலுங்கண்டுகொள்க. இவ்வூரம்மையை அருணகிரிநாதர் "கோகுலசத்தி" எனவழங்குவர்.

அவர்

வெற்றிப்பொடியணிமேனியர்கோகுல
சத்திக்கிடமருள்தாதக்வேணியர்
வெற்புப்புரமதுநீறெழல்காணிய—ருள்பாலா
வெற்புத்தடமுலையாள்வளிநாயக
சித்தத்தமர்குமராவெமையாள்கொள
வெற்றிப்புகழ்கருவூர்தனின்மேவியபெருமாளே.

எனப்பாடினர். இதனானும் இவ்வூர்க்குக் கோகுலசம்பந்தமே மிகுத்துணரப்படும். இக்கருவூரைக் கோவூர் ஆனூர் எனவழங்குதலையும் தலபுராணத்துட்காண்க. இளங்கோவடிகளும் இவ்வூரைக் 'கோநகர்' என்றார். அரும்பதவுரையாசிரியர் அதற்குத் திருநகர் எனப் பொருள்கூறினர். கோவினிடத்துத் திருமகள்வதிகின்றாளென்பதுபற்றி அங்ஙனங்கூறினர்போலும். அருணகிரிநாதர் தந் திருப்புகழில் இவ்வூரை 'உயர்கருவைப்பதி' என்றும், 'குடகிற்கருவூர்' என்றும் "வெற்றிப்புகழ்தருகருவூர்" என்றும்'பசுபதிகர்ப்பபுரி' என்றும், 'வஞ்சி' என்றும் விளங்கப்பாடியுள்ளார். இதன்கட் 'குடகிற்கருவூர்' என்றது மேற்றிசையிலுள்ள கருவூர் என்றவாறு. இவ்வூரைக் குடபுலவஞ்சியென ஆன்றோர்வழங்கியதுபற்றி இவரும் இவ்வாறு கூறினர். குடம், குடகு, குடக்கு, குடகம் இவை மேற்றிசைக்குப் பெயரென்பதுணர்க. இங்ஙனமின்றிக்*குடகுநாடென்று கொடுந்தமிழ்நாட்டையுஞ்சுற்றிய தமிழொழிந்தநாட்டிலுள்ளது கருவூர்என்றுகொள்ள ஏலாமை நன்குணர்ந்துகொள்க. குடபுலத்தைப்பற்றி முதற்கண்விரித்தோதினேனுதலான் இக்கருவூர்வஞ்சியுள்ளநிலம் குடபுலமென்பதுதெளியப்படும். சேக்கிழாரும் கொங்குநாட்டைக் குடபுலமென்றுவழங்கியுள்ளாரென்பதை முன்னரே காட்டினேன். இனி ஒருசாரார் கருவூர் கொங்குநாட்டுள்ளதன்

---

*குடகுநாடு தமிழ்நாடன்மை மேலே காட்டினேன்.

றென்றும் சோணாட்டேயுள்ளதென்றும் மயங்குவர். அவர் சேக்கிழார் திருஞானசம்பந்தநாயனார்புராணத்து

செங்கட் குறவரைத்தேவர் போற்றுந்
திகழ்திருவீங்கோய்மலையின்மேவுங்
கங்கைச்சடையார்கழல்பணிந்து
கலந்தவிசைப்பதிகம்புனைந்து
பொங்கர்ப்பொழில்சூழ்மலையுமற்றும்
புறத்துள்ளதானங்களெல்லாம்போற்றிக்
கொங்கிற்குடபுலஞ்சென்றணைந்தார்
கோதின்மெஞ்ஞானக்கொழுந்தனையார்

அப்பாலைக்குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி
லெப்பாலுஞ்சென்றேத்தித்திருநணாவினையிறைஞ்சிப்
பைப்பாந்தள்புனைந்தவரைப்பரவிப்பண்டமர்கின்ற
வைப்பானசெங்குன்றூர்வந்தணைந்துவைகினார்

பருவமறாப்பொன்னிப்பாண்டிக்கொடுமுடியார்தம்பாத
மருவிவணங்கிவளத்தமிழ்மாலைமகிழ்ந்துசாத்தி
விரிசுடர்மாளிகைவெஞ்சமாக்கூடல்விடையவர்தம்
பொருவிறனம்பலபோற்றிக்குணதிசைப்போதுகின்றார்

செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி
நல்லிசைவண்டமிழ்ச்சொற்றொடைபாடியந்நாடகன்று
மல்கியமாணிக்கவெற்புமுதலாவணங்கிவந்து
பல்குதிரைப்பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்

எனக்கூறுதலை யறியாராவர். சேக்கிழார் 'கருவூர்த்திருவானிலைக் கோயில்சென்றிறைஞ்சிச் சொற்றொடைபாடி அந்நாடகன்று' என்று தெளிவுறப்பாடுதலான் அது சோணாட்டெல்லையிற் கொங்குநாட்டே யிருப்பது நன்குபுலனாகும். இங்ஙனம் அணித்தாதலானன்றே சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியூர்ந்தகளிறு மதம்பட்ட வளவில் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த இக் கருவூரிடஞ்சேறலாயிற்றெனவறிக. (புறம்-கங) "சென்றசென்றகுட புலத்து" (வெள்ளானை) என்பது முதலாக இங்ஙனம் பலவிடத்துஞ் சேக்கிழார் கொங்குநாட்டையே குடபுலமென்று தெளியவழங்கி

யிருக்கவும் அவற்றையெல்லாம்ஆராயாது கொங்குநாடொழிந்த மேல்கடற்பக்கத்துமலைநாடே குடபுலமென்றும் அம் மலைநாட்டுக் கொடுங்கோளூரே குடபுலவஞ்சியென்றும் தம் மனம்போனவாறு துணிந்தார் பிறரெனவறிக. சேக்கிழார் குடபுலத்துப்பதிகளொடும் இன்புற்றுத் தலமுங்கானகமுங்கான்யாறுங் கற்சுரமுங்கடந்து சுந்தர மூர்த்திநாயனார் மலைநாட்டகம்புகுந்தார் என்று வெள்ளானைச்சருக் கத்துத் தெளியக்கூறியதுகொண்டும் திருஞானசம்பந்தநாயனார் புராணத்துக் கொங்குநாட்டையே குடபுலமென்று பல்லிடத்தும் வழங்கியதுகொண்டும் ஆராயின் சேக்கிழார்

"கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகாண........
கருவூரின்வந்தணைந்தார்"

என்பதற்கு யான்கூறியதே கருத்தாதலெளிதிலுணரலாம்.

இனிப் பழனிப்புராணத்தும்

செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ்
கொங்குநன்னாட்டிடைக்கொன்றைவார்சடைப்
புங்கவன்குமரவேளுறையும்புண்ணியத்
துங்கவெற்புளசிலசொல்லுவாமரோ (கிரிச்சருக்கம்-உஎ).

மழைதவழ்வஞ்சியாரணியத்தும்பரும்
விழைபொருட்டுருவதுவெண்ணெய்மால்வரை
தழைதருகறைமிசையுட்டயங்குசங்கவெண்
குழையினனுறுவதுகொடுமுடிக்கிரி (ஷை உஅ).

என்பனவற்றாற் கொங்குநாடு சேரன்விளங்குகின்றநன்னாடென்றும் அந் நன்னாட்டு வஞ்சியாரணியமுண்டென்றும் கூறுதல்காண்க. ஈண்டுக் கூறிய வெண்ணெய்மால்வரை கருவூர்க்கடுத்துள்ள வெண்ணெய் மலை எனவறிக. அப்புராணத்துப் பின்னும்

நடித்தபொற்பொதுமுதலசீர்நாட்டுளநகரும்
வடித்தமுத்தமிழ்மதுரையுங்குமரியும்பிறவுங்
கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலேழுபதியுங்
கடித்திகழ்ந்தமென்மலரினூற்கைகுவித்திறைஞ்சி (கௌசலன்-அருச்சனைச்சருக்கம்).

எனக்கூறுதலானும் ஏழுசிவத்தலங்களையுடைய கொங்குநாட்டையே கொடிக்தடஞ்சிலைக்கோதைநாடு என்றுகொண்டது தெளியப்படும். கோதைநாடு-சேரனாடு.

இக்கொங்கு நாட்டுள்ள பேரூரென்னுந்தலம் குடபுலத்திருத் தல்பற்றி மேலைச்சிதம்பரம் குடசிதம்பரமென வழங்கப்படுதலையும் அத்தலபுராணத்தாற்றெரிக.

இங்ஙனம் வஞ்சியென்ற வழக்கும், அப்பெயர்க்காரணங்களும் முற்காலத்துப் பரணர்பாட்டும் பிற்காலத்து அருணகிரிநாதர், கச்சியப்பமுனிவர் முதலியோர் பாடலும் எல்லாம் கருவூர்க்கேபொருந்துதலையும், பிறிதோரூர்க்குப் பொருந்தாமையையும் நன்று தெளிந்து கொள்க.

இனிக் கருவூரென வுலகவழக்கினும், வஞ்சியென நூல்வழக்கினும் உள்ள இவ்வூர், ஆன்பொருநையாற்றுக் கரையிலுள்ளதென் பது,

> " கடும்பகட்டியானைநெடுந்தேர்க்கோதை
> திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
> தெண்ணீருயர்கரைக்குவைஇய
> தண்ணான்பொருநைமணலினும்பலவே ". (அகம்-கூகூ)

எனவும்,

> "வஞ்சிப்புறமதிலலைக்கும்
> கல்லென்பொருநைமணலினும்" (புறம்-கூ௬எ)

எனவும் வருதலானறியப்படும்.

பதிற்றுப்பத்துரைகாரர்.

> "......செங்குணக்கொழுகுங்
> காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
> மூன்றுடன்கூடியகூடலனையை" (பதிற்-௫௦)

எனவரும் பதிற்றுப்பத்தடிகட்கு உரைகூறுமிடத்து மூன்றுடன் கூடிய கூடல் என்றது அக்காவிரிதானும் ஆன்பொருநையும், குடவன்

என்றூற்போல்வதோர் யாறும் என இம்மூன்றுஞ்சேரக்கூடிய கூட்டம் எ - று. காவிரியனையையாவதேயன்றி மூன்றுடன்கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க'' எனவிளக்கினார். இதன்கட் காவிரியும், ஆன்பொருநையும், மற்றோர்யாறும் சேரக்கூடியகூட்டம் என்று தெளிவித்தவாற்றான் ஆன்பொருநையும் காவிரியும் ஓரிடத்துக்கலப்பதென்பது நன்குபெறப்பட்டது. இதனால் வஞ்சியெனவும், கருவூரெனவும் மேற்கண்ட ஊர் காவிரியொடுகூடும் ஆன்பொருநையாற்றின்கரையினதென்று தெரிவதாகும். காவிரியொடுகூடும் ஆன்பொருநையாற்றுக்கரையின்கணுள்ளது கருவூர்வஞ்சியென்பது தெரிந்தவாற்றால் கருவூர்வஞ்சி மேல்கடலோரத்திலில்லையென்றும், குடபுலமாகிய சேர நாட்டில் அகநாட்டுள்ளதென்றும் நன்கு துணியலாகும்.

தொல்லாசிரியர்கள் பல்லிடத்தும் காவிரியை

> ''பூவிரியகன்றுறைக்கணைவிசைக்கடுநீர்க்
> காவிரிப்பேர்யாறு'' (அகம் - கஅக)

எனவும்

> ''கடற்கரைமெலிக்குங்காவிரிப்பேர்யாறு''
> (சிலப் - கூ கடலாடு)

எனவும் வையையை ''வையைப்பேரியாறு'' (சிலப்) எனவும் பேர்யாறெனவழங்குதல்போல இவ் வான்பொருநையினை ஆன்பொருநைப்பேர்யாறு, பொருநைப்பேர்யாறென வழங்கக்கண்டிலேன். இதனால் இவ்வான்பொருநையினை உபநதியென்று நன்குணர்ந்தே பேர்யாறென்று வழங்காது தொல்லோர்விட்டாரென்று துணியத்தகும். உரையாசிரியரெல்லாம் பொருநை, ஆன்பொருநை எனவருமிடங்களில் ஆன்பொருந்தமென உரையெழுதினாரேயன்றிப் பேர்யாறென்றெழுதினாரில்லை. சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் ''பெருமலை விலங்கிய பேர்யாற் றடைகரை'' என்புழிப் பேர்யாறு ஓர் யாற்றின்பெயர் என்றெழுதினார், பேர்யாறே பொருநையாயின் இவ்விடத்துப் பேர்யாறென்பது பொருநைக்கொருபெயர் என்றன்றோ எழுதுவர். அங்ஙனம் எழுதாமையான் அவரும் இவ்வான்பொருநைவேறென்றும், பேர்யாறுவேறென்றும் நன்கு தெளிந்தாரேயாவரெனக்கொள்க.

பழனிப்புராணத்து நதியுற்பவித்தசருக்கத்து அகத்தியமுனிவர் பொதியமலையின் சிகரத்துத் தோன்றும் புனலில் ஒருபாதியைத் தாம்பிரபன்னியென விடுத்தாரெனவும் மற்றொரு பாதியை வடக்குமுகமாகச் செலச்செய்ததனால் அது பிலந்தருநெறியால் வராககிரியும், காமதேனுவும், மாமரமும் உள்ள இடங்களிலொழுகிக் கருவூர்க்கடவுளைப் பாலுடன் ஆட்டி அம்பாநதி, ஆம்பிராவதி, ஆன்பொருநையெனப் பெயர்பெற்று மணிமுத்தாறு, காவிரி இவற்றுடன் தானுங்கூடிக் கடலிற் கலக்குமெனவும், இவையன்றி ஒருகலை சித்திராநதியென வழங்குமெனவும், மற்றுமொருகலை வையையென்று வழங்குமெனவும், பின்னுமொருகலை சமுத்திரம் வடக்கெழுந்து செல்லுதல்போல ஒழுகிக் குடபாற்கடலிற்கலப்பதெனவும் விளங்கக்கூறியுள்ளது காணலாம். ஈண்டுக் குடபாற்கடலிற்கலப்பதென்றது பேர்யாறென எளிதிலறியலாம். இவற்றால் தாம்பிரபன்னி கருவூர் ஆன்பொருநை, சித்திராநதி, வையை, பேர்யாறு இவ்வைந்தும் வேறுவேறு நதிகளென்றும் இவையெல்லாம் பொதியமலைத்தொடரில் உற்பத்தியாவன என்றும் உணரலாகும். இவ்வுண்மையினை அப்புராணத்து

தொலைவின்மாதவர்தொழும்பெருங்கயிலையிற்றூய
கலையிலாயமுலப்பிரகிருதிகன்னிகையாய்த்
தலைவணங்கிநீடலையெறிகடல்வலயத்தி
னிலைபுரிந்தவந்தனைக்கிடநிகழ்த்துகென்றதுவே

எஞ்சுபல்லுயிருயிர்ப்பதற்கேதுவாயிருந்த
வஞ்சுளாடவியெனுங்கர்ப்பபுரியினைமருவி
விஞ்சுதேனுவினுருக்கெழுவிழைந்தெனைப்பூசித்
துஞ்சிடும்படியுலகெலாந்தருநதியென்றுரைத்தான்.

கண்ணுதற்பெருமானருள்கடிநகர்போகி
யுண்ணிகழ்ந்தவாபுரிந்தவக்கேழலோங்கலின்மே
னண்ணிநோற்றனளாவெனமாவெனநணுகு
மெண்ணிறேவர்கோன்பிலழைத்தனளிழைத்திடுநாளில்.

கொந்தார்நறவக்குளிர்பொன்னிதழிப்
பைந்தார்புனைபண்ணவனேவவிறால்
விந்தாசலம்வென்றவன்வேரிநறுஞ்
சந்தார்பொதியந்தனிலெய்தினனால்

பண்பாருயிருய்ந்திடமுன்பரவை
யுண்பாவலனென்சிகரத்துறையு
நண்பார்பொருநாதியின்புனலைத்
தின்பாருலகஞ்செலவுய்த்தனனால்.

ஒருசீரணவெற்புழிநின்றுயர்பார்
வருநீர்மையுமவ்வழிவங்கொளலாற்
பெருநீர்வருதாம்பிரவன்னியென
வருள்சேரொருபாதியடைந்ததுவே.

ஒருபாதியுதக்கிணடந்துபிலந்
தருமோர்நெறிசார்ந்துவராககிரி
வருதேனுவுமாழையும்வைகிடமீ
தருள்கூரவெழுந்ததளக்கரினே.

விண்ணந்தருகார்வரைமீதுவிராவுய்த்
தண்ணந்துறையந்திணையுந்தழுவி
வண்ணந்தருபல்பொருளும்வாரிக்
கண்ணன்றுயில்பைங்கடல்கண்டதுவே.

திரையிற்செறிசித்திரநன்னதியென்
றுரையிற்புகழ்கொண்டெழுமொள்ளருவி
குரையிற்பொலியுந்திரிகூடசல
வரையிற்கலையொன்றுவழங்கியதே.

கலையொன்றுகணந்தவழுஞ்சிகரத்
தலையொன்றருவித்திரடாழுமணி
மலையொன்றிவருந்திகழ்வையையென
வலையொன்றுவராழியினேர்த்ததுவே.

நீராழிநிலம்புகழுங்கலையொன்
றோராழியுதக்கெழல்போலொழுகிப்
பேராழிபுணர்ந்துபெருங்குடபாற்
காராழிபுகுந்துகலந்ததுவே. (இது பேர்யாறு ஆகும்)

பொற்பார்பொதியம்பொருவில்குமர
வெற்பாணவைமின்மிளிருஞ்சிகரத்
தற்பால்வருமந்நதிதன்பெருமை
நற்பான்மையையாவர்நவிற்றுவரே.

ஆனமாயைவெற்படைதலாலருட்பிரகிருதி
தானமெய்தலாலந்தவான்றடம்பொழிற்சருவூர்க்
கோனவற்குநன்பானுடனூட்டலாற்கொணர்ந்து
மாநிலத்திலம்பாநதியென்பர்நான்மறையோர்.

மாழைநீழல்போர்ந்தாம்பிரவதியெனவெழுங்கி
யேழைதேனுவினுருவுகொண்டினிதுவீற்றிருக்குஞ்
சூழல்போதலிற்றனுப்புமான்பொருநையென்றொருபே
ரேழிருங்கடலுடுத்தபாரிசைபமேவியதே.

மணிமுத்தாறுகாவிரிவிரிவாளைபாய்பொருநை
யணிமெய்த்தோங்குமுக்கூடலினணிமணியீசன்
றிணிமெய்த்தோங்குமெண்டோட்டிரிகுலேசன்வீரேசன்
பிணிமொய்த்தேறுவந்தேறுமெம்பிரான்பிரமேசன்

தாரகேசுரன்றயங்குகோங்கணேசன்வாகீச
னறணிந்தகாளீச்சுரனருள்விசாலேசை
னேருறுங்கரேசசனோடகத்தியவீசன்
சீரிணங்கனந்தேசன்வைகிடங்கரைதிகழும்

எனவருவனவற்றாற் றெளிந்துகொள்க. இவற்றால் தாம்பிரபன்னி, சித்திராநதி, குடகடலிற்கலக்கும்யாறு, வையை, ஆன்பொருநை இவ்வைந்தும் வேறு வேறு என்றும் இவை பொதியமலைத்தொடர்களிற் பிறப்பன என்றும் இவற்றுள் ஆன்பொருநை கருவூரை யடுத்தொழுகுவதென்றும் நன்றுணர்ந்துகொள்க. இவையெல்லாம் ஒருவர் படைத்துக்கொண்டனவாகாது இத் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்டு நிலைத்தவழக்காதல் உய்த்துணர்ந்துகொள்க. இவையொன்றும் ஆராயாது ஆன்பொருநையை ஆந்பொருநையென்று தம் மனம்போனவாறுமாற்றி அதுவே மேல்கடலிற்கலக்கும் பேர்யாறென்றும் அதுவே வானியென்னும்பெயருடையதென்றும் துணிவாருமுளர். அவர் "ஆனிவானியான் பொருந்தமாகும்" என்ற திவாகரநிகண்டினையும் "மாதவனார் வடகோங்கில்வானியாற்றின்" (பரமதபங்கம்-௫௩) என்ற தேசிகர் வாக்கினையும் உணராராவர். இவற்றால் ஆன்பொருந்தம் குடகடலிற்கலக்கும் யாற்றின்வேறாதலையும் அதுவே வானியெனப்படுதலையும் அது கொங்குநாட்டிலே இருத்தலையுந் தெளிந்துகொள்க. அவர் இடபப்பாதி மழையாற்பெருகும் யாறு க்கருதி மிதுநமாதமாகிய ஆனி தமிழ்ச்சொல்லேயென்பதறியாது

அதனை ஆதி எனமாற்றி அஃதிகரங்கெட்டு ஆந் என நின்று பின் பொருநையுடன்புணர்ந்து ஆந்பொருநையெனலாயிற்று என்பர். பிரயோகவிவேகநூலார் "ஆனி ஆடியையொழிந்த திங்களும் நாளிருபத்தேழும் தற்பவமாதலின்" என்றதனால் ஆனி தமிழ்ச்சொல்லாதறெளியப்படும். ஆந்பொருநை என யாண்டும் வழங்காமைகண்டு கொள்க. பிறர் "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு மூன்றுடன்கூடிய கூடலனைய" என்னும் பதிற்றுப்பத்துள் மூன்றுடன்கூடிய கூடலென்றது தென்கடலும் மேல்கடலும் கீழ்கடலும் கூடியகூட்டமென்று நூல்வழக்கிற்கும் உரைவழக்கிற்கும் விரோதமாகத் தாமொருபொருள்படைத்தார். "பூவிரிபுனலொருமூன்று" எனத் தெளியவுரைத்ததனையுங் காணாராயினார். "பூவிரிபுதுநீர்" என யாற்றை வழங்குதலானும் பூவிரிபுனல்எனக் கடலை யாண்டும்வழங்காமையானும் அவர் கூறுவது பொருந்தாதெனவுணர்க. கொங்குநாட்டு மணிமுத்தாறு காவிரி ஆன்பொருநை மூன்றுங்கூடிய முக்கூடலொன்றும் ஆன்பொருநையும், அதனுடன் இரண்டு நதிகள்கூடும் திரிவேணிசங்கமமொன்றும் உளவாதல் கேட்கப்படுகின்றது. பதிற்றுப்பத்துரைகாரர் கூறியபடி மூன்றுடன்கூடிய கூடல் என்றது காவிரியும் ஆன்பொருநையுங் குடவனென்றாற்போல்வதோர் யாறும் கூடியகூட்டம் என்றேனும், ஆன்பொருநையும் அதனுடன் இரண்டு நதிகள்கலக்கும் திரிவேணிசங்கமம் என்றேனும் ஆகுமல்லது இம்முக்கூடல் கடலாகாதென்பது அங்ஙனம் நூல்வழக்கும் உரைவழக்கும் இன்மையானும் உணரத்தகும். கொங்குநாட்டுத்திரிவேணி சங்கமம் ஒன்றுண்டென்பது

மன்றலங்கோதையர்பொருட்டுவல்லுழிக்
குன்றினின்னதிகளோர்மூன்றுங்கூடிய
மின்றருதலந்திரிவேணிசங்கம
மென்றனருணர்வினரின்னுங்கேட்டிரால்

விளம்புமாயாபுரியதற்குமேற்றிசை
யளந்திடுமூவிருகுரோசமற்றதின்
களங்கொள்காளிந்தியுங்காமர்வாணியுங்
குளிர்ந்தவான்பொருநைநன்னதியுங்கூடுமே.

எனப் பழனிப்புராணத்துள் வருதலானுணர்க.

இனிச் செங்குட்டுவன் மலைகாண்குவமென்று தன்கோப்பெருந்தேவியுடனும், இளங்கோவடிகளுடனும், தன் படைத்தலைவனை வில்லவன் கோதையுடனும், அழும்பில்வேளுடனும், படையுடனும், சேடியர்கூட்டத்துடனும், மற்றைப்பரிவாரங்களுடனும் பெருங்கூட்டமாக எல்லா உபகரணங்களையுங்கொண்டு வஞ்சிமுற்றத்தை நீங்கிச்சென்று பெரியமலைகளுக்கிடையே ஊடறுத்துச்செல்லும் பேர்யாற்றின்கரையின் மணலெக்கரிற்றங்கியிருந்தான் என்று சிலப்பதிகாரக் காட்சிக்காதையாற்றெரிவது. இச்செங்குட்டுவன் வாசத்தலமான வஞ்சியோ ஆன்பொருநையாற்றுக்கரைக்கட் கட்டப்பட்ட கோட்டையினையுடையதென்பது மேற்காட்டியபுறப்பாட்டடிகளாற்றெரியலாம். இதனாற் செங்குட்டுவன் ஆன்பொருநைக்கரையிலுள்ள வஞ்சியைநீங்கி எல்லாருடனுஞ்சென்று பேர்யாற்றங்கரையிற்றங்கியிருந்தானென்றே தெளியப்படுவதாகும். பேர்யாற்றங்கரையிலேவஞ்சியுள்ளதென்று நூல்கள் கூறாமையானும், ஆன்பொருநைக்கரையிலே கருவூர்வஞ்சி எனப் பெயரியவூர் உள்ளதென்றே நூல்கள் கூறுதலானும் ஆன்பொருநைக்கரையிலுள்ள ஓரிடத்தைநீங்கிப் பேர்யாற்றங்கரையிலோரிடத்தே தங்கினனென்றே ஐயமறத்துணியப்படுமென்க. பேர்யாற்றங்கரையினின்று செங்குட்டுவன் தன் வஞ்சிக்குத்திரும்பியதைக்கூறியவிடத்து "வாடாவஞ்சிமாநகர்புக்கபின்" என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் "பொலிவுபெற்றகருவூரிலே திரியச்சென்று அரசன் பேராற்றங்கரையினின்றும்போந்து புக்கபின்" என்று விளங்கவுரைத்ததனையும் நோக்கிக்கொள்க. ஈண்டும் பேராற்றங்கரையினின்றுநீங்கி ஆன்பொருநைக்கரையிலுள்ள தன்னூர்க்குப்புக்கபின் என்று கொள்ளுதற்கே எல்லா நூல்களுந்துணையாவன என்றுணர்க. எங்கேனும் ஓரிடத்துப் பேர்யாற்றங்கரையில் வஞ்சியிருப்பதாகக்கூறியிருந்தாலன்றோ, பிறவிடங்களிலெல்லாம் வஞ்சி ஆன்பொருநைக்கரையிலிருப்பதாகக்கூறுதல்பற்றி இரண்டியாற்றுப்பெயரும் ஓர்யாற்றின்பெயரோவென்கின்ற ஐயமேனும்உண்டாகும். அங்ஙனம்ஐயுறுதற்கும் நூலாதாரவேனும், உரையாதாரவேனும் இல்லாமை கண்டுகொள்க. பழனித்தலபுராணத்து மேல்

கடலிற்கலக்கும்யாற்றின்வேருக ஆன்பொருந்தம் காவிரியுடன்கலப்ப தாகக்கூறியிருத்தலுங்காண்க. வஞ்சியைக்கூறியபல்லிடத்தும் ஆன்பொருநை அதனைச்சூழ்வதாகவேகூறிப் பேர்யாற்றைக்கூறிய பல்லிடத்தும் வஞ்சியை எவ்விதத்தும்இயைத்துக்கூருமையான் ஆன்பொருநைக்கும் பேர்யாற்றுக்கும் யாதோரியையும் இல்லையென் றுணர்தலுடன் பேர்யாற்றுக்கும் ஆன்பொருநைக்கரைவஞ்சிக்கும் ஓரியையும் இல்லையென்றும் உணர்ந்துகொள்க. இனி, இளங்கோவடிகளாகியபெருங்கவியரசர், சிலப்பதிகாரமூன்றுகாண்டத்திறுதியிலும், கட்டுரைகளாற் சோழர் பாண்டியர் சேரர் மூவர்க்கும் அவ்வக்காண்டம் முறையேயுரித்தாமாறுகாட்டிக் காண்டத்துள்ளனதொகுத்துணர்த்திச் செல்வர். அக்கட்டுரைகளிற் சோழர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தந் தெய்வக்காவிரித்தீதுதீர்சிறப்பும்" எனவும், பாண்டியர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தம் வையைப்பேர்யாறு வளஞ்சுரந்தூட்டலும்" எனவும் அவரவர்யாற்றைச் சிறப்பித்துரைத்தவர் சேரர்சிறப்புரைக்குமிடத்துமட்டும் அவர்யாற்றைக் கூருமலே விடுத்தது தம் வஞ்சிப்புறமதிலலைக்கும்பொருநை உபநதியாயிருந்தல்பற்றியேயென் றுய்த்துணரப்படும். காவிரியும், வையையு முறையே புகார்க்காண்டத்தும், மதுரைக்காண்டத்தும் கூறப்பட்டது "வாழிவருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும்வஞ்சியார்கோமான்" என்பதனல் வஞ்சிக்காண்டத்துங் கூறப்பட்டிருக்கவும் கட்டுரையிற்கூருமை கண்டுகொள்க. இவ்வஞ்சிக்காண்டத்து,

"நெடியோன்மார்பிலாரம்போன்று
பெருமலைவிலங்கியபேரியாற்றடைகரை

என்பதனுற் பேர்யாறு கூறப்பட்டிருக்கவும், அதனுனும் இக்கட்டுரையிற் சேரனைச் சிறப்பித்தாரில்லையென் றுணர்க. இவற்றிற்குக் காரணம் ஆராயப்புகின் ஆன்பொருநை சோழர்காவிரியையும் பாண்டியர் வையையையும்போலப் பேர்யாருகாது உபநதியாதல்பற்றி யென்றும், சோழர்காவிரியையும், பாண்டியர்வையையையும்போலப் பேர்யாறு அரசர் தலைநகரைத் தன்றுறைக்கணுடைத்தாகாமைபற்றியென்றும் நன்கு புலனுகும். ஆன்பொருநையேபேர்யாருயின், வையையையும் காவிரியையும் கூறினுற்போல வஞ்சிக்காண்டக்கட்டுரையிற் கூறுவரென் றுணர்க. பன்னூல்களும் பாண்டியன் சோழன் இருவரையும் முறையே வையைத்துறைவன், பொன்னித்துறைவன் எனக்கூறிச் சேரனைப் பொருநைத்துறைவன் எனவே கூறுதல்காண்க.

பேர்யாற்றுத்துறைக்கண் அவன் தலைநகருடையனாயின் அவனைப் பேர்யாற்றுத்துறைவனெனவே கூறுமென்க. ஆறுடைமையேயன்றித் துறையுடைமையையுங்கருதியன்றே யாற்றுத்துறைவனென்பது. பேர்யாறுடையசேரனைப் பொருநைத்துறைவன் என்பது அவன் அதன்கண்வதிந்து அதன் றுறையையுமுடையனாயகாரணத்தாலென்றுணர்ந்துகொள்க. இதனாலும் பேர்யாற்றங்கரையிற் கருவூரில்லாமையும், காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநைக்கரையில் அவ்வூருண்மையும் உணர்க. பிறர் இவற்றுளொன்றும் ஆராயாது பேர்யாறு, பொருநை என்று சொல்லப்பட்டிருப்பன ஒரே யாறெனக் கூறிப் பேர்யாறு அயிரைமலையிற்பிறப்பதென்றும், அயிரைமலை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகம் என்றும் உரைத்தார்.

இவரிங்ஙனங்கூறியதைப்பற்றிச் சிறிதாராய்வேன். ஸஹ்யபர்வதம் குடகமலையென்பது, ஸஹ்யஜாஎன்றுமிகப்பிரசித்திபெற்றகாவிரியாறு அதன்கட்பிறப்பதென்று நூல்கள்கூறலாலறியப்படும். காவிரி குடகமலையிற்பிறப்பதென்பது "குடாஅது, பொன்படுநெடுவரைப்புயலேறு சிலைப்பிற், பூவிரிபுதுநீர்க் காவிரிபுரக்கும்" என்னும் புறப்பாட்டடிகட்கு, உரையாளர் "மேற்றிசைக்கட் பொன்படுகின்ற நெடிய குடகமலைக்கண்ணே முகிலின்கண் இடியேறு முழக்கிற்பூப்பரந்த புதுநீரையுடைய காவிரி உலகத்தைப்பாதுகாக்கும்" எனவுரைத்ததனாலும் "மலைத்தலையகடற்காவிரி" என்னும் பட்டினப்பாலையடிக்கு நச்சினார்க்கினியர் "குடகமலையிடத்தே தலையினையுடைய கடலிடத்தே செல்கின்ற காவிரி" எனக்கூறியதனாலும் உணரப்படும். ஸஹ்யஜா என்பது காவிரிக்குப்பெயரென்பது வடநூல்கள்பலவற்றினுங்கண்டது. சிவரகசியம் இரண்டாம் அம்சம் உ௪-ஆம் அத்தியாயத்து "ஸஹ்யமலையும் அதிலிருந்துண்டாய்வருங் காவிரி நதியும்" எனவருதல்காண்க. வடநூலார் ஸஹ்யபர்வதமென்பதனையே தமிழர் குடதிசையிருத்தல்பற்றிக் குடகமலையென்று வழங்குகின்றார் என்று தெளியலாம். இதனால் ஸஹ்யபர்வதம் யாதென்றும் யாண்டையதென்றும் உணரப்படும்.

இனிப் பேர்யாறு பாண்டிநாட்டுப்பகுதியிலுள்ள பொதியச்சாரலாகிய சிவகிரிக்காடுகளிற்பிறந்து மேல்கடலில்வீழ்வதோர்யாறென்பது பலருமறிவர். இவ்வுண்மையினை அடியிற்குறிப்பாலுணர்ந்து

U. V. SWAMINATHAIYER LIBRARY

கொள்க.* பாண்டிநாட்டுப்பகுதிக்குட்பட்ட சிவகிரிக்காட்டுக்கும், கொடுந்தமிழ்நாட்டுக்கும் அப்பாலுள்ள குமிலியாகிய ஸஹ்யபர்வதத்திற்கும் பாதாரியையுமில்லையென்பதும், நெடுந்தூரமென்பதும் பலருமறிவர். இங்ஙனமாகவும் பேர்யாறு அயிரைமலைப்பிறப்பதென்பதும், அயிரை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகமென்றும் பிறர்துணிந்தது எதுபற்றியோ அறிகிலேன். பழனித்தலபுராணத்தும் மேல்கடலிற் கலக்கும்பேர்யாறு பொதியத்திற்பிறப்பதாகவேகூறினர்.

---

* The Periyar is the finest, the largest and the most important of the rivers of Travancore. It takes its rise in the Shivagiri forests. As it first emerges from the dense forest the volume of water it contains is 30 yards wide and 2 feet deep even in the driest weather. After a course of 10 miles northward, it is joined by the Mullayar at an elevation of 2,800 feet. The Periyar then turns due west and continues so far about 10 miles over sandy bed. About 7 miles below Mullayar Tavalam there is formed a sort of gorge by the hills rising to a considerable height on either side of the river and approaching each other very closely. It is here that a dam is thrown by the Madras Government to a height of 160 feet and a width of 1200 feet to form a lake which greatly helps the irrigation of the land in the Vaigai valley. By the construction of the dam the river is caused to back up for a considerable distance as far as the Vazhukkapara Tavalam and all the low lying land on the north band of the river is submerged, the water extending up all the side valleys and reaching to within a mile of Kamili. From here a channel is tunnelled through the hill side over a mile long, by which the water is conveyed to one of the streams that go to feed the Vaigai river...............The Periyar after receiving the Muthirappuzha river flows West-North-West for about 8 miles when it pours under a large rock which probably has fallen from the hillside on account of land slip. In dry weather when the volume of water is small, the whole of it flows under the Rock. This has been exaggerated into a sudden disappearance of the river under ground. The water is considered to pass into a chasm and emerge again only after a very long distance........... Passing Malayathur and after a winding course of 14 miles., it reaches Alwaye, where it divides itself into two branches which again subdivide themselves into several small ones before reaching the sea ........The chief places on its banks are Peermade, Neryamangalam, Malayathur, Cheranallur, Vazhakulam, Alwaye, Ullinad and Veerapoly. The total length of the river is 142 miles of which for the last 35 miles only it passes through inhabited tracts. It is navigable for boats for 60 miles above its mouth. (Page 17--18 Vol. I. The Travancore State Manual by Mr. V. Nagam Aiya B.A ,F.R., Hist. S. Dewan Peishcar, Travancore.)

இனி வையைத்துறைவன் பொன்னித்துறைவன் எனப் பாண்டியனையும் சோழனையும் நதியாற்பெயரிட்டாளுதல்போலச் சேரனைப் பொருநைத்துறைவன் எனவாளுதலா னிப்பொருநையும் மேலுள்ள வையை காவிரி இவற்றையொப்பதோர் பேர்யாறேயாமென்றும், உபநதியாயின் அதனாற் பேரரசனைப் பெயரிட்டாளார் என்றும் கருதுவாருண்டு. இதன்பொருட்டு ஈண்டுச் சில கூறுவல். ஒரு நதியால் ஓரரசனைப் பெயரிட்டாள்வது அந்நதியால் அவன் நாடு பயன்படுதலையும், அதனான் அவன் செல்வமெய்தலையும், அதன்கண் அவன் ராஜநிருகமுடையனாதலையும் கருதியேயாகும். இவை ஈண்டுக்கூறிய மூன்றியாற்றுக்கும் ஒக்கும்: இங்ஙனங்கொள்ளாது யாறுகளின் அகலநீளங்களையும், அந்நாட்டுமலையிற்பிறந்து அந்நாட்டுக்கடலில் வீழ்தற்றன்மையினையும்பற்றி யாராயின் இம்மூன்றும் தம்முட் பெரிதும் வேற்றுமையடையும். பாண்டியர்க்கு வையை முழுதும் உரியதாகும். சோழர்க்குக் காவிரியின் தலை இடை கடைகளிற் கடையாறே யுரியதாகும். சேரர்க்குப் பொருநைமுழுதும் உரியதாகும். இங்ஙனம் ஆராய்ந்துகொண்டு காவிரியுடையசோழரைக் குறைகூறின் அது பொருந்துமா? என்று அறிஞரேயாராய்ந்துகொள்வாராக. நிலமெல்லாம்விளைவித்து உயிர்களனைத்தையும் வாழ்வித்தற்குக்காரணமான தன் நீர்ப்பிருதியை உவர்க்கடலில் வாளாஉகுக்கும் ஒரு மஹாநதியினும், தன்னீர்த்துளியையும்வீணாக்காது உலகுபயன்கொள்ள ஓர் யாற்றிலேகலக்கும் உபநதி சிறந்ததென்றுவாதித்துப் பொருநையே மற்றைவேந்தர்நதிகளினுஞ்சிறந்தது என்று கூறலுமாமே. இம்மூன்றுவேந்தர்க்கும் யாறு பேர்யாறாகவேண்டும் என்று கருதுவார்க்கு மூவேந்தர்க்கும் மூன்றுமலையும் தம்முள் ஒத்துப் பெரியவாதல்வேண்டப்படுமன்றோ? அதற்கென்செய்வது; பாண்டியர் பொதியத்திற்குச் சேரர்கொல்லி தாழ்ந்ததாகும். அக்கொல்லிமலைச் சிறப்பினூற்றிலொருபங்கும்சிறப்புடையதாகச் சோழர் நேரிமலை கூறப்படவில்லை. இச்சிறுமலையாற் சோழனை நேரியனெனக் கூறலாமா என்று ஒருவர்வினவின் அதற்குப் பிறரென்கூறுவாரோ? அவனுக்குள்ளமலைகளிலெல்லாம் அதுவே உயர்ந்ததாதலின் அதனால் அவனைச்சிறப்பித்தாரெனின் ஈண்டும் சோழனுக்குள்ள யாறுகளிலெல்லாம் அதிகப்பயனை அவன்நாட்டுக்குவிளைப்பதும், அவ

னிருக்கும்வஞ்சிக்கு நீராணைவதும், அந்நாட்டே முழுவதும் உள்ளதும், காமதேனுவந்து நீராடுந்தீர்த்தமாயுள்ளதுமாகிய காரணங்களால் அந்நாட்டுள்ளயாறுகள்பலவற்றினும் உயர்ந்ததாகிய ஆன்பொருநையானே அவனைக்கூறினரென்க. சேரநாட்டுக்காவிரியும் உண்டேனும் அஃது அந்நாட்டு இடையாறேயாதலான் அதனாலவனைப்பெயரிட்டாருதலிலரென்க. இந்நாட்டுக் காவிரியுண்மையைப் பின்னேவிரித்துரைப்போம் ஆண்டுக்கண்டுகொள்க. இளங்கோவடிகள் காவிரிக்கும் வையைக்கும் ஒப்பாகவைத்துக் கட்டுரையிற்கூறினரில்லையேனும், நாலுள் அவ்வக்காண்டங்களில் அவ்வந்நாட்டியாறுகளையேகூறியாங்கு வஞ்சிக்காண்டத்து "வருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும்வஞ்சியார்கோமான்" என உள்ளதுகொண்டு கூறுதல் கண்டுகொள்க. ஒருவன் தன்மலையிற்பிறந்து தன்கடலின் மண்டும்யாறு தன் நாட்டுக்கு அதிகப்பயன்றராததாயின் அதனைப் பாராட்டாது தானும் தன்னாடும் அதிகப்பயனெய்தற்குக் காரணமானதொன்றையே பாராட்டுவன் என்பது திண்ணம். பேர்யாறு 142-மைல்நீளம் ஓடும்யாறு. ஆமிராவதியாகிய ஆன்பொருந்தம் 140-மைல்நீளம்ஓடுவது. இவ்விரண்டற்கும் நீளம்பற்றியவேற்றுமை மிகவுஞ்சிறியதே என்பது அறியத்தகும். பேர்யாறு 107-மைல் நாட்டுக்குப்பெரும்பயன்விளைவியாமற் பெரியமலைகட்கிடையில் ஓடுவது. இதுபற்றியே "பெருமலைவிலங்கியபேர்யாறு" என்றார் இளங்கோவடிகளும். அது 35-மைல்தூரமே குடியுள்ள நாட்டிலோடுவது. இவ்வுண்மையினை முற்காட்டிய ஆங்கிலக்குறிப்பாலுணரலாம். ஆமிராவதி பொதியமலைத்தொடர்களாகிய ஆனைமலையினுந் திருவிதாங்கோட்டுமலைகளினும் உண்டாஞ்சிற்றாறுகளின்றிரளாய்க் கொங்குநாட்டுப்பகுதியாகிய கோயமுத்தூர்ச்சில்லாவில் நெடுந்தூரம் பாசனவளம்புரிந்து திருச்சிராப்பள்ளியிலுள்ள கொங்குநாட்டுப்பகுதியிலும் அவ்வளமேசெய்து பின்னும் பெரும்பயனுறுத்தக் காவிரியைப்பெருக்குவதாகும். இவ்வியல்புகளையுணர்ந்தே முன்னைத்தமிழ்ப்புலவர்கள் பேர்யாற்றாற்சேரனைப்பெயரிடாமற்பொருநையாற்பெயரிட்டாரென்றுதெரியலாம். பயன் அதிகமில்லாத பேர்யாற்றினும் பயன்அதிகமுடைய உபநதி சிறந்ததென்பது புலவர் துணிபு. காவிரியை முழுதும்உடையனாகானாயினும், காவிரியினும் அதிகநீளந் தன்னாட்டோடும்யாறுகள் பிறவற்றையுடையனாயினும்

அக்காவேரியானே சோழனைக்கூறுவதெல்லாம் அதனுலவன் அதிகப்பயனையடைதலேநோக்கியும், அவன் அதன்றுறையில் ராஜகிருக முடைமைநோக்கியுமேயென்று கொள்ளத்தகும். இதனேடு யான் மேற்கூறியகாரணங்களையும் சேர்த்துக்கொள்க. கோசல நாட்டிறைவரை அந்நாட்டுப்பயனுறுத்தும் உபநதியாகிய சரயு என்னும் யாற்றுச் சிறப்பித்தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. பெரும்பயனுறுத்தும்பொருநையைப்பற்றிப் பேர்யாற்றுக்குள்ள குணங்களை மறந்தாரெனலாகாது. அதனைப் பொருநமலையிலங்கிய பேர்யாறெனவும், அது மறனுடைக்கோடையினும் நீரொழுகுவதென் றும், அதனுலும் கழனிவிளைவுண்டென்றும், அது இருகரையும் வழிந்துசெல்லும் பெருநீரையுடையதென்றும் வருணித்தே செல்வர். இதனுற் பண்டைப்புலவர் அதனதன்குணங்களையுள்ளவாறுகண்டு எதனுல் ஓராசனைச்சிறப்பித்தால் எல்லாப்படியானும் பொருந்திற் றென்றுகொள்ளப்படுமோ அதனுனேசிறப்பித்தாரென்றறிந்து கொள்க. இதனுற் சேரனுக்குள்ளயாறுகள்பலவற்றினும் சிறந்தது ஆன்பொருநை என்பதனை ஆராய்ந்துணர்ந்த புலவர் அவனைப் பொருநைத்துறைவன் எனப்பெயரிட்டாண்டாரென்றுணர்க.

இனிப் பதிற்றுப்பத்திற் பேர்யாறு என ஒன்று அயிரைமலையிற் பிறப்பதாக,

"துவைத்ததும்பௌநனவுற்றுவினவு
மாற்றருந்தெய்வத்துக்கூட்டமுன்னிய
புனன்மலிபேரியாறிழிதந்தாங்கு" (பதிற் - அஅ)

என்பதனுற் கூறப்படுவது. ஈண்டு உரையாளர் "தெய்வத்துக்கூட்ட முன்னியயாறென்றது அத்தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரை மலையைத்தலையாகக்கொண்டு ஒழுகப்பட்டயாறென்றவாறு; தெய் வங்கூடியுறைதலையுடைய அயிரை தெய்வத்துக்கூட்டமெனப்பட் டது" என விளக்கினுர். இதன்கண் உரைகாரர் பேர்யாறு என்று பெயருடையதோர் யாறுகக்கொள்ளாது யாறென்றே உரைத்ததனை யுப் நினைத்துக்கொள்க. இவ்வயிரைமலை இவ்விடத்தது என்றும், இவ்யாறு இன்னதென்றும் விளக்குவல். பதிற்றுப்பத்துரையாளர், மூன்றும்பத்துப்பதிகத்து "அயிரைபரைஇ" என்றது, 'தன்னுட்டு

அயிரைஎன்னும் மலையில்வாழுங் கொற்றவைக்கடவுளைத் தன்குலத்தார்செய்துவரும் வழிபாடுகெடாமல் தானும்வழிபட்டு எ - று.' எனவுரைத்தார். "உருகெழுமரபினயிரைமண்ணி" என்னுஞ்சிலப்பதிகார நடுகற்காதையடிக்கண் அரும்பதவுரையாசிரியர் "அயிரை - ஓர்யாறு; அதிலேகுளித்து" எனவுரைத்தார். இவ்விருரையானும் அயிரை சேரர்குலம்வழிபடும் கொற்றவைக்கடவுளையுடையதோர்மலையெனவும், அப்பெயருடையதோர்யாறெனவும் தெளியலாம். இவ்வயிரையாறு அயிரைமலையிற்பிறத்தல்காரணமாகவே அப்பெயரெய்தியதென்றெளிதிலுணரத்தகும். இவ்வயிரைமலை யாண்டையதென்றாராயப்புகின், பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்தில்,

"சுடர்வீ வாகைநன்னற்றேய்த்துக்
குருதிவிதிர்த்தகுவவுச்சோற்றுக்குன்றோ
டுருகெழுமரபினயிரைபரைஇ
வேந்தரும்வேளிரும்பின்வந்துபணியக்
கொற்றமெய்தியபெரியோர்மருக" (பதிற்-௮௮)

என்றுகூறியிருப்பதைக் காணலாம். இதன்பொருள் - ஒளிவிடுகின்ற பூக்களையுடைய வாகையைக் காவன்மரமாகவுடைய நன்னன் என்னும் வேளிர்தலைவனைத்தேய்த்து அவன் உடற்குருதியைத்தெறித்த சோற்றுக்குவியற்குன்றும் கண்டார்க்கு அச்சந்தருமுறைமையினையுடைய அயிரைமலைக்கொற்றவைக்கடவுளை வழிபட்டு இருபெருவேந்தரும், வேளிராவுள்ளவரும் பணியுமாறு வெற்றியெய்திய செயற்கரியவற்றைச்செய்தோர்வழியிற்றோன்றியவனே என்பதாம். இக்கொற்றவை போரில்வெல்லப்பட்டார் நிறம்பொழிகுருதியானன்றிப் பலிகொள்ளாள் என்பது,

"தும்பைசான்றமெய்தயங்குயக்கத்து
நிறம்படுகுருதிபுறம்படினல்லது
மடையெதிர்கொள்ளாவஞ்சுவருமரபிற்
கடவுளயிரை" (பதிற்-௭௧)

என்று எட்டாம்பத்திற்கூறியவாற்றானறிந்துகொள்க. இதனால் நன்னனைத்தேய்த்து அங்ஙனந்தேய்த்தலானுண்டாகிய அவனுடற்

குருதியையே தெறித்த சோற்றுக்குன்றென யான் கூறியதே பொருளாதலுணர்க. இதனால் நன்னனைத் தேய்த்தவிடத்துக்கு இவ்வயிரைமலை அணித்தாகுமென்று உய்த்துணரப்படும். அங்ஙனம் அணிமையினிருந்தாலல்லது தேய்த்தகுருதியைத் தெறித்துச் சோற்றைப் படைத்தலியலாதென்றுகொள்க. இதனால் இவ்வயிரைமலை நன்னன் நாட்டை அடுத்துளது என்று கொள்ளலாம். நற்றிணையில்,

"பொன்படுகொண்கானநன்னனன்னாட்
டேழிற்குன்றம்பெறினும்பொருள்வயின்
யாரோபிரிகிற்பவரே" (ந. ௩௯௧)

எனவருதலான் இந்நன்னாடு கொண்கானம் என்பதும், இவன்மலை ஏழின்மலையென்பதும் நன்றுதெரிவன. ஏழின்மலையென்பது மேல்கடலையடுத்துள்ள கண்ணனூருக்குப் பதினெட்டுமைல்தூரத்துள்ளது. இதனானிந்நாட்டுப்பக்கத்தே அயிரைமலையுள்ளதென்று துணியத்தகும்.

"சீருடைத்தேஎத்தமுனைகெடவிலங்கிய
நேருயர்நெடுவரை அயிரை" (பதிற் - ௨௧)

எனவருவதன்கண் சீருடையதேயத்தின்கண்ணே பகைவர் போர்கெடுதற்குக்காரணமாக்குறுக்கிட்ட நேரேயுயர்ந்த நெடியமலையாகிய அயிரை எனக்கொள்ளக்கிடத்தலானும், இம்மலை புறத்திலுள்ளபகைவர் போர்கெடுதற்குக்காரணமாகக் குறுக்கிட்டுச் சேரனாட்டெல்லையகத்திருப்பதாகத் துணியப்படும். நன்னாட்டைக் கொண்கானம் என்றலானும் அது சேரனாட்டெல்லையாகத் தட்டில்லை. இவ்வயிரைமலையைக் கபிலரென்னும் புலவர்பெருமான்,

"மாடோருறையுமுலகமுங்கேட்ப
விழுமெனவிழிதரும்பறைக்குரலருவி
முழுமுதன்மிசையகோடுதொறுந்துவன்று
மயிரைநெடுவரைபோலத்
தொலையாதாகநீவாழுநாளே" (பதிற்-௭௦)

என எழாம்பத்திற் பாடுதலான் இதன்பெருமை யுணரப்படும். இதன்கண் இம்மலையின் பலசிகரங்களிலும் பக்கத்துள்ள நாடுகளெல்லாம்

கேட்கும்படி பறையின்குரலையுடைய பல அருவிகள் விளங்கித் தோன்றுமென்று வருணித்தலான் இது பெரியயாறுகள் தோன்றுதற்குக் காரணமாவதென்றுபுலப்படும். இவற்றான் அயிரைமலையினியல்பும், அஃதீண்டுள்ளதென்றும், அதற்கும் ஆல்வாய்ப்பேரியாற்றுக்கும் யாதோரியையுமில்லையென்றும், அதன்கண் உண்டாம் யாறு வேறென்றும், அஃது அயிரை எனப்படுமென்றுங் கண்டுகொள்க.

இவ்வுண்மை இன்னுமொருவகையானும் ஆராய்தலினானும் புலனாகும். அகநானூற்றில்,

"நேரா வன்றோள்வடுகர்பெருமகன்
பேரிசையெருமைநன்னாட்டுள்ளதை
யயிரியாறிறந்தனராயினும்" (௨௫௩)

எனவருதலான் அயிரியாறு வடுகர்பெருமகனான எருமை என்பானுடைய நன்னாட்டுள்ளது எனத்தெரியலாம். "நுண்பூணெருமைகுடநாடன்னவென்னாய்நலம்" (அகம்-௧௧௫) என்பதனால் இவ்வெருமையின்நாடு குடநாடுள்ளது புலனாம். மேற்கூறிய நன்னன்பாழியை வடுகர்கைப்பற்றியபோது செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி என்பான் நன்னனுக்குத்துணையாகச்சென்று பாழியையூறி வடுகரைச் சவட்டினனென்று,

"விளங்குபுகழ்நிறுத்தவிளம்பெருஞ்சென்னி
குடிக்கடனாகலிற்குறைவினைமுடிமார்
செம்புறழ்புரிசைப்பாழிநூறி
வம்பவடுகர்பைந்தலைசவட்டி" (அகம் - ௩௭௫)

எனவருதலான் அறியலாம். பாழி நன்னனுடையதென்பது "நன்னனுதியனருங்கடிப்பாழி" (அகம்-௨௫௮) என்பதனானறியப்படும். இதனான் வடுகர்க்கும் நன்னனுக்குமுள்ள பகைமை புலனாகும். அதனானே நன்னனாடும் வடுகர்நாடும் அடுத்துள்ள தன்மையும் புலனாம். வடுகர்நாட்டு ஓடுகின்ற அயிரியாறு நன்னனாட்டுக்கும் பக்கத்ததாகும். நன்னனாட்டுக்குப்பக்கத்ததாகிய அயிரைமலையில் உண்டாகும்யாறு அயிரியாறு எனவும், அதுவே அயிரை எனவும் வழங்கப்பட்டதாகுமென்றுந் துணியலாம். இவற்றான் அயிரைமலையும் அதன்கணுண்டாகும் அயிரை எனப்பெயரிய பேரியாறும் கொண்கானப்பக்கத்தும்

எருமைநாட்டுப்பக்கத்துமுளவாதலல்லது வேறுபக்கத்தனவாகாவென்று தெளிந்துகொள்க.

மற்று அயிரைமலையிற்பிறக்கும் பிறிதோர்யாற்றைப் பேர்யாறென்று பதிற்றுப்பத்திற் கூறியதென்னையெனின் அஃதோர் பெரிய யாறாக இருத்தல்பற்றி அங்ஙனம் கூறினாரென்க. சோணாட்டில் உள்ள எல்லாயாற்றினும் பொன்னணி என்னும் யாறு இன்றும் பெரிதாதல் கண்டுகொள்க. அயிரையும் அதுபோன்றதொன்றாகும். இவ்வயிரையாறு நெடுந்தூரத்ததாக இல்லையாயின் இதன்கட் சேரனொருவன்சென்றுகுளித்தலை ஒரு சிறப்பாகவைத்துப் பெருங்கவியரசராகிய இளங்கோவடிகள் பாடாரெனவறிக. 'அயிரைமண்ணி' என்பதற்கு அயிரைமலையிலுள்ள கொற்றவையை அபிஷேகஞ்செய்து என்றாலும் பொருந்துமேனும், அங்ஙனம் அரும்பதவுரைகாரர் உரையாமையும், அவர் அயிரையாற்றிற்குளித்து எனக்கொண்டது ஒன்றற்கும் விரோதமின்மையும் ஆராய்ந்துகொள்க.

இனி, "நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டு
மலிபுனனிகழ்தருந்தீநீர்விழவிற்
பொழில்வதிவேனிற்பேரெழில்வாழ்க்கை
மேவருசுற்றமோடுண்டினிதுநுகருந்
தீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே" (பதிற் - ௪௮)

என்பதை எடுத்துக்காட்டி "நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும்" என்றதையே பெருந்துணையாகப்பற்றிக் காஞ்சி பேர்யாற்றுக்குப்பெயரென்று துணிந்தாருளர். இதுபற்றி இவ்வடிகளை ஈங்கு ஆராய்வேன். இவ்வடிகட்குப் பதிற்றுப்பத்துரையாளர் உரைகூறியவிடத்து நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டுமலிபுனல் என்புழி "மலிபுனலையுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது" எனவும், "நிகழ்தருந்தீநீரென்றது அவ்யாறுகளிலே புதிதாகவருகின்ற இனியபுதுநீர் எ - று" எனவும் விளக்கினார். இதனால் நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும் காஞ்சியென்றியைத்தல் கருத்தன்றென்றும், நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும் மலிபுனல் (யாறு) என்றுள்ளவாறியைப்பதே கருத்தென்றும், அங்ஙனமலைப்பிறந்து கடன்மண்டும்யாறுகள்

பலவென்றும், ஓர்யாற்றின்மட்டுமென்றிப் புதுப்புனல்விழவுகொண்டாடப்படுவதுஎல்லாயாறுகளிலுமுண்டென்றும், அவ்விழாக்காலத்து நிகழ்நிகழ்ச்சியை இவ்வடிகள் கூறுவனஎன்றும் நன்குணரலாம். மலிபுனல் என்பது யாறாயினபடியாற் பெருந்துறை அவ்யாறுகளுடையவாகும். அப்பெருந்துறைகளைக் காஞ்சியம்பெருந்துறையென்றது புனலாடுதற்குரியமகளிர் அணிந்து விளையாடுதற்குத் தளிரும் முறியும் தாதும் பூவும் தரவல்ல காஞ்சிமரங்களை ஆண்டுடைமையான் எனவறிக. இவ்வுண்மையினை,

“மணன்மலிபெருந்துறைத்ததைந்தகாஞ்சியொடு
முருக்குத்தாழ்பெழிலியநெருப்புறழடைகரை” (பதிற் - உக)

எனவருதலா னுணரப்படும். ஈண் டுரையாளர் “ததைந்தகாஞ்சியென்றது விளையாட்டுமகளிர்பலருந் தளிரும் முறியுந் தாதும் பூவுங் கோடலாற் சிதைவுபட்டுக்கிடக்கின்றகாஞ்சி எ - று” எனவுரைத்ததனையு நோக்கிக்கொள்க. ஈண்டைக்கேற்ப மணன்மலிதல்கூறியதனையும் பெருந்துறைகூறியதனையும் அப்பெருந்துறைகளிற் காஞ்சி ஆயம் அணிதற்கும் விளையாடுதற்கும் பயன்பட்டுநிற்றலையும் நன்றாராய்ந்து கொள்க.

“காஞ்சிப்பனிமுறியாரங்கண்ணிக்
கணிமேவந்ததவ்வல்குலவ்வரியே” (கூசச)

எனப் புறப்பாட்டின்வருதலான் காஞ்சியின் குளிர்ந்தமுறிகளை மகளிரணிதலுண்டென்பது உணரப்படும். “காஞ்சியம்பெருந்துறை மணலினும்பலவே” என்புழிக் காஞ்சி மரமாகாது யாறாயின் உரையாளர் மலிபுனலையுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது என்றுரைகூறாது மலிபுனற்காஞ்சி என இயைத்துப் பொருள்கூறுவர் என்பதும் உய்த்துணர்ந்துகொள்க. புனலாடும்ஆயம் தாம் அணிந்து விளையாடுதற்கேற்ற மரங்களுள்ளதுறைகளையே விரும்பிச்செல்லுமென்பதும் உணர்ந்துகொள்க. இவையெல்லாம் ஆராயாது ஈண்டுக் காஞ்சி யாற்றின்பெயரென்றும், அவ்யாறு மேல்கடலில் வீழ்வதென்றும், அங்ஙனம் வீழ்வதென்றுகூறுதலான் அது வேறுயாறேயாகாது பேர்யாறேயாகுமென்றும் துணிவது எத்துணைவாதத்துக்கு

இடமாகும் என்பது யான் கூறியறியவேண்டுவதன்று. இதுவும் பொருநையென்பது பேர்யாற்றுக்குப்பெயரென்று துணிந்ததனை தொக்கும்.

இனி நின்மலைப்பிறந்து நின்கடன் மண்டும் யாறுகளென்று தமிழ் நாடுமுழுதையும் குடகுமுதலிய பிறநாடுகளையும் செங்குட்டுவன் தன் னடிப்படுத்தாள்கின்ற சிறப்புப்பற்றித் தமிழ்நாட்டுள்ள பல்யாறு களையுங்குறித்தாரெனினும் இழுக்காது. தமிழ் முழுதாளும் அவ்வமய மேம்பாட்டை இவ்வாறுகுறித்தாரென்பது பொருந்திற்றேயாகும். சேரமான்பெருஞ்சோற்றுதியன்சேரலாதனை முடிநாகராயர் அவ் வமயத்து அச்சேரற்குள்ள மேம்பாடறியவே,

> "நின்கடற்பிறந்தஞாயிறுபெயர்த்துநின்
> வெண்டலைப்புணரிக்குடகடற்குளிக்கும்
> யாணர்வைப்பினன்னாட்டுப்பொருந" (புறம்-௨)

எனக்கூறியது காண்க.

எவ்வாறு நோக்கினும் பிறர் நினைக்கின்றவண்ணம் பொருநை என்பது பேர்யாறு ஆகுமென்று கனவினுநினையற்க. இதனானே பொருநையின்கரையிலுள்ள சேரர்கருவூர்வஞ்சி பேர்யாற்றங்கரைக்கு எவ்வாறுமுயன்றாலும் எய்தாதென்பதும் திடமாகவுணர்ந்து கொள்க. பிறர் நூலின்றியும், உரையின்றியும், வழக்கின்றியும் பொருநையைப் பேர்யாறென்றுசொல்லத்துணிந்ததெல்லாம் காவிரி யுடன்கலக்கும் பொருநைக்கரையிலுள்ளதென்று பன்னூலும் உரை யும் புலப்படுத்திய கருவூர்வஞ்சியைப் பேர்யாற்றங்கரையிலுளதாகக் கூறிவிடுதற்கேயாமென்பது அறிவாளரெல்லாம் அறிவர். அங்ஙனம் அவர்கூறிவிட்டாலும் வஞ்சி யங்கேயுளதாகுமோ என்று ஈண்டுச் சிறிதாராய்வேன்.

பிறர்கூறும் சேரர்தலைநகர் கொடுங்கோளூர்வஞ்சியன்றோ? அது பழைய சேரர்கருவூர்வஞ்சியாயின் கருவூர்வஞ்சி யாற்றங்கரையி லுளதாகப் பன்னூல்களும் கூறியபடி கொடுங்கோளூர்வஞ்சியும் யாற்றங்கரையிலிருத்தல்வேண்டுமே. அங்ஙனம் கொடுங்கோளூர் யாற்றங்கரையிலுள்ளதென்றும், அதனைக் கரையின்கண்உடைய

யாறு பேர்யாறென்றும் கூறிய நூலொன்றையுங் கண்டிலமே. தேவாரத்துக் கொடுங்கோளூரஞ்சைக்களம் கடற்கரையிலிருப்பதாகக் கூறியதன்றி யாற்றங்கரையிலிருப்பதாகக் கூறியதில்லையே.

இனிப் பேர்யாறு கடலொடுகலக்குமிடத்துள்ளதாகப் பழைய சங்கநூல் கூறியவூர் முசிரிஎன்பது,

"சுள்ளியம்பேர்யாற்றுவெண்ணுரைகலங்க
யவனர்தந்தவினைமாணன்கலம்
பொன்னொடுவந்துகறியொடுபெயரும்
வளங்கெழுமுசிரி"

என்னும் அகப்பாட்டான் அறியலாவது. கொடுங்கோளூர் அஞ்சைக்களம் ஈண்டுச்சொல்லப்பட்ட அடையாளமுடையதாயின் அது முசிரியேயாமன்றிச் சேரர் கருவூர்வஞ்சியாதல் யாங்ஙனம். முசிரியும் வஞ்சியும் ஒன்றாகச்சொல்லவொண்ணாதே. பிறர் சேக்கிழார்கூறிய கொடுங்கோளூர்வஞ்சியைப் பழைய சேரர்தலைநகராக்கவேண்டுதலான் அக்கொடுங்கோளூர்வஞ்சி கடற்கரையிடத்ததென்று தேவாரத்தானும், கண்கூடானும் கண்டதுகொண்டு எந்நூலினும் யாரும் கடற்கரையிடத்ததென்று கூறாததும், சோழநாட்டுப்பக்கத்தே உள்ளதென்று தெளிந்ததும், கொங்குநாட்டு ஆன்பொருநைக்கரையிலுள்ளதுமாகிய பழையசேரர்தலைநகரைக் கடற்கரையிடத்ததென்று கற்பிக்கத்தலைப்பட்டனர். கடற்கரையைக்கற்பித்தவிடத்தும் அதுவும் போதாது ஆன்பொருநைக்கரை வேண்டுதலான் ஆன்பொருநையை மேல்கடலில்விழவிடுதற்கு இயலாமையால் ஆன்பொருநையே பேர்யாறு என்று சொல்லிவிடலாமென்று துணிந்தனர். அப்பிறர்கூறுகிறபடி பேர்யாறாகிய ஆன்பொருநைக்கரையும் கடற்கரையும் ஒன்றென நினைத்துக்கொண்டவிடத்தும் ஆண்டுள்ளது சேரர்தலைநகராகிய கருவூர் வஞ்சியாகாது; சேரர்கடற்றுறைப்பட்டினமாகிய முசிரியேயாய்முடிகின்றது. இதற்கென்செய்வது: இல்லது துணியுமிடத்து உண்டாந்தடுமாற்றம் இத்துணையோ? இன்னும் எத்துணையோ பலவாதல் காட்டுவேன்.

இங்ஙனம் ஆன்பொருநைக்கரையையும், கடற்கரையையுஞ் சேர நினைப்பதன்கண்ணுண்டாம் விபரீதங்களை இனி விளக்கிக்காட்டுவேன். சேரர்தலைநகராகிய கருவூர்வஞ்சியுள்ள இடத்தை,

"வஞ்சிப்புறமதிலலைக்குங்
கல்லென்பொருநைமணலினுமாங்கட்
பல்லூர்சுற்றியகழனி
யெல்லாம்விளையுநெல்லினும்பலவே" (புறம்-௩௮எ)

என்னும் அடிகள் நன்குவிளக்குவனவேயாகும். இவ்வடிகளிற் சேரர்தலைநகரின் புறமதிலைப் பொருநையென்னும்யாறு அலைக்கும் என்றும், அப்பொருநை அங்ஙனமலைத்தல்காரணமாகக் கல்லென ஒலிக்குமென்றும், ஒருபெரியகோட்டையின்மேலாதலான் அதிகமாக மணலைக்கரையிற்குவிக்குமென்றும், இவையெல்லாநிகழுமவ்விடத்துப் பலவூர்கள் சுற்றியுள்ளனவென்றும், அவ்வூர்களெல்லாம் மிகுதியாக நெல்விளைகழனியுடையன என்றும் சில அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வடையாளங்களை ஒரு கடற்கரையூர் உடையதாகுமா அல்லது அகநாட்டூர் உடையதாகுமா என்று சிறிதாராய்வோமாக. சேரர்தலைநகர் கடற்கரையிடத்ததென்பார்க்கு அஃது தான்பொருநைக்கரையிலுள்ளதென்று தெளிந்தயாவரும் அவ்வூர் ஆன்பொருநை கடலொடுகலக்குமிடத்திருப்பதாகத்தானே துணியவேண்டும். அங்ஙனமாயின், ஆண்டுப் பெருமணலுலகமென்றுகூறப்பட்ட கடற்கரைமணலை அளவின்மைக்குவிஷயமாகவும், அதனைக்கூறாது அதனினும் எத்துணையோசிறிதாகக்கருதப்படும் பொருநைகுவித்த மணலை அளவின்மைக்குவிஷயமாக்குவது உசிதமாகுமா? இதுகாறுங்கண்ட தொன்னூல்களில் எங்கேனும் ஆறு கடலொடுகலக்குமிடத்து அவ்யாறுதொகுப்பது பெருமணலென்றுகூறியதுண்டா. யாறுகடலொடுகலக்குமிடத்துக் கடற்கரைமணலையுங் கடலுட்கொண்டுசெல்லுதலான் கடற்கரையையுமெலியச்செய்தலன்றி அக்கடற்கரையின்கண் மணலை யாறு குவிக்குமா? காவிரி கடலொடு கலப்பதைப்பற்றிச்சொல்லுமிடத்துக் "கடற்கரைமெலிக்குங்காவிரிப் பேர்யாறு" என்றன்றே புலவர் கூறுகின்றனர். கடலுள்ளவிடத்துக் கடற்கரைமணலையே கூறுவரென்பது,

... ... ... தாழ்நீர்
வெண்டலைப்புணரியலைக்குஞ்செந்தி
னெடுவேணிலையியகாமர்வியன்றுறைக்

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-600090

கடுவளிதொகுப்பவீண்டிய
வடுவாழெக்கர்மணலினும்பலவே"

என வருதலானறிக. கடலுள்ளவிடத்து ஆறலைத்தல்கூறாது புணரி யலைக்குஞ்செந்தில் என்றதனையும் நோக்குக. இஃதன்றியுங் கல்லென் பொருநை என்று கூறுதலால் யாறு கல்லென ஒலித்தலைப் புலப் படுத்துகின்றார்; ஆண்டு ஆர்கலியன்றோ பெரிதாகும். அதனொலியைக் கூறாது யாற்றொலியையே மிகுத்துக்கூறுதல் பொருந்துமா. இனி அலைக்குங் கடலங்கரைமேன்மகோதை" என்றன்றோ சுந்தரமூர்த்தி நாயனார் கொடுங்கோளூரஞ்சைக்களத்தைப் பாடுகின்றார். அவர் பாடியவாறு கடலலைப்பதைக்கூறாமல் அவ்வூரையே யாறலைப்பதாகக் கூறியதென்னை. இது நிற்க. "ஆங்கட், பல்லூர்சுற்றியகழனி யெல் லாம்விளையுநெல்லினும்பலவே" என்று கூறிய அடையாளம் ஒரு கடற்கரையூர்க்குப் பொருந்துமா? கடற்கரையூரைப் பல்லூர் சுற்றுத லெப்படி? இதனானிவ்வடிகளிற்கூறிய அடையாளங்களிலொன் றேனும் கடற்கரையூர்க்குப்பொருந்தாதென்றும், எல்லாம் அகநாட் டூர்க்கே பொருந்துவன என்றுமுணருமாற்றான் ஈண்டுக்கூறியவஞ்சி கடற்கரையிலுள்ள மகோதையாகிய கொடுங்கோளூராகாமையும், கொங்குநாட்டு ஆன்பொருநைக்கரையிலுள்ள கருவூரேயாதலும் தெ ளிந்துகொள்க. இவ்வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

... ... ... கோமகன்
வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை,
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்"

என மகோதையாகிய கொடுங்கோளூரின்வேறாக வஞ்சியைக்கூறினா ரெனவுணர்க. இதைப்பற்றி மேலும் விளக்குவல்.

இனிப் பழைய சேரர்தலைநகராகிய வஞ்சி மேல்கடற்பக்கத்ததா மென்றற்கு ஆதரவாக ஒருசெய்தி கூறுவர்பிறர். அஃதாவது பராசர னென்னும்அந்தணன் சோணாட்டுத்தலைச்செங்காட்டினின்று சேரன் கொடைத்திறங்கேட்டுப் பரிசில்பெறப்போம்போது

"காடுநாடூரும்போகி
நீடுநிலைமலயம்பிற்படச்சென்றாங்கு" (சிலப்-கட்டுரை.)

என்பதனால் பொதியமலையைக்கடந்துசென்றானெனவும், பரிசில் பெற்று மீளும்போது "செங்கோற்றென்னன்றங்காலூரிற் போதி மன்றத்து"த்தங்கியிருந்தானெனவும் சிலப்பதிகாரம் கூறுதலாற்

சேரனூர் மேல்கடற்பக்கத்திருந்தாலல்லது சோணாட்டுப் பார்ப்பான் போம்போது பொதியத்தலைக் கடந்துபோதலும், மீளும்போது பாண்டிநாட்டூராகிய திருத்தங்காலிற்றங்குதலும் நிகழாவென்பதே யாம். சிலப்பதிகாரத்து இப்பராசரன் செய்தி கூறியவிடத்து,

"வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
குலவுவேற்சேரன்கொடைத்திறங்கேட்டு
வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்த
திண்டிறனெடுவேற்சேரலற்காண்கென
... ... ... ...
நீடுநிலைமலயம்பிற்படச்சென்று.........
பார்ப்பனவாகைசூடியேற்புற"
நன்கலங்கொண்டுதன்பதிப்பெயர்வோன் (சிலப்-கட்டுரை)

என வருதல்காணலாம். ஈண்டுக்கூறப்பட்ட சேரன் எக்காலத்தவனென்றும், யாவன் என்றும் வினவியறியவேண்டுவ தின்றியமையாதது. இப்பார்ப்பான் சேரன்பாற்பரிசில்பெற்றுமீளும்போது பாண்டிநாட்டுத் திருத்தங்காலென்னுமூரிற் போதிமன்றத்துத் தங்கியிருந்துழி அவன் ஆண்டுவந்துவிளையாடும்பார்ப்பனச்சிறாரைநோக்கி என்னுடன் வேதமோதவல்லீராயின் ஓதி என்பாரிசிற்சிறுபொதியைக் கொள்ளுக என்றவளவில் அவ்வூர் வார்த்திகன்புதல்வன் தனக்கொப்ப ஓதலான் அவனைவியந்து தன்பொதியின்கணுள்ள முத்தப்பூணூலத்தகுபூணகலன் கடகந்தோட்டொடு பிறவும் அச்சிறுவற்குக் கையுறையீந்துப்போக நிகழ்ந்ததுதெரியாது கோத்தொழின்முறையவர் பாண்டியற்குரிய படுபொருள்கவர்ந்த பார்ப்பானிவனென்று அப்புதல்வன்றந்தையாகிய வார்த்திகனைச் சிறையிலிட அவ்வார்த்திகன்மனைவி அலந்தழுதேங்கிப் புரண்டுபுலந்துபொங்கினளாக: அது கண்டு ஐயைகோயிற்கதவுதிறவாதாக: இதுகேட்டுப் பாண்டியன் மயங்கிக் கொற்றவைக்குற்றதுஅறிந்துரைமின்னென வார்த்திகனைச்சிறைசெய்தசெய்திகூறக்கேட்டு இறைமுறைபிழைத்ததுணர்ந்து வார்த்திகனைப்பொறுத்தருளுமாறு இரந்து அத்திருத்தங்காலையும் வயலூரையும் அவற்கீத்து அவனை நிலந்தோயவணங்கியவளவில் அச்சிந்தாதேவிகோயிற்கதவந்திறந்தது ; திறந்தவுடன் உற

பொருளேனும் படுபொருளேனும் இனி யுற்றவர்க்குறுதி பெற்றவர்க் காகுமென்று யானைமேன் முரசறைவித்தான். அங்ஙனம்,

"யானையெருத்தத்தணிமுரசிரீஇக்
கோமுறையறைந்தகொற்றவேந்தன்
றான்முறைபிழைத்ததகுதியுங்கேணீ" (சிலப்-கட்டுரை)

என்று கண்ணகியைநோக்கி மதுரைமாதெய்வங்கூறுதலான் இப்பாராசரனீந்த பொருள்காரணமாகச் சிறைப்பட்ட வார்த்திகனைச் சிறைவிடுசெய்து உவப்பித்துக் கலையமர்செல்விகதவந்திறப்பித்தவன் கோவலனைக்கொல்வித்து அரசுகட்டிலிற்றுஞ்சிய நெடுஞ்செழியனே யென்பது நன்றுதெளியப்படும். இப்பாண்டியன்காலத்துச்சேரன், செங்குட்டுவனென்பது சிலப்பதிகாரம்வஞ்சிக்காண்டத்தானறியப் படும். பாராசரனுக்குப்பரிசினல்கியசேரன் இச்செங்குட்டுவனே யாயன், இளங்கோவடிகள் இவனை விளங்கவுரையார். மற்றிவன் காலத்தே சேரன் வேறுளனோ என ஆராய்வோம். செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மணக்கிள்ளி என்பாளுக்கும் பிறந்தமகனென்பது பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தாலறியப்படும். நெடுஞ்சேரலாதனுக்கும் வேளாவிக்கோமான்பதுமன்றேவிக்கும் பிறந்த மகன் ஆடுகோட்பாட்டுச்சேரலாதனென்பது பதிற்றுப்பத்து ஆறும்பத்தாலறியப்படும். இதனாற் சேரன் செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் ஒருதந்தையின் புதல்வராவர். இவருட் செங்குட்டுவன் வஞ்சியிலரசுசெய்தவன் என்பது சிலப்பதிகாரத்தானன்கு தெளிவது. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் மேல்கடற்கரையை யடுத்துள்ள நறவு என்னும் ஊரின்கண் இருந்தவன் என்பது பதிற்றுப் பத்து ஆறும்பத்தால் நன்கறியப்படுவது: இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதனே இளங்கோவடிகளாற்கூறப்பட்ட வேற்சேரனென்பதற்கும் ஆதாரவாகச் சில கூறுவல்.

சிலப்பதிகாரத்து இச் சேரனைப்பற்றியவிடத்துக் 'குலவுவேற் சேரன்' எனவும், 'நெடுவேற்சேரன்' எனவும், 'வண்டமிழ்மறையோர்க்கு வானுறைகொடுத்தவன்' எனவும், இவன் கொடைத்திறங் கேட்டுப் பராசரன் சென்றானெனவுங் கூறியுள்ளார். இதன்கட் கூறப்பட்ட வண்டமிழ்மறையோர்க்கு வானுறைகொடுத்தவன் இமய

வரம்பன் றம்பியென்பது மூன்றாம்பத்தா னன்கறியப்பட்டது. செங்குட்டுவற்குமுன்னே இறந்த சேரர்வரிசையில்,

"நான்மறையாளன் செய்யுட்கொண்டு
மேனிலையுலகம்விடுத்தோனாயினும்"

... ... ...

"மீக்கூற்றாளர்யாவருமின்மையின்
யாக்கைநில்லாதென்பதையுணர்ந்தோய்"

என்பதனால், இமயவரம்பன் றம்பியையுங்கூறியவாற்றான் அம்முன்னோன் செய்தியாலிவனைச் சிறப்பித்ததன்றி இவன் அவனாகானென்பது நன்குணரப்படுவதாகும். இஃதொன்றொழியவுள்ள அடையாளங்கள் வேலும்,கொடைத்திறமுமேயாகும். ஆறாம்பத்து முதற்பாட்டில் இவ்வாடுகோட்பாட்டுச்சேரலாதனை,

"வென்வேலண்ணன்மெல்லியன்போன்மென
வுள்ளுவர்கொல்லோநின்னுணர்ந்திசினோரே"

என்பதனால் இவ் வாடுகோட்பாட்டுச்சேரலாதனை வேலண்ணல்எனக் கூறுதல்கொண்டு இவனைக் 'குலவுவேற்சேரன்' எனவும் 'நெடுவேற்சேரலன்எனவும் இளங்கோவடிகள் கூறினாரென்றுணரலாம். இவன் கொடைத்திறத்தைப்பற்றியாராயுமிடத்து இவனைப்பதிற்றுப்பத்துள்,

"வாராராயினுமிரவலர்வேண்டித்
தேரிற்றந்தவர்க்கார்பதனல்கு
நகைசால்வாய்மொழியிசைசாறோன்றல்"

எனச்சிறப்பித்தல் காணப்படும். இதனுரைகாரர் "ஈண்டு இரவலரை வேண்டியென்றது தன்னாட்டு இரவலரின்மையின் அவரைப்பெற விரும்பி எ - று. தேரிற்றந்து என்றது அவ் விரவலருக்கு அவருள் வழித் தேரைப்போகவிட்டு அதிலே அவர்களைவரப்பண்ணி எ - று. தேரான் என உருபுவிரிக்க; தேர் எனத் தேர்ச்சியாக்கி அவ் விரவலரை அவருள்ளவிடத்திலே தேடி அழைத்து என்றுமாம்" என விளக்கினார். இவற்றால் இவன் தன்னாட்டு இரவலரில்லையாக வழங்கினான் என்றும், அவ் விரவலரைவேண்டிப் பிறர்நாட்டுத்தேடித்

தேரைப்போகவிட்டு அவரை அதிலேவரப்பண்ணி அவர்க்குநிரம்பிய துப்புரவனைத்தும்வழங்கினுனென்றும், இங்ஙனம் கொடுக்கும்ஆசையேநிரம்பிய சத்தியகீர்த்திமானிவனென்றும் நன்கறியலாகும். வேறியாரிடனுங்காண்டற்கரிய இவ் வரியபெரிய வள்ளன்மையினையே இளங்கோவடிகள் கோடைத்திறம் என்ற அழகியதொடரான் விளக்கினுரென்று துணியலாம். இவன் பார்ப்பார்க்குக் கோதானமும் பூதானமுஞ்செய்து குழவிகொள்வாரிற்குடிபுறந்தந்தவன் என்பது ஆரும்பத்துப்பதிகத்தாலறியலாம். இத்தகையபெருவண்மைகருதியே வண்டமிழ்மறையோர்க்குவானுறைகொடுத்தோனுக இவனை அடிகள் சிறப்பித்தாரென்றுணரலாம். இன்னு மிவனை, "இரவலர் புன்கணஞ்சும் புரவெதிர்கொள்வன்" எனவும், "இரவன்மாக்கள் சிறுகுடிபெருக வுலகந்தாங்கிய மேம்படுகற்பின், வில்லோர்மெய்ம்மறை" எனவும் பாடுதலல்லாமல், "வள்ளியையென்றலிற்காண்குவந்திசினே" எனச்சிறப்பித்தலையும் ஆண்டுக் காண்க. "வள்ளியையென்றலிற்காண்குவந்திசினே" என்னும் அடி குலவுவேற்சேரன் கொடைத்திறங்கேட்டுப் பராசரன்பரிசிற்குச்சென்றுனென்றதற்கு மிகவும்பொருந்த நிற்றல் உய்த்துணர்ந்துகொள்க. இவனே வேலண்ணல் ஆதலானும் இவனே யாரினுமிக்ககொடையாளனுதலானும் பராசரன் இவன்பாற் சென்றுனென்றே ஒருதலையாகத்துணியப்படுமென்க. இவன் கடற்கரைப்பக்கத்தூர்க்கணிருந்தனன் என்பது—

"தொடைமடிகளைந்தசிலையுடைமறவர்
பொங்குபிசிர்ப்புணரிமங்குலொடுமயங்கி
வருங்கடலூதையிற்பனிக்கும்
துவ்வாநறவின்சாயினத்தானே" (பதிற்று-௬0)

எனப்பதிற்றுப்பத்துள் இவனிருக்குமிடங்கூறுதலா னுணரப்படும். இதனுரைகாரர் "மறவர்கடலூதையிற்பனிக்குநறவெனக்கூட்டி ஆண்டுவாழுமறவர் கடலூதையான்மட்டும் நடுங்கும் நறவு என்க. நறவு - ஓரூர். துவ்வாநறவுவெளிப்படை" என விளக்கியதனுனும் இதனுண்மை உணரலாம். கடலூதையிற்பனிக்கு நறவு என்றதனுல் இந் நறவூர் கடற்கரைக்கு நெடுந்தூரமாயதென்று கருதற்கியலாமை காண்க. இவனைப்பற்றிய முதற்பாட்டில்,

"விளங்கிரும்புணரியுருமெனமுழங்குங்
கடல்சேர்கானற்குடபுலமுன்னிக்
கூவற்றுழந்ததடந்தாணாரை
குவியிணர்ஞாழன்மாச்சினைச்சேக்கும்" (பதிற்று-௫௧)

எனக்கூறுதற்கண் "குடபுலமென்றது தன்னகரிக்கு மேல்பாலாம்" என்று உரைகாரர் கூறுதலானும், நூலுட் "கடல்சேர்கானற்குடபுலம்" என்றிருத்தலானும் இவ்வாசனகரிக்குமேற்கே கடல்சேர்ந்தகானற் புலமிருப்பதென்று புலப்படுதலான் இந்நறவூர் கடலாற்பணிக்காது கடலூரையாற்பணிக்கக்கூடிய அளவாக மேல்கடற்பக்கத்துள்ள தென்று தெளிந்துகொள்ளலாம். மேற்சொற்றபராசரன் இவ்வேற்சேரன்கொடைத்திறங்கேட்டு இவனிருக்கும் கடல்சேர்கானற்குடபுல நறவூர்க்குச் சென்றானாதலாற் பாண்டிநாடுகடந்து மலையம்பிற்பட்டுப் போனானென்றும் மீளும்போது பாண்டிநாட்டுத்திருத்தங்காலிற் றங்கினானென்றும் உணர்ந்துகொள்க. இதனாலிப்பராசரன் செங்குட்டுவன்வஞ்சிநோக்கிவந்தவனில்லையென்பதும் தெற்றெனத் தெளிக.

சேரன்பாற்சென்றுபோந்த சோணாட்டுப்பராசரன் பாண்டிநாட்டையும் மலையத்தையும் இடைவைத்துக் கடத்தல்காரணம் இஃதென்று ஆராயாமலே கொங்குநாட்டுள்ள பழையசேரர்தலைநகரை மேற்குத்தொடர்ச்சிமலைப்பக்கத்துள்ள கடல்நாடுகளிலுய்க்க முயன்றனர் பிறர். சேக்கிழார், கொடுங்கோளூரை இராமனிருக்குங் காடும் அயோத்தியென்பதுபோலப் பிற்காலத்துச் சேரர்குலத்தவரிருந்தலைப்பற்றி வஞ்சியென்றுவழங்கியதைத் துணையாக்கொண்டு அதனைப் பழைய சேரர்தலைநகரென்றுகூறிவிடலாமென்றுதுணிந்து சேக்கிழார் வஞ்சியென்ற ஊர் ஆர்க்குங்கடலங்கரைமேலிருந்தலைநோக்கிப் பழையசேரர்வஞ்சியுங் கடலுடையதானாலல்லது கொடுங்கோளூரென்றுசொல்லுதல் பொருந்தாதென்றுகண்டு பழைய சேரர்வஞ்சிக்குங் கடலையுண்டுபண்ணத்தலைப்பட்டனர் பிறர். இஃதொரு ஸகரப்ரயத்நமேயாகும்; மேல்கடலாதலின் யாராலும் ஸாதிக்கப்படாமற் போவதென்பதறிக.

தமிழ்நூல்களில் ஓரூர் கடலடுத்ததாயின் அவ்வூரைச்சொல்லுமிடத்து அது கடலுடைமைவிளங்கவே பாடப்படுமென்பது முசிறி,

தொண்டி, மாந்தை, கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், புகார் முதலிய பழைய வூர்களைப்பற்றி ஆங்காங்குவரும் பாடல்களாற்றெளியப்படும். நேரேகடல்கூறுதொழியினும் கடனிலத்துள்ளதென்றுபுலப்படக் "கானலந்தொண்டி" "தொண்டியங்கானல்" என்றாற்போலவேனும் விளங்கப்பாடாமை நல்லிசைப்புலவர்வழக்கன்று. இதனுண்மையைத் தமிழ்கற்றாரெல்லாம் நன்கறிப. வஞ்சியைப்பற்றிய பழையபாடல்கள் தமிழில் நூற்றுக்கணக்காகவுள்ளன; அவற்றுளொன்றேனுங் கடலு டைமைபற்றி வஞ்சியைச்சிறப்பித்ததாக யான் கண்டிலேன். "வஞ்சி யங்கானல்" என யாண்டும்பயிலாமை ஈண்டைக்குநினைக்கத்தகும். இங்ஙனம் வழங்காமைமாத்திரமன்று "வஞ்சியம்பூம்புறவின்" என இறையனார்களவியலுரைமேற்கோளில் வேறாகவும்வழங்கியுள்ளது. மணிமேகலையில் இவ் வஞ்சியைப்பற்றிய அடிகள் பலபல வுள்ளன. அவற்றுளொன்றேனும் இது கடலுடைமைகாணப்படுதலில்லை. இவ் வாறுகாணப்படாமைமட்டுமன்று; கடலுடைமைக்குவிரோதமான செய்தியொன்றும் அது புலப்படுத்துகின்றது. அஃதாவது இன்ன தென்றுகாட்டுவல் - கடற்கரையிற் சோழர்பெருநகராகிய காவிரிப் பூம்பட்டினம் இந்திரவிழவைமறந்ததனாலுண்டாகிய தேவசாபத்தாற் கடல்கொள்ளப்பட்டதெனவும், அக் கடல்கோளால் நெடுமுடிக்கிள்ளி யாகியசோழன் அவ்வூரைவிட்டுத் தனியேபோயினான் எனவும், ஆங் கிருந்த அறவணவடிகளும் மணிமேகலையினுடையதாயரும் அக் கடல்கோளால்வருந்தாதுபோய் வஞ்சிமாநகரத்துப்புக்கனரெனவும் மணிமேகலைநூல் கூறுகின்றது. இதனை,

> "விரிதிரைவந்துவியனகர்விழுங்க
> வொருதனிபோயினனுலகமன்னவ
> னருந்தவன்றனுடனாயிழைதாயரும்
> வருந்தாதேகிவஞ்சியுட்புக்கனர்"

எனவும்,

> "மனங்கவல்கெடுத்துமாநகர்கடல்கொள
> வறவணவடிகளுந்தாயருமாங்குவிட்
> டிறவாதிப்பதிப்புகுந்ததுகேட்டதும்"

எனவும் வருவனவற்றாலுணர்ந்துகொள்க. ஓரூர் கடல்கொள்ளும் போதிலோ அன்றி அக் கடல்கோளைத்தெரிந்தபோதிலோ அவ்வூரை

விட்டோடுவார் கடல்கோளுக்கெட்டாதென்று தாம் தெரிந்துகொண்ட அகநாட்டு ஊர்கட்கே சென்றொடுங்குவரென்பது யான்கூறியறிவிக்க வேண்டுவதன்று. புகார்ச்சோழன் உறையூர்புகுந்தானென்பது திண்ணமாகநினைக்கப்படும். அறவணவடிகள் தாயருடன் உறையூருட்புகாமல் ஒருநான்குகாவதம் அப்பாற்போய்க் குடபுலவஞ்சியுட் புக்கனராவர். சோழன் இந்திரவிழாவெடாத தவற்றாலன்றோ அவனுள்ளபுகாரைக் கடல்கொள்வது. இக் கேட்டுக்குக்காரணனை சோழனுடையநாடே தம்போன்றமாதவர்க்குத் தங்குதற்குரியதாகாதென்றுகொண்டு சேரநாட்டுவஞ்சியுள் அறவணவடிகள் தாயருடன் புக்கிருந்தனரென்றுய்த்துணரப்படும். "வருந்தாதேகி வஞ்சியுட்புக்கனர்" எனவும் "இறவாதப்பதிப்புகுந்தது" எனவுங்கூறுதலையுநோக்கிக் கொள்க. இனிப் பிறர்நினைக்கின்றபடி இவ்வஞ்சி மேல்கடற்கரைக் கண்ணதாயின் பராசரன்செல்வழியே இவ் வறவணவடிகட்கும் வழியாதலான் இடையிற் பாண்டிநாட்டுமதுரையிற்றங்காது மற்றுமோர் கடற்கரையூர்க்கே அறவணவடிகள்சென்றாரென்றன்றோமுடியும். அங்ஙனமாயின் மதுரையிற்றங்காமைக்கும் கடல்கோளுக்கஞ்சிப் பின்னுமோர்கடலையேயடைதற்கும் காரணங்கூறல்வேண்டும். மேல் கடற்கரையின்கண் வஞ்சியைநிறுவநினைப்பார்; இவற்றுக்கெல்லாம் பொருந்தவுரைக்கலாகுமோ என்று ஆராய்ந்துகொள்க. இஃதன்றியும் அம் மணிமேகலையுள் காஞ்சிக்கும் வஞ்சிக்கும் போக்குவரத்துக் கூறப்படுதல் கற்றோர்பலரும் அறிவர்.

"பொன்னெயிற்காஞ்சிநாடுகவினழிந்து
மன்னுயிர்மடியமழைவளங்கரத்தலி
னந்நகர்மாதவர்க்கையமிடுவோ
ரின்மையினிங்கெய்தினர்காணாய்"

எனவும்,

"ஆங்கவன்றானுமறத்திற்கேதுப்
பூங்கொடிகச்சிமாநகராதலின்
மற்றம்மாநகர்மாதவன்பெயர்நாட்
பொற்றொடிதாயருமப்பதிப்படர்ந்தனர்"

எனவும் வருவனவற்றாற் காஞ்சிநாடுபஞ்சம்பட்டபோது ஆங்கிருந்த மாதவர் வஞ்சிவந்தெய்தினரென்றும் பின் இவ் வஞ்சியிலிருந்த அறவணவடிகள் தாயருடன் காஞ்சிக்குப்போயினரென்றும் அறியப்

படும். காஞ்சிநாட்டையுடைய தொண்டைநாட்டையடுத்துள்ளது கொங்குநாடேயாதலான் காஞ்சி பஞ்சம்பட்டவளவில் அடுத்துள்ள கொங்குநாட்டுவஞ்சியுள் மாதவர் எய்தினரென்பதே பொருந்திற்றாகும். போக்குவரத்துக்கு எளிதாயநெறியுடையதும் மேல்கடற்கரை போல நெடுந்தூரமாகாததும் கருவூர்வஞ்சியேயென்பது எளிதிலுணரத்தகும். அறவணவடிகள் புகார் கடல்கொள்ள வஞ்சியுட்புக்கன ரென்றதனோடு பொருந்தநோக்குமிடத்து யான்கூறுவதேபொருத்த முடைத்தாதலுணர்க.

இனிப் பதிற்றுப்பத்துள் மூன்றாம்பத்துப்பதிகத்துக்,
"கருங்களிற்றியானைப்புணர்நிரைபூட்டி
யிருகடனீருமொருபகலாடி"

என்பதனால் ஒருசேரனுடைய அரியபெரியசெய்தியொன்று கூறப்பட்டுள்ளது. இச் செய்தியையே இளங்கோவடிகளும் "இருகடனீருமாடினோனாயினும்" என்பதனாற்கூறினார். இச்செய்தி இமயவரம்பன் றம்பியுடையதாயினுமாகுக. வேறொருசேரனுடையதாயினுமாகுக. அஃதீண்டைக்கு ஆராய்ச்சியின்று. சேரவரசனொருவன் இச்செய்தி நிகழ்த்தினனென்பதுமட்டி லிஃதுணர்த்தாதிராது. பதிற்றுப்பத்துரைகாரர், "இருகடலுமென்றது தன்னதாயமேல்கடலும்பிறநாட்டதாய்ப் பின்புதான்பொருதுகொண்டுதன்னுடாக்கியநாட்டிற் கீழ்கடலும்எ-று. கருங்களிற்றியானைப்புணர்நிரைபூட்டி, யிருகடனீருமொருபகலாடியென்றது அவ்விருமுந்நீரும் ஒரு பகலிலேவரும்படி யானைகளைநிரைத்து அழைப்பித்து ஆடி எ-று "எனவுரைத்தார். இதன்கட் குறிக்கப்பட்டது விஜயாபிஷேகமேயாமென்பது பிறநாட்டை வென்று தன்னதாக்கினனென்பதனாலுய்த்துணரப்படும். விஜயாபிஷேகத்துக்குரிய விஜயாஸனம் பெருவேந்தர்கோயிலகத்ததென்பது மாநஸாரநூலகத்துட்கண்டுகொள்க. அந்நூலார் பிரதமாஸனம், மங்களாஸனம், வீராஸனம், விஜயாஸனம் எனப் பலகூறுவர். அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். சேரன் தன்கோயிலுள்ளதலைநகர் கீழ்கடல்மேல்கடல் இரண்டிற்கும் நெடுந்தூரமாக இருத்தல்காரணமாகவே அவ்விருமுந்நீரையும் ஒருபகலிலே அழைப்பித்தற்குவகைதேடித் தன் பெருநகர்க்கிருபக்கத்தும் கடல்களினெல்லைவரை யானைகளைநிரைத்து இருமுந்நீரையுந்தருவித்துக்

கொண்டானென்றுணரப்படும். மேல்கடற்கரையிற்கோயிலுடையனாயின் மேல்கடலிலேநின்றேகீழ்கடனீரையாடினான் என்றன்றோ சிறப்பித்துப்பாடுவர். இருகடலுமாடுதலையன்றோ ஈண்டுப்பெருஞ் சிறப்பாகக்கூறுகின்றார். இதனானிருகடலும் அதற்கருகாமையான நிலையிற் சேரன்கோயிலிருத்தல் செவ்வனைப்புலப்படும். இச் செய்தியை "அயிரைபரைஇ" என்று அயிரைமலையிற் கொற்றவைக்கடவுளைப் பரவுதலுடன்கூறினார். அதுவும் ஒரு வீரச்செயலாதலான்; என்னையெனின் பகைவர்கிறப்படுகுருதியானன்றி அக் கொற்றவை பலி கொள்ளாளென்பது கேட்கப்படுதலான் அங்ஙனம் அத்தெய்வத்தை வழிபட்டதனையும் ஓர் அரிய செயலாக்கி இப்பெருஞ்செயலோடு கூறினார் எனவறிக. இவ்விருகடனீருமொருபகலாடியசெய்தி கருவூர்வஞ்சிக்கு எவ்வளவு அழகாகப்பொருந்துமென்பது ஈண்டு யான்கூறவும் வேண்டுவதோ.

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சி கடற்றுறைப்பட்டினமாகுமென்று தாமேநினைத்துக்கொண்டு,

"அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து
வளந்தலைமயங்கியவஞ்சிமுற்றத்
திறைமகன்செல்வியாங்களும்பெறாது
திறைசுமந்துநிற்குந்தெவ்வர்போல"

என்னுஞ் சிலப்பதிகாரத்துள்ள "கலம்" என்னும் சொல்லையேகண்டு வஞ்சி கடலுடையதாதற்காதாரமாக இவ்வடிகளைக்காட்டினாருமுளர். அவர்க்கு ஈண்டை அருங்கலம் அரியமரக்கலம் என்பதாம். அதனால் அவர்கொள்ளும்பொருள் பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்கிய வஞ்சிமுற்றம் என்பதாம். இவரிங்ஙனங்கூறுவது பொருந்துமோ என்றாராய்வேன். இவ்வடிகட்குரைகூறுமிடத்து அரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியாவென்பதுமுதல் திறையிடுவார்க்கு அடை" என்று சிறார்க்கும் உரைவிளங்க இனிதுரைத்திருக்கவும் அவ்வினிய உரைக்கு உடன்படாது வேறுகூறுவது வஞ்சிக்குக்கடலுண்டு பண்ணுதற்கேயென்று எளிதிலுணரலாம். ஈண்டு வஞ்சிமுற்றமென்றது வஞ்சியிலுள்ளமுற்றம் என்றவாறு. அம்முற்றம் கோயின் முற்றமேயென்பது இறைமகன்செல்வியாங்களும்பெறாது அம்

முற்றத்தே திறைசுமந்து தெவ்வர்நிற்குந்தன்மைகூறுதலா னுணரப் படும். தெவ்வர்திறைசுமந்துநிற்கும் அக்கோயின்முற்றத்துப் பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்குதல் எனோ? கடல்வழி யாக நாவாய்சுமந்துவந்தபலபண்டங்கள் அவ்வப்பண்டசாலைகளி லன்றோவுய்க்கப்படும் "பௌவத்துநன்கலவெறுக்கைதுஞ்சும்பந்தர்" (பதிற்-ருரு)எனப் பௌவத்திலேவந்த நன்கலமாகியசெல்வந்துஞ்சும் பண்டசாலைகள் கடற்கரையூரிற்கூறப்படுதல்காண்க. கோயின்முற் றத்துவருதற்கும், வந்து தலைமயங்குதற்கும் ஏதுவேயில்லா மையுணர்க. இனிப் பலபண்டங்களை அரிய மரக்கலங்கள் சுமந்தால் அதனால் வஞ்சிமுற்றம் தலைமயங்காதென்பது நன்கறிந்துகொள்க. சுமந்த நிலை பண்டங்கள்மரக்கலங்களிலிருக்குநிலையன்றோ உணர்த்தும். வங்கத்தினே பலபண்டங்களிருத்தல்காரணமாக வஞ்சி முற்றம் வளந்தலைமயங்குமோ? மயங்காது. மற்றெதனாலாமெனின் அவ் வருங்கலங்கள் அப் பண்டங்களைச்சொரிந்தாலொருகாலாகும். அப் பிறர்கூறுவதே கருத்தாயின் "அருங்கலஞ்சொரிந்துவளந்தலை மயங்கிய" எனப்பாடுவரென்க. சுமந்துச்சுமந்துஎன்னுஞ்சொல் விரோதமாகஇருத்தலையுணர்ந்தும் அது தலைமயங்கியஎன்பதனுடன் தம் கருத்துப்படி இயையாமையைத்தெரிந்தும் வந்து என்றொரு சொல்லை அதன்பின்னேபெய்து சுமந்துவந்து எனப் பிறர்பொருள்கூறி னரென்று உணர்ந்துகொள்க.

இவ்வாறெல்லாமிடர்ப்படாமல் இவ்வடிகளின் உண்மைப் பொருளிஃதென்றுதுணியுமாறு கூறுவேன். இச் சிலப்பதிகாரத்து வஞ்சியைக்கூறியாங்கு மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனார் மது ரையைக்கூறியுள்ளார். அது,

"நாடாரவந்தவிழுக்கலமனைத்துங்
கங்கையம்பேரியாறுகடற்படர்ந்தாங்
களந்துகடையறியாவளங்கெழுதாரமொடு
புத்தேளுலகங்கவினிக்காண்வா
மிக்குப்புகழெய்தியபெரும்பெயர்மூதூர்"

என்பது. இதனுள் விழுக்கலமனைத்தும் அளந்துகடையறியா வளங் கெழுதாரமொடு காண்வரப்புகழெய்தியமூதூர் என்று கூறியதன்

கருத்தும், அளந்துகடையறியா வருங்கலஞ்சுமந்து வளந்தலைமயங்கிய வஞ்சி என்றதன்கருத்தும் பெரும்பாலும் ஒத்தல்காண்க. இம் மதுரைக்காஞ்சியுரையில் நச்சினார்க்கினியார் "நாட்காலத்தே திறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்களும் அத்தன்மையனபிறவும் கங்கையாகிய அழகிய பேரியாறு ஆயிரமுகமாகக் கடலிலேசென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை" எனப் பொருள்கூறினார். ஈண்டு "விழுக்கலம்" திறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்கள் எனப்பொருள்பண்ணப்பட்டதனை நன்றுநோக்கிக்கொள்க. இதற்கேற்பவே சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியா என்பது முதல் திறையிடுவார்க்கு அடை" என்றதனையும் நோக்குக. மதுரைக் காஞ்சியில் விழுக்கலம் என்றுகூறியதுதானே ஈண்டு அருங்கலமெனக்கூறப்பட்டுள்ளது. ஆண்டுக் கலமென்பது மரக்கலமாகாது அணி முதலியபொருள்களையுணர்த்தல்போல ஈண்டும் உணர்த்துமென்றுகொள்க.

"அருங்கலந்தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலிவங்கந் திரிதந்தாங்கு"

எனவரும் பதிற்றுப்பத்தில் அருங்கலம் என்பது மரக்கலத்தையுணர்த்தாது அரியபொருள்களையுணர்த்தல் ஆராய்ந்துகொள்க. அகப்பாட்டிலும் "அருங்கலந்தெறுத்த பெரும்புகல்வலத்தர்" (அகூ) என்புழி மரக்கலங்கூறாது அரியபொருள்களைக்கூறுதல்காண்க. அருங்கலஞ்சுமப்பது வஞ்சிமுற்றமென்க; பெரும்பொறையென்பதறியச் சுமந்துஎன்றார் "நிலனெடுக்கல்லாவொண்பல்வெறுக்கை" (மதுரைக் காஞ்சி) என்புழி "நிலஞ்சுமக்கமாட்டாத ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும் என்றது பூண்களையும் பொன்னையும்" என நச்சினார்க்கினியார் கூறுதலான் ஈண்டும் அருங்கலமென்பன அவை என அறிக. முன்னை திறையிட்டார் தரவந்த அரியஅணியும்பொன்னுமாகிய பொருள்களைச்சுமத்தல்காரணமாக அளந்துகடையறியா வளந்தலை மயங்கிய வஞ்சிமுற்றத்து யாங்கணும் இறைமகன்செவ்விபெறாது திறைசுமந்துநிற்குந் தெவ்வர்போல என்று பொருள்கொள்க. அருங் கலம் முன்னை அநுகூலராகப்போந்து திறையிட்டார்தந்தனவாம். அவரே முன்னைதிறையிடற்குரியராவர். அவர்தந்ததிறை யாங்கணும் நிரம்பியதுகாரணமாகவும், அவ்வநுகூலர்க்குக்காட்சியளித்தல்

விருபெருங்காரியங்களையுமேற்கொண்டு பெரும்படையுடன் எழுந்த செங்குட்டுவன் தன் படையினை இடஞ்சுற்றவிட்டுச்செல்லாது தமிழ் நாட்டரசர்வழக்கப்படி வலஞ்சுற்றவிட்டு வடநாடுசெல்ல நினைந்ததனாற் புணரியினிளிப்புகும்போது என்றுணரெனவறிக. தமிழரசர் வட நாட்டுப்படையெழுச்சிக்கண் இங்ஙனம் வலமுறைசெல்லுதலுண் டென்பது,

"குணகடல்பின்ன தாகக்குடகடல்
வெண்டலைப்புணரிநின்மான் குளம்பலைப்ப
வலமுறைவருதலுமுண்டென் றலம்வந்து
நெஞ்சநடுங்கவலம்பாயத்
துஞ்சாக்கண்ணவடபுலத்தரசே" (புறம் - ௩௧)

எனச் சோழனலங்கிள்ளியைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டா னறியப்படும். இவ்விடத்து உரைகாரரும் "கீழ்கடல்பின்னதாக மேல் கடலினது வெளியதலையையுடைய திரை நினது குதிரையினது குளம் பையலைப்ப வலமாகமுறையேவருதலும் உண்டாமென்று சுழன்று நெஞ்சநடுங்கும் அவலம்பரப்பத் துயிலாதகண்ணையுடையவாயின வட நாட்டுள்ள அரசுகள்" எனக்கூறினர். வெற்றியைவேண்டி வடநாடு புகுமிடத்துச் சோழன்வலமுறைசெல்வானாயின், வெற்றியுடன் தெய்வமங்களத்துக்குக் கலிகோடலையுங்கருதிய சேரன் வலமுறை சென்றான் என்றுகூறுவதே பொருந்தியதாகும். மேற்கண்ட புறப் பாட்டிற் சோழனலங்கிள்ளி சேரபாண்டியருடைய இருகுடையும் பின்னாக ஓங்கிய ஒன்றாகிய வெண்கொற்றக்குடையையுடையனாயினு னென்று கேட்கப்படுதலா னிவன் தன்னால் முன்னமேவெல்லப்பட்ட சேரபாண்டியரை வெல்லவேண்டி வலமுறைவருதலுண்டென்று கருதற்காகாது. இதனை அப் புறப்பாட்டில்,

சிறப்புடைமரபிற்பொருளுமின்பமும்
மறத்துவழிப்படூஉந்தோற்றம்போல
விருகுடைபின்படவோங்கியவொருகுடை
யுருகெழுமதியினிவந்துசேண்விளங்க
நல்லிசைவேட்டம்வேண்டிவெல்போர்ப்
பாசறையல்லதுநீயொல்லாயே (ஷ ஷ)

எனவருதலானறிக. ஈண்டு உரைகாரரும் இக்கருத்தேபடவுரைத்தது காண்க. உவமையானும் சேரபாண்டியரிருவர்குடையும் இவன் ஒருகுடையின்பின்னானதன்மை நன்றுணரப்படும். இருகுடையும் பின்படவோங்கிய ஒருகுடை இன்னும் ஓங்கச் செய்மைக் கண்டேனை விளங்கப் புகழ்வேட்கையைவிரும்பிப் பாடிவிட்டிவிருத்தலையல்லது நின்னகரிருத்தலைப்படாமையென்று அவனைக்கூறியதுங் காண்க. சோழன் பாண்டியரைவென்று அப்பாற் சேரரை வென்று பின் வடநாடுசெல்வனாக ஆசிரியர்கருதினாராயின் அதற்கேற்ற சொற்பெய்து அப்பொருள் விளக்கவுரைப்பார். அவ்வாறின்றுங் கூறாது குணதிசையானுஞ் சோழன் குணகடலினின்றெழக் குடகடலின் றிரை அச்சோழனது குதிரையின் குளம்பலைப்ப வலமுறையாக வருதலுமுண்டாமென்று கூறுதலானும் அவர்க்கது கருத்தன்றென்க. இதன்கண், குணதிசையினெழ என்றதனால் வடதிசை நோக்கி அப்போது புறப்படுதலைக் குறித்தல்காண்க. சிலப்பதிகாரத்தும் "வஞ்சிநீங்கி வெண்டலைப்புணரிவிளிம்புசூழ்போத" என்புழிச் சூழ்போதலென்றலாற் சுற்றிவருதலையேகூறிற்றென்று தெளிக. புறப்பாட்டினும் குடகடலை வெண்டலைப்புணரி என்றதனையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க.

அரும்பதவுரையாசிரியர் கடற்கரையேயொருகைபோத என்றார். அதற்கும் இதுவே கருத்தாகும். சேனைத்தலைவரும் தூசிப்படையும் பழையமுறைப்படி தன்னாட்டை வலஞ்சுற்றவிடுத்துத் தலைவருஞ்சேனையுஞ் சூழ்வாராநிற்கையிற் றானுஞ்சென்றுகூடித் தானையொடு நீலகிரியினெடும்புறத்துத் தங்கினான் என்றுகொள்க. நீலகிரியிலதிகபாகம் சேரரைச்சேர்ந்ததாதலின் ஆண்டுத்தங்கினான். அக்காலத்து அதுவே படைசெல்வழியுடையதுபோலும். இக்காலத்தும் நீலகிரிப்பகுதியிற் சேரன்பாடி, சேரன்கோடு என்பன உளவாதல் கண்டுகொள்க.

இனிச் சேரர்படைப்பெருக்கத்தைப் பற்றிப் பதிற்றுப்பத்துள் "இரும்பூதாற்பெரிதே" என்னும் பாட்டானுணரலாம். அதனுள் அவர் படைத்திரளை "வரம்பில்வெள்ளம்" என்றுகூறி அப்படை திரண்டாற் பகைவர் நாட்டெல்லையின் முற்பாடுசென்றுவிடும் என்னுங்கருத்தான் "நெடுநீர்த்துறைகலங்க மூழ்த்திறுத்தவியன்றானை

யொடு" என்று சிறப்பித்தலான் ஈண்டும் அவ்வாறே செங்குட்டுவன் படைப்பெருக்கையுணர்த்தவேண்டிப் படைதிரண்டஅளவிற் றலை வருந் தூசிப்படையுங் கடலெல்லையைச்சூழ்வரச்சென்றான் என்றார் எனினுமமையும். இஃது அதிசயோக்தியெனக்கொள்ளினுமிழுக்காது. அதிசயோக்தியாகக்கூறுமிடத்து மேல்கடலெனநினைத்தது படை வலமுறைசெல்லுதலானெனவறிந்துகொள்க. இங்ஙனம் அதிசயோக்தியாக இளங்கோவடிகள்கூறுவரோவெனிற் கூறுவரென்க. "மலைமுதுகுநெளிய" என ஈண்டே இப்படைச்செலவைப்பற்றிக்கூறியது கொண்டுணர்க. சகடங்களின்பாரத்தையுணர்த்தவே மலைமுதுகு நெளிய என்றாரெனின் படையின்பெருக்கையுணர்த்தவே கடல் விளிம்புசூழ்வர என்றாரென்க. இவ்வாறெல்லாம் ஆராய்ந்துகொள்ளாது "வஞ்சிநீங்கி" எனத் தெளியக்கூறுதலையும் பொருட்படுத்தாது கடலைக் கருவூர்வஞ்சிக்கணித்தாகக் கூறப்புக்கார்பிறர்.

மற்றுஞ் சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் வஞ்சியையடுத்து நான்குநிலமும் அணித்தாயிருத்தலைவருணித்து நீர்ப்படைக்காதை யிறுதியிற்கூறினாராலெனிற் கூறுவேன். அவர் ஆண்டு,

குறத்தியர்பாடியகுறிஞ்சிப்பாணியும்
... ... ..
தொடுப்பேருழவரோதைப்பாணியும்
... ... ...
கோவலரூதுங்குழலின்பாணியும்

கூறி, அப்பால்

வெண்டிரைபொருதவேலைவாலுகத்துக்
குண்டுநீரடைகரைக்குவைஇரும்புன்னை
வலம்புரியீன்றநலம்புரிமுத்தம்
கழங்காடுமகளிரோதையாயத்து
வழங்குதொடிமுன்கைமலாவேந்தி
வானவன்வந்தான்வளரிளவனமுலை
தோணலமுணீஇயதும்பைபோந்தையொடு
வஞ்சிபாடுதுமடவீர்யாமெனு
மஞ்சொற்கிளவியரந்தீம்பாணியும்
ஓர்த்துடனிருந்தகோப்பெருந்தேவி

என்றுரைத்துள்ளார். இதன்கண் குறத்தியரெனக் குறிஞ்சிநிலத்தாரையும், உழவரென மருதநிலத்தாரையும், கோவலரென முல்லைநிலத்தாரையும் பெயர்குறித்து விளங்கவுரைத்த இளங்கோவடிகள் இறுதியின்மட்டும் நெய்தனிலத்துமாக்கள்பெயராற்கூறாது அஞ்சொற்கிளவியரென நாகரிகமாகவே உரைத்ததன்கருத்து ஆராயத்தக்கும். காவிய ரசனைக்கு எல்லாநிலங்களையும் இயைத்துக்கூறப்புக்க அடிகள் மற்றை மூன்றுநிலனும் உள்ளவாறுகூறி அந்நிலமாக்கள் பெயரெடுத்துரைத்து அவர்பாணியும்வருணித்துப்போந்தவர் நெய்தலணித்தாகாததன்மையான் அந்நெய்தற்பொருளாகிய முத்தத்தை முன்னை மலரவேந்திக் கழங்காடுமகளிரோதையாயத்து வஞ்சிபாடுதும்யாமெனும் அஞ்சொற்கிளவியர்பாணியும் என்று உண்மைபுலப்படுத்திப் போனாரென்க. இங்ஙனமன்றி நெய்தற்கடலணித்தாகஇருக்குமாயின் ஆண்டுக்கடனிலமகளிர்பாணியைக் கடலொலியவித்தற்றன்மையையேனும் கடலொலியையேனும் வருணித்தொழிவர் என்க. பிறவிடத்தும் வஞ்சியில் ஆன்பொருநைவெண்மணலிற் குறுந்தொடிமகளிர்கழங்காடுதலைக்கூறுதல் காண்க. அது,

"செறியரிச்சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய்கழங்கிற்றெற்றியாடுந்
தண்ணான்பொருநைவெண்மணற்சிதைய" (புறம் - ௩௬)

எனவருதலானுணரப்படும். ஆண்டுக்கடலின்மையாற் பொலஞ்செய் கழங்கு என்றுகூறியதுகாண்க. ஈண்டுக்கழங்காடுவார் கடன்முத்தத்தையேந்தியாடுவாரென்றது அவ்வஞ்சியார்க்குக் கடற்செல்வமுமுண்டு என்பதைக்குறித்ததன்றிக் கடல் ஊர்ப்புறத்திருத்தல்கருதியன்றென்க. சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் இவ்வஞ்சியைமுற்றியிருந்தபோது நல்லிசைப்புலவர்பலர்பாடிய பல பாடல்கள் புறப்பாட்டின்கணுள்ளன. அவற்றுளொன்றிலேனும் கடற்சம்பந்தமேகூறப்படாமை ஆராய்ந்துகொள்க. இதனால் மேற்கண்ட சிலப்பதிகாரவடிகட்கு யான்கூறுவதேகருத்தாகக்கொள்க. ஆண்டு நெய்தல்வருணனையெல்லாம் வேலைவாலுகத்துப்புன்னையடியில் வலம்புரியீன்றமுத்தம் என முத்தத்தையே விசேடித்தனவாதலறிக. வஞ்சிகடலுடையது, கடலுடையதில்லையென்று துணிவது

இஃதொன்றேகொண்டில்லையென்பது பலருமறிவர். மற்றுக்கூறியவற்றோடும்பொருந்தலைத்தன்றே இஃதாராயப்படுவது. மற்றவற்றோடு பொருந்தநோக்குமிடத்தும் யான்கூறியதே துணிபாதலுணர்க. பேரறிவாளராகிய இளங்கோவடிகள் மூன்றுநிலங்களிலும் அவ்வந்நிலமாக்கள்பெயரைக்கூறி இந்நெய்தனில்வருணனையில் அந்நிலமாக்களைக்கூறாமல் அந்நிலப்பொருளாகிய புத்தத்தையேவிசேடித்தொழிந்து உண்மையைத்தப்பாதுபுலப்படுத்திய அவர்கவித்திறத்தை யானளந்துரைக்கும் வலியிலேன். அறிவாளரே நுணுகியாராய்ந்து கொள்வாராகுக. கடற்செல்வம்பற்றிக் கடலை ஊர்க்குவிசேடித்தல் நூல்வழக்கேயென்பதும்,

"ஏந்தீமுலைக்குறுவீரெழினீலநக்கற்குமின்பப்
பூந்தண்புகலூர்முருகற்குந்தோழனைப்போகமார்பைக்
காந்துங்கனலிற்குளிர்படுத்துங்கடற்கூடலின்வாய்
வேந்தின்றுயர்தவிர்த்தானையெப்போதும்விரும்புமினே"

என நம்பியாண்டார்நம்பிகள்பாடியபாடலிற் கடற் கூடல் என மதுரையைக்கூறுதலானுணர்க. இது கூடற்குரியகடற்செல்வத்தைக்குறிப்பதன்றிக் கூடல் கடலேயுடையதென்பது கருத்தாகாமை கண்டுகொள்க. எழுகடலழைத்தகதைகூறினரெனின் அதுதோன்றக் கூறுவரென்க, கடற்செல்வமுடைமையேகருதிக் கடலுடையதாகவே வருணித்தல் கவிமரபென்பது கடலுக்குநெடுந்தூரத்துள்ள திருச்சுழியற்பதியை "கவ்வைக்கடல்கதறிக்கொணர்முத்தங்கரைக்கெற்றக், கொவ்வைத்துவர்வாயார்குடைந்தாடுந்திருச்சுழியல்" எனச் சுந்தரமூர்த்திநாயனார் பாடுதலானுணர்க.

இங்ஙனமாகவும் நல்லுரையாளராகிய அரும்பதவுரையாசிரியர் இச் சிலப்பதிகாரத்துரையில் "குறிஞ்சிமுதலாகநாலுநிலத்துப்பாணியும் ஓர்த்துறங்காததேவியென்றது நாலுநிலஅணிமையுங்கூறிற்று" எனவுரைத்தார். அவர் சிறிதுநுணுகிநோக்கியிருப்பாராயின் யான் கூறியதனை அவரேகூறினவராவர்.

யான் இத்துணையுங் கூறியவாற்றாற் பழைய சோர்வஞ்சி கடற்கரைக்கண்ணதாகாமை யுணர்ந்துகொள்க.

இனிச் செங்குட்டுவன் வடநாடுபுகுதற்குக் கடக்களியானைப் பிடர்த்தலையேறியவளவில் ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன் பிரசாதங்கொண்டு சிலர்வந்துபரவினரென்பது,

"குடக்கோக்குட்டுவன்கொற்றங்கொள்கென
வாடகமாடத்தறிதுயிலமர்ந்தோன்
சேடங்கொண்டுசிலர்நின்றேத்த" (சிலப்-கால்கோள்)

என்பதனாலறியப்படுதலால் ஈண்டு ஆடகமாடம் என்றது திருவநந்தபுரம் என்னும் ஊரையென்றுகொண்டு அதனாற் சேரர்தலைநகர் திருவநந்தபுரத்துக்கு அணித்தாகுமென்று கூறுவாருமுளர். இதனுண்மையினை இங்கு ஆராய்வேன்—இவ்விடத்து அரும்பதவுரையாசிரியர் ஆடகமாடம் திருவநந்தபுரம் என்றுகூறி இரவிபுரமென்பாருமுளர் என்றுரைத்தார். இதனாலவ்வுரையாளர்க்கு முன்னமே இம்மாடவிஷயமாக அபிப்பிராயபேதமுண்டென்று தெற்றெனவிளங்கும். இரவிபுரமென்பது கருவூர்க்கும்பெயராகுமென்பது யான் பாஸ்கரபுரமென முன்னர்க்கூறியவாற்றானுணரப்படும். செங்குட்டுவன் தான் வடநாடுபுகுவதைத் தன்அணிநகர்மருங்கே பறையறைவித்தறிவித்தான். அறைபறையெழுந்தபின் ஆசான் பெருங்கணி அமைச்சர் தானைத்தலைவர்தம்மொடு வடவரசர் தமிழரசரையிகழ்ந்த செய்திகூறி இகழ்ந்தவடவரசர்தலையிற் கடவுட்பத்தினிக்குக் கல்லேற்றிவரேனாயிற் குடிநடுக்குறூஉங்கோலேனாகுக என்று வஞ்சினங்கூற ஆங்கு ஆசான் அவன்சினந்தணியுமாறு சில சொல்லிய அளவிற் பெருங்கணி எழுந்து இருநிலமருங்கின்மன்னரெல்லாம் நின் திருமலர்த்தாமரைச்சேவடிபணியும் முழுத்தமீங்கிது முன்னிய திசைமேலெழுச்சிப்பாலையேகென்றேத்த அவ்வமயம் இராத்திரியாய் விட்டபடியால் இரவிடங்கெடுத்த நிரைமணிவிளக்கின் எல்லாருஞ் சூழப் பெருங்களிற்றெருத்தத்தில் வாளுங்குடையும் ஏற்றிவஞ்சியின் புறநிலைக்கோட்டப்புரிசையிற்புகுத்திப் படைத்தலைவர்க்குப் பெருஞ்சோறுவகுத்து அன்றிராத்திரிநீங்கக் காலைமுரசம் ஒலியெழுந்தவாறே சிவபெருமான்சேவடி சென்னியிற்புனைந்து வடதிசையாத்திரைக்கு யானையேறியபோது "ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன் சேடங்கொண்டுசிலர்நின்றேத்த" என்று கூறப்பட்டுள்ளது. இதனாற்

கணி முகூர்த்தமிஃது என்றவுடன் வாளுங்குடையும் இரவிற் பரஸ்தானப்படுத்தினனென்றும், மறுநாட் காலைமுரசம்ஒலியெழும்போது சிவபிரானை வணங்கி யானையேறினனென்றும், அப்போது திருமால் பிரசாதம் சிலர்கொணர்ந்தனரென்றும் உணரலாம். முதனாள் இராத்திரித்தானே முகூர்த்தநிச்சயமாகி வாளுங்குடையும்பரஸ்தானப்படுத்திக் காலையிற்பயணங்கொண்டசேரன்முன்வந்த இத் திருமால் பிரசாதம் சேரனிருக்குந்தலைநகர்க்கண்ணேயுள்ள திருமால்கோயிலுடையதாகுமா அல்லது தூரத்துள்ள திருவநந்தபுரத் திருமால்கோயிலுடையதாகுமா என்பதே நன்கு ஆராயவேண்டுவது. பிறர்கூறுகிறபடி இவ்வாடகமாடத்தைத் திருவநந்தபுரமென்றுஞ் சேரனிருப்பது கொடுங்கோளூரென்றுங்கொண்டுபார்ப்போம். முதனாளிராத்திரி வாளுங்குடையும் பரஸ்தானப்படுத்தி மறுநாட்காலையிற்புறப்படும் அரசனுளனாகநினைக்குங்கொடுங்கோளூர்க்குத் திருவநந்தபுரம்பிரசாதம் வருதலியலுமா? கொடுங்கோளூர்க்குந்திருவநந்தபுரத்துக்கும் இரண்டுமூன்றுநாட்பயணதூரமில்லையா? முகூர்த்தநிச்சயமான இராத்திரிச்செய்தி திருவநந்தபுரத்துக்குத்தெரிதற்கே இரண்டு மூன்று நாளாகுமே: அங்ஙனமாகவும் ஆடகமாடந் திருவநந்தபுரமாதல் எங்ஙனங்கொடுங்கோளூர்வஞ்சிக்குச்சாதகமாகுமோ யானறிகிலேன். செங்குட்டுவன் வடநாட்டுப்பயணம் இந்நாளென்றுதெரியாவிடினும் பொதுவாகப்புறப்படுவானென்று நாடெங்கும் பறையறைந்த காரணமாகத்தெரிந்துகொண்டு திருவநந்தபுரத்தார் முன்னரே புறப்பட்டுப்போந்தார்; அவர்போந்ததருணம் செங்குட்டுவன் பயணத்துக்கு ஒத்ததாயிற்று எனக்கூறுவாராயின் அதனையே கருவூர் வஞ்சியே சேரர் தலைநகர் என்பாரும் கூறிக்கொள்ளலாகுமே. இதனால் ஆடகமாடம் திருவநந்தபுரமென்பது கொடுங்கோளூர்க்கு ஒரு அநுகூலத்தையும் கருவூர்க்கு ஒரு பிரதிகூலத்தையுஞ்செய்யாது பொதுவாகநிற்றல் நன்கறியலாம். இனி இவ் வாடகமாடந் திருவநந்தபுரந் தானோ என்பதைப்பற்றி ஆராய்வேன்.

சிலப்பதிகாரம் வரந்தருகாதையில் தெய்வமுற்றதேவந்திகை என்பாள் செங்குட்டுவன் முன்னே மாடலனை நோக்கி இக்கடவுண் மங்கலங்காணவந்தமகளிருள் அரட்டன்செட்டியின் இரட்டைப் பெண்களிருவரும், ஆடகமாடத்தரவணைத்துயின்றோன் அருச்சகனை

சேடக்குடும்பியின்புதல்வியும் இங்குளர்; அவரை உன் கரகத்து நீராற்றெளிப்பையாயின் முற்பிறப்புணர்ந்தவராவர். இதைக்காண் பாயாக என்றுசொல்ல மாடலனும் அவ்வாறேதெளிக்க அம்மூவரும் கண்ணகிபால் அன்புடைய முதியோர்சொல்லாற்புலம்ப அப்போது மாடலன் அரசனை நோக்கி இவ்வாட்டன்செட்டியின் இரட்டைப்பெண்களிருவரும் கண்ணகிதாயும் கோவலன்றாயுமாவர் என்றும், இச்சேடக்குடும்பியின்மகள் மதுரையிற் கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலங்கொண்ட ஐயைதாய் மாதரியாவள் என்றும் விளக்கிக்கூறியிடத்துக்,

“காதலிதன்மேற்காதலராதலின்
மேனிலையுலகத்தவருடன்போகுந்
தாவாநல்லறஞ்செய்திலரதனு
லஞ்செஞ்சாயலஞ்சாதனுக்கும்
வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற்
பொற்கொடிதன்மேற்பொருந்தியகாதலி
னற்புளஞ்சிறந்தாங்கரட்டன்செட்டி
மடமொழிநல்லாண்மனமகிழ்சிறப்பி
னுடன்வயிற்றோரொருங்குடன்றோன்றின
ராயர்முதுமகளாயிழைதன்மேற்
போயபிறப்பிற்பொருந்தியகாதலி
னாடியகுரவையினரவணைக்கிடந்தோன்
சேடக்குடும்பியின்சிறுமகளாயினை
ணற்றிறம்புரிந்தோர்பொற்படியெய்தலு
மற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறலும்
... ... ... ...
புதுவதன்றேதொன்றியல்வாழ்க்கை”

எனக்கூறப்பட்டுள்ளதனை அறிஞர் அறிவர். இதன்கண், கோவலன்றாயும் கண்ணகிதாயும் ஐயைதாய்மாதரியும் சுவர்க்கப்புகாது இவ்வுலகிற்பிறத்தற்குக்காரணம் கண்ணகிமேல்வைத்தகாதலே என்பதும், அற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறல் முறையாதலானே இவர்தம்மாற்காதல்செய்யப்பட்ட கண்ணகி அஞ்சாதனுக்கும் வஞ்சிமூது

ரில் அரட்டன்செட்டி இரட்டைப்பெண்களாகவும், சேடக்குடும்பியின் மகளாகவும்பிறந்தனரென்று கூறியிருத்தல் எல்லாரும் அறிந்து கொள்ளலாம். அரும்பதவுரையாசிரியரும் "காதலி - கண்ணகி, என்றும் காதலராகையாலே அறஞ்செய்திலர்; அதனாற் காதலியாகிய அஞ்செஞ்சாயல் அஞ்சாதனுக்கும் வஞ்சிமூதூரிற்பிறந்தார்" என்றுரைத்ததையுங் கண்டுகொள்க. முன்னிருவரும் வணிககுலத்தவராதலிற் செட்டிமகளிராயினரென்றும், திருமால்பத்திமையாலாடிய குரவையால் ஆயர்மகள் திருமால்திருவடிபிடிப்பான்மகளாயினளென்றும் அடிகள் தெளியவுரைத்ததுங்காண்க. இடைச்சிமகள் இடைச்சியாகப்பிறவாமற்பிறந்ததற்கு "ஆடியகுரவையின்" என்று ஏதுக்காட்டினர். இம்மூவரும் காதலராதலின் நல்லறஞ்செய்திலர். அதனால் அஞ்சேஞ்சாயலருகாதனுக்கும் வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற் பொற்கொடிதன்மேற்பொருந்தியகாதலின் இருவர்தாயரும் அரட்டன் செட்டியமனைவியின் ஒருவயிற்று இரட்டைப்பெண்களாகத்தோன்றினர். ஆயர்மகள் ஆயிழைகாதலின், ஆடியகுரவையின் அரவணைக்கிடந்தோன் றிருவடிபிடிப்பானை சேடக்குடும்பியின்மகளாயினள் என்றேகொள்ளக்கிடத்தல்காண்க. ஈண்டு அரவணைக்கிடந்தோன் உள்ளஊர்வேறாயின் மேல் வஞ்சிமூதூரைக்கூறினாற்போல இவள் பிறந்தவூரையுங் கூறுவரென்க. அங்ஙனங்கூறாமைகாண்க. அஞ்செஞ்சாயலாகிய கண்ணகி அஞ்சாதனுக்கியது வஞ்சியேயெனவும், அவள்பாற் காதலால் அவருள்ளவிடத்துப்பிறந்தார்கள் எனவும், அங்ஙனம் அவ்வூரிற்பிறப்பானேன்றோ என்னும் ஆசங்கையுண்டாகாதபடி அதனைப் பரிகரித்து "அற்புளஞ்சிறந்தோர் பற்றுவழிப்படர்தல் புதுவதன்"றெனவும் அடிகள் விளக்குதல்காண்க. திருவடிபிடிப்பான்மகளாகிய ஆயர்மகள் வஞ்சியிற்பிறவாது திருவநந்தபுரத்துப்பிறந்தாளெனக்கொள்ளின் அவளாற்காதலிக்கப்பட்ட அஞ்செஞ்சாயலாகிய கண்ணகியனுகியது வஞ்சியாதலான் அவள்பற்று அங்கே அவளையுய்க்குமென்னு நியதியின்மாறி வேற்றிடத்து அவள்பிறத்தற்குக் காரணங்கூறவேண்டிவரும். நூலுள் இவ் வாயர்மகள்பிறத்தற்கு இரண்டு ஏதுக்கள் கூறியுள்ளன. அவை ஆயர்முதுமகளாயிழைகாதலின், ஆடியகுரவையின் மகளாயினள் என்று கூறுதலானறியலாம். இதன்கண் ஆயிழைகாதலினானும், ஆடியகுரவையினானும்

மகளாயினள் என்று கூறியதற்கு ஆயிழைகாதலால் அவ் வாயிழை யணுகிய வஞ்சிமூதூரில் ஆடியகுரவையால் அருச்சகன்மகளாயின ளென்றேகொள்ளக்கிடக்கின்றது. இடைச்சி இடைக்குலத்திற் பிறவாது திருமால்அருச்சகன்மகளாயினமைக்கு ஆடியகுரவையின் என ஏதுக்கூறுகின்ற மஹாமேதாவியானபெருங்கவியரசர் ஆயிழைகாதலின் என்பதனை வாளாகூறினரென்பது சிறிதும்பொருந்தாது. மேல் தாயிருவரும் அரட்டன்செட்டிமகளிராயினர் என்று கூறியவிடத்தும் "பொற்கொடிதன்மேற் பொருந்தியகாதலின்" என வஞ்சிமூதூரிற்பிறத்தற்கு ஏதுக்கூறுதல்காண்க. அங்குக்கூறிய ஏதுவையே இங்கும் "ஆயிழைகாதலின்" என ஆயர்மகள் வஞ்சிமூதூரிற்பிறத்தற்குக்கூறினரென்பது தெள்ளிது. இதனாற் சேடக்குடும்பி என்பான் வஞ்சிமூதூரிலுள்ளவன் என்பது தெளியப்படும். இவ்வருச்சகன் வஞ்சியூரினனென்று தெளிந்தவாற்றான் இவன் அருச்சிக்கும் அரவணைத்துயின்றதிருமாலும் அவ்வஞ்சியிலே திருக்கோயில் கொண்டருளியமூர்த்தியேயாகுமென்று துணியப்படும்; மாதரி ஆயிழைகாதலின் வஞ்சியிற்பிறந்தாள் ஆடியகுரவையின் றிருமால்பத்தி செய்தற்கேற்ற வைஷ்ணவகுலத்துப்பிறந்தாள் என்று கூறியதன் கருத்தையுற்றுநோக்கின் இவள் கண்ணகிஅணுகியவஞ்சிமூதூரிற் றிருமாலைவழிபடுவாளாய்ப்பிறந்தாள் என்று புலனாகும். இதனால் வஞ்சிமூதூர் ஒருபுறனும், இவள் வழிபடுந்திருமாலிருப்பது வேறொருபுறனுமாகாமை யுணர்ந்துகொள்க. இவற்றால், சேடக்குடும்பி அருச்சிக்கும் அரவணைத்துயின்றோனெழுந்தருளிய ஆடகமாடம் வஞ்சியுள் ஆனிலைபோன்றதோர் ஸ்தலவிசேஷமேயென்பது தேற்றெனவுணர்க. அது பொன்னாலாகியமாடக்கோயிலாதலான் ஆடகமாடம் எனப்பட்டதாகும். நறையூர்மணிமாடம், நாங்கூர்மணிமாடம், கடந்தையுட்டூங்கானைமாடம் என்பனவெல்லாம் அவ்வவ்வூரிற் கோயிலையேகுறித்தல் கண்டுகொள்க. விஷ்ணுவுக்கு நிவேதனஞ்செய்தல்லது உண்ணலாகாதுஎன்னும் மிருதிபற்றி இக்ஷ்வாகுமுதலியோர் அயோத்தியிற் றம்அரண்மனைக்கண்ணேவைத்து வழிபட்ட தேவகிருகம்போன்றதாய்ச் சேரர் அரண்மனைக்கண்ணே உள்ளது இஃதொன்று எனக்கொள்ளினு மிழுக்காது.

இவரோடொத்த பாண்டியர் கூடலிலும் ஆடகமாடமென ஒன்று இருந்தமை,

"கோநெடுமாறன்றென்கூடலின்வா
யாடகமாடங்கடந்தறியாதவென்னாரணங்கே"

என்னு மிறையனார்களவியலுரைமேற்கோளா னறியப்படும். ஈண்டுக் கூடலின்வாயாடகமாடம் என்றிருத்தலான் ஆடகமாடம் ஓரூரா காமை நன்குணரப்படும். இதுபோலவே சிலப்பதிகாரத்துக்கூறப் பட்ட ஆடகமாடமும் ஊராகாதென்றுணர்க. "வானவர்வாய்வாட் கோதை, விளங்கிலவந்திவெள்ளிமாடத்து" என்பதனால் வஞ்சியின் நீராவியையுடைய வெள்ளிமாடம் என ஒன்றிருந்தது நன்குபுல னாகும். ஆண்டு வெள்ளிமாடம் ஊராகாததுபோலவே ஆடகமாடம் என்பதனையுங்கொள்க.

இதனால் ஆடகமாடம் வஞ்சியின்கண்ணதாதலானே இராத்திரி முகூர்த்தநிச்சயித்து வாளும் குடையும் பரஸ்தானப்படுத்திக் காலை யிற்பயணப்பட்டசெங்குட்டுவற்கு அவன் பயணப்பட்டு யானைமேல் ஏறியதருணத்து அவ்வாடகமாடக்கடவுள்பிரசாதம் நல்கலாயிற் றென நன்குணர்ந்துகொள்க.

ஈண்டு "அஞ்செஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்" என்ப தனாற் கண்ணகி அஞ்சாது அணுகும் கருவூர் என்றார். மலையில் வேங்கையினீழலிற் குறவரெல்லாங்காண வானவர்போற்றத் தெய் வக்கணவனுடன் விமானத்தேசென்றகண்ணகி வஞ்சியுள் அஞ் சாதுபுகுமாறு என்னையெனிற் கூறுவேன். கண்ணகி தீக்கனாக் கண்டதன்பின்னே கோவலனோடுபோய் மதுரைப்புறத்து ஒருகாற் கண்ட தீக்கனா அப்படியே பலித்துவிடுமோ என்னும் அச்சத்தோடே புக்கனள். வஞ்சியு ளங்ஙனமின்றி, கோவலனுந்தானும் தெய்வமாய்ப் புகுதலின் இனி ஏதம்வருமென்னும் அச்சமிலாது அணுகினள் என்று கூறினாரெனவறிக. செங்குட்டுவன் கண்ணகியுடன் கோவ லற்கும் கோட்டத்துப் படிமம் வகுத்தான் என்பதும், அக்கோட்டம் வஞ்சியின் புரிசைப்புறத்ததே என்பதும் மணிமேகலையுள் வஞ்சிமா நகர் புக்ககாதைக்கண்,

"தணியாக்காதற்றாய்கண்ணகியையுங்
கொடைகெழுதாதைகோவலன்றன்னையுங்
கடவுளெழுதியபடிமங்காணிய
வேட்கைதுரப்பக்கோட்டம்புகுந்து
வணங்கிநின் றுகுணைம்பலவேத்து"

எனவரும் அடிகளாலும், மணிமேகலைக்குக் கோட்டத்துள்ள கடவுட் பத்தினி,

"நறைகமழ்கூந்தனங்கையுநீயு முறைமையினிக்கழுதூரகத்தே"

எனக்கூறிய அடிகளாலும் நன்குணர்ந்துகொள்க. கோட்டத்துள்ள கடவுட்பத்தினி இந்தமுதூரகத்து என வஞ்சியைச்சுட்டிக்கூறுதலாற் கோட்டம் வஞ்சியின்கண்ணதே என்று தெளியப்படும். மணிமேகலை கோட்டத்துச் கடவுட்பத்தினியைவழிபட்டு, அவளாற் பலவுந்தெரிந்து கொண்டு வஞ்சி எயிற்புறவிருக்கையிற்போய்ச் சமயக்கணக்கர் தந் திறங்கேட்டு அப்பாற்சென்று புறக்குடிகடந்து அகழியையும் எயிலை யுங்கடந்து நகர்க்குட்புக்கனள் என்று சாத்தனார் மணிமேகலைநூலுட் கூறலால் இப்பத்தினிகோயில் வஞ்சியின் எயிற்புறவிருக்கைக்கும் அப்பாலுள்ளதென்று நன்குபுலனாகும். கண்ணகிக்குக் கோவல னுடன்படிமம்வகுத்தபடியாலும், இவள்படிமத்துக்கு "முற்றிழை நன்கலமுழுவதும்பூட்டி" (சிலப்-28). என்றதனாலும் செங்குட்டு வன் இவட்குவகுத்தபடிமம் சுமங்கலைவடிவமெனத்தெளிந்துகொள்க. இதைப்பற்றிப் பின்விரித்துக்கூறுவேன்.

இனிப் பிறர் செங்குட்டுவன் மலைகாண்குவமென்று வஞ்சிநீங்கிப் போய்ப்பேர்யாற்றங்கரையிற்றங்கிக் கண்ணகிவரலாறுகேட்டு அவளைத் தெய்வமாகவழிபடப் பலரோடுமாராய்ந்துதுணிந்து மீண்டுவஞ்சியுட் புக்கான்என்னுஞ்செய்தியிற் செங்குட்டுவன் பேர்யாற்றங்கரைக்கு என்றுபோனானே அன்றேமீண்டானெனக்கொண்டு அதனாற் பேர் யாற்றங்கரைக்கு அணித்தாகப் பழைய சேரர்தலைநகர்இருத்தல் வேண்டுமென்றுகூறி அங்ஙனமணித்தாகவுள்ளது கொடுங்கோளூராத லான் அதுவே பழைய சேரர்தலைநகர்என்று துணிவாராயினர். இதைப் பற்றி ஈண்டு ஆராய்வேன். செங்குட்டுவன் மலைகாண்குவமென்று பேர்யாற்றங்கரைச்குச்சென்றதைப்பற்றி இளங்கோவடிகள்,

வானவர்தோன்றல்வாய்வாட்கோதை
விளங்கிலவந்திவெள்ளிமாடத்
திளங்கோவேண்மாளுடனிருந்தருளித்
துஞ்சாமுழவி னருவியொலிக்கு
மஞ்சுசூழ்சோலைமலைகாண்குவமெனப்
பைந்தொடியாயமொடுபரந்தொருங்கீண்டி
வஞ்சிமுற்றநீங்கிச்செல்வோன்
வளமலர்ப்பூம்பொழில்வானவர்மகளிரொடு
விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்
பொலம்பூங்காவும்புனல்யாற்றுப்பரப்பு
மிலங்குநீர்த்துருத்தியுமிளமரக்காவு
மரங்கும்பள்ளியுமொருங்குடன்பரப்பி
யொருநூற்றுநாற்பதியோசனைவிரிந்த
பெருமால்களிற்றுப்பெயர்வோன்போன்று

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பெருமலைவிலங்கியபேரியாற்றடைகரை
யிடுமணலெக்கரியைந்தொருங்கிருப்ப

எனக்கூறியுள்ளார். செங்குட்டுவன் கோப்பெருந்தேவியுடனும் இளங்கோவடிகளுடனும் வில்லவன்கோதையாகிய படைத்தலைவனும் அழும்பில்வேளும் நூலறிபுலவரும் பைந்தொடியாயமும் பரிகாரமும் தானையும் முதலாயபெருந்திரளுடன் உபகரணங்களெல்லாம்அமைத்துக்கொண்டு மலைகாணச்சென்றானென்பது இக்காட்சிக்காதையினைக்கற்றாரறிவது: இவன் இங்ஙனஞ்சென்றதைதவருணிக்குமிடத்துள்ள அடிகள் மேற் குறித்தன. இவற்றான் ஒலியவியாதமுழவுபோல் எப்போதும் அருவிகள்ஒலித்தற்குக்காரணமான மேகங்கள்சூழ்ந்த சோலைகளையுடைய மலையினைக்காண்குவமென்று விளையாட்டுவிரும்பியஇந்திரன் வானவர் மகளிரொடு பூங்காவும் யாற்றுப்பரப்பும் நீர்த்துருத்தியும் இளமரச் சோலையும் அரங்கும் பள்ளியுமென்பனவற்றை யானைமேற்பரப்பி ஒரு நூற்றுநாற்பதியோசனைவிரிந்த தன்பெருமால்களிற்றுப்பெயர்வோனைப் போலச்சென்று பேர்யாற்றங்கரையிற்சேர்ந்திருப்பஎன்றுகூறுநின்றார். அரும்பதவுரையாசிரியரும், இவ்விடத்துப் "பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகநிருமித்து" எனவும் "அரங்கு-நாடகசாலை. பள்ளி-

மண்டபம். களிற்றிலே இவற்றைப்பரப்பிப்பெயர்வோனென்க” எனவும் விளக்கினார். செங்குட்டுவன் வானவன்பெயர்வோன்போன்று என்பதனால் இந்திரன் உவமையும், செங்குட்டுவனுபமேயமும் ஆதல் அறியப்படும். இதன்கண் உவமையைப் பலபடியாகவிசேடித்து உவமேயத்தை அந்தணைவிசேடியாதுவிடுத்தார். அடிகள் எடுத்துக்கொண்டது உவமேயமாகியசெங்குட்டுவன்மலைகாணச்சென்றசெலவையேயென்பது பலருமறிவர். உபமானமாகியஇந்திரன் விளையாட்டுவிரும்பி வானவர்மகளிருடன்சென்றசெலவை ஈண்டு எடுத்துக்கூறப்புகுந்தவர் அல்லர் என்பதும் பலருமறிவர். அங்ஙனமாகவும் இந்திரனைஉவமையாக்கிப் பலபடியாகவிசேடித்தது, உபமானவிசேடணமெல்லாம் ஏற்றபெற்றியான் உவமேயத்துங்கொள்ளப்படுமாதலான் செங்குட்டுவன் சென்றசெலவின்றன்மை உள்ளவாறுணரப்படுமென்றுகருதியேயாகும். அங்ஙனமல்லாக்கால் உவமையை அசந்தர்ப்பமாக வாளாவிசேடித்தாரெனப்பட்டு அவ்விசேடணமெல்லாம் நின்றுபயனின்மையென்னுங் குற்றத்தின்பாற்படுமென்றுணர்க. இக்கருத்துப் பிறர்க்குமுடன்பாடாகும். என்னைகாரணமெனிற் செங்குட்டுவன்விளையாட்டுவிரும்பி மலைகாணச்சென்றானென்று அவர்கூறாதலான்என்க. விளையாட்டுவிரும்பிய என்பது செங்குட்டுவனைவிசேடித்ததல்லாமை காணப்படும். அஃது இந்திரனையேவிசேடித்தது என்பது “விளையாட்டுவிரும்பியவிறல்வேல் வானவன்” என்பதனானறியப்படும். உவமையின்கணுள்ள விளையாட்டுவிருப்பத்தைச் செங்குட்டுவனுக்கும் அமைத்துக்கொண்டது உபமாவிசேடணமெல்லாம் உவமேயத்தையும் விசேடித்தனவாகக்கருதப்படும் என்ற நியாயத்தாலேயன்றிப் பிறிதில்லை. அங்ஙனமே மற்றெல்லாவற்றையும் ஏற்றபெற்றியான் அமைத்துக்கொள்ளவேவேண்டுமென்க. இங்ஙனங்கொள்வதே கவிமரபென்க. பிறர் தமக்குவேண்டிய விளையாட்டுவிருப்பமொன்றையேஉபமாவிசேடணத்தினின்றுகொண்டு மற்றவற்றையெல்லாம் ஒழிப்பது உரைமுறையாகாமை எளிதிலறியப்படும். இந்திரன் றன்றெய்வத்தலைமைக்கேற்ப விளையாட்டுவிரும்பி அவற்றுக்குரிய உபகரணங்களைப் பெருக யானைமேற்பரப்பிச்சென்றாற்போலச் செங்குட்டுவனும் தன் இறைமைக்கேற்ப விளையாட்டுவிரும்பி மலைகாண்குவமென்று பெரியஉபகரணங்களையெல்லாம் யானைகளிற் பரப்பி நெடுந்தூரஞ்சென்றானென்றேகொள்ளப்படுமென்க. செங்குட்டுவனும் யாத்திரைகளில் உபயோகிக்கும் நாடகசாலைகளையும், மண்டபங்

களையும், தாழியிற்பூத்துப் பயன்றருவனவற்றையும், தான்விரும்பிய யாற்றுநீரையும், குருத்திமணலையும், தாழியினின்று குளிர்ச்சிசெய்யும் இளமரங்களையும், பிறவற்றையும் தன்யானைகளிற்பரப்பி நெடுந்தூரம் சென்றானென்றே கொள்ளப்படுமென்க. செங்குட்டுவன்செலவேகூற வந்தாராதலான் இதுவே கருத்தாதல் தெள்ளிது. இவற்றையெல்லாம் உடன்கொண்டுசென்றானென்று செங்குட்டுவன் இறைமையும் செல்வப்பெருக்கும் இன்பப்பெருக்கும் உணரக்காட்டினார். சாதாரண வேந்தரான் ஆகாதகாரியத்தைத் தேவர்தலைவன்போலச்செய்துகொடு போனானென்றுகூறுதலே கருத்தென்க. அருவிமுழங்கும் சோலை மலை காணச்செல்வோன் நீரும் நிழலும் பிறவும் கொடுபோவானேயென்னிற் றனக்கும் கோப்பெருந்தேவிக்கும் அம்மலைபோய்வருதற்கண் இடைநெறிக்கு இன்றியமையாதன இவையாதலான் என்க. இக்காலத்துள்ளபேராசரும் தமக்கினிய நீரும் நிழலும் உரியவற்றினேற்றி யுடன் கொண்டுசேறல் கேட்கப்படுதல்காண்க. அரங்கும் கொடுபோகலான் நாடகமகளிரும் பிறரும் உடன்சென்றாராதலறியப்படும். பள்ளிஎன்றார் வேந்தனுக்கும் கோப்பெருந்தேவிக்கும் இளங்கோவடிகட்கும் வில்லவன்கோதைக்கும் அழும்பில்வேட்கும் புலவர்க்கும் ஆயத்திற்கும் தானைக்கும் அவரவர்தகுதிக்கேற்ற யாத்திரைமண்டபங்களை. இங்ஙனமே இந்திரன்யானையின் நீளஅகலங்களையேகுறித்த ஒருநூற்றுநாற்பதியோசனை என்பதும் செங்குட்டுவன்யானைகளின்பரப்புக்கும் ஏறாதுபோகாதென்றுணர்ந்துகொள்க. கண்டுக்கூறிய தொகையளவேயளவாகக்கொள்ளாவிடினும் செங்குட்டுவன்யானைப்பரப்பு மிகவும்அதிகமாகஇருந்ததென்பதுமட்டி லிஃதுணர்த்தாமலிராதென்க. யானைப்பரப்பு இத்துணையோசனையென்றது இவன்செல்லப்புக்க இடத்தின் தூரத்தை அதிகமாகக்காட்டுதற்கென்ப தெளிதிலுணரப்படும். பரப்பு இத்துணையாயின் அதுசெல்வது அதினுமதிகமாகவேண்டுவதேயென்க. வானவர்மகளிருடன்என்றதற்கேற்பச் செங்குட்டுவற்கும் அழகுமிக்க இன்பமகளிர்பலருடனெனக்கூறிக்கொள்க. இங்ஙனம் பெருங்கவியரசராகிய இளங்கோவடிகள் தாமும் செங்குட்டுவனுடன்சென்று கண்ணாரக்கண்டநுபவித்தவற்றை உலகமறிந்து கொள்ள வேண்டி உபமாவிசேடணமுகத்தால் உணர்த்தினாரென்பதல்லது வாளாகூறினாரெனத்துணிதற்கு எம்மனோருடன்படாரென்க. இங்ஙனம் கவியிருதயத்தைக்காணமாட்டார் வேறுவேறுகூறுவர். அவையெல்லாம் இவ்வடிகள்கருத்தாகாமை கண்டுகொள்க.

இனி இளங்கோவடிகளுடனும் தானைத்தலைவருடனும் நூலறிபுலவருடனும் மலைகாணச்சென்றானென்று இக்காதையாற்றெரிதலான் இவரெல்லாருடனும் செங்குட்டுவன் விளையாட்டுவிரும்பினானென்றல் பொருந்தாது. அதனால் இவன் விளையாடல்மட்டுமேவிரும்பினனாகானென்றும், அடிகளுடனும் நூலறிபுலவருடனும் அம்மலையிலுள்ளபோது பல நல்லவிஷயங்களைக்கேட்டுத்தெளியவும், மந்திரியருடன் இராச்சியகாரியங்களை ஆராய்ந்துகொள்ளவும் அவகாசமுண்டாமென்று கருதி இவரையெல்லாம் அழைத்துப்போனானென்றும் தெளியலாம். இவ்வளவாலோசனையுடையனா யித்துணைப்பெருந்திரளோடு சாதாரண அரசர்க்காகாதபடி அரியபெரிய உபகரணங்களையெல்லாம் அமைத்துக்கொண்டு நெடுந்தூரம் சென்ற செங்குட்டுவன் இரண்டொருதிவஷங்களோ நாழிகையோ அம்மலையிற்கழித்து மீண்டானெனத்துணிவது சிறிதும் பொருந்தாது. இஃது இக்காலத்துப்பேரரசர்கள் தம் குடும்ப பரிவாரங்களுடன் பன்னூறுகாவதங்கடந்து வேனிற்காலத்து மலைவளந்துய்க்கச்செல்வதோடொக்குமோ அன்றி அவரவரூர்ப்புறத்து மாலையிற் சிலநாழிகைகளை நல்லகாற்றினைத்துய்த்தற்பொருட்டு உலாப்போந்து மீளுதலையொக்குமோ வென்று அறிஞரேயாராய்ந்துகொள்வாராகுக. இஃதன்றி நூலுள் மலைகண்ட அன்றே செங்குட்டுவன் மீண்டான் என்று துணிதற்கு அடையாளம் ஒன்றுமில்லை. அக்கொள்கைக்கு விரோதங்களே பல ஆண்டுக்காணப்படுகின்றன. பிறர் விளையாட்டு விரும்பிச் செங்குட்டுவன் மலைகாணச்சென்றானென்பதற் குடன்பட்டார். அவ்விளையாடல்கள் பல நிறப்படுமே. அவற்றுக்கெல்லாம் அவகாசமதிகமாகவேண்டுமே. பிறர் செங்குட்டுவன்சென்றுதங்கிய பேர்யாற்றங்கரை யாண்டையதென்று துணிவரோ தெரிகிலேன். அவர் கூறுமாற்றான் ஆலவாய்ப்பக்கமென் றூகிக்கப்படுகின்றது. அது துஞ்சாமுழவினருவியொலிக்கும் மஞ்சுசூழ்சோலைமலையிடந்தானோ? அஃதன்றாயின் நெடுந்தூரம் மலைமேலேறிச்சென்றாலன்றோ அத்தகையது காணலாம். கொடுங்கோளூர்க்கும் ஆலவாய்க்குமே இரண்டுகாவதங்கட்குமிஞ்சியதாகும். அதற்குமேலே மலைகாணச்சென்றானாயின் மலைகண்டு குளித்து உண்டு பலவகைவிளையாடலையும்விளையாடி மலையிலுள்ள வேடர்கொணர்ந்த பலவகைத்திறையையும்பெற்று அவர்பாற் கண்ணகிசெய்திகேட்டுச் சாத்தனார்வாயால் அவள் வரலாறுதேர்ந்து

நெடும்போது அவ்வழிபடற்பொருட்டு நூலறிபுலவர்முதலிய பலருடன் ஆராய்ந்துதுணிந்து அன்றேமீண்டானென்றன்றேகொள்ள வேண்டிவரும். இத்தனைதிரளுடன் அஞ்சாமுழுவி னருவியொலிக்கு மலைப்பக்கத்துக்குக் கொடுங்கோளூரினின்றுசெல்லவே சிலநாளேனுஞ் செல்லும். அங்ஙனமாக அன்றேபோய் இத்தனைகாரியங்களையுஞ்செய்து அன்றேமீண்டானென்பது இயற்கைக்கு விருத்தமாக நினைக்கப்படும். இவன்செலவுக்கே ஒருநாட்போதாதென்று துணியப்படாநிற்க இவன் மலைகண்டு விளையாடி இத்தனையுஞ்செய்து அன்றேமீளுதலுஞ் செய்தான் என்பது பொருந்தாதென் றியார்தாந் துணியார். இவன் செய்த ஒவ்வொருவினைக்குஞ் சிறிதுசிறிது நாழிகையாகப் பகுத்தாலும் நாள்கள்பலவாகும் என்றுணர்க. அரங்குங்கொடுபோயவன் விளையாட்டுவகையுமொன்றாக நாடகமுங்கண்டானவன். இஃதெல்லாம் நிமிஷங்களில்நடந்தனவாகா.

மதுரைக்கூலவாணிகன்சாத்தனார் மதுரைப்பதியினரென்பது பலருமறிவர். அவர் செங்குட்டுவனை முன்னேகாணாதவர். பரிசில்வேட்கையால் அவனைக்காண்டற்குவந்தவர். மலைமிசைவாழ்நரென்றைக்குச் சென்று செங்குட்டுவனைப் பேரியாற்றங்கரையிற்கண்டாரோ அன்றுதான் இப்புலவர் செங்குட்டுவனைக்கண்டு அவனைக்காண்டலானுண்டாகியகண்களிமயக்கத்துடன் இவனைக்காணப்பெறுதலானினி விசாரமில்லையென்றுதுணிந்து மகிழ்ந்தவராவர். இதனை,

"மண்களிநெடுவேன் மன்னவற்கண்டு
கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த
தண்டமிழாசான் சாத்தனிஃதுரைக்கும்"

என இக்காதையிற் கூறுமாற்றானறிக. பதிகத்தும் "அவனுழையிருந்த தண்டமிழ்ச்சாத்தன்" என்பதற்குப் பரிசில்காரணமாகவந்து அவனுழையிருந்த சாத்தன் என்று பொருள்கூறுதல் காண்க. மன்னவற்கண்டு கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த என்பதனால் இப்புலவர் அப்போதுதான்வந்துகண்டவர் என்பது நன்குணரப்படும். இவர், ஒரு பெருவேந்தன் பெருந்திரளுடன் பேரியாற்றங்கரைக்குவருதலை முன்னரே நன்குணர்ந்து மதுரையைவிட்டுப் பேரியாற்றங்கரையையடைந்து அவனைக்கண்டாரென்பதல்லது வேறுகூறலாகாது. இவர் வேந்தன் பேரியாற்றங்கரையிற் சிலகாலம் பெருந்திரளுடன் றங்குவானென்பதை

யுணர்ந்ததனுலன்றே அவனைக்காண ஆண்டுச்சென்றார். ஒருநாளிற் சிலபோதே பேர்யாற்றங்கரையிற்றங்குவானாயின் அது வேற்றுநாட்டுக்கு முன்னரே உணரப்படாததாகுமென்றுகொள்க. அவ்வொரு நாளிற் சிலநாழிகைகளைநம்பி அப்பெருமலைக்கண் விளையாடல்விரும்பிச் சென்ற அம்மலையில் அவனைக்காணலாகுமென்று ஒருபேரறிவாளன் நினைந்து தன்னுட்டைவிட்டு இத்துணைத்தூரஞ்செல்வானென்று அறிஞர் ஆராய்ந்துகொள்க. அரசன் மலைவளந்துய்த்துக்கொடுநாட்டடங்குவன் என்றுணர்ந்தாலல்லது இவர் ஆண்டுப்போய்க்காண்டற்கு ஒருப்படாரென்க. இவர் சேரன்பரிசில்காரணமாகப் பிறர்கூறுகின்ற கொடுங்கோளூர்க்குச்சென்றவராயின் அரசன் அன்றேமீட்டுத்தெரிந்து அவ்வூரிலேதங்குவதல்லது ஒருநாட் சிறுபோது விளையாட்டுவிரும்பிப் பெண்டிருடன்சென்றமலைக்கு அவ்வரசற்குப்பின்னேபோய்க்காண்டலை நினைத்தலுஞ்செய்யாரென்றுதுணிக. இக்குறிப்பால் புலவர் இவன் மலையிற்றங்குவதுதெரிந்து பரிசிற்குவந்தவரன்றென்பது தெரியப்படும். புதியராய்ப்புக்கபெரும்புலவர் அடிகளைக்கண்டு அளவளாவிப் பின் செங்குட்டுவனைக்கண்டு தம் புலமைத்திறங்காட்டற்கண் சிலநாள்கள்கழியுமென்றுணர்க.

இவற்றையெல்லாம் நுணுகிநோக்கின் செங்குட்டுவன் மலைகாணச் சென்றஅன்றே மீண்டானெனத்துணிதலாகாமை யுணர்க. இவன் கோப்பெருந்தேவியுடனும் அடிகளுடனும் மந்திரியுடனும் அழும்பில் வேளாகிய நண்பினனுடனும் ஆயத்துடனும் படையுடனும் மலைக்குச் சென்றது அவரவராற் பலவகைப்பயனுந்துய்க்க என்று எளிதிலறியலாம். அங்ஙனந்துய்க்கப் போதுமான அவகாசமுடையனாய் மலைக்கணிருந்தானென்பது உணர்ந்துகொள்க. ஈண்டுப் பேரறிவாளராகிய அடியார்க்குநல்லாரும் அன்றே மீண்டானெனத்துணிந்தது இரங்கத்தக்கது. மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகள் ஒருவன் செய்கைக்கட் சேறலையுணர்த்துவதன்றி அணிமைக்கட்சேறலைச் சிறிதுங்குறிக்காமைக்கண்டுகொள்க. இக்காட்சிக்காதைக்கண் “இளங்கோவேண்மாளுடனிருந்தருளி” என்புழி வேண்மாளுடனிருந்து இளங்கோவையருளிப்பாடிட்டென்றுமாம் எனப் பொருள்செய்தலானும் பதிகத்து “இளங்கோவடிகட்குக் குன்றக்குறவரொருங்குடன்கூடி.........இறும்பூதுபோலுமஃதறிந்தருளீயென”க் கூறினரெனக்கூறுதலானும் இளங்

கோவடிகளும் மலைக்குச்சென்றிருந்தது துணியப்படும். அடிகளும் அங்குச்சேரலையறிந்துகொண்டேதான் சாத்தனார் மலைக்குப்போய்ச் சேரனைக்கண்டாராவர் எனவுணர்க.

இனி,

"செங்குணக்கொழுகுங் கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை"

எனப் பதிற்றுப்பத்துட் செங்குட்டுவற்குக் காவிரியை உவமை கூறினரென்பது உரையாளர் "காவிரியனையையாவதேயன்றி மூன்றுடன் கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க" என்றுகூறியவாற்றானறியலாம். ஈண்டுக் காவிரியனைய என்றது சேரனுக்கு இல்லாதயாற்றை உவமைகூறியதென்று பிறர்கூறுவர். இதனுண்மையை ஈண்டு ஆராய்வேன். காவிரிமுழுதுஞ் சோழர்க்கேயுரியதாகாதென்பதனை முன்னரே கூறினேன். காவிரி குடகமலையிற்பிறந்து குணகடலையெய்தற்குள் மூன்றுமண்டலங்களிற்புகுந்து செல்கின்றது. முதற்கண் மஹிஷமண்டலத்துத் தென்கிழக்காகவும், அப்பாற் கொங்குமண்டலத்துத் தெற்காகவும், சோழமண்டலத்துக் கிழக்காகவும் அவ்யாறு ஓடுதலைப் பலரும் அறிவர். கொங்குமண்டலத்திற்குக் காவிரியே கிடையாதென்று கூறுதலியலாது. சேக்கிழார் ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணத்தில் "கொங்கினிற்பொன்னித்தென்கரைக்கறையூர்க்கொடுமுடிக்கோயின் முன்குறுகி" எனப் பாடுதலான் கொங்குமண்டலத்திற் காவிரியொழுகுதல் நன்குணரப்படும். கச்சியப்பமுனிவர் கொங்குநாட்டியாறுகளிற் சிறந்தவற்றைக்கூறுவாராகிப்,

பாவிரிபுலவர்சாவாப்புலவரும்பழிச்சுந்தெய்வக்
காவிரிபவானியாம்பராவதிகங்கையென்னப்
பூவிரிகாஞ்சிமற்றும்பொங்கிவெண்டிரைகள்வீசித்
தாவிரிபழனமோம்பத்தலைத்தலைபரந்தமாதோ (பேரூர்ப்-நாடு-௩௬.)

என்னும்பாடலான் அவை இன்னவென்றும் அவை கொங்குநாட்டுப் பழனங்களைப் பாதுகாத்தற்கு ஆண்டுப்பரந்தனவென்றும் நன்குவிளக்கினார். அவர் காவிரி தெற்குமுகமாகத்திரும்பியொழுகத்தலைப்பட்டது கொங்குநாடுகொண்டற்கே என வருணிப்பார். அது:—

"மதியந்தவழுஞ்சையவரைவரைப்பிற்பிறந்தகாவிரிநன்
னதியந்தனக்குநேர்கிழக்கினடத்தலொழிந்ததெனுந்திசைக்
கதிகொண்டெழுந்ததுயர்கொங்குகாணும்விழைவாலெனிவிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"
(செடி-நாடு-எச)

என்பதனால் அறியப்படும். இவற்றாற் காவிரி கொங்குநாட்டின்மையும் அக்காவிரியாற் பழனம் விம்மப்படுதலும் நன்குணரலாகும். கொங்கு சேரர்கொங்காக அக்கொங்கிற்பொன்னி பிறருடையதாமென்பது சிறிதும்பொருந்தாது. இக் கொங்கிற்பொன்னி கொங்குநாட்டுடைய சேரரதேயென்பது இதனாற்றெளியப்படும். கொங்கு சேரருடையது என்பதைப்பற்றி முன்னரே பரக்கப்பேசினேன். இதனாற் சோணாட்டில்லாத காவிரியை அவனுக்குவமைகூறினானெனத்துணிதல் கூடாமை காண்க. இனி இவ்வுவமையை ஆராய்வேன்.

இதன்கட் செங்குணக்கொழுகுங்காவிரி என்றலால் அது நேர் கிழக்காக ஒழுகுதலைக்கூறினாராவர். செங்குணக்குஎன்புழிச் செம்மை செங்கோல்என்புழிப்போல் வளையாதநேர்மையையுணர்த்துவது. இவ்வாறு நேர்கிழக்காக ஒழுகுதல் இஃது ஆன்பொருநையுடன்கலந்தது முதலேயாகும்: இதனாற் கொங்குநாடாகிய நின்னாட்டினின்று நேர் கிழக்காகச்சென்று சோணாடுபுகுங்காவிரியனையை என்றுரைத்தாரென்பதல்லது வேறுகூறலாகாது. இங்ஙனமில்லையாயிற் செங்குணக் கொழுகும் என்றது வாளாகூறியதாகி நின்றுபயனின்மை என்னுங் குற்றத்தின்பாற்படுமென்க. இவ்வுவமையால் என்னகருதினாரெனிற் கூறுவேன். காவிரி கொங்குநாட்டினின்று நேர்கிழக்காகச் சோணாட்டுத் தடையின்றிப்புக்கு அந்நாடெல்லாம் வளம்படுத்தி அச்சோழர் தந் தெய்வம்போற்கொண்டாடிவழிபட நிலைஇயதுபோல நீயும் கொங்கு நாட்டினின்று தடையின்றிச் சோணாடுபுக்கு அந்நாட்டு அரசுநிலையிட்டுத்திருத்தியவாற்றான் நின்னைத் தெய்வம்போற் குணநாட்டார் கொண்டாடிவழிபட நிலையினாய் என்றுகூறினாரெனவுணர்க. குடக முதற் குணநாடிறுதியாகத் தொழத்தோன்றுந்தன்மையினையே யீண்டுக் கருதினாரெனினுமமையும். குடநாட்டார் குடநாட்டரசனைத்தொழுத லியல்பு. அக்குடநாட்டரசனைக் குணநாட்டார்தொழுத லரிதாதலின்

அவ்வரிய தன்மை செங்குட்டுவன்பாற்காண்டலான் அதைப்பாராட்டியே செங்குணக்கொழுகுங்காவிரியன்னையை என்றாரென்க. கலுழிமலிர்நிறைக்காவிரியன்னையையென்றது அக்காவிரியைப்போல நாளும் புதுவருவாயுடைமையும் எப்போதுந்தப்பாமுடைமையும் தோற்றப் பொலிவுடைமையும் எதிர்ந்தார்க்கு அச்சந்தோற்றுதலுடைமையும் தடுத்தற்கருமையும் கடத்தற்கருமையும் நீயுடையை என்று கருதினுராவர். இங்ஙனந் தன்னாட்டும் பிறநாட்டும் இவன் பயன்படுநிலையிய தன்மையைக் காவிரியன்னையை என்பதனால் நயம்படக்கூறினரெனவுணர்க. தன்னாட்டேயில்லாமற் பிறநாட்டே பயன்படுங்காவிரியை உவமித்தால் அஃது அவ்வரசற்குப் புகழும் பெருமையுமாகா எனவுணர்க. இங்ஙனமன்றித் தன்னாட்டில்லாததாய்ப் பிறர்நாட்டிற்பெரும்பயன்றருவதாய்ப் பகையரசர் பெருஞ்செல்வமாயுள்ள யாற்றையே உவமித்தாரென்னின் அஃது அவனுக்கில்லாமையினையும் பகையரசர்க்கு அஃதுடைமையினையும் அறிவுறுத்து முகத்தான் அவனை இகழ்வதாகுமல்லது புகழ்வதாகாது. இவனுக்கில்லாதகாவிரியை இங்கு உவமை கூறியது இவன் இப்போது சோணாட்டைவென்றசிறப்புப்பற்றி என்பாரெனின் இவ்வமையந்தான் காவிரிபூரணமாகச் சோழனுடையதாய காரணத்தால் அதனைஉவமைகூறினரென்று அவர்க்கு அறியக்கூறுக. குடகமுதலியநாடுகளைவென்று தலைக்காவிரியையும் கொங்குநாட்டை என்றுமுடைமையால் இடைக்காவிரியையும் உடைய செங்குட்டுவன் சோணாட்டைவென்றகாரணத்தாற் கடைக்காவிரியையும் உடையனாயினான் என்றுகொண்டு காவிரியைப்பூரணமாகவுடையதன்மையைத் தெரிந்து அக்காவிரிபோல எங்குந்தொழுநிலையினாய்என்று சிறப்பித்தாரென்றுகூறுக. மற்றுச் சேரனைக்காவிரித்துறைவன் என்னது பொருநைத்துறைவன் எனவே நூல்கள்கூறும். இக்காவிரித்துறையைக் குடகநாட்டாருடையராயினும் அவரையும் அங்ஙனம் நூல்கள்கூறாமைபோலக்கொள்க. அக்காவிரியாலதிகவளத்தையெய்துஞ் சோழனைக் காவிரிநாடன் எனக் கூறியவாற்றாற் பிறரையும் அப்பெயரானேகூறின் உலகமலையுமாதலின் அங்ஙன மலையாமைப்பொருட்டு ஒருவனை ஒரு பெயரான் ஆளின் அப்பெயரானே பிறனொருவனைஆளாமை கவிமரபென்க. நூல்வழக்கிற் காவிரிநாடன் என்பது சோழனையன்றி மஹிஷமண்டலவேந்தனைக்குறியாமை நன்குணர்ந்துகொள்க. இதுபற்றி அவ்வேந்தற்குக் காவிரியில்லையென்பது எவ்வளவுஅஸமஞ்சஸமாகுமென்று

அறிஞர் உணர்ந்துகொள்க. இதுபோலச் சேரற்குங்கொள்க. இவ்வெல்லாம் ஆராயாது சேரனுக்குக் காவிரியில்லையென்பார் ஈண்டுக் காவிரியன்னையையென்றது ஒருவன் பகைநாட்டைவென்றதருணத்து அப்பகைநாட்டு ஊர் ஆறுமுதலியவற்றையுடையனாக அவ்வென்றவனை வருணித்ததுபோலுமெனக்கொண்டு தாங்கொண்டதற்குக்காரணமாகப் "புகார்ச்செல்வ" என்ற பதிற்றுப்பத்துள் பெருஞ்சேரலிரும்பொறையென்னுஞ்சேரனை அரிசில்கிழார்பாடியதனைக் காட்டுவர். அவர் அப்பெருஞ்சேரலிரும்பொறை "இருபெருவேந்தரையுமுடனிலைவென்று முரசங்கலனுங்குடையுங்கொண்டுநாசால்சிறப்பினடுகளம்வேட்"டான் என்பதுபற்றி அங்ஙனங்கூறினாரவர். இச்சேரன்வென்றது இருபெருவேந்தரையுமாக அவருட் சோழர்புகாரைமட்டும் ஈண்டு எடுத்துக்கொண்டு "புகார்ச்செல்வ" என்றுகூறினமையேதேனோ? 'கூடற்செல்வ' என்றும் கூறுதலேதேனோ? என்னும் வினாக்கள் நிகழ்தற்கு அவர்கூற்றிடந்தருகின்றது. ஆண்டுத் தனியேபுகார்ச்செல்வ என்றது "காவிரி மண்டியசேய்விரிவனப்பிற்புகாஅர்ச்செல்வ" என்று கூறியிருத்தலைக் காணலாம். சோழனைவென்றகாரணத்தால் காவிரிகடலொடுகலக்கும் வரையும் அது கடலொடுகலக்குமிடத்துள்ள பட்டினமுளப்படக் காவிரி முழுதுமுரிமையாகியசெல்வத்தையே ஆண்டும் பாராட்டினாரென்றே துணிந்துகொள்க. இது கருத்தில்லையாயின் காவிரிமண்டியசேய்விரி வனப்பிற்புகார் என்றுவிசேடித்தற் பயனின்றாதல்காண்க. பாண்டியர் கூடலுடையனாகக்கூறாமையானும் யான் கூறியவேகருத்தென்க. மற்று அவர்காட்டுங் கலிங்கத்துப்பரணியிற் பொன்னித்துறைவன்* என்று முதற்கட்சோழனைக்கூறி அவன் இதனையிதனைவென்றுடையனாயினான் என்று பொருநைக்கணவன் எனவும் கன்னிக்கொழுநன் எனவும் கங்கைமணாளன் எனவும் கூறுதலும் கண்டுகொள்க. தமிழ்நாடுவென்றதனையும் வடநாடுவென்றதனையுமன்றோ இப்பரணிகாட்டுகின்றது அங்ஙனம்வென்றதெல்லாங்கூறினாற்போல இப்பதிற்றுப்பத்துக்கூறாது காவிரிமண்டியபுகாரையேகூறியதனாற் காவிரியைக் குறையவுடைய சேரன் முழுதுமுடையனாயினான் என்பதே கருத்தெனத் துணியப்படுமென்க. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம்பத்துள்,

---

*பொன்னித்துறைவனைவாழ்த்தினவே
பொருநைக்கணவனைவாழ்த்தினவே
கன்னிக்கொழுநனைவாழ்த்தினவே
கங்கைமணாளனைவாழ்த்தினவே. (கலிங்கத்துப்பரணி-செய்-120.)

"சாந்துவருவானிநீரினுந்
தீந்தண்சாயலன்மன்றதானே" (பதிற்-௮௬)

எனச் சேரற்கு அவன் நாட்டுள்ள வானியாற்றுநீரினையேயுவமித் தலையும் கண்டைக்கு நோக்கிக்கொள்க. வானி ஆன்பொருநைக் குப்பெயரென்பது "ஆனிவானியான்பொருந்தமாகும்" என்னுந் திவா கரத்தானுணரலாம். "வடகொங்கின்வானியாற்றின்" எனவரும் தேசி கப்பிரபந்தத்தா லிது கொங்கிடத்ததுபுலனும்.

இப் பிறர் காவிரியைச் சேரனாட்டில்லதாகக்கூறுதலாற்பயன் காவிரி சேரற்கில்லாமைகூறின் அக்காவிரிபாயுங்கொங்குநாடு சேரற் கில்லாமைபெறப்படும். கொங்குநாடு சேரற்கில்லாமைபெறப்படின் கொங்குநாட்டுக்கருவூர் சேரர்வஞ்சியாகாமை துணியப்படுமென்பது போலும். இவர்க்கியான்கூறுவதென்னவெனின் கொங்குநாடு சேர ருடையதென்பது பலபடியாலும் யான் முன்னர்த்தெளிவித்துவிட் டேன். அதனால் அந்நாட்டுள்ள யாறும் மலையும் ஊரும் பிறவுமெல் லாஞ் சேரருடையனவேயாகும். கொங்குநாட்டிற்காவிரியேயில்லை யெனல் தேவர்க்குமாகாது. அந்நாட்டைச் சேரர்க்கில்லையெனல் யாவர்க்குமாகாது. இதனாற் சேரர்கொங்குநாடு காவிரியானும்வளம் பெறுதலுணரப்பட்டதாகும் என்க. இங்ஙனமாகவும் ஒருசாரார் காவிரியொழுகாதநிலமேகொங்குநாடென வரைந்துகாட்டினார். அது

"பொன்னித்தென்கரையாங்கொங்கினிடை" (திருஞான-௩௨௪)

எனவும்

'கோங்கினிற்பொன்னித்தென்கரைக்கறையூர்க்
கொடுமுடிக்கோயின்முன்குறுகி'' (ஏயர்கோன்கலிக்காமநாயனார்-௮௭)

எனவும் வருஞ் சேக்கிழார்பெரியபுராணத்தொடும்,

"மதியந்தவழுஞ்சையவரைவரைப்பிற்பிறந்தகாவிரிநன்
னதியந்தனக்குநேர்கிழக்கினடத்தலொழிந்துதெனுதிசைக்
கதிகொண்டெழுந்தவுயர்கோங்குகாணும்விழைவாலெனிலிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"

"சரதவங்கரெவ்வுழியெனத்தளரலைநீ
பரதகண்டத்திற்பசுந்தமிழ்நாட்டினிற்சைய

வரைதனக்குத்தென்றிசையினில்வளம்பயில்கோங்கென்
றுரைதரேயொருபெருநாடுளததனில்''

"மதுவனத்தின்மேற்றிசைப்பொறிவண்டுபண்பாடும்
புதுமலர்த்திரள்சுழித்தெழும்பொங்குகாவேரி
நதிதனக்குத்தென்றிசையினும்பராவதிவடபாற்
பதிவுகொண்டெழும்பவானியின்கீழ்த்திசையுளதால்''

எனவருங் கச்சியப்பமுனிவர்பேரூர்ப்புராணத்தொடும் முரணுமாறு கண்டுகொள்க. கொங்குநாட்டே காவிரியுளதாகவுஞ் சோழரையே அஃதுடையராகக்கூறுதல்

"மேக்குயரச்,
கொள்ளுங்குடகக்குவடூடறுத்திழியத்
தள்ளுந்திரைப்பொன்னிதந்தோறும்'' (விக்கிரமசோழனுலா)

என்பதனால் ஆதியிற்காவிரியாற்றைத்தமிழ்நாட்டிற்கொணர்ந்தவரென்னும் உரிமைபற்றியாகுமென்றுகொள்ளத்தகும்.

இனிக் கந்தபுராணத்துக் காவிரிநீங்குபடலத்துக் காவிரியானது முதன்முதல் அகத்தியர்கமண்டலத்தினின்றுகவிழ்க்கப்பட்டொழுகியது கொங்குநாட்டின்கண்ணேயென்று தெளிவாகக்கூறப்பட்டிருத்தல் கற்றோர்பலரும் அறிவர். இதனை,

"செங்கைதூங்கியதீர்த்தநீரொடுங்
கோங்கின்பாற்செலக்குறியமாமுனி
மங்குகின்றவம்மைமந்தர்நேருறு
வங்கண்மேவினாருந்தவத்தர்போல்

"ஆசில்கோங்கினுக்கணித்தினோரிடை
வாசமீதெனமகிழ்ந்துவீற்றிரீஇ''

"அருந்தவமுனிவன்கோங்கினமலையருச்சித்தங்கணிருந்திடுகின்றான்"

"அகத்தியன்கோங்கின்பால்வந்தருச்சனைபுரிந்துமேவும்"

"அன்னவன்றனதுமாட்டோரணிகமண்டலத்தினூடே
பொன்னியென்றுரைக்குந்தீர்த்தம்பொருந்தியேயிருந்ததெந்தாய்
நன்னதியதனைநீபோய்ஞாலமேற்கவிழ்த்துவிட்டா
லின்னதோர்வனத்தினண்ணுமென்குறைதீருமென்றான்''

"கொங்குறுமுனிவன்பாங்கர்க்குண்டிகைமீதிற்பொன்னி
சங்கரனருளின்வந்ததன்மையும்புணர்ப்புமுன்னி
யைங்கரன்கொடியாய்நண்ணவகத்தியனவனென்றோரா
னிங்கொருபறவைகொல்லாமெய்தியதென்றுகண்டான்"

"குண்டிகையதனைத்தள்ளிக்குளிர்புனற்கன்னியன்னாள்
பண்டையிலிசைவுசெய்தாள்பாரினீபடர்தியென்றான்"

"நன்னதிபோலவின்னு ஞானமுநனிங்கவார்த்துப்
பொன்னியாறுலகந்தன்னிற்பொள்ளெனப்பெயர்ந்ததன்றே"

"மறைநின்றவெல்லைதனிற்குறுமுனிவிம்பிதமாய்மன்னுயிர்களெங்கு
முறைநின்றதனிமுதல்வன்புதல்வன்றன்கோலத்தையுணர்ந்துபோற்றி
யறைகின்றகாவிரியைக்கண்ணுற்றுநகைத்துவெகுண்டருள்கைநாடி
யுறைநின்றகொங்குதனையொருவித்தென்றிசைநோக்கியொல்லைசென்
[றான்"

என வருவனவற்றால் நன்குதெளிந்துகொள்க. இக்கதை கொங்குநாட்டுக்காவிரியொழுகுதலை ஐயமறவுணர்த்துமென்று துணிக.

இனிப் பிறர் தமிழ்மூவேந்தர்க்கும் யாறு மலைநாடியாகவே இருக்கவேண்டுமென்பதற்கு ஆதாரமாகத் திருவள்ளுவமாலையிற்கண்ட,

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர் தடமுடிமேற்றாரன்றோ
பாமுறைதேர்வள்ளுவர்முப்பால்"

என்னும் வெண்பாவை எடுத்துக்காட்டுவர். இப்பாடல் அவர்கொள்கையை எதனாலாதரிக்கின்றதென்பதை யானறிகிலேன். மும்மலையாகிய பொதியம் கொல்லி நேரி என்பவை தம்முளொத்தனவில்லை. இவை முறையே உத்தமம் மத்திமம் அதமம் என முத்திறப்படுமென்பது பலருமறிவர். முந்நாடும் மலைநாடும் கடனாடும், நீர்நாடுமாகக்கூறப்படும். இவை தம்முள் ஒத்தனவாகா. பாண்டிநாட்டு முத்துமிகுதியும், சோழநாட்டு நென்மிகுதியும், சேரநாட்டுப் பொன்மிகுதியுங்கூறுப. முந்நதி-பாண்டியர் வையைமுழுதுமுடையர். சேரர் பொருநைமுழுதுமுடையர். சோழர் காவிரியிற் கடையாறேயுடையர். முப்பதி—பாண்டியர்

கூடலுக்கு மற்றை இருவேந்தர்தலைநகரும் ஒவ்வா-சோழர் உறையூரினுஞ் சேரர்கருவூர்பெரிது. மும்முரசு-வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு. வீரமுரசைப்பிரதானமாகவுடையர் வில்லுடையசேரர்; நியாயமுரசைப்பிரதானமாகவுடையர் தமிழுடையபாண்டியர்; தியாகமுரசைப் பிரதானமாகவுடையர் நெல்லுடையசோழர். "அறந்துஞ்சுறந்தைப்பொருநனை" எனவருதலானறிக. இங்ஙனமுரசினைப்பிரித்து மூவர்க்குங்கொள்ளாக்கால் மேல் மும்மலை முதலாகப்பிரித்தெடுத்துக் கூறிவந்தமுறையொடு மாறுமென்க. முத்தமிழும் இவ்வாறேகொள்ளப்படும். பாண்டியர்க்கு இசைத்தமிழும், சேரர்க்கு நாடகத்தமிழும், சோழர்க்கு இயற்றமிழும் பிரதானமாகக்கூறப்படுமென்க. இவற்ற தன்மையினைப் பழையநூல்களினாய்ந்துகொள்க. கண்டுரைப்பிற் பெருகும். முக்கொடி-வில்லும், கயலும், புலியும். இவற்றதொவ்வாமை எளிதிலறியப்படும். மும்மா, கனவட்டம், பாடலம், கோரம் என்பன. இவையுந் தம்முளொவ்வா என்பது பிற்காலத்தார் "கோரத்துக்கொப்போகனவட்டமம்மானை" எனப்பாடுதலானுணரப்படும். இனித் தட முடிமேற்றார்மூன்று. போந்தை, வேம்பு, ஆர். இவற்றது ஒவ்வாமை கண்கூடாகக்காணப்படும். இங்ஙனமே முப்பாலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால். இவற்றுள்ளும் உத்தம மத்திம அதமம் என முத்திறப்படுதல் உணர்ந்துகொள்க. வள்ளுவர் முப்பால் மூவேந்தர் முடிமேல் மூன்றுதாரன்றேவென்பதே கருத்தாகலான் சோழர் அறத்துப்பாலையும், சேரர் பொருட்பாலையும், பாண்டியர் காமத்துப்பாலையும் தத்தம்முடிமேற் றார்போலச்சூடிக்கொள்வர் என்று கருதியுரைத்தாரெனவறிக. இங்ஙனம் பாடன்முழுவதூஉந்தாரதம்மியமயமாகவுள்ளது, முங்நதியும் ஒத்தனவாகவேண்டுமென்பதற்கு எத்துணை ஆதாரமாகுமோ? யான் கண்டிலேன்.

இனிப் பிறர் சேரநாட்டுக்காவிரியில்லையென்பதற்கு மற்றொன்று கூறுவர். அஃதாவது—

சேரன்செங்குட்டுவன் பத்தினிக்கடவுட்குக்கற்கொள்ளவும் அக் கல்லை நீர்ப்படைசெய்யவுந்தெளியுமிடத்துப்,

"பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டு
முதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தன்

மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்
சிறப்பொடுவரூஉஞ்செய்கையோவன்று (சிலப்-காட்சி)

என அவன் கூறுதலான் இக்காவிரி அவனாட்டதாகாதென்பது. செங்குட்டுவன் கண்ணகியைவழிபடவேண்டுமென்று நூலறிபுலவரைநோக்கப் புலவர் அவனுள்ளக்கருத்தைக் குறிப்பானுணர்ந்து

ஆங்கவ,ரொற்காமரபிற்பொதியிலன்றியும்
விற்றலைக்கொண்டவியன்பேரிமயத்துக்
கற்கால்கொள்ளினுங்கடவுளாகுங்
கங்கைப்பேர்யாற்றினுங்காவிரிப்புனலினுந்
தங்கியநீர்ப்படைதகவோவுடைத்தென (ஷை ஷை)

எனக்கூறியதன்பின் செங்குட்டுவன்கூறியனவாகுமுற்காட்டியஅடிகள். ஈண்டுப்பிறர்கருத்து, சோழரையும் பாண்டியரையும் வென்று சேரன் தமிழ்நாட்டுத்தலைமையெய்தியிருந்தாலும் தன்னாட்டில்லாமலையிற் கற்கொண்டு தன்னாட்டில்லாக்காவிரியில் நீர்ப்படைசெய்தல் தன் வீரக்குடிக்கு இழுக்கென்று செங்குட்டுவன் சினந்துகூறினான் என்பதாம். செங்குட்டுவன்கருத்து இதுவோவேறோ என இங்கு ஆராய்வேன். பத்தினிக்கடவுளைப்பரசல்வேண்டுமெனச் செங்குட்டுவன் புலவரை நோக்கியவளவிற் புலவர் நன்றாய்ந்து எளிதாச்செய்தல், அரிதாச் செய்தல் என இருவகையினையுமுணர்ந்து நீ எளிதாச்செய்தலைக் கருதினாயாயின் இத்தென்னாட்டகத்தே தளராததன்மையினையுடைய பொதியிலிற்கற்கொண்டு இத்தென்னாட்டகத்தேயுள்ள காவிரிப்புனலி னீர்ப்படைசெய்து கடவுண்மங்கலம்புரிதலாகும். அரிதாச்செய்தலைக் கருதினாயாயின் சேரர்விற்பொறியைத்தலையிற்கொண்ட சிறந்த எல்லா மலையினும்பெரிய இமயத்துக்கற்கொண்டு எல்லாயாற்றினும்பெரிய கங்கையாற்றில் நீர்ப்படைசெய்து கடவுண்மங்கலம்புரிதலாகுமென இரண்டுபடக்கூறினார். இதைக்கேட்டசெங்குட்டுவன் இமயத்திற் றாழ்ந்தபொதியக்குன்றத்துக்கற்கொண்டு கங்கையிற்றாழ்ந்தகாவிரிப் புனலில் நீர்ப்படைசெய்து இங்ஙனம் எளிதாப்புரிதல் எம்வீரக்குடிக் கேற்றதன்று எனக் கூறினான். இக்கருத்தேகொள்ளுமாறு இளங்கோ வடிகள் ஏற்றசொற்பெய்து ஈண்டுவிளக்கியுள்ளார். அவர் நூலறிபுல வர்கூற்றாகக்கூறியவிடத்துப் பொதியில் தளராதவியல்புடையதுதான்

ஆயினும் இமயம் சேரர்விற்பொறியை மற்றை இருவேந்தர்கயற்பொறியினும் புலிப்பொறியினும் மேலாகத்தலையிற்கொண்டது; மலையரையன் ஆகச்சிறந்தது; அங்ஙனஞ்சிறத்தற்குக்காரணமாக எல்லாமலையினும் பெரிதாகவுள்ளது; பொதியில்போல எளிதாக கண்டேகொள்ளத்தக்கதொன்றன்று; நெடுந்தூரம்போய்ப் பன்னாடுகடந்து அரிதாகக்கொள்வதொன்று என்றும், அங்ஙனமே கங்கையேபேர்யாறென்றும், அதனை நோக்கக் காவிரிசிற்றாறென்றும், அக்கங்கைப்புனலே காவிரிப்புனலாதலான் அதன்புனலினும் நீர்ப்படைசெய்தலாகும் என்றும், இவற்றின் தாரதம்மியமும் செய்யுங்காரியத்தினருமையும் எளிமையுந்தோன்றக் கூறக்கேட்டுச் செங்குட்டுவன் அவர்கூறியகருத்தைத்தெரிந்து கொண்டவனாகி மலையரையன்கணல்லாமல் பொதியிலாகியகுன்றிலே கற்கொண்டு கங்கையின்புதுப்புனலன்றிப் பழையபுனலேயுடைய காவிரிமுன்றுறையிலதனைப்படுத்து இங்ஙனமெளிதாகச்செய்தல் வீரப் பெருமையினையும் அதற்கேற்றவாட்படையினையுமுடைய சேரர்குடிப் பிறந்தோர்க்குச் சிறப்போடுவருஞ் செய்கையன்று என்றான் என்று கூறிய குறிப்புக்கொண்டு ஆராய்ந்துகொள்க. வியன்பேரிமயம் என்று புலவர்கூறியது தெரிந்து அதனைநோக்கப் பொதியில் குன்றளவேஎனனுங்கருத்தான் பொதியிற்குன்றமென்றிகழ்ந்துகூறினானென்க. கங்கைப் பேர்யாறென்றும் காவிரிப்புனல் என்றும் உயர்வுதாழ்வு தோன்றக் கூறியதனையுணர்ந்து முதுநீர்க்காவிரி என்றிகழ்ந்துகூறினானென்க. நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்பாயிரவுரைக்கண் அகத்தியர் கங்கையாருழைச்சென்று காவிரியாரையும் உடன்கொண்டு தென்றிசைப் போந்தாரென்றுகூறுதலான் இக்காவிரிநீர் கங்கையின்பழையநீராதல் தெள்ளிது. இது கருத்தன்றாயின் தங்கருத்து வேறுபாடுதோன்ற அதற்கேற்றசொற்பெய்து புலப்படுத்துவரென்க. கங்கையே மஹாநதியென்றும், அதனைநோக்கக் காவிரிபுனலளவேயென்றுங் கூறினாரென வுணர்க. பொதியிலைமுற்கூறியமுறைப்படி காவிரியைமுற்கூறாதது பொதியிற்கும் காவிரிக்கும் ஓரியைபுமின்மையுணர்த்தற்கு. இமயத்தைக் கூறியதன்பின் கங்கைப்பேர்யாற்றைக்கூறியது அவ் யாறு அவ்விமயத்தேபிறப்பதென்னுமியைபுணர்த்தற்கு என அறிக. இவ்வளவு அழகாக உயர்வுதாழ்வு புலப்படுத்திக்கூறியதுகேட்டு அரசனும் அதற்கேற்றவாறு கூறினானெனத்தெளிந்துகொள்க. ஈண்டியான்கூறுவதுகருத்தன்றாகிப் பிறநாட்டு யாறும் மலையும்பற்றி இகழ்ந்தானெனக்கூறுவதாயின்

இவன் உடன்பட்ட இமயமும் கங்கையும் இவனாட்டனவாதல்வேண்டும். அங்ஙனமில்லையாதலான் அது கருத்தன்றென்க. மற்றுச் சேரர் விற்றலைக்கொண்டது கூறினரெனின் சேரர் விற்றலைக்கொண்டதுபோலப் பாண்டியர் கயற்பொறியையும் சோழர் புலிப்பொறியையும் இமயஞ் சூடியுள்ளதென்பது தொன்னூல்கள் பலவற்றினுங்கண்டது. அதனால் அது சேரர்க்கேசிறந்ததெனலாகாது, இளங்கோவடிகளே வாழ்த்துக் காதைக்கண்,

"முடிமன்னர் மூவருங்காத்தோம்புதெய்வ
வடபேரிமயமலை"

எனப்பாடுதலான் யான் கூறியதனுண்மையுணர்க. இமயம் விற்றலைக் கொண்டதுபோலக் கங்கைக்கு ஒன்று கூறலாகாமையானும் பிறர்கூறுவது கருத்தன்றாதலுணர்க. முன் பாண்டியனதாய் இப்போது வென்றியாற் சேரனுடையதாயிருக்கும்பொதியத்திற் சேரர்க்குள்ளபாத்தியமும் இமயத்திற்கூறலியலாதென்பது ஈண்டைக்கு ஆராய்ந்துகொள்க. மூவருங்காத்தோம்பு வடபேரிமயமலை என்றலானும் அது சேரர்க்குத் தனியே சிறந்ததாகாது. மற்று விற்றலைக்கொண்ட என்றது சேரர் விற்பொறியைத் தலையிற்சூடியதன்மையான் சேரனைமதித்து மலையரையன் கற்றருவான் என்பது குறித்தவாறு. அங்ஙனமென்னை மதித்து மலையரையன் ஒருகற்றாரானெனின் யானிதுசெய்வல் என மேற் செங்குட்டுவன் வஞ்சினங்கூறியவாற்றானும் இதுவே கருத்தாதலுணர்க. "பெருமலையரசன், கடவுளெழுதவோர் கற்றாரானெனின்" என அவன் கூறுதல்காண்க. தாரானெனின் என்றது தான் அரசனாக விருந்து தன்னோடொத்த ஓரரசனுக்குத் தெய்வகாரியத்தின்பொருட்டு ஒரு கல்லைத் தாரானெனின் எ-று. எனின் என்றது நல்குதலொருதலை எ-று. தரல்வினையான் ஒப்புக்குறித்தார். இவற்றாற் செய்யும் வினையின் உயர்வுபற்றியும் செய்யும் தன்னுயர்வுபற்றியும் தாழ்ந்தனவும் எளியனவும் நீக்கி உயர்ந்தனவும் அரியனவுஞ்செய்யப்புக்கானென்று தெளிந்துகொள்க. காவிரிமுன்றுறை என்றதனானும் தன்னூர்க்கு அணித்தாதல்குறிக்கப்படும். காவிரி கருவூர்க்கு ஐந்துமைலில் நெரூரையடுத்தோடுவது. இஃதன்றி யான் மேற்காட்டியவாற்றானும் இவனாட்டுக்காவிரியுண்மை தெளியப்பட்டதாகும். அதற்கேற்பநோக்குமிடத் தியான் கூறுவதே உண்மைக்கருத்தாதனன்றுணரப்படும். இளங்கோவடிகள்

யான்கூறுங்கருத்துப் புலப்படுத்தே சொற்செய் திண்மையாகப் பாடி யிருத்தலைக் கற்றாராராய்ந்து கொள்க. இங்ஙனங் கொள்ளாக்காற் புலவர் இரண்டிடக் கூறியதற்குப் பொருளின்றாதல் காண்க.

பொதியமலை சேரநாட்டிற்கும் பாண்டியநாட்டிற்கும் எல்லையாக வுள்ளது. அதனாலதன் ஒருபுறம் பாண்டியர்க்கும் மற்றப்புறம் சேரர்க்கும் உரியதாயினும் அதனுரிமை பாண்டியர்க்கு வழங்கப்பட்டதனால் சேரர்க்கு அது கூறப்படுதலில்லை. இதுபோலக் காவிரியின் ஒருபாகம் சேரர்க்கு உரியதாயினும் அதன் பெரும்பாகத்தையுடைய சோழர்க்கே அவ்வுரிமையாக வழங்கப்பட்டவாற்றால் அது சேரர்க்குக் கூறப்படுத லில்லையென்றுணர்க. இங்ஙனமல்லாக்கால் நூல்வழக்குத்தடுமாறு மென்க. இவ்வுண்மையினை ஆராய்ந்துகொள்ளாது சேரநாட்டிற்காவிரி யோடவில்லையென்று கூறினாருமுளர்.

கரணமமைந்த காசறுகாட்சிப் பரணர் செங்குட்டுவனைக் "காவிரி யன்னை" என்றுகூறியவிடத்து அவர் பெய்துள்ளசொற்கள் சிலவற்றை ஆராயினும் யான்கூறுவதே கருத்தாதல் தெளியப்படும். அவர்,

"மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்குகதழுறை ஆலியொடு சிதறிக்
கரும்பமல்கழனிய நாடுவளம்பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக்கொழுகுங் கலுழிமலிர் நிறைக்
காவிரி" (பதிற்-௫௰)

எனக்கூறியுள்ளார். இதன்கண் மாமலையின்கண் காற்றுடன்மயங்கியகதழுறையானது மான்கணங்கள் குளிர்ச்சியானடுங்க ஆலியோடுசிதற நாடுகள் கரும்பமல்கழனியவாய்வளம்பொழிய உலகத்தை வளங்கெழுசிறப்பிற்புரந்து நேர்கிழக்காக ஒழுகுங்கலுழிமலிர்நிறைக்காவிரி என்று அது செல்வழியெல்லாம் கரும்பமல்கழனியவாகவளம்படுத்தலையும் இங்ஙனம் பலநாடுகட்கும் வளத்தையுண்டுபண்ணுஞ்சிறப்பான் உலகம்புரந்து பின் செங்குணக்கு ஒழுகுதலையுங் கூறுதலான் அது சோணாட்டை மட்டுமேபுரப்பதாகக்கூறாமை காண்க. காவிரிபுரக்குநாடுடையான் எனச் சோழனைக்கூறுமிடத்துக் காவிரிபுரக்குங்குடகமுங் கொங்கும் சோணாடும் என்னும் மூன்றனுள் இறுதியதுடைமையே கருதப்படுத லுங்காண்க. இத்துணையுங்கூறியவாற்றாற் சேரநாட்டிற் காவிரியில்லை யென்றல் பொருந்தாமையுணர்க.

இனிச் சேரமான் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூ ரெறிந்தானைக் கோவூர்கிழார் பாடிய புறப்பாட்டில்

"மைந்தராடியமயங்குபெருந்தானைக்
கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே
.................................
வஞ்சிமுற்றம்வயக்களனாக
வஞ்சாமறவராட்போர்பழித்துக்
கொண்டனைபெருமகுடபுலத்ததரி"

எனக் கூறியதன்கண் சோணாட்டிலிருந்து வஞ்சியெறிவதற்காக மலைநாடுசென்றானொருவனைக்காட்ட 'கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே' என்று சொல்லப்பட்டிருக்கிறதென்று பிறர்கொண்டார்: இது புறம்பெற்றகொற்றமென்பது இன்னதென்றும் குடபுலம் இன்னதென்றும் உணராமையானே விளைந்ததென்று தமிழறிவுடையார் எளிதினுணர்வர். குடபுலம் கொங்குநாடுமுதலாகச் சேரனாடுமுழுமையுங்குறிக்குமாயினும் அது கொங்குநாட்டுக்குச்சிறப்பாக வழங்கப்படுதலை முன்னரே விரித்துரைத்தேனாதலான் ஈண்டுக்கூறுவதுமிகையாகும். கொங்குபுறம்பெற்றகொற்றம் என்பதனையும் முன்னரே இன்னதென்றுணர்த்தினேனாயினும் ஆண்டுச்சுருங்கவுரைத்ததனை ஈண்டு விரித்துவிளக்குவல். கொங்குபுறம்பெற்ற கொற்றமாவது கொங்கிற்பொருது அந்நாட்டார் புறக்கொடையைப்பெற்றதனாலுண்டாகியவெற்றி. அவ்வெற்றியையுடையனைச் சோழனைவிளித்தார். இங்ஙனம் கொங்குநாடுமுழுதும் புறக்கொடைகொடுத்து ஓடியதியாங்ஙனம் என்னும் ஆகாங்கையுண்டாக ஒருநாடுமுழுதும்வெல்வது என்பது அந்நாட்டுத்தலைநகரை வென்றுகோடலானெய்தலாவதென்றுகொண்டு அக்கொங்குநாட்டுத்தலைநகராகிய வஞ்சிமுற்றம்வயக்களனாக அஞ்சாமறவராட்போர்பழித்துக் கொண்டனைபெருமகுடபுலத்ததரி என்று கூறினார் எனவுணர்க. இங்ஙனமல்லாது கொங்குபுறம்பெற்றகொற்றம் என்பது கொங்குநாட்டுக்கப்பாற்கடந்துபோன கொற்றம் என்றாகாமை நன்குணர்ந்துகொள்க. கொங்குநாடுபுறங்கொடுத்தால் அந்நாட்டாரைப் பின்பற்றி வீரவேந்தன் அப்பாற் செல்லான் என்க. புறங்கொடுத்தால் அவர்மேற்செல்லாது மீடலே பண்டைவீரரியல்பு. வீரராயுள்ளார் தம்மொடுபொருதார் புறக்கொடைபெற்றவளவில் இம்மெல்லியாரோடு

னாம்பொருந்தோமே என்று மிக நாணுவரென்க. "செருவின்மறிந்தார் புறங்கண்டுநாணியகோன்" (இறையனார்களவியலுரைமேற்கோள்) எனவருதலானுணர்க. புறம்பெறுதல்-புறக்கொடைபெறுதல் என்பது. "இப்புறவர்புறம்பெற்றிசினே" (புறம்-கச) எனவருதலானுணர்க. கொங்குபுறம்பெற்றகொற்றம் யாண்டுண்டாயது என்பதனை விளக்கி 'வஞ்சிமுற்றம்வயக்களனாக' என அவ்வெற்றிக்களங்கூறுதலானுமிஃதுணரப்படும். நாட்டுத்தலைநகரைப் பகைவரினின்றுகாத்தற்கு நாட்டாரனைவரும் ஒருப்படுவாராதலான் அவ்வனைவரானுங்காக்கப்பட்ட தலைநகரை வெற்றிக்களனாக அஞ்சாமறவர் ஆட்போர்பழித்து அதனைக் கைக்கொண்டதன்மையால் அந்நாடுபுறங்கொடுத்த கொற்றமெய்தினனாகும். பதிற்றுப்பத்துள் "பொருமுரணெய்தியகழுவுள்புறம்பெற்று" (88) என்புழிக், கழுவுள்என்பவனுடைய புறக்கொடையைப்பெற்று என்று பொருளாதல்காண்க. இதனை வேண்டிப் பிறர்கொண்டகருத்து புறப்பாட்டிலுள்ள சொல்லொடும் பொருளொடும் பொருந்தாதாதலெளிதினுணர்க.

இனிக் கருவூருள்ளநாடு யாதாமென்று வினவுவாருமுளர். பெரும்பாலுந் தலைநகருள்ளநாடு அத்தலைநகர்ப்பெயரைப்பெறுதல் வழக்கென்பது புகார்நாடு, மதுரைநாடு, காஞ்சிநாடு எனவழங்குதலான் அறியலாம். "சிகரந்தோன்றாச்சேணுயர் நல்லிற்புகாஅர்நன்னாட்டதுவே" (கஅக) என அகப்பாட்டினும் "பொன்னெயிற்காஞ்சிநாடுகவினழிந்து" (உஅ) என மணிமேகலையினும் வருதலானுணர்க. அவ்வந்நாட்டுச் சிறுபதிகட்குத் தலைநகரானவற்றுக்கும் இஃதொக்கும். தேவாரத்துக் "கொண்டனாட்டுக்கொண்டல்" "மிழலைநாட்டுமிழலை" "குறுக்கை நாட்டுக்குறுக்கை" எனவருதலானுணர்ந்துகொள்க. இவற்றாற் கருவூர் நாடு, வஞ்சிநாடு என வழக்குப்பெறுமென்றுய்த்துணர்ந்துகொள்க. வீரசோழியவுரைகாரர் "ஈரெட்டுமூவைந்து" என்னும் பாட்டினுரையில் பதினாறுமுடனும் பதினைந்தாமுடனுந்தெற்றக் கருநிலஞ்சுற்றின

தேசத்துச் சிலர்வழங்குவர் எனவும், பதினேழாமுடலும் மூன்றாமுடலுந் தம்முட் டொடர்ந்த காவிரிபாய்ந்தநிலத்துச் சிலர்வழங்குவர் எனவும், நெல்லுக்காயின்றது வீட்டுக்காயின்றதென்று பாலாறுபாய்ந்தநிலத்துச் சிலர்வழங்குவர் எனவுங் கூறினார். இவர் செந்தமிழ்நாடு பாண்டிநாடு எனக்கொண்டு செந்தமிழ்வழக்கல்லாதன சிலவற்றை அப்பாண்டிமண்டலமொழிந்த மற்றை மூன்றுமண்டலங்களிலுஞ் சிற்சிலர் வழங்குவரென்று கூறினாரென எளிதினறியலாம். காவிரிபாய்ந்தநிலம் என்பதனாற் சோணாட்டையும், பாலாறுபாய்ந்தநிலம் என்பதனாற் றொண்டைநாட்டையுங் குறித்தாராதலான், ஒழிந்த கருநிலஞ்சுற்றின தேசம் என்பதனாற் சேரநாட்டையே குறித்தாரென்பது தெள்ளிது. ஊரினைக்கருவூர் என்பதுபோல நாட்டினைக்கருநிலம் என்பதனாற் கருநாடு என்று கருதினுமோரான ஊகிக்க இவ்வழக்கு இடந்தருகின்றது. கருநிலம்-கன்னடம் எனவும், அதுசுற்றியதேசம், சேரதேசமெனவுங் கூறினுமமையும்.

இனி "வஞ்சியர்கோன்வஞ்சிமதவேயும்" என்புழி வஞ்சியர்கோன் வஞ்சி எனவருதலான் வஞ்சியர்கோனென்பது வஞ்சிநாட்டார்க்கு இறையெனவும், அவனுடையவஞ்சி கருவூர் எனவும் கொள்ளக்கிடத்தலான் இக்கருவூர்நாடு வஞ்சிநாடு எனப்பட்டதெனினும் பொருந்தும். இவ்வஞ்சிநாடு சேரனுடைய மலையமானாட்டு ஓர் உட்பகுதியாகுமென்று கொள்க.

இத்துணையுங்கூறியவாற்றாற் கொங்கிற் கருவூர் சேரர்தலைநகரென்றற்கட் பிறர்கூறும் ஆக்ஷேபனைகளி லொன்றேனுநிலைபெறாமை நன்குணரலாம்.

இனி இறையனார்களவியலுரைக்கண் மூவேந்தர்தலைநகர்களிலும் நிகழும் விழாவைக்குறித்து "மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப்பங்குனியுத்தரமே, கருவூர்உள்ளிவிழாவே என இவைபோல்வன" (கசு-சூத்-உரை) எனவருதலைப் பலருமறிவர். இதன்கட்கூறப்பட்ட

கருவூர் சேரர்தலைநகரேயென்பது பாண்டியர்தலைநகராகிய மதுரையுடனும் சோழர்தலைநகராகிய உறையூருடனுஞ் சேரவுரைத்ததனா லுணரப்படும். மூன்றுதலைநகர்களிலும் நிகழும்விழாக்களே யீண்டுக் குறிக்கப்பட்டனவாதல் கண்டுகொள்க. அகப்பாட்டில் "கொங்கர், மணியரையாத்துமறுகினாடு, முள்ளிவிழவினன்ன, வலராகின்றதுபலர்வாய்ப் பட்டே" (௩௬௮) என்பதனால் இவ்வுள்ளிவிழவு கொங்கர் மணியை அரையிற்கட்டிக்கொண்டு தெருவிலாடுதலையுடையதென்று கூறப்பட்டுள்ளது. இறையனார் களவியலுரையிற்கண்ட கருவூருள்ளிவிழவு என்பதனையும்,இவ்வகப்பாட்டிற்கண்டகொங்கர்மணியரையாத்துமறுகினாடு முள்ளிவிழவு என்பதனையும் சேரவைத்தாராயுமிடத்து இவ்வீரிடத்துங்கூறப்பட்ட உள்ளிவிழவு ஒன்றேயென்றும், ஒன்று ஊர்பற்றியும் மற்றொன்று நாடுபற்றியும்போந்தனவல்லது வேறில்லையென்றும் புலனாகும். இவ்விரண்டாலும் கொங்குநாட்டார்தந்தலைநகரான கருவூரில் உள்ளிவிழா என ஒருதிருவிழா நிகழ்தலுண்டென்றும், அதன்கண் கொங்கர் மணிகளை அரையிற்கட்டிக்கொண்டு தெருவிலாடுதலுண்டென்றும் நன்குபுலனாகும். இதனாற் கருவூரில் உள்ளிவிழா கொங்கர் நிகழ்த்து முள்ளிவிழா என்று தெளியப்பட்டதாகும். இதன்கட் கொங்கர்கருவூர், பாண்டியர்மதுரையுடனும் சோழர்உறையூருடனும் சேரவைத்து உரைக்கப்பட்டதனால் அக்கொங்கர்கருவூரே சேரர்தலைநகராதலறியத்தகும். அகப்பாட்டில்,

"வென்றெறிமுரசின்விறற்போர்ச்சோழ
ரின்கடுங்கள்ளினுறந்தையாங்கண்
வருபுனனெரிதருமிகுகரைப்பேர்யாற்
றுருவவெண்மணன்முருகுநாறுதாழ்பொழிற்
பங்குனிமுயக்கங்கழிந்தவழிநாள்
வீயிலையமன்றமாபயிலிறும்பிற்
தீயிலடுப்பினரங்கம்போலப்
பெரும்பாழ்கொண்டன்றுநுதலே" (௧௩௭)

என வருதலான் பங்குனிவிழா உறையூர்க்கண்ணே நிகழ்ந்தது என்பது நன்று தெளியப்படும். இதனானேயன்றே "உறையூர்ப்பங்குனியுத்தரமே" என்றாரெனவறிக.

மற்றுக் "குடையொடு,கழுமலந்தந்தநற்றேர்ச் செம்பியன்,பங்குனி விழவின்வஞ்சியோ, டுள்ளிவிழவினுறந்தையுஞ்சிறிதே" (தொல்-களவியல்-'நாற்றம்'என்னுஞ்சூத்திரவுரை இறையனார்களவியலுரை 'தந்தை' என்னுஞ்சூத்திரவுரை)என்று வேறுவகையாகக்கேட்கப்படுமாலெனின் அது சேரனுடையகழுமலத்திற் பெரும்பூட்சென்னியென்னுஞ் சோழன் சேரன்படைத்தலைவனாகிய கணையன்என்பவனைவென்று சேரநாட்டைத்தன்னடிப்படுத்தியகாலத்துத் தன் உறையூர்ப்பங்குனிவிழவைச் சேரர்வஞ்சியினும், சேரர்வஞ்சியினிகழ்ந்தஉள்ளிவிழவைத் தன் உறையூரினும் நிகழ்த்தியதனையே குறிக்குமென்றுகருதுவதே பொருந்தியதாகும். வென்றவேந்தர் வெல்லப்பட்டநாடுகளிற் றமக்கு விருப்பமானவிழாக்களையே நிலைபெறுவித்துநடாத்தலுண்டென்பது "சதய நல்விழாவுதியர்மண்டிலந்தன்னில்வைத்தவன்" எனக் கலிங்கத்துப்பரணியிற் சோழனைப்பாடுதலானறியலாகும். இங்ஙனங்கொள்ளாமல் எப்போதும் வஞ்சியிற் பங்குனிஉத்தரவிழாவே நடந்ததாமெனக்கொள்ளின் அது "கொங்கர்மணியரையாத்துமறுகினூடுமுள்ளிவிழவு" என்ற அகநானூற்றொடும் கருவூருள்ளிவிழாவே என்ற நக்கீரனாருரையோடு முரணுமென்றுணர்க. உள்ளிவிழவின்சிறப்புநோக்கி வெல்லப்பட்ட நாட்டாரைக்கொண்டு சோழன் தன்உறந்தையினும் அதனைநடாத்தினான்போலும். கழுமலஞ் சேரனுடையதென்பதும் "திண்டேர்க், கணையனகப்படக்கழுமலந்தந்த, பிணையலங்கண்ணிப்பெரும்பூட்சென்னி" (அகம்-௪௪) என்பதனானும் "நற்றேர்க்குட்டுவன்கழுமலத்தன்ன" (யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்-தொடை ௫௦) என்பதனானும் உணர்க. "கழுமலந்தந்தநற்றேர்ச்செம்பியன் உள்ளிவிழவினுறந்தை" என்றதனால் இவன் சேரன்கழுமலத்தைவென்றுகொண்டகாலத்து உள்ளிவிழவினை உறந்தையினடத்தினனென்று துணியப்படும். இதனானும் கொங்கருள்ளிவிழவுநடக்குங் கொங்கிற்கருவூர் சேரர்தலைநகரென்று துணியப்படுமென்றுணர்க.

இனி, ஒட்டக்கூத்தர்காலத்துக்குப்பின்னிட்ட குமாரகுலோத்துங்கசோழன்காலத்தும், அவன்தம்பியாகிய சங்கரசோழன்காலத்தும் கொங்குநாடும் வஞ்சியும் சோழர்க்குமாறானவர்களிற் பகைநாடாகக் கருதப்பட்டனவென்பது குலோத்துங்கன்கோவையில்,

"கொங்கோடக்குத் துங்கனிற்றான் குலோத்துங்கன்" (கக௯).

"கொங்கோட்டும்வேங்கைக்கொடியோன்குலோத்துங்கன்" (அஉ)

எனவருவனவற்றானும்; சங்கரசோழனுலாவில்,

"...................................கோமகன்
வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறினான்—னெஞ்சமத்து
முன்னின்றுகோட்டிமுனைபட்டு நந்திருந்து
கன்னின்றவர்க்குத்தகாப்பணிந்தும்"

என வருவனவற்றானும் நன்குதெளியலாம். இச்சங்கரசோழனுலாவில்,

"...................................திண்ககனை
வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக்
கோங்கைத்தளைகளைந்தகோமானும்"

என வருவதன்கண் வில்லவனைச் சேரனைச் சோழன் தளைகளைந்தது அவனுடைய கொங்குநாட்டையுந் தளைகளைந்ததாயிற்று என்னுங்கருத்தால் 'வில்லவனைக்கொங்கைத்தளைகளைந்தகோமான்' எனக்கூறியுள்ளார். இதனானும் கொங்குநாடு சோழர்க்குப்பகைஞனாகிய வில்லவனாடு என்றதாயிற்றுக்காண்க. ஈண்டுச் சங்கரசோழனுலாவினின்று முதற்கட் காட்டியகண்ணிகளில் "வஞ்சிக்குமோதைமகோதைக்கும்" என்பதனால் வஞ்சிவேறென்றும் மகோதைவேறென்றும் ஐயமறத்தெளியலாகும். 'மகோதையென்பது கொடுங்கோளூர்க்குப்பெயரென்பது "கோதையரசர்மகோதையெனக்குலவுபெயருடைத்தாமால்" எனச் சேக்கிழார் சேரமான்பெருமாணாயனார்புராணத்திற்கூறுதலானறியப்

படும். இச்சங்கரசோழனுலாவுடையார்கல்வித்திறம் அவருலாவினைக் கற்றும்பேறுபெற்றாரெல்லாம் நன்கறிவர். அவர் வஞ்சிவேறு, கொடுங்கோளூர்வேறு என்பதுபட நன்குரைத்துள்ளார். அவர் இருபேரரசருடையதலைநகர்களையும் அவருடையபாட்டுறையூர்களையுமே ஈண்டுக் கூறினரென்பது பாண்டியர் மதுரையையும் அவர் கொற்கையையும் கூறுதல்போலவே சேரர்வஞ்சியையும் மகோதையையும் அம்முறையேகூறுதலான் எளிதிலறியலாம். ஔதை மகோதையென்றார் அது கடற்றுறையூரென்பதுணர்தற்கு. கோமகன்வஞ்சி என்றார் சேரன் ஆண்டிருந்ததனைக்கி. மதுரைதலைநகரென்றற்கு மாமதுரையிஞ்சி என்று காட்டினார். மகோதையாகியகொடுங்கோளூர்க்கு வஞ்சியென்றபெயர்வழக்குளதாயின் இவர் அதனின்வேறாகியதோரூரினை அப்பெயரானேவழங்கமாட்டாரென்றே தெளியலாம். கச்சியப்பமுனிவரும் பேரூர்ப்புராணத்து அஞ்சைக்களத்தை வஞ்சியெனக்கூறாமல் கொங்கிற்கருவூரையே வஞ்சியெனவுரைத்தார். இதனை அந்நூலுட் காண்க. இவற்றாற் சேக்கிழார் மகோதையாகியகொடுங்கோளூரை வஞ்சியெனவழங்கியது அக்காலத்துச் சேரர் ஆண்டிருத்தல்பற்றி உபசாரமாகுமெனக்கருதப்படும். இராமனிருக்குமிடம் அயோத்தியே என்னும் வழக்குப்போல இதனையுங்கொள்க. சங்கரசோழனுலாவுடையார் அந்நூலுட்பின்னும்,

"உஞ்சைக்குமேனையுதகைக்கும்வஞ்சிக்கும்
கொற்கைக்குங்கூடற்கும்"

எனக்கூறுதலானும் இக்கருத்து வலியுறும். ஈண்டும் உதகை, வஞ்சி என்று கூறியமுறையே கொற்கை, கூடல் எனக் கூறியதுங்காண்க. இவற்றாற் சேக்கிழார் உபசாரமாகவழங்கியதொன்றொழிய மற்றெல்லா நூலும்வஞ்சியென்றுவழங்குவது கொடுங்கோளூரின்வேறாகியதோரூரினையேயாமென்றும், பண்டுள்ள உரைகாரர் நிகண்டுகாரர் இவர் கூற்றுப்படி அவ்வஞ்சி கருவூரே என்றும் நன்குதெளிந்துகொள்க.

இனிச் சேரமான்பெருமானாயனார் கொடுங்கோளூராகிய மகோதையின்கண் அரசுபுரிகின்றகாலத்துப் பழையசேரர்க்குரிய கொங்குநாடு சேரர்க்கல்லாமற் பிறர்க்குரியதாயிற்றென்று கேட்கப்படுதலில்லை. அருணகிரிநாதர்,

"ஆதியந்தவுலாவாச மாமுடி
சேரர்கொங்கு"

எனப்பாடுதலான் இக்கொங்குநாடு சேரமான்பெருமாணாயனார்க்குரிய தாதல் புலப்படும். கொங்குநாடு அவருடையதென் றுணரப்படுமாயின் அக்கொங்குநாட்டுவஞ்சியும் அவருடையதாத லெளிதி லுணரலாம். இதனுலவர்காலத்தே அதற்கு முன்னே தலைநகரமாயிருக்குங் கடற் பக்கத்தே தாதுங்கினென்று கூறுதலல்லது வேறன்றென் றுணரலாம். சங்கரசோழனுலாவுடையார்,

"வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறொதாய்"

எனப் பாடுதலான் வஞ்சி கொடுங்கோளூராகிய மகோதையின்வேறாத லெளிதி லுணரப்படும். இதன்கண், மதுரையும் கொற்கையும் பாண்டியனுடையனவாதல்போல வஞ்சியும் மகோதையும் சேரனுடையனவாதல் உணரலாம். இதனுல் சேரர், மகோதையாகிய கொடுங்கோளூரை யுடையகாலத்து வஞ்சியையு முடையராயினரென்று நன்குதெளிய லாம். சங்கநூல்களில் மகோதை கொடுங்கோளூ ரென்னுஞ் சொற்கள் காணாமையால் பழையசேரர் வஞ்சியிலரசுபுரிந்தகாலத்துக் கொடுங்கோளூர்மகோதை பெரியநகரமாகவிளங்கியதாகக் கருதப்பட வில்லை. ஆதலான் இச்சங்கரசோழனுலாவால், சேரர் கொடுங்கோளூ ராகிய மகோதையையுடையகாலத்தில் அதனின்வேறாக வஞ்சியையும் உடையராயினர் என்பதுமட்டும் நன்குணரப்படும். இதனுல் மகோதையரசர் வஞ்சிவேந்தர் எனவும் அழைக்கப்பெறுவரென்றும், மகோதையரசரை வஞ்சிவேந்தரென் றழைப்பதுபற்றி மகோதையே வஞ்சியென்றுகூறலாகாதென்றும் இச்சங்கரசோழனுலாவால் உணரப் படுதல்காண்க. கொற்கையரசர் மதுரைப்பாண்டியரென்றழைக்கப் படுமிடத்துக் கொற்கையும் மதுரையும் ஒன்றெனத்துணியப்படாது அவ்விரண்டரசரும் ஒருவரென்றே துணியப்படுதல்போல இதனையுங் கொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் "வஞ்சிக்குமோதைமகோதைக்கும்" என்று சங்கரசோழனுலாவுடையார் மிகவுந் தெளியக்கூறியதோடு முர ணுதல்காண்க. இக்கருத்தானன்றே பெரும்பற்றப்புலியூர்நம்பியாரும் சேரமான்பெருமாணாயனாருடையனவாகக் கொடுங்கோளூரென்று

கூறி அவ்வேந்தனைப் பின் "வஞ்சிக்கோற்றவன்" என்றாரெனவுணர்க. அருணகிரிநாதர் சேரமான்பெருமாளையனாருக்குக் கொங்குநாடுரிமை கூறியதனான் அவர்க்கு அக்கொங்குநாட்டுக்கருவூர்வஞ்சியுடைமையும் நன்கு புலனாகும். பெரும்பற்றப்புலியூர்நம்பிக்குக் கொங்கோனே வஞ்சியென்பதுகருத்தாயின் அதனை வெளிப்படையாக ஏற்றசொற்பெய்துரைப்பரென்க. இவற்றாலெல்லாம் பொருந்தநோக்குமிடத்தும் சேக்கிழார், கொங்கோனை வஞ்சியென வழங்கியது ஆண்டுள்ள வேந்தர் வஞ்சியரசாதலொற்றுமைபற்றி உபசாரமாமென்று தெளியலாம்.

மற்றுஞ் சேக்கிழார் "கொன்றையில்வேணியர்பதிக்கொங்கர் நாடுகடந்தருளி" எனக் கூறினாமெனவிற் கூறினேன்: இக்கொங்குநாடு குடபுலமென்பது சேக்கிழார்க்கு உடன்பாடாதல் முன்னரே காட்டினேன். குடபுலம் குடபுலக்காவலனாகிய சேரனுடையதாமென்பது தெள்ளிது. ஆதலான் கண்டிமேயவரென்றது சேரன்மாநகரையேயன்றிப் பிறநகரையில்லையெனவுணர்க. இந்நாட்டை அக்காலத்தும் பிறருடையதாகச் சேக்கிழார் கூறாமையும் நோக்கிக்கொள்க.

இனிக் கருவூரின் பலபெயர்களுட் கரபுரம் என்பதும் அதற்குப் பெயராகவுண்மை அவ்வூர்த்தலபுராணத்தானுணரப்படுவது.-

"கஞ்சனெண்ணுதிபுரங்கரபுரம்பாற்
கரபுரம்வீரசோழபுரம்
வஞ்சுளாரணியம்வஞ்சிதாயூர்சண்
மங்கலசேத்திரங்கருவூர்
விஞ்சுறுகருப்பபுரிமுதனாமம்
விளங்குதொல்பதியின்வீற்றிருக்குஞ்
செஞ்சுடர்ப்பொருளினிருபதமேனாத்
தேவர்பொன்முடிக்கணிகலனே"

என அதன்கண்வருதலிற் கரபுரமென்பது கருவூர்க்குப்பெயராதலுணரப்படும். இதன்கண் வீரசோழபுரமென்றது பிற்காலத்து வீரசோழனென்பான் இதனைவென்று ஆண்டகாரணம்பற்றியதாகும். இவ்வீரசோழன், பொன்பெற்றிகாவலன்புத்தமித்திரன்காலத்தவனாயினுமாம். இது கரனிருந்ததனால் அப்பெயர்பெற்றதாம்போலும். பௌராணிகர்

வேறுகூறுவர்: திரிசிரபுரமென்பதுமோர் இதனையுங்கொள்க. கரன், திரிசிரன் இவர் இத்தென்னாட்டில் ஆநாக்கத்தே இருந்தவரென்பதும் உணரத்தகும். கருவூர்க்கும் சிரபுரத்துக்கும் 48-மைல் தூரமேயாகு மென்பது பலருமறிவர். இச்சிரபுரம் சேரர்தலைநகர் என்பதனை விளக்குவல். சூளாமணியென்னும் பழையநூலுட் சயம்வரச்சருக்கத்து,

வேலைவாய்ச்சங்கடலுள் வெண்சங்குமணிமுத்தம்
விரவியெங்கு
மாலைவாய்க்கரும்பாவகண்பண்ணைகழி இடந்தே
யருவி தூங்குஞ்
சோலைவாய்மலரணிந்தசூழ்குழலார்யாழிசையாற்
றனைக்கைசேவு
மாலைவாய்நின்றிறங்குமதுரைசூழ்வளநாடன்
வடிவகாணாய்.

கண்சுடர்கள்விடவென்றுசார்ந்தசெம்மணியருந்துங்
களிநல்யானை
விண்சுடருநெடுங்குடைக்கீழ்விறல்வேந்தன்றிருமகனை
விளம்பக்கேளாய்
தண்சுடரோன்வழிமருகன்றெண்மலைமேற்சந்தனமுஞ்
செம்பொன்னுந்
தொண்சுடருநம்மிரவியாகல்வரையாரமலைநிற்சேரார்
திலதங்கண்டாய்.

மழைமுக்கரும்புங்கொடிமுல்லையுநங்கேறவும்பணைந்து
தடாவிநீண்ட
கழைமுக்கரும்புகண்ணீறங்கரபுரத்தார்கோமானிக்
கதிர்வேற்காளை
விலைமுக்கரும்புவிளமூலையாரெரிக்கநிரோன்வழிமருக
னிவணீரீர்ந்தண்
டமழைமுக்கரும்பின்மறுகுயிர்க்குந்தாரகலஞ்சார்ந்தவர்க
டவஞ்செய்தாரே.

வண்டறையுமரவிந்தவனத்திலாய்மதர்த்தெழுந்த
மழலையன்னம்
உண்டுறைமுன்விளையாடிபிளையவர்கண்மடப்பிலு
முறந்தைக்கோமான்

கொண்டறாவுமிடிமாசங்கொடிமதிலுங்குளிர்புனலும்
பொறியும்பூவு
மொண்கைறவுழும்முன்றழுடையகோனிவனிவன
தெழிலுங்காணாய்.

எனத் தமிழ்மூவேந்தரையுங் கூறுதலைக் கற்றுணர்வர். இவற்றுட் பாண்டியனை மதுரைசூழ்வளநாடன் என்றும், சேரனைக் கரபுரத்தார்கோமான் என்றும், சோழனை உறந்தைக்கோமான்என்றும் கூறியிருத்தலைக் காணலாம். மதுரைசூழ்வளநாடனாகிய பாண்டியற்கும், உறந்தைக் கோமானாகிய சோழற்கும் இடையே கரபுரத்தார்கோமான் எனக் கூறுதலானும் இவன் சேரனாதல் தெள்ளிது. இவன் அக்கினிவம்சத்த னாதல் "இவன்செந்தழலோன்மரபாகியமேருமுலகும்புகழ்சேரன்" எனப் பாரதத்துவருதலான் அறிக. இக்கரபுரமென்னும் பெயர் கொங்கிற் கருவூர்க்குக்கோட்கப்படுதலன்றிக் கொடுங்கோளூர்க்குக் கேட்கப் படாமையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க. இவற்றான் மதுரையையும் உறந்தையையுங்கூறியவரிசையிற் கரபுரத்தைக் கூறுதலான் இது அவைபோலத்தலைநகராதலும், உண்ணாட்டூராதலும், எளிதிலுணரத் தகும். இப்பழமையான வசனங்களானும் சேரர்தலைநகர் கரபுரமாகிய கருவூரென்று தெளியப்படுவதாகும்.

இனிப் பாரதம் இராசசூயச்சருக்கத்துத் தமிழ்நாடுமூன்றையுங் கூறப்புக்கு விளம்பித்தார்,

"சென்னிநாடுகுடகொங்கநாடுநிறைகொண்டுதென்னனுறைசெந்தமிழ்க்
கன்னிநாடுறவுடன்புகுந்துமணிநித்திலக்குவைகவைக்கொளா
மன்னிநாடுகடல்கொண்டகைம்முனிவன்வைகுமாமலயநண்ணினான்
மின்னிநாடுறவிளங்குவெஞ்சமரவீரவாகைபெறுவேலினான்"

எனப் பாடுதலான் சேரநாடு குடகொங்கநாடு என்று வழங்கப்படுதலறிந்து கொள்ளலாம். இப்பாடலில் சென்னிநாட்டுக்கும் தென்னன்கன்னி நாட்டுக்கும் இடையே குடகொங்கநாடு கூறியதனானும் இது சேரநாடாத லுணரப்படும்.

*சேரமன்னராகிய குலசேகரப்பெருமானும் தம்மைக் "கொல்லி காவலன் கூடனாயகன் கோழிக்கோன் குலசேகரன்" எனப் புலப்படுத் தல்காண்க. பாண்டிநாட்டுத்தலைமையைக் கூடனாயகன் என்பதனானும்;

---

*"மாற்றலரை,வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன்
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே"என்ப.

சோணாட்டுத்தலைமையைச் சோழிக்கோன் என்பதனாலும், உணர்த்தினாற்போலச் சேரநாட்டுத்தலைமையையே 'கொல்லிகாவலன்' என்பதனால் உணர்த்தினானென்பது எளிதிலுணரத்தகும். கொல்லி சேரர் கொங்குநாட்டுச் சேரர்க்குச் சிறந்தமலையென்பது முன்னரேகூறினேன். அவர் "கொங்கர்கோன்குலசேகரன்" எனப் புலப்படுத்தலையுங்காண்க. அவர் "கொல்லிநகர்க்கிறை" என்று தம்மைக்கூறுகின்றார். கொல்லி மலையையுடையநகரம் கொங்குநாட்டுக் கருவூராதறெள்ளிது.

இனி, மாறனலங்காரத்து எச்சவியல் கூசு-ஆம் சூத்திரவுரைக்கண்,

'மன்றல்கமழுமலைநாடும்வண்டமிழ்தேர்
நன்றியாயில்பாண்டிநாட்டகத்தும்—வென்றியாயில்
சோணாட்டகத்துந்துயின்மாயனைத்துதிப்பார்
காணார்பிறவிக்கடல்'

என்னும்பாடலை எடுத்தோதி "இதனுள் மலையமானுடென்பது மலைநாடென்றும், பாண்டியனுடென்பது பாண்டிநாடென்றும், சோழனுடென்பது சோணாடென்றும் மரூஉவாய் அழிப்படவந்தவழக்காற்றால் வந்து வழுவின்றாயிற்று" எனவுரைகாரர்கூறியவாற்றான் மலைநாடு என்பதும் மலையமானுடென்பதும் ஒன்றேயாதலும், அது சேரமானுடேயாதலும் எளிதிலறியத்தகும். இதன்கண், தமிழ்மூவேந்தர்நாடேகூறியது காண்க.

இனி, நைடதத்து,

'மாழைமென்னோக்கியிங்குவைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்குலைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியவாங்காய்க்
சோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே'

எனச் சோழபாண்டியருடன் சேரனைக்கூறுதலறியலாம். இதன்கட் சேரனைக் குடகநாடாளும்வேந்தென்றது மேற்றிசைநாட்டையாளும் வேந்தனாதலானெனவறிக. குடகம் - மேற்றிசை. இக்கருத்தானே அருணகிரிநாதரும் 'குடகிற்கருவூர்' என்றாரென்க. "வஞ்சிகுடக்கினிற் கோதையுமாங்கே" (அழகர்கலம்பகம்) என்பதூஉம் இக்கருத்தேபற்றி வந்தது. இங்ஙனமல்லாமற் 'குடகம்' எனப்பெயரிய தேயத்தையே கருதினோரெனின் அது தமிழ்மொழிவழங்காததேயங்களுளொன்றாக

வைத்து உரையாசிரியர்கள் எண்ணியதனோடு முரணுமென்றுணர்க. அன்றியுங் 'குடகதேசம்' குறிஞ்சியேயாக அதற்குரியவியல்பான் வருணிக்காமல் மருதமாகவே வருணித்தது குடகமலைநாட்டை விலக்கி யுணர்தற்கெனக்கொள்ளப்படும். இங்ஙனமே அரிச்சந்திரபுராணமுடை யாரும்,

"அதிபாரதனபாரவதிருபமலர்மானையனையாயிவ
ணதிபாயவுயர்போதினைமடுபாயநிறைபாயசிறைவாவியின்
மதியாமல்வலைமீறிவெடிபோனபருவாளைவனைபூகமேற்
குதிபாயமடல்கீறிவிழுதேறல்கமழ்சாருகுடநாடனே"

என மருதமாகவே கூறுதல்காண்க. ஈண்டுக் குடநாடெனப்பட்டதே நைடதத்துக் குடகநாடு எனப்பட்டதாமென்றுணர்க. சிறுபாணாற்றுப் படையிலும்,

"கொழுமீன்குறையவொதுங்கிவள்ளிதழ்க்
கழுநீர்மேய்ந்தகயவாயெருமை
பைங்கறிநிவந்தபலவினீழன்
மஞ்சண்மெல்லிலைமயிர்ப்புறந்தைவர
விளையாவிளங்கணாறுமெல்குபுபெயராக்
குளவிப்பள்ளிப்பாயல்கொள்ளுங்
குடபுலங்காவலர்மருமான்......குட்டுவன்
வருபுனல்வாயில்வஞ்சியும்வறிதே"

என்பதனாற் பெரும்பான்மை மருதமாகவே கூறினார். பைங்கறி என் பதனாற் குறிஞ்சியையுங் குளவிப்பள்ளி என்பதனால் முல்லையையுஞ் சிறுபான்மைகுறித்தார். ஈண்டுநெய்தலைக்குறித்தாரில்லை. நெய்தலை யில்லாத குடபுலம் கொங்குநாடேயென்பது கச்சியப்பமுனிவர்,

"......சடல்போக்கிநிலைமுன்றிற்
குலவுசிறப்பெய்தியதுகொங்குவளநாடு" (பேரூர்ப்புராணம்-)

என்று கூறியதனான் உணரப்படும். கொங்குநாட்டைக் குடபுலம் என்று வழங்குதல் சேக்கிழார் "கொங்கிற்குடபுலம்" (திருஞான-௩௨௧)

'சென்றசென்றகுடபுலத்துச்சிவனடியார்பதிகடொறும்'(வெள்ளானை)

"அப்பாலைக்குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி
லெப்பாலுஞ்சென்றேத்தித்திருநணாவினையிறைஞ்சி"
(திருஞான-௩௨௭)

எனக் கூறியவாற்றானுணரப்படும். இதன்கட் குடபுலங்காவலர்மரு மானை குட்டநாடும் உடையனாயினான் என்னுங்கருத்தால் குடபுலங் காவலர்மருமான் குட்டுவன் என்றுகூறினார். ஈண்டு நச்சினார்க்கினியர் குட்டுவன் என்பதற்குக் குட்டநாட்டையுடையோன் எனப் பொருள் கூறியதனானும் உணர்க. குட்டநாட்டையுடைமைகூறியதனாற் குடபுலங் காவலர்க்குக் கடலுடைமையுங்குறித்தாராவர். வருபுனல்வாஞ்சி யென்றது பெருகுகின்ற நீரையுடையவஞ்சி என்க. வருபுனல் என்பத னல் யாறு என்றுகொள்க. "வருபுனல்வையைவாமதந்தாங்கு முன்றுறை" (கசு-ஊர்காண்) எனச் சிலப்பதிகாரத்துள் "வருபுனற்கற்சிறை" என மதுரைக்காஞ்சியினும் வருதலானுணர்க. இவையெல்லாம் ஆராயாது இப் பத்துப்பாட்டடிகள் மேற்கரைவளமும் கழிமுகத்துறைநலமும் விளக்குகின்றன என்று மயங்கினாருமுளர். செய்யுளே சிறிதுங்கலவாது கூறப்பட்ட இவ்வடிகள் கழிமுகத்துறைநலம் விளக்குகின்றன என்று அவர்கொண்டது "கொழுமீன்" என்பதுபற்றியும் "வருபுனல்" என் பதுபற்றியும் ஆம் என்று கருதுகின்றேன். அவர்,

"செற்றுநிலைமுனைஇயசெங்கட்காரா
னூர்மடிகங்குலினோன்றளைபரிந்து
கூர்முள்வேலிகோட்டினீக்கி
நீர்முதிர்பழனத்துமீனுடனிரிய
வங்கூம்புவள்ளைமயக்கித்தாமரை
வண்டூதுபனிமலராருமூர" (அகப்-சக)

எனவரும் மருதத்திணைப்பாட்டடிகளையும், வருபுனல் என்பது கடலை யுணர்த்தாது யாற்றையேயுணர்த்துமென்பதனையும் அறியாராவர். "ஆறுமருதம்" என்பதனை இக்காரணத்தாலும் அகப்பாட்டு மருதமாதல் றெள்ளிது. ஈண்டு "வருபுனல்" என்பதனைக் கடலென்று மயங்கியாங்கு

"பேரிசைவஞ்சிமூதூர்ப்புறத்துத்
தாழ்நீர்வேலித்தண்மலர்ப்பூம்பொழில்"

என்னுஞ் சிலப்பதிகாரத்தும் "தாழ்நீர்வேலி" என்பது கடலென்று நிசைத்தலும் அப்பிறர்களுண்டு. தாழ்நீர்வேலியென்பது ஈண்டு எயில் சூழ்கிடங்கு என்பதனை அவரறியாரென்க. "தாழ்நீர்வேலித்தலைச்செங் கானத்து" (சிலப்-அடைக்கல) என்புழி நீர்வேலி—கிடங்குமாம். என்ற

அடியார்க்குநல்லாருரைத்ததனைநோக்கிக்கொள்க. தாழ்நீர் தங்கிய நீராதலிற் பொய்கை, குளம் என்பனவுமாம். பிறர் "தாழ்நீர்முத்தும்" (சிலப்-கால்கோட்) என்புழித் தாழ்நீரென்பதனைக் கடலென்பதற்குக் காட்டினார். ஆண்டு அரும்பதவுரையாசிரியர் தாழ்நீர்-தங்கியநீர்மை என்று பொருள்செய்ததனை அவர் கண்டிலராவர். இன்னும் அப்பிறர்,

"யாங்கணுங்,கறைசெழுநல்லூர்க்கறைவீடுசெய்ம்மென,
வழும்பில்வேளோடாயக்கணக்கரை
முழங்குநீர்வேலிமூதூரேவி"

என்புழி மூதூர் வஞ்சியெனமயங்கினார். ஆண்டு யாங்கணுங்கறைவீடு செய்ம்மெனஏவியென்று கூறியதுபற்றி அரும்பதவுரையாசிரியர் "மூதூர்களிலே இப்படிச்செய்யுமென்று ஏவி யென்க" என வுரைத்த தனைக்காணாராவர். மற்றும், அவர் "பெருந்துறை" என்பது கடற் றுறையேயாகுமென்றுபிடிப்பர்வேர். அவர் சிலப்பதிகாரத்துப் புறஞ் சேரியிறுத்தகாதைக்கண்,

"வையையென்றபொய்யாக்குலக்கொடி
புனல்யாறன்றிதுபூம்புனல்யாறெனை
அனநடைமாதருமையனுந்தொழுது
பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியு
மரிமுகவம்பியுமருந்துறையியக்கும்
பெருந்துறைமருங்கிற்பெயராதாங்கண்"

என வையையாற்றுக்குப் பெருந்துறையுடைமைகூறப்படுதலையும், பெருங்கதையுட் புனற்பாற்பட்டதன்கண்,

"மணல்செழுபெருந்துறைமயங்குபுகுழீஇ
விரிநீர்ப்பொய்கையுள்விளையாட்டுவிரும்பி"

எனப் பொய்கைக்குப் பெருந்துறைகூறப்படுதலையும் அறியாராவர். மற்றுப்பிறர் "தண்கடற்படப்பைநாடு" என்பதுமுதலாகக் காட்டுவன வெல்லாம் சேரர்குடநாடு, குட்டநாடுகளைப்புணர்த்துவனவல்லது வஞ்சி கடற்றுறைப்பட்டினமென்று அவை புணர்த்தாவாதல் நன்குநோக்கிக் கொள்க. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் செங்குட்டுவன்காலத்தே மேல்கடற்பக்கத்துள்ள நறவு என்னும் ஊரிலிருந்ததுபற்றி அவனா ருள்ளநிலத்தைக் "கடல்சேர்கானற்குடபுலம்"என்று பதிற்றுப்பத்துள்

ஆரம்பத்திற் சான்றோர் கூறினர் என்று முன்னரோரிடத்துரைத்தேன். பதிற்றுப்பத்து கூ-ஆம்பாட்டில், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனிருந்த கடற்றுறையூராகிய நறவு என்னும் ஊரே அருஅயானர் உடைத்தென்று இடையறாத கடல்வருவாய் முதலாய செல்வங்களால் விசேடிக்கப்பட்டிருக்கவும் அதனையாராயாது மருசியென்று வேறு கூறுவாருமுளர்.

இனி அப்பிறர் கருவூர்த்தேவாரத்து ஞானசம்பந்தசுவாமிகள் ஆன்பொருநையைக் கூறுமையால் கருவூர்ப்பக்கத்து ஆன்பொருநை அக்காலத்து ஓடியதாகாதென்று துணிந்தார். அவர், உறையூராகிய திருமுக்கீச்சரத்தை ஞானசம்பந்தசுவாமிகள்பாடிய தேவாரத்துக் காவிரிகூறப்படாமையான் உறையூர்ப்பக்கத்தும் காவிரி யக்காலத்து ஓடியதாகாதென்று துணிவர்போலும். மதுரைத்தேவாரத்து வையை கூறப்படாமையான் மதுரை வையையையுடையதாகாதென்று துணியுமாரேபோலும் அவர் நினையார். மற்றவர், கருவூர்க்குச் சுந்தரமூர்த்திநாயனார்தேவாரம் இன்மையைப்பற்றிக் கருவூர் தலைமையாகிய நகரமாகாதென்று துணிந்தார். அவர், பாண்டியர்தலைநகராகிய மதுரைக்கும் சோழர்தலைநகராகிய உறையூர்க்கும் அந்நாயனார் தேவாரப் பதிகமில்லாமையை அறியார். இன்னும் அவர், "திருமாவியனகர்க் கருவூர்முன்றுறை" (அகம் - ௯௩) என்புழி முன்றுறை கடற்றுறை யென்றுகொண்டு "இத்தகையவாணிபத்துறைமுகமே முன்றுறையாகும்" என்று மனதுணிந்துரைப்பர். அவர், சிலப்பதிகாரத்து "முதுநீர்க்காவிரி முன்றுறை" எனவருதலையும்; அகப்பாட்டின்கண்,

> "துஞ்சா முழவிற்கோவற்கோமா
> னெடுந்தேர்க்காரிகொடுங்கான் முன்றுறைப்
> பெண்ணையம்பேரியாற்று நுண்ணறல்கடுக்கும்" (அகம்-௩௫)

எனவருதலுங்காணாராவர். பின்னும் அவர் "கலிகெழுவஞ்சி" எனச் சிலப்பதிகாரத்துவருதல்பற்றி வஞ்சி கடலுடைத்தென மயங்குவர். அவர் சிலப்பதிகார வரந்தருகாதைக்கண் மதுரையினைக் "கலிகெழுகூடல்" எனக் கூறியிருத்தலைக்காணாராவர்.

இன்னும் அப்பிறர், சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்தகாதைக் கண் புகார்நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தை வருணித்தவும், மணி

மாக்கள் அலைவாய்க்கரையிருப்பும், பட்டினப்பாக்கமும் என்னும் இவற்றைச் சித்தலைச்சாத்தனார் வஞ்சிக்குக்கூறாமையை அப்பிறர் தெரிந்திலராவர். இனி வஞ்சிவேந்தர் உம்பற்காடும் உடையராதலான் அவர்க்குப் புதுக்கோள்யானைகள் உண்டென்றும் சேரர்க்குரிய பழனிமலை "அறுகோட்டியானைப்பொதினி" (அகம்) எனக்கூறப்படுதலானும் அது கருவூர்வஞ்சிக்கு அதிக தூரமன்றாதலானும் கருவூரார்க்குப் புதுக்கோள்யானையுண்டாகத் தடையில்லையென்க. அவற்றைப் பயிற்றுவோர் அவ்வேந்தர்நகரத்து உளராவரென்றும் தெரிந்துகொள்க. அரசிருக்குந்தலைநகராதலின் அதன்கண் யானை குதிரை இவற்றைப் பயிற்றுவோரிருப்பது இயல்பு என்க. புதுக்கோள்யானையுடன் பொற்றேர்ப்புரவியும் கூறியதுகாண்க. பெருங்கதையினும் "மதக்களியானை வடிக்கும்வட்டமுங், கடிசெல்புரவி முடுகும்வீதியும்" இராசகிரியத்துக் கூறினார். யானைகளுள்ளகாடுகள் கொடுங்கோளூருக்கு அதிக தூரமாக வுள்ளனவாதலும் அப்பிறர் தெரிந்துகொள்வாராகுக. கொடுங்கோளூர் மலையேயில்லாத பெருமணலுலகத்தாகமென்பதும் அவர் தெரிக.

மற்று அடியார்க்குநல்லார் "குன்றக்குறவரொருங்குடன்கூடி" எனவருஞ் சிலப்பதிகாரப்பதிகத்துக் "குன்றம் கொடுங்கோளூர்க்கயல தாகியசெங்குன்றென்னும்மலை" என்றுரைத்தாராலெனிற் கூறுவேன்- கண்ணகி கணவனையிழந்தபின்,

"வாரொலிகூந்தனின்மணமகன் றன்னை
ஈரேழ்நாளகத்தெல்லினீங்கி
வானோர்தங்கள்வடிவினல்லெ
ஈனோர்வடிவிற்காண்டலில்லென
மதுரைமாதெய்வமாபத்தினிக்கு
விதிமுறைசொல்லியழல்வீடுகொண்டபின்
கருத்துறுகணவற்கண்டபினல்லெ
திருத்தலுமில்லேனிற்றலுமிலனெனக்
கொற்றவைவாயிற்பொற்றொடிதகர்த்துக்
கீழ்த்திசைவாயிற்கணவனொடுபுகுந்தேன்
மேற்றிசைவாயில்வறியேன்பெயர்கென
விரவும்பகலுமயங்கினள்கையற்
றுரவுநீர்வையையொருகரைக்கொண்டாங்

கவலைமென்ஞளவளித்திழிதனின்
மிசையமென்ஞன்றிசைவைத்தேறலிற்
கடல்வயிறுகிழித்துமலைநெஞ்சுபிளந்தாங்
கவுணரைக்கடந்தசுடரிலைநெடுவே
ளெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யான்"

எனக்கூறுதலான் மதுரைமேற்றிசைவாயிலிற்பெயர்ந்து வையையை ஒருகரைக்கொண்டு பன்னாட்கழிந்தும் மேட்டடிவிரைந்தும்போய் நெடுவேள்குன்றத்தேறி வேங்கையின்கீழ்த்தங்கினளென்று அறியலாகும். இவள்தங்கிய இடம்,

"தன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
னின்னாட்டகவயினடந்தனணங்கை"

என்று மேற்செங்குட்டுவற்குச் சாத்தனார் கூறுதலான் சேரனாடாத னன்குணரப்படும். இதன்கண் நெடுவேள்குன்றம் என்றதல்லாது செங்குன்று என்று கூறப்படாமைகண்டுகொள்க. வையைநதி வரிசைநாட்டுமலையிலும் பழனிமலையாகிய வராகமலையிலும் உற்பத்தியாகும் உபநதிகளின்பெருக்காலொழுகுகின்றபேராறுதல்கீழ்க்குறித்தகுறிப்பாலுணரலாம்.* கண்ணகி வையையொருகரைக்கொண்டுபுக்காள் என்றலால் அவ்வையையினொருபாகம் உற்பத்தியாகின்ற வரிசைநாட்டுமலைக்கேனும், அன்றி அவ்வையையின்மற்றொருபாகம் உற்பத்தியாகின்ற பழனிமலைக்கேனுஞ்சென்றாளென்றுதான் கொள்ளத்தகும். வரிசைநாட்டுமலை நெடுவேள்குன்றமாகாமையானும், பாண்டிநாட்டுமலையேயாதலானும் இவள் சேரனாட்டுநெடுவேள்குன்றமேறினாள் என்றதற்குமாறாக அதனைத்துணிதல்கூடாதாகும். இவள் நெடுவேள்

* The centre is included in the main river system—that of the Vaigai and its tributaries. These latter all rise in the Palni hills of the Varushanad and Andipatti range, and join the Vaigai in the valley which lies between the two. Thereafter the river receives no tributaries of any importance and flows South-eastwards past Madura town into the Bay of Bengal not far from Ramnad. (Madras District Gazetteers, Madura Volume I Page 11)

குன்றம் வருதற்குமுன் பள்ளத்திழிந்தும் மேட்டிலேறியுஞ்சென்றாள் என்றுகூறியதல்லது பெருமலையொன்றையுமேறினாள் என்றுகூறாமையுங்காண்க. கொடுங்கோளூர்க்கு அயலதாகப் பெருமலையொன்றும் இல்லாமை நன்குகேட்டறிந்துகொள்க. கொடுங்கோளூர்க்கு நெடுந்தூரத்தே செங்குன்றூர் எனப்பெயரியதோரூருள்ளது. அதன்பக்கத்ததாகியதோர்குன்று செங்குன்றாகுமேனும் நெடுவேள்கோயில்கொண்ட குன்றாகாமை கேட்டறிந்துகொள்க. அன்றியும் அக்குன்றுக்குப் போதற்குமுன் இடையே பொதியமலைத்தொடர்பலவற்றையும் பேர்யாற்றையுங்கடத்தல் இன்றியமையாததாகும். வையையொருகரைக்கொண்டு என்றுகூறியதல்லது வேறுநதிகளைக்கடந்ததையேனும் பாண்டியர் பொதியத்தைக்கடந்ததையேனுங்கூறாமை நன்குணர்ந்துகொள்க. வாழ்த்துக்காதையினும் கண்ணகி உறவினர், மதுரைபோந்து பூசல் கேட்டு வையையொருவழிக்கொண்டு மாமலையின்மீமிசையேறினார் என்றேகூறியிருத்தலையுங்காண்க. மதுரையைவிட்டு வையையொருவழிக்கொண்டால், தென்மேற்றிலுள்ள வரிசைநாட்டுமலைக்கேனும் வடமேற்றிலுள்ள பழனிமலைக்கேனும் ஒருவர் எய்தலாகும். வரிசைநாட்டுமலை நெடுவேள்குன்றமாகாமையால் கண்ணகியேறியது பழனிமலையென்றே எளிதிற்றுணியலாகும். பழனிமலை வராககிரித்தொடர் என்பதும், அது முருகக்கடவுள்வரைப்பு என்பதும் பழனித்தலபுராணத்தாலுணர்ந்துகொள்க. சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் கண்ணகி புக்கது சேரநாட்டுநெடுவேள்குன்றமென்றுகொண்டு திருச்செங்கோட்டுமலை என்றுரைத்தார். அதுவும் வையையொருவழிக்கொண்டாலெய்தும் மலையாகாமையும் வையைக்குநெடுந்தூரத்ததாதலுங் கண்டுகொள்க. வையையின்வடகரையேபோகிப் பழனிமலையை அடைந்து அதன்மிசையேறி விற்பட்டிவழியாகப் பழனிமலைப்பகுதியாகிய நெடுவேள்குன்றத்தைக் கண்ணகி எய்தினாள் என்பதே நூலொடு பொருந்தக்கூறுவதாகும். மேற்பழனிமலையின்கண் கீழ்ப்பழனிசெல்லுதற்கு ஐந்துநெறிகளுள்ளனவாதல் நெல்ஸன்துரையவர்கள் எழுதிய மதுரை மான்யூவிற்காண்க. "முருகனற்போர்நெடுவேளாவிபொதினி" என அகநானூற்றினும் இம்மலையையே கூறுதல்காண்க. மற்றுச் செங்குட்டுவன் மஞ்சுசூழ்மலைகாண்குவமென்று பெருந்திரளுடன் போந்து பேரியாற்றங்கரையெக்கரிற்றங்கியிருந்த அமயத்தன்றே குன்றக்குறவர் அவ்வேந்தன்பாலிக்கண்ணகிவரலாறு சொற்றது.

பழனிமலையினிகழ்ந்தகண்ணகிசெய்தி பேரியாற்றங்கரைமலைப்பக்கத்துணரலாவதெங்ஙனமெனின், பேரியாற்றங்கரைமலை முதலாகப் பழனிமலையிறுதியாகவுள்ளது ஒரேமலைத்தொடராதலான் அம்மலைவாழ்குறவர்பலரும் ஒருவரொருவர்க்குக் கூறுதல்காரணமாக இச்செய்தி மலையினெடுந்தூரம் செல்லத்தக்கதேயாமென் றுணர்க. சிலப்பதிகாரத்தும் "குன்றக்குறவரொருங்குடன் கூடி"ச் சொற்றாகவென் றிருத்தலான் இக்குறவர் பலமலைத்தவர்கள் என்பதும், இவர்களெல்லாம் ஒருங்கேசேரத் திரண்டுபோய்ச் சொற்றாரென்பதும் உணரக்கிடத்தல்காண்க. அடியார்க்குநல்லார் கூறியவாறு நோக்கினும் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலையிலுள்ள குறவர் கண்ணகிசெய்தியைத் தம் குன்றுக்கு அயலதாகிய கொடுங்கோளூரி லரசனுள்ளபோது சென்று கூறாது அவன் பேரியாற்றங்கரைப்பக்கத்துத் அருசமுழவினருவியொலிக்குமஞ்சுசூழ்சோலைமலைகாணச்சென்றசமயத்து அங்குத் தாமுஞ்சென்றுகூறினரென்றன்றேகொள்ளவேண்டியிருக்கின்றது. கொடுங்கோளூர்க்கு அயலதாகியகுன்றக்குறவர் நெடுந்தூரஞ்சென்று பேரியாற்றங்கரைமஞ்சுசூழ்சோலைமலையிற்றங்கிய செங்குட்டுவற்குக் கண்ணகிசெய்திகூறினரென்றுகொள்ளின் பழனிமலைக்குறவருஞ் செங்குட்டுவற்குப் பேரியாற்றங்கரையிற்சென்றுகூறினரென்றுகொள்ளலாகுமென்க. கொடுங்கோளூர்க்கு மஞ்சுசூழ்சோலைமலை நெடுந்தூரத்ததேயாமென்பது நன்கறிந்துகொள்க. இனி "ஏரகம் என்பது மலைநாட்டகத்தொருதிருப்பதி" எனத் திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியர்கூறுதலான் அது செங்குன்றென்னும் மலையாகுமெனின், குன்றக்குரவையுள், "செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும்" எனச் செங்குன்றை ஏரகத்தின் வேறாக உரைத்தாராதலான் அது செங்குன்றன்மையுணர்க. நச்சினார்க்கினியர் ஏரகத்தை மலையாகவேகூறார். அவர் "ஏரகமென்கின்றவூரிலே" என்றதனானும், 'மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்றதனானு மிதனையுணர்க. அடியார்க்குநல்லார் செங்குன்றினை நெடுவேள்குன்று என விளங்கவுரையாமையுங் காண்க. இவற்றாற் கண்ணகி வானுலகெய்தியநெடுவேள்குன்றம் பழனிமலையாகத் தெளிந்துகொள்க. இவ்வுண்மையுணராதார் வேறுவேறுகூறுவர். இனி ஒருசாரார்,

"கொற்றவேந்தன் கொடுங்கோற்றன்மை
யிற்றெனக்காட்டியிறைக்குரைப்பனள்போற்
றன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
ணின்னாட்டகவயினடைந்தனணங்கை"

என்னுமிடத்துப் பாண்டியன் கொடுங்கோற்றன்மையினைச் செங் குட்டுவற்குரைத்தற்பொருட்டுச் சேரநாட்டையடைந்தாளென்றுகருதினார். கண்ணகி நெடுவேள்குன்றமெய்தியது தன்கணவனைத் தேவவடிவிற் காண்டற்கென்பது கட்டுரைகாதையானன்கறிந்ததொன்று. மதுரைமா தெய்வம் சொல்லியதுகேட்டன்றோ கண்ணகி கணவனைக்காணப்புக்கது. அதனால் மதுரைமாதெய்வம் கணவனைக்காண்டற்குரிய இடத்தினையும் உரைத்ததேயாகும்; அங்ஙனமன்றாயின் இவள் சேரநாட்டுநெடுவேள் குன்றமெய்தவேண்டியதியாதுமில்லையென்க. இச்செய்தியைச் செங் குட்டுவற்குரைத்தசாத்தனார் கண்ணகி கணவனையிழந்து தனிமையிற் றன் சோணாட்டிக்குச் செல்லாளாயினளாய்ப் பாண்டியன் கொடுங்கோற் றன்மையை நினக்குரைப்பாளைப்போல நின்னாட்டகவயினடைந்தனள் என்று கூறினாரல்லது வேறன்று. இதன்கண் உரைப்பனள்போல் என்று தெளிவாகக்கூறியிருப்பவும் உரைக்கவேவந்தாள் என்று அப் பிறர்கொண்டார். அவள் சேரநாடெய்தியது மதுரைமாதெய்வஞ் சொற்றதுகொண்டு தன்கணவனைக்காண்டற்பொருட்டேயென்பது நன் றுணர்ந்துகொள்க. கண்ணகி தெய்வமாகி வானத்தில் ஓர் மின்வடிவாய்த் தோன்றித்,

"தென்னவன் றீதிலன் றேவர்கோன் றன்கோயி
னல்விருந்தாயினானவன் றன்மகள்"

எனவாழ்த்துக்காதையுட்கூறலானும், அவள் பாண்டியன்கொடுங்கோற் றன்மைகூறவந்தவளல்லளென்பதுணரப்படும். கட்டுரைகாதையிலும் மதுரைமாதெய்வம் பாண்டியன் குற்றமிலனாகவே கண்ணகிக்குத்தெளி வித்ததுகாண்க. இதனாற் கண்ணகி கொடுங்கோளூரைநோக்கிப் பாண் டியன் கொடுங்கோற்றன்மையை இறைக்குரைப்பான்சென்றுபுக்காள் என்று பிறர்கூறுவது பொருந்தாமையுணர்க. மற்றுச் சிலப்பதிகாரத்து, "அஞ்செஞ்சாயலருகாதணுகும், வஞ்சிமூதூர்மாநகர்மருங்கின்" என்று கூறினாராலெனிற் கூறுவேன். மேற் கட்டுரைகாதையில்,

"நெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யானென்றிரங்கி
எழுநாளிரட்டியெல்லைசென்றபின்
தொழுநாளிதுவெனத்தோன்றவாழ்த்திப்
பீடுகெழுமங்கைபெரும்பெயரோக்கி
வாடாமாமலர்மாரிபெய்தாங்
கமரர்க்கரசன்றமர்வந்தேத்தக்
கோநகர்பிழைத்தகோவலன்றன்னொடு
வானவூர்தியேறினண்மாதோ
கானமர்புரிகுழற்கண்ணகிதானென"

எனவருதலாற் கண்ணகி நெடுவேள்குன்றத்து வேங்கையின்கீழ்ப் பதினைந்துநாள் தங்கி அப்பாற் கோவலன்றன்னொடு வானவூர்தியேறினள் என்று தெளியலாகும். இதனை இவள் மக்கள்யாக்கையில் வஞ்சிமாநகர்க்குவாராமை நன்கறியப்படும். செங்குட்டுவன் குன்றக்குறவர் சொல்லைக்கேட்டுப் பின் சாத்தனார்தம்மாற் கண்ணகிவரலாறுணர்ந்து கண்ணகியைப் பத்தினிக்கடவுளாகப்பரசல்வேண்டுமென்று துணிந்தது நோக்கிக் கண்ணகி தெய்வயாக்கையில் வஞ்சிமாநகர்க்கு எய்தினாள் என்றே கொள்ளத்தக்கதாகும்.

தாய் கண்ணகியையும் தாதை கோவலனையும் கடவுளெழுதியபடி வங்காணும்வேட்கையான் மணிமேகலை "வஞ்சியுட்செல்வனென்று" மணிபல்லவத்தினின்றெழுதலானும், பின் கண்ணகிகோட்டம்புகுந்து வந்திய அவட்குக் கண்ணகி,

"நறைகமழ்கூந்தனங்கைநீயு
முறைமையினிந்தமூதூரகத்தே"

என வஞ்சியைச் சுட்டிக்கூறுதலானும் கண்ணகிகோயில் வஞ்சியின் கண்ணேயுளதாதல் தெளியப்படும். இதைப்பற்றி முன்னரே கூறினேன். வாழ்த்துக்காதையிற் கண்ணகி தனக்குக் கோட்டம்அமைத்துவழிபட்டுச்சிறப்பயர்ந்தசெங்குட்டுவற்குத் தன் கடவுணல்லணிகாட்டிக் கூறியவிடத்து,

"பூவாவஞ்சியுந்தருகுவனென்றோ" (௫௨)

என்புழி, அவர், "பூவாவஞ்சியென்றது கருவூர்க்குவெளிப்படை" யென்றார். அதன்கண்,

"மாண்வினைநெடுந்தேர்வானவன்றொலைய
வாடாவஞ்சிவாட்டுநின்" (௫௧)

என்புழி அவர், "மாட்சிமைப்பட்டதொழில்பொருந்திய நெடியதேரையுடைய சேரனழிய அவனதுஅழிவில்லாதகருவூரை அழிக்குநினது" என்றார்.

திவாகரநிகண்டுநூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.

பிங்கலந்தை நூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.

கச்சியப்பமுனிவர், "கருவூரெனத்தக்கதுவானடுத்தெழும்வஞ்சி" எனப் பேரூர்ப்புராணத்துட் கூறினார். இக் கருவூரென்னும்பெயரும் வஞ்சியென்னும்பெயரும் சங்கநூல்வழக்கேயாமென்பது "கோதைதிருமாவியனகர்க் கருவூர்" எனவும், "ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்வஞ்சி" எனவும் வருதலா னுணரலாமென்று முன்னரே காட்டினேன். இவையெல்லாம் அப்பிறர்தெரியார்போலும். "வஞ்சிபசுபதியாயினார், பானநஞ்சினார்பாழிமாணிலையாயிற்றே" என்று பேரூர்ப்புராணத்து வருதலான் வஞ்சிக்கண் ஆனிலைக்கோயி லுண்மை புலனாகும்.

இனி இவ்வஞ்சி ஆன்பொருந்தத்தின்கரையி லுள்ளதென்பது,

"தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (புறம்-௧௧)

என்புழிப் புறப்பாட்டுரையாசிரியர் "ஆன்பொருந்தத்தினீரின்கட் பாய்ந்துவிளையாடும் வானைமுட்டியபுகழினையும் வென்றியையுமுடைய கருவூர்" எனவுரைத்ததனான் உணரலாம். ஆன்பொருநை, பொருநை என்பன ஆன்பொருந்தத்தின்பெயரென்பது மேற்காட்டிய ௧௧-ஆம் புறப்பாட்டுரையானும், "தண்ணான்பொருநை" (புறம்-௫௬) என்பதற்குப் புறப்பாட்டுரைகாரர் குளிர்ந்த ஆன்பொருந்தம் என்றுரைத்ததனானும் அறியலாம். இவ்வான்பொருந்தநதிக்கு ஆனி, வானி என்பனவும்

பெயரென்பது திவாகரத்து, "ஆனி வானியான் பொருந்த மாகும்" எனவும், பிங்கலந்தையில்,

> "ஆனிவானியான்பொருநைதண்பொருநை
> ஆதநதியான்பொருந்தமாகும்"

எனவும் வருதலா னறிக. இவ்வான்பொருந்தமாகிய வானியாறு கொங்குநாட்டின்கண்ணதென்பது "கொங்கின்வானியாற்றில்" எனத் தேசிகப் பிரபந்தத்துவருதலானறிக. இக்கொங்குநாட்டுள்ள ஆனி, பொருநை, ஆன்பொருநை, வானி, ஆன்பொருந்தம் என்னும் யாறு காவிரியுடன்கலப்பதாகுமென்பது, பதிற்றுப்பத்தின், "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு, மூன்றுடன் கூடிய கூடல்" என்பதற்குப் பதிற்றுப்பத்துரைகாரர், "காவிரியையும் ஆன்பொருந்தமுங் குடவனென்றாற் போல்வதோர்யாறும் கூடியகூடல்" எனவுரைத்ததனாலும் பழனிப் புராணத்தாலும் அறியப்பட்டது. இவற்றாற் கொங்குநாட்டில் வானியென்னும்பெயரையுடையதும் காவிரியுடன்கலப்பதுமாகிய ஆன்பொருந்தத்தின்கரையிலே சேரன் அழியாதகருவூருண்மை நன்குபுலனாகும்: இது பின்னுமோராற்றானுந் துணியப்படும்.

இக்கருவூர் "வஞ்சிமுற்றம் வயக்களனாகக், கொண்டனைபெருமகுடபுலத்தடக்கி" என்னும் புறப்பாட்டாற் குடபுலத்ததென்று தெளியலாம். இதனால் இதனைக் குடபுலவஞ்சியென்ப. குடபுலம் கொங்குநாடாகுமென்பது, சேக்கிழார் "சென்றுசென்றகுடபுலத்து" எனவும், "கொங்கிற்குடபுலஞ்சென் றணைந்தார்" எனவும், "அப்பாலைக்குடபுலத்தில்" எனவும், "செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி ............அந்நாடகன்று" எனவும், "குடபுலத்துக்கோமன்னர்திறை காணக்............கருவூர்சென்றணைந்தார்" எனவும் கூறியவாற்றான் எளிதிலறியலாம். குடபுலமும் கொங்கும் ஒன்றாதலானன்றே "குடபுலங்காவலர்மருமான்" என்றும், "கொங்கர்கோன்" என்றும், சேரன் வழங்கப்பட்டானெனவறிக. "சேரர்கொங்கு" எனவும், "கோன்தநனியாண்டதொருகொங்கு" எனவும், "செங்கதிர்மணிமுடிச்சேரலன் திகழ்கொங்கு" எனவும், "கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழுபதியும்" எனவும் வருதலாலும் இக்கொங்காகியகுடபுலம் சேரநாடாதல் தெளியப்படும். இவற்றாற் சேரர்குடபுலமே கொங்காதல் துணியப்படும்.

இதனாற் குடபுலவஞ்சி கொங்குவஞ்சியாத லெளிதிலறியலாம். கொங்குவஞ்சி "கருவூரெனத்தக்கது வானடுத்தெழும்வஞ்சி" என்பதனாற் கொங்கிற்கருவூராதல் துணியப்படுதல்காண்க. இக்கருவூரையே "வஞ்சித்தலம்" எனவும், "வஞ்சியாரணியம்" எனவும்வழங்குதலை முன்னரேகாட்டினேன். இக்கருவூர் குடபுலத்திருத்தல்பற்றியே "குடகிற்கருவூர்" எனக்கூறப்படும் என்பதும் முன்னருணர்த்தப்பட்டது. "குடகிற்கருவூர்" என்று வழங்கின அருணகிரிநாதர், இவ்வூரையே பசுபதிகர்ப்பபுரி என்றும் வஞ்சியென்றும் வழங்கினாரென்பது கற்றாரறிவர். "வஞ்சி குடக்கினிற்கோமதயுமாங்கே" (அழகர்கலம்பகம்) என்றதுமிக்கருத்தே பற்றியதாம். குடகிற்கருவூரும் குடக்கினில்வஞ்சியும் ஒன்றாதல் தெள்ளிது. சேக்கிழார் கொங்குநாட்டையே குடபுலமென்றுகூறியதுபற்றிக் குடபுலவஞ்சி கொங்குவஞ்சியென்பது தெளியப்பட்டதாகும். கொடுங்கோளூர் கடன்மலைநாட்டுமூதூராதலல்லது குடபுலவஞ்சியாகாமை யுணர்ந்துகொள்க.

இனிச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் சேரர் கருவூர்முற்றியிருந்தபோது அவனை ஆலத்தூர்கிழார், மாறோகத்து நப்பசலையார்முதலாய நல்லிசைப்புலவர் பலர்பாடிய பாடல்கள் புறநானூற்றிலிருத்தலைக் கற்றாரறிவர். அவையெல்லாம் யான் முற்காட்டிய "இவன்யாரென்குவையாயின்" (௧௩) என்னும் புறப்பாட்டைப் போலச் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துச் சோழரால் எளிதில் முற்றலாம்படி அத்துணையணித்தாக அகநாட்டுள்ள தன்மையினை யுணர்த்துதல் நன்கறியலாம்: அப்பலபாடல்களிலொன்றேனும் அவ்வூர் கடலுடைத்தாகக்கூறாதுசேறலையும் நோக்கிக்கொள்க. சோழர், சேரர்பாற்செற்றங்கொண்டபோதெல்லாம் கருவூரைமுற்றுதலையும், கருவூரிற் சேரருடைய யானையையெறிதலையும், கருவூரையெறிதலையும் நூல்களாங்காங்குக்கூறுதலை யுற்றுநோக்கிற் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துள்ள தன்மையேபுலனாகும். சோழன், சேரன் கருவூரைவென்றுகொண்டகாலத்துச்சோழனை "கோழியெழில்வஞ்சியு மோங்குசெங்கோலினான்" (திருஞானசம்பந்தநாயனார் மூக்கீச்சரத் தேவாரம்) எனவும், "வஞ்சிமானதன்" (ஐயங்கொண்டார்பாடிய பரணி) "மாயனிகனெடுமால் வஞ்சியானீர்நாட்டார்மன்" (வீரசோழியம் மேற்கோள்) எனவும் நூல்கள்கூறுதலானும் இவ்வஞ்சியாகியகருவூர்

சோணாட்டையடுத்துள்ளதுமாகலானும், காவிரிபாயுந்தலைநீர்நாடு முதற் கடைநீர்நாடு ஈறாகச் சோழன் உடையனாயகாலத்துச் சோழனைப் பற்றியபாடல்களிற் 'புனல்நாடன்கொல்லி' எனக்கூறுதல்போலவே, "வஞ்சியாளீர்நாட்டார்மகன்" எனவும், "அறத்திறன், மகனைமுறைசெய் தான்மாவஞ்சியாட்டி, மகனை முறைசெய்தகண்." எனவுங் கூறப்பட்டன எனவுணர்க. பிற்காலத்துச் சேரர்கொல்லிமலை சோழர்க்கேயுரிய தாகிய தன்மைபோலச் சேரர் வஞ்சியும் சோழர்க்குரியதாகியதனையே இவை காட்டுதல் உணர்த்தற்கும். மேல்கடற்பக்கத்துள்ள தொண்டி, முசிரி, மாந்தை என்னும் ஊர்களை நோக்கவும் அப்பக்கத்துள்ளமலைகளை யேனும் சோழர்க்குரிமையாக்கக் கூறாமல் வஞ்சிநகரையும் கொல்லி மலையையுமே அவர்க்குரிமையாக்கக் கூறுதலான் அவை அவன்நாட்டுக்கு அணிமையாக இருத்தல்பற்றி அவனுடைமை எனக்கொள்ளப்பட் டனவென்பதாமென்று துணியத்தகும். மேல்கடற்பக்கத்து இவ்வஞ்சி யுள்ளதாயின் அக்கடற்பக்கத்துள்ள பிறவூர்களையும் சோழர்க்குரிமை கூறுவரென்றுணர்க. "வஞ்சியாளீர்நாட்டார்மகன்" "புனல்நாடன் கொல்லி" எனப் பிற்காலத்துவழங்கியனகொண்டு இவ்வஞ்சியும் கொல்லியும் காவிரிபாயுநிலத்தை அணிமையாகஇருத்தல்குறித்தா ரெனினும் அமையும். கொங்குநாட்டுக் காவிரிபாயும்பகுதியை அடுத்து இவையுண்மையால் பிற்காலத்துச் சோழர்க்குக் காவிரிபாயுந்தலைநீர் நாடுமுதலாக உரிமையாயிருந்தது, கொங்கும் காவிரிபாயுநில முதலாக எல்லாம் நீர்நாடாகவேகொண்டு வஞ்சியுங்கொல்லியும் நீர் நாட்டனவாகக்கூறினரென்பதேபொருந்தும். திருஞானசம்பந்த நாயனாரும், "சோழியவழிவஞ்சியும்" என்றது அவை அணிமையாதல் கருதியென்றுகொள்ளத்தகும். தலைநீர்நாடு என்பது பண்டை வழக்கே யாதலை, "உண்டுறை, மலையலரணியுந்தலைநீர்நாடன்" (ந.கூ0) எனச் சேரர்க்கு உறவினனாகிய அதியமானெடுமானஞ்சியை ஔவையார் பாடிய புறப்பாட்டானுணர்க. தலைநீர்நாடாதலால் உண்டுறை மலை யலரணிந்தது என்று கூறினரெனவறிக. விடுகாதழகியபெருமாள் சாஸனமொன்றில்,

"வஞ்சியர்குலபதியெழினிவகுத்தவியக்கரியக்கியரோ
டெஞ்சியவழிவுதிருத்தியெண்குணவிறைவனைமலைவைத்தான்
அஞ்சிதன்வழிவருமவன்முதலிகலதிகனலகனூரால்
விஞ்சையர்தகைஞயர்காவலன்விடுகாதழகியபெருமானே"

எனவருதலானும் இவ்வதியமானஞ்சி வஞ்சியர்குலத்தவனாத லுணரப்படும். இவ்வாற்றான் முற்காலத்தே தலைநீர்நாடும் இடைநீர்நாடும் சேரர்உறவினர்க்கும் சேரர்க்கும் உரிமையாதலுங் கடைநீர்நாடு சோழர்க்குரிமையாதலும் உய்த்துணரலாகும். பிற்காலத்து முழுநீர்நாடும் சோழர்க்குரிமையாகியசிறப்பாற் "புனலுடன்கொல்லி" எனவும், "வஞ்சியானீர்நாட்டார்மன்" எனவும் கூறத்தலைப்பட்டனரென எளிதிலுணரத்தகும். சேரர்கொல்லியையும் வஞ்சியையுமே பிற்காலத்துச் சோழர்க்குரிமையாக்கிக் கடைமலைநாட்டுப்பக்கத்துள்ள ஊர்கள் மலைகளை அச்சோழர்க்குரிமையாகப் பின்னூல்கள் கூறுமையான் அக்கடன் மலைநாட்டுத் தொண்டி, மாந்தை, முசிரி முதலியனவுள்ளபக்கத்து இக்கொல்லியும் வஞ்சியுமில்லாமை எளிதி னுய்த்துணரலாகும்: இறையனார்களவியலுரை மேற்கோட்பாடல்களில் அரிகேசரிபாண்டியன் சேரர்நாட்டைவென்றுகொண்டான் என்பதையுணர்த்தி வஞ்சி, கொல்லி, முசிரி, தொண்டி, மாந்தை, விழிஞம் முதலாகப்பலவற்றையும் அவற்குரிமையாக்கிக்கூறுதல்போல ஈண்டுச் சோழர்க்குப் பலவற்றையுங்கூறாமற் கொல்லியையும் வஞ்சியையுமேயுரிமையாக்குதலையுநோக்கிக்கொள்க.

இனிப் புறப்பொருள்வெண்பாமாலைப் பொதுவியற்படலத்துக்,

"குடையலர்காந்தட்டன்கொல்லிச்சுனைவாய்த்
தொடையவிழ்தண்குவளை சூடான்—புடைதிகழுந்
தேரதிரப்பொங்குந்திருந்துவேல்வானவன்
போரெதிரிற்போந்தையாம்பூ"

என்னும்பாடலுண்மை கற்றாரறிவர். இதன்கட் சேரன், தன்கொல்லிமலைச்சுனையிடத்துக்குவளைப்பூவைச்சூடான்; பூசல்தோற்றிற்பனந்தோடாம் அவன்சூடும்பூ என்றுகூறினார். இதனாற் சேரன்தன் கொல்லிமலைச்சுனையிடத்துப்பூத்த குவளையைச்சூடுதற்குரியநிலையில் அம்மலைக்கு அணித்தாகவதிதல் எளிதிலுணரத்தகும். கொல்லிமலைச்சுனைகளில்இவன் சூடற்காகியகுவளைகள் பலவுளவாகவும் அவற்றைச் சூடானாயினான் என்றது அச்சேரற்கு அஃதடையாளப்பூவாகாமையானென்றுணர்க. சேரன்வதியுநகர்க்கும் கொல்லிமலைக்கும் இடமணித்தாதலில்லையாயின் இவ்வாறு பாடல்பிறவாதென் றுய்த்துணர்ந்து கொள்க. கொடுங்கோளூர்க்குக்கொல்லிக்கும் பன்னூறுநாழிகை

வரித்துரையாகுமென் றறியப்படுதலாற் சேரன் ஆண்டிருந்துகூட கிணைந்தாலும் கொல்லிச்சுனைக்குவளை கூடலாகாமையுநோக்கிக் கொள்க. போரெதிர்ந்தவனைக் கூடான்; போர்க்குத்தருகுவன். என் றுரைத்தவாற்றாற் போரெதிராதபோது சேரன் தன்கொல்லிச்சுனைக் குவளை சூடுவன் எனப்படுதல் பெறப்படுதல் காண்க. சேரரைக் கொல்லி நகர்க்கிறைவரென்பதூஉம் கொல்லியணிந்த மாயநகர்க்குத் தலைவராதல் கருதியென்றுணர்க. கொங்குநாட்டுத் திருப்பேரூர்த்தலத்து இறவாப் பனை என்பதொன் றுண்மை பேரூர்ப்புராணத்தாலறியலாம். இவ் விறவாமைச்சிறப்பானிப்பனையின்றோட்டைச் சேரர் அணியத்தலைப் பட்டனரென் றூகிக்கப்படும்.

இனிச் சோழன்செங்கணானும் சேரமான்கணைக்காலிரும் பொறையுந் திருப்போர்ப்புறத்துப் பொருதுழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன்செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடிவிட்டுக்கொண்ட களவழி நாற்பதின்கண்,

“ஒண்செங்குருதியுமிழ்ப்புனலுடன்
கோங்கரையட்டகளத்து”

எனவும்,

“புய்ந்துகால்போகிப்புலான்முகந்தவெண்குடை
பஞ்சிபெய்தாலமேபோன்றபுனலுடன்
வஞ்சிக்கோவட்டகளத்து”

எனவும்வருதலைக் கற்றாரறிவர். இதன்கட் சோழன்செங்கணான் கொங்குநாட்டாரையட்டான் என்றும், வஞ்சிநகர்க்கரசனையட்டான் என்றும் கூறுதல்கொண்டு வஞ்சியிலுள்ள அரசனாகிய சேரன் தன் வஞ்சியுள்ள கொங்குநாட்டுமறவர் துணையாகச் சோழனொடு பொருதானென்றும், அங்ஙனம் பொருதுழி அக்கொங்குநாட்டாரை யும் அக்கொங்குநாட்டுத்தலைநகராகிய வஞ்சிக்குக்கோவாகிய சேரனை யும் சோழன் அட்டானென்றும் உணரக்கிடத்தல் நன்குகாண்க. இவை நாடும் ஊரும் புலப்படுத்தல் தெற்றெனவிளங்கும். இவ் வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

“வெங்கைக்களவழிப்பாட்டுக்குவில்லவனைக்
கோங்கைத்தலைகளைந்தகோமானும்”

எனப் பாடுவாராயினரெனவுணர்க. சேரன் இக்கொங்குநாட்டிருந்து அரசுபுரிதலானன்றே "குடகொங்கன்" (பெரியதிருமொழி) எனச் சேரனையும், "கோலநாடு" (பழனித்தலபுராணம்) எனக் கொங்கு நாட்டையும் வழங்கினர். சேரநாட்டைச் சொல்லவேண்டியவிடத்துக் "குடகொங்கநாடு*" (பாரதம்) என்று மொழிவதும் இக்கருத்தைப்பற்றிய தாகுமென்று கொள்க. சேரனுக்கு வாழியாதன் என்றுகூறு மிடத்துக் "கொங்கைக்காவதியளித்த சேர வோசகுலதிலகா" எனப் பிறரும் பாடுதல்காண்க. இக்களவழிக்கண் நாடும் ஊரும் கூறியது போலவே,

> "கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே
> ... ... ... ...
> வஞ்சி முற்றம் வயக்களனாக
> ... ... ... ...
> கொண்டனை பெரும குடபுலத்து அதரி" (புறம்-௩௭௩)

என்னுமிடத்தும் நாடும் ஊரும் கூறினரென்று தெளியப்படுதல் காண்க. குடபுலம் கொங்குநாட்டைச் சிறப்பாகவுணர்த்துமென்பதை முன்னரே தெளிவித்தேன்.

இனிச் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருதுவீழ்ந் தாரைக் கழாத்தலையார் பாடிய புறப்பாட்டுக்களில்,

> "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
> தாமாய்ந்தனரே குடைதுளங்கினவே
> ... ... ... ...
> "பெண்டிரும், பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
> மார்பகம் பொருந்தியாங்கமைந்தனரே" (௬௨)

எனவும்,

> "என்னாவது கொல்தானே கழனி
> யாம்பல் வள்ளித் தொடிக்கைமகளிர்
> பாசவல் முக்கித் தண்புனல் பாயும்
> யாணர் அறாஅ வைப்பிற்
> காமர் கிடக்கையவர் அகன்றலை நாடே" (௬௩)

எனவும் வருதலைக் கற்றறிவர். இவற்றாற் சேரர் சோழர் இருவரும் படையுடன் பொருதபோது இருவர் படையும் பட்டபின்னும் பெயராது சென்று இருவேந்தரும் பொருது அக்களத்தேயாய்ந்தனரென்றும், அவ்வரசர் பெண்டிரும் பச்சையிலைதின்னாராய்க் குளிர்ந்த நீரின்கண் மூழ்காராய் அவர்பாற்பத்தியுடைக்கூடி அக்களத்துள் கணவனோடு உடன் கிடந்தார் என்றும் கூறியிருத்தலுமன்றி இவ்விருவேந்தர்காட்டினை யும் வேறுவேறுவிசேடியாது ஒருபடியாகவே நீர்வளத்தான் விசேடித்து இனியிவர்காடு என்னவருத்தமுறுவதோதான் என்று இரங்குதலையுங் காணலாம். இப்போர்க்களத்து இருவேந்தர்பெண் டிரும் உடன்கிடந்தார் என்று கூறப்பட்டதனாலிவர் பொருதுமடிந்த விடம் இவ்விருவர் பெண்டிரும் வதியும் ராஜக்கிருகமுள்ள தலைநகர்க்கு அணித்தாயிற்றென்று துணியப்படும். அங்ஙனமன்றாயின் இவர் மடிந்ததுகேட்டுப் போந்து அவரவர் பெண்டிர் அவரவர்மார்பைத் தழீஇக்கிடத்தல் கூடாதென்க.

"குலமடமாதரொடுகலவிசைச்சேறலும்
பாசறைச்சேறலும்படுமெனமொழிப" (இ-வி-அகத்-அக)

என்பதனாற் பரத்தையரோடு பாசறைச்சேறலல்லது குலமகளிருடன் பாசறைச்சேறலில்லையென்பதும் உணர்ந்துகொள்க. அரசர் மடிந்த களத்தே அவர்மார்பைத்தழீஇத் தாரகபோஷகபோக்கியங்களைவிட்டு உடன்கிடத்தல் கூறியதனால் இவர் குலமகளிராதல் பெறப்படும். இதன்கட் "பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக்கொள்ளுதற் குரியோரொருவரின்றிக் கண்டார்க்கு அச்சம்வர உடனேமடிந்தது" எனக் கூறியுள்ளவாற்றாற் பாடிவீடு பாழ்பட்டவாறு முன்னரே பெறப் பட்டதாகும். தொல்காப்பியத்தும்,

"நீத்தகணவற்றீர்த்தவேலிற்
பேஎத்தமனைவியாஞ்சியானும்"

எனவும்,

"முலையுமுகனுஞ்சேர்த்திக்கொண்டோன்
றலையொடுமுடிந்தநிலையொடுதொகைஇ"

எனவும் வருவனவற்றால் இவ்வேந்தர் கணவரும், இப்பெண்டிர் அவர் மனைவியருமாதலெளிதெனவுணர்க. புறப்பொருள்வெண்பாமாலை யினும்,

"எங்கணவனெங்கணவனென் பாரிகல்வாடத்
தங்கணவன்றார் தம்முலைமுகப்ப—வெங்கணைசேர்
புண்ணுடைமார்பம்பொருகளத்துப்புல்லினார்
நுண்ணிடைப்பேரலகுலார்"

எனவருதலானும், அதற்கு மாகறலூர்க்கிழான் சாமுண்டிதேவநாயகன், "எம்முடைய கணவன் எம்முடைய கணவனென்றுசொல்லும் பரத்தையர்மாறுபாடுகேடத் தமது கொழுநன்மாலை தம்முலைமுகந்து கொள்ள வெய்ய அம்புபட்டபுண்ணினையுடையமார்பைப் போர்க்களத்துத்தழுவினார்; நுண்ணிய இடையினையும் பெரிய அல்குலினையுமுடையகுலமகளிர்" எனவுரைத்தலானும் இவ்வேந்தர்மார்பைத் தழுவிக்கிடந்தபெண்டிர் அவர்குலமகளிர் என்பதுணர்க.

"காய்கதிர்நெடுவேற்கணவனைக்காணிய
வாயிழைசேறலுமத்துறையாகும்"

"பகையைச்சீக்கும் ஒளிநெடுவேலினையுடைய கொழுநனைக்காண வேண்டி அவன்பட்டபோர்க்களத்துள் அழகிய ஆபரணத்தையுடைய மனையாள்போயினதும் அத்துறையேயாகும்" (புறப்-வெண்) என்பதனான் மனைவியர் போர்க்களம்போய் இறந்தகணவரைக் காண்டலுண்டென்றுணர்க. இவற்றாற் சேரர்சோழரிருவரும்பட்ட போர்க்களத்து அவர்மனைவியரே போய் அவர்மார்பைத்தழுவிக்கிடந்தார் என்று துணியப்பட்டதாகும். இச்செய்தி, சோழர் உறையூரையும் சேரர் அதனையடுத்த கருவூரையும் தலைநகராகவுடையரென்பதற்குப் பொருந்துவதல்லது மேல்கடற்பக்கத்துக் கொடுங்கோளூரைச் சேரர் தலைநகராகவுடையர் என்பதற்குச் சிறிதும்பொருந்தாமை யுய்த்துணர்ந்துகொள்க. முற்காட்டியமேற்கோளிற் சேரர்சோழரிருவர் நாட்டையும் ஒருபடியாகவருணித்ததும் இக்கருத்தையே வலியுறுத்தும். ஆண்டு இருவரும் ஒருநாடுடையார்போலவே கூறியிருத்தலை நன்குகண்டுகொள்க. இருவேந்தரும் காவிரிபாயுநிலவளமுடையராதலால் இங்ஙனங்கூறினாரெனவுணர்க. இவ்விருவேந்தரும் பொருத போஒர் என்னும் ஊர் சோழன்மறவனாகிய பழையனுடையது. காவிரி நாட்டுள்ளது; இதனை,

"வென்வே, லிழையணியானைச்சோழன்மறவன்
கழையளந்தறியாக்காவிரிப்படப்பைப்

புனன்மலிபுதவிற்போஒர்கிழவோன்
பழையனோக்கிய வேல்போல்" (அகம்-௩௨௬)

எனவருதலானுணர்க.

"கொற்றச்சோழர்கொங்கர்ப்பணீஇயர்
வெண்கோட்டியானைப்போஒர்கிழவோன்
பழையன் வேல்வாய்த்தன்ன" (நற்றிணை-௧0)

என்பதனாற் சோழர், பழையன்படைத்தலைமைபெற்றுக், கொங்கரோடுபொருதமை யுணரப்படும்.

இனிப் பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்தினால் இளஞ்சேரலிரும்பொறையென்னுஞ் சேரனிருந்தரசாண்டவூர் வஞ்சியென்பது கற்றோரறிவர். ஒன்பதாம்பத்தின்பதிகத்து

"வெருவருதானையொடுவெய்துறச்செய்துசென்
றிருபெருவேந்தரும்விச்சியும்வீழ
வருமிளைக்கல்லகத்தைந்தெயிலெறிந்து
பொத்தியாண்டபெருஞ்சோழனையும்
வித்தையாண்டவிளம்பழையன்மாறனையும்
வைத்தவஞ்சினம்வாய்ப்பவென்று
வஞ்சிமூதூர்த்தந்துபிறர்க்குதவி
மந்திரமரபிற்றெய்வம்பேணி
... ... ... ...
மன்னுயிர்காத்தமறுவில்செங்கோ
லின்னிசைமுரசினிளஞ்சேரலிரும்பொறை"

எனவருதலானறியப்படும். இவனைப்பாடிய முதற்பாட்டில்,

"வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணல்
... ... ... ...
காந்தளங்கண்ணிச்செழுங்குடிச்செல்வர்
கலிமகிழ்மேவலரிரவலர்க்கீயுஞ்
சுரும்பார்சோலைப்பெரும்பெயற்கொல்லிப்
பெருவாய்மலரொடுபசும்பிடிமகிழ்ந்து
மின்னுமிழ்ந்தன்னசுடரிழையாயத்துத்

தன்னிறங்கரந்தவண்டுபடுதுப்பி
ணொடுங்கீரோதியொண்ணுதலணிகொளக்
கொடுங்குழைக்கமர்த்தநோக்கினயவரப்
பெருந்தகைக்கமர்ந்தமென்சொற்றிருமுகத்து
மாணிழையரிவைகாணியவொருநாட்
பூண்கமாளநின்புரவிநெடுந்தேர்
முனைகைவிட்டுமுன்னிலைச்செல்லாது
தூவெதிர்ந்துபெறாஅத்தாவின்மள்ளரொடு
தொன்மருங்கறுத்தலஞ்சியரண்கொண்டு
துஞ்சாவேந்தருந்துஞ்சுக
விருந்துமாகநின்பெருந்தோட்கே"

எனவருதல் காணலாம். இது வேற்றுப்புலத்துச்சென்றுதங்கிய சேரனை அவன் மனைவிகாணும்படி தேர் புரவி பூண்பதாகவேண்டுமென்றுகூறியதாகும். உரைகாரரும், "அண்ணல்நின் அரிவைகாணிய நின்தேர் ஒருநாட் புரவிபூண்பதாகவேண்டும்; அதுதான் நின் அரிவைக்கே உடலாகவேண்டுவதில்லை; அதனானே துஞ்சாவேந்தருந் துஞ்சுவார்களாகவேண்டும்; அதுதான் நின் பெருந்தோட்கு விருந்து மாகவேண்டும் இவ்வாறு இரண்டொருகாரியமாக இதனைச்செய்க எனவினைமுடிவுசெய்க" எனவுரைத்தார். இதனாலிது வேற்றுப் புலத்துத்தங்கியசேரனை அவன் கற்புடைமனைவியுள்ள கோயிற்குச் செல்லுமாறு வேண்டிக்கொண்டதென்று நன்குதெளியலாம்: இதன் கண் வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணல் நின் மாணிழையரிவை யாகியமனைவி கொல்லிமலையிலுள்ள இருவாட்சிமலருடன் பச்சிலையை யும் விரும்பிச்சூடி அதனாலோதியும் நுதலும் அணிகொள அவள் காணுமாறு ஒருநாள் நின்புரவிநெடுந்தேர் பூண்பதாகவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது: இதனாலிவன்மனைவியுள்ள அந்தப்புரத்தினை யுடையகோயில் கொல்லிமலைக்கு அணித்தாதல் நன்குதுணியப்படும். அங்ஙனமல்லாக்காற் கொல்லிமலையிலுண்டாகும் இருவாட்சியையும் பச்சிலையையும் சேரன்மனைவி கோயிலிலிருந்துசூடி யணிகொள்ளு தல் இயலாதென்று தெளிந்துகொள்க. இது வேற்றுப்புலத்திறுத்த சேரனை அவன் வஞ்சிக்குத்திரும்புமாறுவேண்டியதன்றி வேறன்று. அவ்வஞ்சியிலுள்ளார் கொல்லிமலைப்பூவையும் தழையையும் புனைந் தணிகொளல்கூடியவாற்றான் வஞ்சிக்குக் கொல்லிமலையணித்தாதல்

இன்றியமையாததாகும். கொல்லிமலைப்பூவையுந் தழையையும் புனையக் கூடியநிலையில் அம்மலைக்கு அணித்தாகவுள்ள வஞ்சி கொங்கிற் கருவூரே யன்றிப் பிறர்கூறுங் கொடுங்கோளூரல்லாமை எல்லாரும் அறிவர். இப்பதிற்றுப்பத்து, மேல் யான்காட்டிய,

"குடையலர்காந்தட் டண்கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ்தண் குவளை சூடான்"

என்ற வெண்பாமாலைப் பாட்டொடு கருத்தொத்து வஞ்சி கொல்லிக்கு அடுத்துள்ளதென்பதனை யுபபத்தித் தெளிவித்தல் நன்குகண்டுகொள்க. இச்சேரனைக் கொங்கின்கணுள்ள "வானிநீரினுந் தீந்தண் சாயலன்" என்றதனையும், "காவிரிப்படப்பை நன்னாடன்ன ........ ஒண்டொடி கணவ" என்றதனையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. வானியும், காவிரியும் கொங்குநாட்டி லுண்மை முன்னரே காட்டினேன். இவ் வஞ்சி கொல்லிசூழ்நாட்டகத்துண்மையானே "வஞ்சிப்புறமதில்" எனவும் "வளவஞ்சி" எனவும் இறையனார்களவியலுரைமேற்கோள் களில் வந்தன என அறிந்துகொள்க. 'வஞ்சிவனம்' என்பதனோடு நோக்கின் 'வளவஞ்சி' என்பது கருவூராதல் நன்குதெளியப்படும்.

இனிச் சேரசோழபாண்டியர் மூவரும் ஒருவர்க்கொருவர் மகட் கொடைநேர்ந்து ஒருவர் தந்நாட்டுக்கொண்டாடும் விழவுக்கு மற்றவர் போய்வருதல் நூல்களிற் கேட்கப்படுதலானும் இவர்வாழ்ந்த தலைநகர் கள் போக்குவரத்திற் கெளியவாகவும் அணிமையாகவும் இருந்தன வென்று துணியலாகும். உறையூர்க்கு மதுரை எவ்வளவுதூரமோ அவ்வளவே மதுரைக்குங் கருவூர்க்குமென்பது நன்கறிந்துகொள்க. பாண்டியர் சோழர்பாலும் சேரர்பாலும் பெண்கொண்டிருந்தன ரென்பது, நின்றசீர்நெடுமாறநாயனார்பத்தினியாரை 'வளவர்கோன் பாவை' என்பதனானும், குலசேகரபாண்டியன் வஞ்சிவேந்தன்மகளை மணந்தானென்று சவுந்தரபாண்டியநூலுள் அந்தாரியப்பப்புலவர் கூறுதலானும் அறியப்படும். செங்குட்டுவனை "நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்றமகன்" எனப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப்பதிகம் கூறுதலானும்,

"மன்னன்கரிகால்வளவன்மகள்வஞ்சிக்கோன்
றன்னைப்புனல்கொள்ளத்தான்புனலின்பின்சென்று"

எனச் சிலப்பதிகாரங்கூறுதலானும் சேரர் சோழர்பாற் பெண்கோடலறியப்படும். குலோத்துங்கசோழனுலாவால் அவன் பாண்டியன் மகளைமணந்தானென்றுணரப்படும். கொங்குநாட்டவனான சேரன் தன்னையடுத்துள்ளதெய்வீகனுக்குப் பெண்கொடுத்த செய்தியை முன்னரேகாட்டினேன். மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகளிற்கூறிய செய்தி அகநானூறுமுதலியவற்றிற் பல்லிடத்துங்கூறிய ஆட்டனத்தி, ஆதிமந்திகதையென்பது கற்றோர்பலருமறிவர். கரிகால்வளவன்மகள் ஆதிமந்தி என்பவள். இவள் வஞ்சிக்கோனான அத்தியென்பவனை மணந்தவள். இவ்விருவரும் கரிகால்வளவனாற் கழார் முன்றுறையிற்கொண்டாடப்பட்ட காவிரிப்புதுப்புனல்விழவிற்குச் சென்று நீராடியபோது காவிரி ஆதிமந்திகணவனை வௌவியதாக அவள்பதைபதைத்து எங்குந்தேடிக்காணாது பின் காவிரி ஓடிற்றெல்லாம் ஓடி அலந்தழுதேங்காநிற்க, அவள்கற்புடைமைக்கும் அன்பிற்கும் இரங்கிக் கடலே அவள்கணவனை அவள்முன்னிறுத்திக்காட்ட அவனைத்தழீஇக்கொண்டு பொன்னங்கொடிபோலமீண்டாள் என்று நூல்கள்கூறும். இவ்வரியகதையைப்பற்றி நல்லிசைப்புலமை மெல்லியலார்வரலாற்றுள் முன்னரே எழுதினேன். காவிரிப்புதுப்புனல் விழவுக்குச் சேரநாட்டுள்ளமகளையும் மருகனையும் சோழர் அழைப்பித்தல் இக்கதையானறியப்படும். கரிகாலன் புதுப்புனல்விழவுகொண்டாடியவூராகிய கழார் சோணாட்டுமாயூரத்துக்கு அடுத்துள்ளது. இவ்வூரிற் புதுப்புனல்வருதலையறிந்துகொண்டாடப்படும் விழவுக்குச் சோணாட்டையடுத்த கருவூர்வஞ்சியார்வருதல் எளிதென்பது யான் கூறவேண்டுவதன்று. கொங்குநாட்டு, அத்திஎன்னும் பெயர்வழக்கு இன்றுங்கேட்கப்படுகின்றது. அந்நாட்டு அத்தியூர், அத்திபாளையம் என்னும் ஊர்களுமுண்டு.

இனித் தியாகராசலீலையென்னும்நூலில் மதுரை ஆலவாய்க் கடவுட்கு மிகுதியாகப் பசுக்கூட்டமிருந்ததென்றும், அப்பசுக்கூட்டத்தொருகன்று தப்பிப்போய்ச் சேரன்பசுக்கூட்டத்துக்கலந்து வளர்ந்ததென்றும், இக்கன்று கலந்ததைச் சேரன் தெரியானாயினனென்றும், பின் மதுரையினின்று வஞ்சியர்கோன்கோயில்புக்க ஓரந்தணனுக்குப் பலபசுக்களுடன் இக்கன்றினையுஞ் சேரன் நல்கினனென்றும், இக்கன்றினைப்பெற்ற அந்தணன் அதனைக் கூடலிற்கொடுபோயோர் பசுவாணிகனுக்கு விற்றனனென்றும், ஆலவாய்க்கடவுட்பணிபுரிவார்

இக்கன்றினைக்கண்டு தெளிந்து வந்தவாறறிந்து இக்கன்றினோடும் அவ்வாணிகனோடும் அவ்வந்தணனோடும் வஞ்சியுட் புக்குச் சேரன்பாற்சென்று இக்கன்று அவ்வாய்க்கடவுட்குரியது நீ எங்ஙனம் இவ்வந்தணற்கீந்தனையென்று சொற்றார் என்றும், சேரன் கடவுளுடையகன்று என்றொழுவத்து நல்கூடுமோ? அடையாளமுண்டோ? நம்பன்பொருள் கன்றிலுங்கொடிதாகும். யான் யாதொருவஞ்சமும் செய்தேனல்லேன் என்று சொற்றனென்றும், பின் மதுரையார் சேரனுடனும் இக்கன்றுடனும் தம்வழக்கைத்தீர்த்தற்பொருட்டுத் திருவாரூரடைந்தனரென்றும் கூறியிருத்தலைக் கற்றறிவார். இக்கதையானும் கொங்குக்கருவூரே சேரர்வஞ்சிமாநகராதல் எளிதிலுய்த்துணரலாகும். இரண்டுநாட்டுப்பசுக்கூட்டத்துக்கும் கலப்புக்கூறப்படுதற்கும், மதுரையார் வஞ்சிபுக்குச் சேரனுடன் திருவாரூர் சென்றார் என்று கூறியதற்கும் பொருந்த நோக்கக்கொள்க. இன்னுமோராற்றானும் இதனை விளக்குவல்.

இனிச் சேரசோழபாண்டியர் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையரென்பது பரிமேலழகர் முதலியநல்லாசிரியர்கொள்கையாகும். இப்போது மலையாளமென்று வழங்குகின்ற கடன்மலைநாடோ ஆதியிற் கடவுளாற்படைக்கப்பட்டதாகாது. படைப்புக்காலத்துக்கு எத்துணையோபின்பு இவ்வுலகமுழுதையும் காசிபர்க்குத் தானஞ்செய்த பரசுராமன் தானிருத்தற்கு நிலம்வேண்டித் தெய்வகிருபையாற் கடலை ஒதுங்குவித்து உண்டாக்கியதென்று புராணம் வல்லார்கூறுவர். இதனைச் சேக்கிழார் விறன்மிண்டநாயனார்புராணத்து,

"விரைசெய்நறும்பூந்தொடையிதழிவேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமாதவமுனிவன்பரசிராமன்பெறுநாடு
திரைசெய்கடலின்பெருவளனுந்திருந்துநிலனின்செழுவளனும்
வரையின்வளனுமுடன்பெருகிமல்குநாடுமலைநாடு"

எனக் கூறியவாற்றானு நன்றுதெளியப்படும். பரசிராமன் சமதக்கினி புதல்வனாதலான் அச் சமதக்கினிபுதல்வரான திரணதூமாக்கினியென்னும் இயற்பெயருடைய தொல்காப்பியனார்க்குடன்பிறந்தவனாவன். தொல்காப்பியனார் "வண்புகழ்மூவர்காக்குந்தண்பொழில்

வரைப்பு” என்று சூத்திரஞ்செய்தலானும், இம்மூவேந்தர் மாலையிளையுங்கூறுதலானும் தொல்காப்பியனார்க்குமுன்னை இம்மூவரும் இத்தமிழ்நாட்டு ஆட்சிபெற்றுநிலைபெறுதல் நன்குணரலாகும். வான்மீகராமாயணத்துள் இம்மூவேந்தர்நாடு கூறப்படுதலானிக் கருத்து வலியுறுதல்காண்க. தொல்காப்பியனார்க்குமுன்னை தமிழ் மூவேந்தர் நிலைபெறுதல் தெளிந்தவாற்றா லிம்மூவேந்தர் பரசுராமனுக்கு முன்னை அவரவர்தலைநகரில் நிலைபெறுதல் நன்குணரப்படும். பரசுராமற்குமுன்னை இம்மூவேந்தர் நிலைபேறுணர்ந்தவாற்றான் இவர் நிலைபெற்றதலைநகர் பரசுராமனா லிடையிலுண்டாக்கப்பட்ட கடன்மலை நாட்டில் இருப்பது அசம்பாவிதமாதல் எல்லாருங் கண்டுகொள்க. மேல்கடற்பக்கத்துத் தொண்டி, முசிரி, மாந்தை முதலிய பட்டினங்கள் சேரருடையனவாகக்கேட்கப்படுமாலெனின் அவையெல்லாம் பழைய சேரர் வஞ்சிக்குப்பின்னை உண்டாகிய பரசுராமக்ஷேத்திரத்துண்டாகிய நகரங்களென்க. இக்கருத்தானன்றே பழைய சேரர்கருவூர் வஞ்சியைப் பல்லிடத்தும் மூதூர் என்றுகூறுவதூஉம், அவ்வூர்ப் புராணம் அதனை ஆதிபுரம் என்றுரைப்பதூஉம் எனக்கொள்க. இது பௌராணிகமுறையான் ஆராயப்பட்டது. எஞ்ஞான்றும் சேரர்க்குரியகருவூர் கரன்கைப்பற்றியகாலத்துக் கரபுரம் எனவும், வீரசோழன் கைப்பற்றியகாலத்து வீரசோழபுரம் எனவும் பெயர் பெற்றதுணர்க. இராவணன் இத்தென்னாட்டை ஆண்டான் என்றற்கும் திரிசிரன் உறையூர்ப்புறத்தலைக்கொண்டான் என்றற்கும் இங்ஙனமே பொருந்தக்கொள்க. இராவணன்காலத்தும் இத்தமிழ்வேந்தருண்மை இராமாயணத்தானுணர்க. இப் பரசுராமன்பெறுநாட்டுச் செங்குன்றூர் விறன்மிண்டநாயனார் ஊர் என்று பெரியபுராணங் கூறுதலான் இது கொங்குநாட்டுச்சிவத்தலமாகிய கொடிமாடச்செங்குன்றூரின் வேறென்றுகொள்ளினும் அமையும்.

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சியே திருவஞ்சைக்களமென்றும், அஞ்சைக்களமென்று பிரித்துவழங்கியது தவறென்றும் வஞ்சைக்களமென்று வழங்கவேண்டுவதென்றும் தம்மனம்போனவாறுகூறித் தெய்வப்புலவர்களான பெரியோர்கள்பால் அபசாரப்படுவாருமுளர். அஞ்சைக்களமென்றேவழங்கிய பெரியோர்கள் திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், சேக்கிழார், கச்சியப்பமுனிவர் முதலிய பலராவர்.

இனிக் கொங்குநாடு சோணாட்டையடுத்துள்ளதென்பதனை முன்னரே காட்டினேன்: சோழர்க்குச் சிறந்தமலை நேரியென்பது பலருமறிவர். அம்மலை சோணாட்டின்கண்ணதேயாகும். செங்குட்டுவன் தன் மைத்துனச்சோழனொடு பகைத்த சோழர்குடிக்குரிய ஒன்பதின்மரைச் செருவென்றது உறையூர்க்குத் தெற்கின்கண்ணதாகிய நேரிவாயில் என்னும் ஊரின்கண் என்று சிலப்பதிகாரத்தாற்றெரிதலால் இம்மலையும் உறையூர்க்கு அணித்தாகுமென்று கொள்ளலாகும். இந் நேரிமலை களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரற்கும், செல்வக்கடுங்கோ வாழியாதற்கும் இடனாகப் பதிற்றுப்பத்துநூல்கூறும். இதனை நான்காம்பத்தில் "சீர்திகழ்சிலம்பினேரியோனே" (சுய) எனவும், "கல்லுயர் நேரிப்பொருநன்" (கூஎ) எனவும் வருதலான் அறிந்துகொள்க: இவற்றால் சோழர்க்குரிய நேரிமலையில் இரண்டுசேரர்கள்வதிந்தமை உணரலாம்: கொங்கர்கருவூர்ச்சேரர்கள் சோழரொடுபொருது அவர்க்குரிய நேரிமலையைவென்றியாற்கொண்டு ஆண்டுவதிந்தனரென்றே துணியலாகும். இதனாற் கொங்குடையசேரர்கள், தங்கொங்குநாட்டிற்குப் பக்கத்ததாய்ச் சோணாட்டிலுள்ள மலையைக்கைப்பற்றி அதன்கண் வதிந்தார்கள் என்றெளிதிலறியலாகும். பிறர் நினைக்கின்றவாறு கடன்மலைநாட்டுச் சேரர் தமக்குரியதல்லாத கொங்குநாட்டைக்கடந்து சோணாட்டு நேரிமலையில் வதிந்தார் என்பது பொருந்தாதாதல் உய்த்துணரத்தகும். இந்நேரிமலையிற் சேரர் இருந்தனரென்பது சேரர்க்குச் சோணாட்டுமலைவரை அரசாட்சி பண்டுநிலையினதென்பதை நன்கு காட்டுமென்க.

இனிப் பழையசேரர்வதிந்த குடபுலமாகிய கொங்குநாட்டைப் பற்றிச் சிலகூறுவல். சங்ககாலத்துவள்ளல்களுள் ஒருவனாகிய வையாவிக்கோப்பெரும்பேகன் ஆவியர்பெருமகனென்பது கற்றாரறிவர். ஆவியர் என்பார் வேள் ஆவியின் வழியினர். இவ்வேளாவியிருந்தது ஆவிநன்குடியாகும். இது கொங்குநாட்டுள்ளதென்பது, "சேரர் கொங்குவைகாவூர்நன்னாடதனிலாவிநன்குடி" (அருணகிரிநாதர்) என வருதலானறியப்பட்டது. இவ்வேளாவியின்வழியிலே சேரர் பெண்கொண்டாரென்பது "குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளாவிக்கோமான் றேவியீன்றமகன்" (பதிற். கூ-பதிகம்) என ஆடுகோட்பாட்டுச் சேரலாதனையும், "பொய்யில் செல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவியீன்றமகன்" (௸. அ-பதிகம்) எனப் பெருஞ்சேரலிரும்பொறையையும் கூறுமாற்றானறியலாம். வஞ்சியில்

"வேளாவிக்கோமாளிகை" (சிலப்-நடுகல்-கசுஅ) என்னும் பெயரான் ஓர் வாஸஸ்தானம் இருந்ததும் ஈண்டைக்கேற்ப நினைக்கத்தகும். இது சேரர்ஸம்பந்திமாளிகை என்பது பொருந்துவதாகும். கருவூர்க்கும் ஆவிநன்குடிக்கும் அதிகதூரமல்லாமையும் நெறியெளிமையு முணர்ந்துகொள்க.

இனிச் சேரவம்பிசனை அதிகமானெடுமானஞ்சிவழியின னாகிய அதிகனென்பவன் ஒருவன் குறும்பொறையூர் என்னும் மலையரணுடைய வூரிலிருந்தனனென்றும், அவன் புகழ்ச்சோழ நாயனார்க்குத் திறைகொடாதகாரணத்தா லவர்படையால்வெல்லப் பட்டானென்றும் பெரியபுராணத்தா லறியலாம்.

"கொடிமாமதில்சூழ் குறும்பொறையூர்
முடிநேரியனார்படைமுற்றியதே"

எனவருதலா னிதனையறிக. கருகூ-ஆம் அகப்பாட்டில்,

"நறும்பூஞ்சாரற்குறும்பொறைக்குணாஅது
வில்கெழுதடக்கைவெல்போர்வானவன்
மிஞிறுமூசுகவுளசிறுகண்யானைத்
தொடியுடைத்தடமருப்பொடியவூறிக்
கொடுமுடிகாக்குங்குரூஉக்கணெடுமதிற்
சேண்விளங்குசிறப்பினாமூர்"

எனவருதலான் இக்குறும்பொறை சேரன்பகைஞனாகிய கொடுமுடி யென்பவனுடைய ஆமூர்க்கு மேற்கணுள்ளது நன்குபுலனாகும். சேர வம்பிசியனாகிய அதிகற்கும் சேரர்க்கும் தாயபாகவிஷயமாகப் பகைமையுண்டாகிப் பெரும்போர்நிகழ்ந்தது பதிற்றுப்பத்தாலும் புறப்பாட்டாலும் அறியப்படும். ஔவையார் அதியமானெடுமா னஞ்சியைப்பாடிய புறப்பாட்டில்,

"கோடுயர்பிறங்குமலைகெழீஇய
நாடுடன்கொடுப்பவுங்கொள்ளாதோனே" (புறம் - உ௩உ)

எனவருதலான் இவன் தாயநாடுபற்றிச் சேரனோடு பகைமைபூண்டா னென்றுய்த்துணரப்படும். இவனுக்குக்கிழக்கே ஆமூர்க்கணிருந்த கொடுமுடி என்பவனும் இவனுடன்சேர்ந்து சேரனைப்பகைத்தனன் போலும். இவ்வாமூர் கொங்குநாட்டின்கண்ணேயுள்ளது. அதியனை

"உண்டுறை,மலையலரணியுந்தலைநீர்நாடன்" என்பதனால் அதியன் தலைநீர்நாடன் என்பது முன்னரே கூறினேன். கறையூரிற் பாண்டிக்கொடுமுடி என்னுங்கோயிலுள்ளது தேவாரத்தாலறியப்படும். அது இக்கொடுமுடியரசன் சார்ந்த மடையதாகும். சேரன்பகைவனாய்ப் பாண்டியற்குத்துணைவனாயகாரணத்தாற் பாண்டிக்கொடுமுடி எனப் பெயர்சிறந்தான்போலும்.

இனிப் பதிற்றுப்பத்து நான்காம்பத்தில்,

"வெண்டிரைமுந்நீர்வளைஇயவுலகத்து
வண்புகழ்நிறுத்தவகைசால்செல்வத்து
வண்டனனையைமன்னீயே" (௧௧)

என்பதனால் வண்டன் என்பானொருவன் சேரனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளான்: இவன் சேரனுக்கு உவமையாகக்கூறப்பட்டவாற்றானும், "வண்புகழ்நிறுத்தவகைசால்செல்வத்துவண்டன்" என்றதனானும் சேரரிற்சிறந்த முன்னோனென்று ஊகித்தலாகும். இவனிருந்தமலை வண்டமலை எனப்படுவது: இது கொங்குநாட்டுக் கருவூர்க்குத் தெற்கேயுள்ளது.

இனி ஆதன் என்பது, சேரர்க்குள் அதிகமாக வழங்கும்பெயர் என்பது, சேரலாதன், நெடுஞ்சேரலாதன், ஆதனவினி, செல்வக் கடுங்கோவாழியாதன், பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் எனவருதலான் அறியப்படும். எண்டுக்காட்டிய பலபெயர்க்கும் ஆதன் கூட்டத்தன் ஆவன். இவனிருந்தவூர் ஆதனூர் எனப்படும். இஃது இப்போது கொல்லிமலையை யடுத்துள்ளது. ௧௬௮-ம் அகப்பாட்டில்,

"பல்லான்குன்றிற்படுநிழற்சேர்ந்த
நல்லான்பரப்பிற்குழுமூராங்கண்
கொடைக்கடனென்றகோடாநெஞ்சி
னுதியனட்டில்போலவொலியெழுந்
தருவியார்க்கும்பெருவரைச்சிலம்பின்"

எனவருதலான் உதியஞ்சேரல் குழுமூரிலிருந்து பெருஞ்சோறு பயந்தது உணரப்படும். இக்குழுமூர் கொங்குநாட்டு ஆன்பொருநைக் கரையிலுள்ள குழுமம் என்று இப்போது வழங்குவதாகும். இக்குழுமூரை, நல்லான்பரப்பிற்குழுமூர் என்றலான் இதனிடத்துப் பசுமிகுதியாக இருந்தது நன்குணரப்படும். இப்பசுமிகுதி கொங்குநாட்டுக்கே

சிறந்தது. "கொங்க ராபரந்தன்ன" (௭௬) எனப் பதிற்றுப்பத்திற் கூறுதலானுணர்ந்துகொள்க. இக்குழுமம் கொங்குநாட்டுப்பழனி மலைக்கடுத்துள்ளதும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. வஞ்சியி லிருந்த சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சியசெல்வக்கடுங்கோவாழி யாதன்,

"குன்றகழ்களிறென்கோ
... ... ... ...
மன்றுநிறையுநிறையென்கோ
மனைக்களமரொடுகளமென்கோ
ஆங்கவை, கனவெனமருளவல்லேனாகி
னல்கியோனேநசைசான்றோன்றல்" (புறம் - ௩௮௭)

என்பதனாற் பசுநிரைகளை யூருடனுங் களிற்றுடனும் புலவர்க்கு நல்கி னனென்று கூறப்படுதலையுங்காண்க.

இவையெல்லாம், சேரர் கொங்குநாட்டுவதிந்திருந்தனரென்பதை நன்குவலியுறுத்துமென்றுணர்க. இனி, மாந்தரக்கொங்கேனாதி என இலக்கணங்களில் உதாரணமாக வழங்கும்பெயரும் இக்கொங்கு, மாந்தரனெனப்பெயரிய சேரனைச்சேர்ந்தது என்பதனையே வலியுறுத் தும்.

இனி நக்கீரனார் ௯௩-ஆம் அகப்பாட்டிற் றமிழ்மூவேந்தர் தலை நகரங்கள் மூன்றையும்,

"ஆரங்கண்ணியடுபோர்ச்சோழ
ரறங்கெழுநல்லவையுறந்தை"

எனவும்,

"அரண்பலகடந்தமுரண்கொடானை
வாடாவேம்பின்வழுதிகூடல்"

எனவும்,

"கடும்பகட்டியானைநெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்"

எனவுங் கூறியிருத்தலைக் கற்றூரறிவர். இதன்கட் சோழர்க்குச்சிறந்த புகாரும், பாண்டியர்க்குச்சிறந்தகொற்கையும் கடற்றுறைப்பட்டினங் களாகஇருக்கவும், அவற்றைக்கூறாமல் உள்நாட்டுச்சிறந்த தலைநகரங்க ளாகிய உறையூரையும் கூடலையுமே தாம் எடுத்துக்கொண்ட முறை மைக்கேற்பவே சேரர்க்குஞ் சிறந்த தொண்டி, முசிரி முதலிய கடற் றுறைப்பட்டினங்கள் இருக்கவும், அவற்றைக்கூறாது உள்நாட்டுச் சிறந்த தலைநகராகிய வஞ்சியையேகூறினாரென் றெளிதிலறியப்படும்.

சிறுபாணாற்றுப்படையினும் இம்மூன்றுமே தமிழ்மூவேந்தர்தலைநகரென அறியக்கூறியதுகாண்க. ஆண்டு, மதுரையும் வறிதே, வஞ்சியும் வறிதே, உறந்தையும் வறிதே என்றார். சூளாமணியினும் மதுரை, கரபுரம், உறந்தை என இம்மூன்றையுமேகூறினர். யாப்பருங்கலவிருத்தியிமேற்கோளினும்,

"ஆடனடைப்புரவிச்செம்பூட்சேஎய்
கூடலெனக்குயின்றனதோள்"

"மறந்தருதானைச்செங்கோற்கிள்ளி
யுறந்தையிற்சிறந்தன முலை"

"மஞ்சுவரைத்திணிதோட்பூழியர்மன்னவன்
வஞ்சியெனமலர்ந்தன கண்"

என இவ்வாறே இம்மூன்றுமே (செய்யுளியல்-தாழிசையுதாரணம்) வருதலான் இதனுண்மை யுணரப்படும்.

இனிக் கருவூர்ச்சேரமான்சாத்தன், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதன், கருவூர்க்கண்ணம்பாளனார், கருவூர் ஓதஞானி, கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார், கருவூர்கிழார், கருவூர்ப் பவுத்திரன், கருவூர்க்கோசனார், கருவூர்ப்பூதஞ்சாத்தனார்பெருங்கொற்றனார் என நல்லிசைப்புலவர் பலர் கருவூரினராகக்கூறப்படுதலைத் தொகைநூல்களுட்காணலாம். இப்புலவர்தொகை மதுரைப்புலவர் தொகைக்குச் சிறிதாயினும் உறையூர்ப்புலவர்தொகைக்குப் பெரிதென்பது தொகைநூல்களை நன்காராய்ந்தார் அறிவர். உறையூரின் மிக்குக் கருவூரிற்புலவர்கள் இருத்தற்குக்காரணம் அவ்வூர் உறையூரிற் பெரிதாதலானும், அது சேரர்தலைநகராதலானும் என்று உய்த்துணரலாகும். ஈண்டுக்கூறியகருவூர் ஒருசேரயாமென்பது வேற்றுமைப் படுத்தற்குரிய அடையொன்றுங்கொடாது வாளாகூறியவாற்றானன்குணரியப்படும். சோழர் வஞ்சியைமுற்றியவிடத்தும், அதனை எறிந்தவிடத்தும்பாடிய புறப்பாட்டுக்களின் கீழ்க்குறிப்பிற் "கருவூர் முற்றியிருந்தானை" எனவும், "கருவூரெறிந்தானை" எனவும் வருதலை ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. பாட்டுள் *வஞ்சியென்றுவருதலும், அப்பாட்டின் கீழ்க்குறிப்பிற் கருவூர் என்று வருதலும்

---

* புறம்-௩௩. ௩௪ ௩௭௩.

ஒருமையேபற்றியதென்ப தியாவருமறிவர். ஆண்டெல்லாம் வஞ்சியை அறிவித்தற்குக் கருவூர்என்று அடைகொடாது வாளாவழங்குதல் போலவே ஈண்டும் வழங்கப்பட்டதாகும். "கருவூர்ச்சேரமான்" என்பதனானும் இக்கருவூர் வஞ்சியாகும். "கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதன்" என்பதனானும், இக்கருவூர்வஞ்சியேயாகும். "சதுக்கப்பூதரை வஞ்சியுட்டந்து, மதுக்கொள்வேள்விவேட்டோனாயினும்" எனச் சிலப்பதிகாரத்துவருதலான் வஞ்சியாகியகருவூரிற் சதுக்கப்பூதருண்மை நன்குணரலாகும். கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார் சேரன் படைத்தலைவனுக்ய பிட்டனைப்பாடுதலான் இக் கருவூர் வஞ்சியேயாகும். (புறம்-கசுஅ) இவர் அகப்பாட்டில்,

"கோடியர், பெரும்படைக்குதிரைநற்போர்வானவன்
திருந்துகழற்சேவடி நசைஇப்படர்ந்தாங்கு" (௩0௯)

எனச் சேரனைப்பாடுதலானும் இதனுண்மையுணர்க. கருவூர்க் கண்ணம்பாளனார்:—இவர்,

"ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்
வஞ்சியன்னவென்வளநகர்" (அகம்-உ௬௩)

எனப் பாடுதலான் இக்கருவூர் வஞ்சியேயாகும். இவற்றானும் கருவூர் சேரர்கருவூரேயாதலும், அதுவே வஞ்சியாதலும், அது கொங்கு நாட்டுச் சோணாட்டையடுத்துச் சோழர்க்குப்பகைப்புலமாய்ச் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த ஊராதலும் (புறம்-கங) நன்குணர்ந்துகொள்க. பிற்காலத்தும் பொய்யாமொழியென்னும் புலவர் இக்கருவூரினரென்பது "பாற்கடல்போலப்பரந்தநன்னெறி" என்னும் நச்சினார்க்கினியருரைச்சிறப்புப்பாயிரத்து "வண்பெருவஞ்சிப்பொய்யாமொழி" என வருதலா னறியப்படும். இவர் கருவூரினராதலாற் றம்மூர்க்கடுத்த சோணாட்டுக் கண்டியூரிற் சினக்கருக்கு உயிர்த்துணையாயினரென் றுய்த்துணரலாகும். இப்புலவர்களல்லாமற் சேரர்க்குரிய கொல்லியினும் நல்லிசைப்புலவருண்மை "கொல்லிக் கண்ணன்" என்னும் பெயரானுணரலாம். இவர் "குட்டுவன்மாந்தை" (குறுந்தொகை-௩௪) யினை எடுத்துவமிக்கின்றார். இதனானும் இவர் சேரன்புலவராதலறெளியப்படும். இப்புலவரெல்லாம் கொங்குநாட்டுப் புலவரேயாவரென்ப தியான் கூறியறிவிக்கவேண்டுவதன்று. கொங்கர்

என்பார் தமிழ்நேரயென்பது "தமிழ்க்கொங்கர்கோன்" (தமிழ்நா)- என இரட்டையர் வக்கபாகைவாபதியாட் கொண்டாணைப் பாடுதலானு மறியலாகும். சண்டுச் சோழனட்டுப்புலவரெனத் துணியப்பட்ட பலரும் கருவூரினாராக வழங்கப்படுதலல்லது வஞ்சிப்புலவரென வழங்கப் படாமையான் வஞ்சி செய்யுள்வழக்குப்பெயரொன்றும், கருவூ ரென்பதே உலகவழக்கிலுள்ள பெயரென்றும் அறியத்தகும். சண்டுக் கருவூர்வேறு வஞ்சிவேறென்று ஒருவிதண்டையுரைப்பின் மேற்காட்டிய நல்லிசைப்புலவரெல்லாம் கருவூரினாராகவேயின்றி சேரர்தலைநகராகிய வஞ்சியின்கண் நல்லிசைப்புலவரேயில்லாம லொழியநேருமென்று கண்டுகொள்க. இதனைப் பிறரவிதண்டாவாதம் சண்டுப்பயனிய்ததாக வொருதலை. இப்புலவர்களுட் கருவூர்ப்பெருஞ் சதுக்கத்துப்பூதநாதனார் என்பவர் கோப்பெருஞ்சோழன் வடக் கிருந்தானைப்பாடிய,

"உள்ளாற்றுக்கவலைப்புள்ளிநீழன்
முழூஉ வள்ளூரமுணக்குமள்ள
புலவுதிமாதோநீயே
பலராலத்தைநின்குறியிருந்தோரே" (புறம் - ௨௧௯)

என்னும்பாடலைக் கற்றாரறிவர். இதன்கண் இவர் "நின்கருத்திற் கேற்ப நின்னுடுவடக்கிருந்தார் பலராதலான், யானிதற்குத்தவாது பிற்படவந்ததற்கு என்னை அவரோடு சொல்லிவெறுத்தி நீ" என்று கூறுதலைக்காணலாம். இதனால் இப்புலவர் கோப்பெருஞ்சோழற் குயிர்த்துணைவரென்றும், அவன் இறத்தற்குத் தாமும் இறக்குமியல் பினரென்றும், இவரினுந்தூரதேயத்துள்ள பிசிராந்தையார் சோழற் கும் அவர்க்கும் உணர்ச்சியொத்தலானுடனேபோந்து சோழனுடன் வடக்கிருந்தாராகவும், இவர் சோழன்வடக்கிருந்தவிடத்துக்கு அணித் தாக இருந்தும் முற்படவந்து உதவாமலிவண் வடக்கிருத்தல்கேட்டுப் பிற்படவந்ததனை ஒருபெருந்தவறாகக்கருதித் தூரதேயத்துள்ளாரும் முற்படவந்து உதவாநிற்க அணிமையிலுள்ளவன் பிற்படவந்தான் என்று அங்ஙனமுற்பட உதவினாருடன் சொல்லி என்னை வெறுத்தி யென்று தஞ்செயலை நொந்துகொள்கின்றாரென்றும் அறிஞர் நன்கறி வர். உள்ளவாறு இப்புலவர் தூரத்திலிருந்து கேட்டுவருதல்பற்றிப் பிற்பட்டவராயின் அதற்குப் புலத்தல்கூடாமை நன்கறிந்துகொள்க. இவர் வஞ்சிப்புலவரென்பது முன்னரேகாட்டப்பட்டது. இதுவுஞ் சோழர்க்குச் சேரர்வஞ்சியணித்தாதலையே வலியுறுத்துமென்று கண்டுகொள்க.

இனிப் பழமொழியின்கண்,

"கழுமலத்தியாத்தகளிறுங்கருவூர்
விழுமியோன்மேற்சென்றதனால்"

எனவருதலையும் அதற்கு உரைகாரர் "கழுமலமென்னும் ஊரின்கண்ணே பிணித்துநின்ற களிறுங் கருவூரின்கண்ணேயிருந்த கரிகால் வளவன் கடிநிலையனாயினும் அவன் சிறப்புடையனாதலான் அவன்மேற் சென்று தன்மிசையெடுத்துக்கொண்டு அரசிற்கு உரிமைசெய்தது ஆதலால்" எனக்கூறுதலையுங் கற்றோரறிவர். இது சோணாட்டுக்களிறு வேற்றுநாட்டு ஊர்புக்கு ஒருவற்கரசுரிமைசெய்த கதை கூறியதாம். கரிகாலன் தாயத்தார்பகைமைகாரணமாக இளமையிலே தன்னாடுவிட்டு உயிருய்ந்துபோய்க் கொங்கிற் சேரர்கருவூரின் வதிந்தனனாவன். இவ்வுண்மையினை கண்டெளிதிற் பெறுகும். சோணாட்டுக்களிறு அஞ்சைக்களஞ்சென்று ஒருவனை மிசையேற்றிவந்ததென்று நினைத்தற்காகாமையும் அது கருவூரெனப் பெயர்பெறாமையும் ஆராய்ந்துகொள்க. இதுவும் கருவூர் சோணாட்டுக்கணித்தாதலையே காட்டுமென்றுணர்க. கருவூர் கொங்குநாட்டதென்பது உமாபதிசிவாசாரியார் திருப்பதிக்கோவையில், "சேவிருக்குமணிநாசித்திருமுகன்பூண்டி திருநணு கொடிமாடச்செங்குன்றூர்தானே" "வெஞ்சமாக்கூடல்கொடுமுடிகருவூர்கொங்கின்மேலமே" என்றதனானு நன்கறியலாம். நூல்களுளிரண்டுகருவூர் கூறப்படாமையும் அக்கருவூர் சோணாட்டுளதாக எங்கனுங்கூறாமையும் அது கொங்குநாட்டதென்றே எங்கனுங்கூறுதலையும் ஆராய்ந்துகொள்க. சுந்தரமூர்த்திநாயனார் அவிநாசியைநீங்கி மலைநாட்டகம்புகுந்தார் என்னுமிடத்து "குடபுலத்துப்பதிகடொறு மின்புற்றுக்கடந்தருளிக் குன்றவளநாட்டகம்புகுந்தார்" எனவும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணத்துள், "குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி லெப்பாலுமேத்தித்திருநணாவினையிறைஞ்சிக் குணதிசைப்போர்துகின்றார் செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி யங்காடகன்று பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்" எனவும் சேக்கிழார்கூறியவாற்றாற் குடபுலம் அஞ்சைக்களமுடைய மலைநாட்டிற்கும் சோணாட்டிற்கும் இடையே நிலைபெறுதலினிதுணர்ந்து கொள்ளலாம். இவற்றோடு பொருந்தநோக்குமிடத்து "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர்" எனச் சேக்கிழார்வாக்கின்வந்ததற்குக் குட-

புலத்துக்கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் என்பதே பொருளாகத் தெளிந்துகொள்க. "கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே" என்னுஞ் சிலப்பதிகார உரைபெறுகட்டுரைப்பகுதிக்கும் கொங்குமண்டலத்து இளங்கோவாகிய கோசரும் தாங்கள் தாங்கள் பகுத்துக்கொண்டாளும் சிறுநாடுகளினிடத்தே என்பது பொருளாகக்கொள்க. அடியார்க்குநல்லாரும் இளங்கோசர் என்பதற்கு இளங்கோவாகிய கோசரும் எனவுரைத்தார். இவ்விளங்கோக்கள் கொங்குமண்டலத்தையுடைய கோச்சேரர்க்குத்தம்பியராய்த் தாயவுரிமையெய்தினோராவர். "மூவர்கோவையு மூவிளங்கோவையும்" எனவருதல் காண்க. தங்கள் நாட்டகம் ஒன்றாதலால் இவர் பலராதலும், இவர் கோச்சேரர்கீழடங்கியாரும் சிறுநாடுகள் பலவாதலும் உணரப்படும். சிலப்பதிகாரம் வேட்டுவவரிக்கட் கண்ணகியைக்,

"கொங்கச்செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப்பாவைசெய்தவக்கொழுந்து"

என இளங்கோவடிகள்கூறியதற்கும் இவற்றொடுபொருந்தவே பொருள் கூறுக. கொங்கச்செல்வி என்று முற்படக்கூறினார்; அடிகள் தம்முடைய குடபுலமாகிய கொங்குவஞ்சியின் முதன்முதற் கோயில்கொள்ளும் சிறப்பினைநினைந்து: குடமலையாட்டி என்றார் கண்ணகி "வென்வேலான்குன்றின் விளையாட்டியானகலேன்" என்று கூறுவதை நினைந்து; தென்றமிழ்ப்பாவையென்றார் கண்ணகி "தென்னவன் றீதிலன்றேவர்கோன்றன்வாயில், நல்விருந்தாயினானென்றன்மகள்" என்று கூறுதலைப்பட்டுக்கொண்டு கண்ணகி விளையாடல்கொண்டமலை சேரர் ஆட்சிப்பட்ட குடதிசைக்கண்ணதாகலிற் குடமலையெனப்பட்டதெனவறிக. "கொல்லிக்குடவரை" எனவும் "குடவருறு" எனவும் வழங்குதலானுமுணர்க. இங்ஙனங்கொள்ளாது "கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே" என்று வருதல்பற்றிக் கொங்கச்செல்வி என்றாரெனக்கொள்ளின் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே கோயில்கொண்டதனையே முற்படச் சிறப்பித்தற்கும் அவரோடொப்ப இலங்கைக்கயவாகுவுஞ் சோழன்பெருங்கிள்ளியும் முறையே இலங்கையினும் உறையூரினுங் வகுத்த கோயிலிலிவளிருந்தருளலைக்கூறாமைக்கும் ஏது இல்லையாகுமெனவுணர்க. அடியார்க்குநல்லார் குடமலையாட்டி என்பதன்கட் குடமலையென்பது குடநாடென நலிந்து பொருள்கோடலைக்காண்க.

"தென்னாடன் குடகொங்கன் சோழன்" மெனச் சேரன் கூறப்படுதலையும் "சென்னிநாடு குடகொங்களூடு நிறைகொண்டுதென்னனுறை செந்தமிழ்க்கன்னிநாடு" எனச் சேரநாடு கூறப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதைக்கண்,

"வில்லவன்கோதைவேந்தற்குரைக்கு
நும்போல்வேந்தர் நும்மோடிகலிக்
கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற்கொடி
பகைப்புறத்துத்தந்தனராயினுமாங்கவை
திசைமுகவேழத்தின்செவியகம்புக்கன"

என்பதனாற் சோழர் பாண்டியரிருவரும் கொங்கர் செங்களத்துச் செங்குட்டுவனோடு இகலித்தமக்குரிய புலிக்கொடியையும் கயற்கொடியையும் பகைக்களத்தே அச் செங்குட்டுவனிடந்தந்து ஓடினர் என்பது கூறப்படுகின்றது. இதன்கட் சோழபாண்டியர் செங்குட்டுவனோடு பொருதது கொங்கர்செங்களம் என்று கூறுதலானும், செங்குட்டுவன் சோழபாண்டியர்மேற் படையெடுத்துச்சென்று பொருதான் என்று கொள்ளப்படாமல் சோழபாண்டியர் கொங்கர்செங்களத்தே செங்குட்டுவனோடு இகலினரென்றே கொள்ளக்கிடத்தலானும் சோழபாண்டியரிருவரும் ஒருங்கியைந்து இவனுள்ள கொங்குநாட்டே படையெடுத்துப்போந்து இவனோடு இகலினரென்றும் இவன் தன் கொங்குநாட்டார் துணையாக அவரொடும்பொருத போர்க்களமாதலா லது கொங்கர்செங்களமெனப்பட்டதென்றும் அப் பகைக்களத்து அவ்விரு வேந்தரும் தங்கொடியை செங்குட்டுவற்குத்தந்தோடினரென்றும் துணியப்படுதல் காண்க. களவழியினும், "கொங்கரையட்டகளத்து" எனவும், "வஞ்சிக்கோவட்டகளத்து" எனவும் வருதலுடன் பொருந்த நோக்கின் இதுவே பொருளாதல் தெள்ளிது. செங்குட்டுவனை மாடலமறையோன்,

"மண்ணாள்வேந்தேநின்வாணாட்க
டண்ணார்பொருநைமணலினுஞ்சிறக்க" (சிலப்-நடுகல்.)

எனவாழ்த்தற்கண்ணும் அவன் கொங்குநாட்டுப்பொருநைமணலினுஞ் சிறக்க எனக்கூறுதலையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. இப் பொருநை காவிரியிற்கலத்தலை முன்னரே தெளிவித்தேன்.

இனிச் சேரன் ஆனிலையினையுடைய உலகுடையனாதலான் ஆனிலையுலகு வானுலகு எனவழங்கல்பற்றி அவன் வானவன் எனவும், கருவூர் கர்ப்பபுரியாதல்பற்றிக் கர்ப்பத்திற்குப் பொறையென்பது பெயராதலான் அவன் பொறையனெனவும் வழங்கப்பட்டானென்று கொள்ளவும் இடமுண்டு. "பொலந்தார் ஆனிலையுலகத்தானும்" என்பதனுள் ஆனிலையுலகு வானுலகாதலும் "சேரன் பொறையன் மலையன் திறம்பாடி" என்புழி தன்கண் மலையனென வேறோதலான் சேரன் பொறையென்பது மலையாகாமையும் உணர்க. "வானேறு நம்மின்மேல் மீமிசை முழவார்விசும்பு" என்றலும் புலவர் புனைந்துரையேயாகும்.

இங்ஙனம் சங்ககாலத்தனவும் பிற்காலத்தனவுமாகிய இப்பன்னூற்றுணிபுக்கும் இயையவே, கொங்குநாட்டுப் பெருமக்களெல்லாம், தங்கொங்கர்க் கருவூரைச் சேரராஜன் தானம் என்று வாயாரவழங்குதலை இன்றுங்கேட்கலாம். அவர் பதுக்கரைக்காளிகோவிலைச் சேரர்க்குஞ் சோழர்க்கும் எல்லைக்கோவிலென்றும், கருவூர்ப்பக்கத்துள்ள வேட்டைமங்கலமென்னும் ஊரைச் சேரன் வேட்டம்புரிந்த இடமென்றும் கூறுவர். இதனை அடியிற்குறித்த ஆங்கிலக்குறிப்பானுமுணர்க.

இத்துணையுங் கூறியவாற்றாற் றமிழ்கூறு நல்லுலகத்து மூவேந்தருட் குடதிசையாளுங்கோமக்களாகிய பழையகோச்சேரர்நாடு முழு

---

Madukkarai: Hamlet of Thirukkambiliyur 12 mils west of Kulittalai. The temple of the village goddess Sellandiyamman is supposed to mark the spot where the Chera, Chola and Pandya Kingdoms met......... ..A bank runs south from the rever at this point and is said to have been errected to mark the boundary of the Chola and Chera Kingdoms. (Page 281 - Trichinopoly Gezetteer 1907.)

Vettaimangalam; stands 12 miles north-west of Karur; population 3,517. The place is said to owe its origin to a Chera Raja, who, when out hunting one day saw the spot and struck by the beauty of scenery, founded the village. It was named Vettaimangalam from this incident. There is an old Sive temple there. (Page 276. Do. Do.

றுங் குடபுலமாமேனும், அதன்கட் குடபுலமென்று சிறப்பித்துப் பெயர்பெறுவது கொங்குநாடேயென்றும், அது சேரரிருந்தரசாண்ட மலையமானாடாகியகொல்லிமலைப்பக்கத்துநாடுமுதலாகப் பலநாடுகளை யுடையதென்றும், அதன்கணுள்ள ஆன்பொருநைக்கரையிலுள்ள கருவூரே *வருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும் வஞ்சியென்றும் ஐயந் திரிபறத்தெளிந்துகொள்க. இன்னும், இலக்கணவிளக்கமிடையியலில் (சூத்-கூ) "கருவூர்க்குச்செல்வலென்றார்க்கு யானும் அவ்வூர்க்குப் போதுவல் என முழுவதுந்தழுவுவதூஉம் அவ்வாறு கூறினார்க்கு யானும் உறையூர்க்குப்போதுவல் என ஒருபுடைதழுவுவதூஉமென இருவகைத்தாம்" என்றார்: இதன்கண் இரண்டு தலைநகரைக்குறித்தா ரென்பதல்லது வேறுகூறலாகாது. இவ்வூர்கள் செல்வார்க்கு நெறி ஒருபுடையொன்றாத லிதனானுணரப்படும்.

இனிச்சேரர்கள் கடன்மலைநாட்டினின்று கொங்குநாட்டு வந்தார்கள் என,

"உற்றநாட்டையொழிந்துயர்கொங்குசேர்ந்
தெற்றுநீர்நதிக்காஞ்சியையெய்தினான்" (பேரூர்ப்-குலசே.)

என்புழிப்போலக் காணப்படின் அது சேரமான்பெருமானாயனார் காலத்தையடுத்ததாகுமென்றும், அது பழையசேரர்காலத்ததாகா தென்றுந் துணிந்துகொள்க. பழையசேரர் மேல்கடற்கரைநாடுகளையும் அகநாட்டுக்கொங்குமண்டலத்தையுஞ் சேர ஆண்டனரென்றும், அவர்க்கு மேல்கடற்கரையிற் றொண்டி, முசிறி, மாந்தை முதலிய பெரிய பட்டினங்களும், அகநாட்டுக்கொங்குமண்டலத்து வஞ்சிமாநகராகிய கருவூர்த்தலைநகரும் உண்டென்றும் தொன்னூல் பின்னூல் முதலாகப் பன்னூல்கொண்டும் உணர்ந்துகொள்க. இன்னும் விரிப்பிற் பெருகும்.

கொங்கு குடபுலமாங் கோச்சேரன் வஞ்சிநக
ரங்கு வியன்கருவூ ரமென்ன—விங்குணரா
மாந்த ருளத்து மயக்கறுத்தேன் சேதுபதி
வேந்தன் பணிக்க விழைந்து.

நிறைவேறியது.

---

* (சிலப் - வாழ்த்து.) "வாழியரோவாழிவருபுனனீர்த்தண்பொருநை, சூழ்தரும்வஞ்சியார்கோமான் றன்றொல்குலமே."